உள்ளவர்களோ, அதற்கான முயற்சியிலே ஈடுபட்டுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்திரச் சம்பளம் போன்று வெவ்வேறு செலவினங்கள் அந்தக் கணக்கிலே குறிப்பிடப்படுகின்றன. இத்தகைய செலவினங்களையெல்லாம் கழித்த பிறகு, அவர்களுக்கு வரக்கூடிய நிகர வருமானத்தின் மீதுதான் வருமான வரி விதிக்கப்படுகிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட அளவிலே நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் அவர்களுடைய வருமானத்தைக் கணக்கிடும்போது, அவர்களுடைய நிலத்தினுடைய மதிப்பை அதனுடைய முதலீடாகக் கருதி, அதற்காகத் தொழிலதிபர்கள் எப்படி வட்டி விதித்துக்கொள்கிறார்களோ, அந்த முறையில் நிலத்தினுடைய மதிப்பீட்டை வைத்து தகுந்தபடியான செலவினங்களை அங்கே விவசாயிகள் காட்ட வழி வகுக்க வேண்டும். அங்கே பாடுபட்டவர்கள், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு விவசாயத்தில் பங்கு கொள்கிறார்கள் என்று நமக்குத் தெரிகிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்குள்ள சம்பள விகிதங்களைக் காட்ட வேண்டும். இந்த இரண்டுக்கும் விவசாயிகளை அனுமதித்தாலொழிய, அரசு எடுத்துக்கொள்ளும் எந்த முயற்சியும் விவசாயிகளுக்கு அனுகூலம் செய்வதற்குத்தான் என்று சொன்னாலும் கூட, அது பாரபட்சமானதுதான் ஆகும் என்பது என்னுடைய கருத்தாகும். விவசாயிகளுடைய வருமானத்தைக் கணக்கிடும்போது, தொழிலதிபர்களுக்கு, எந்தச் சலுகைகள் அளிக்கப்பட்டு அவர்கள் வருமானம் கணக்கிடப்படுகிறதோ, அதே போன்று நிலத்திலே பாடுபடுகின்ற விவசாயிகளுக்கும் அவர்களுடைய சிரமத்திற்கும், அவர்களுடைய முதலீடுகளுக்கும் ஒதுக்கீடுகள் செய்த பின்னர் தான் அவர்களுக்கு வரும் நிகர வருமானம் இவ்வளவு என்று நாம் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தச் சட்டத்திலே நாம் அவர்களுக்கு அந்தப் பளுவைக் குறைப்பதற்கான முயற்சியைச் செய்தாலும் கூட, இதை அமல் நடத்துவதிலே பல தொல்லைகள் இருக்கின்றன. அவர்களுக்கு இந்த மாதிரித் தொல்லைகள் ஏற்படாமல் செய்ய வேண்டும். இந்த வரியினுடைய பளுவை விட அதை அமல் நடத்த வேண்டும் என்பதன் மூலமாக ஏற்படக்கூடிய தொல்லைகள் மிக மிக அனந்தம் என்பதைக் அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரவர்களே கூட அனுபவத்திலே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலே விவசாய வருமான வரியின் மூலம் ஒருவருக்கு ரூ. 64 தான் வரி விதிக்கப்பட்டது. இந்தப் பயிர் வாரி முறையிலே அதே விவசாயிக்கு வருமானம் கணக்கிடும்போது, 1,600 ரூபாய் வரி வருகிறது என்று ஒரு விவசாயிக்கு நோட்டீஸ் போயிற்று. இது இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதற்கு முன்னால் நடந்தது. இதன் பேரில் சம்பந்தப்பட்ட அதே இன்ஸ்பெக்டரே கிராமத்திலே அந்த விவசாயியிடம் பேரம் பேசியிருக்கிறார்கள். அவர் மக்களிடத்திலேயும் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதன் பின் ஒரு வாரத்திற்குப் பிறகு ரூ. 1,600-க்கு அவர்களுக்கு நோட்டீஸ் போகிறது. இதை உதாரணத்திற்காகச் சொல்கிறேன். வெளி ஊரிலே உள்ளவர்கள், அதாவது ஸ்ரீவில்லிப்புத்தூர் மாம்சாபுரம் கிராமத்திலே 35 ஏக்கர் மேடும் பள்ளமுமாக இருக்கக் கூடிய நிலத்தை ஒருவர் வாங்கியிருக்கிறார். இன்னும் அதிலே உழவு உழவே ஆரம்பிக்கவில்லை. அதன் மீது அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விட்டார். அவர் கிராம அதிகாரிகள் மூலம் அதிகாரிகள், மற்றவர்களிடம்



1972 டிசம்பர் 14] [திரு. பா. கிருஷ்ணசாமி நாயுடு]

அதற்கான பரிகாரத்தைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இப்படிச் சிறு சிறு காரியங்களுக்கெல்லாம் கிராம அதிகாரிகளிடம் சென்று தீர்க்க வேண்டியிருக்கிறது. விவசாயிகள் ஒன்றும் தெரியாதவர்கள். அவர்களை வாயைத் திறக்கச் சொன்னால், கண்ணைத் திறப்பார்கள். கண்ணைத் திறக்கச் சொன்னால் வாயைத் திறப்பார்கள். இப்படி 100-க்கு 90 பேர் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நோட்டீஸ் போன உடனே ஏதோ வந்துவிட்டது என்று அவர்களுக்கு பயம் வந்துவிடுகிறது. அவர்களுடைய அறியாமையைச் சாதகமாக்கிக்கொண்டு இடையிலே உள்ளவர்கள் அவர்களுடைய நிர்ப்பந்தங்களைத் தாங்கள் நிவர்த்தி செய்து கொடுக்கிற மாதிரி விவசாயிகளுக்கு ஆசை காட்டி சுரண்டுவதற்கான வழி முறைகள் ஏற்படுகின்றன. இதை அமல் நடத்துகின்ற வகையிலே, இடையிலே வருகின்றவர்களின் தொந்திரவுகள், தொல்லைகள் விவசாயிகளுக்குப் பெரிய அளவில் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படாது நிறுத்தும் வண்ணம் முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும், வரி முறைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கும் பின்னாலே திருத்தங்கள் வருகிறதோ என்னவோ, அனுபவத்தின் பேரில், பிற்காலத்தில் திருத்தம் வந்தால் [illegible] ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று வைத்துவிட்டு, ஆர் வாரியாக. இவ்வளவு ஸ்டாண்டர்ட் ஒவ்வொரு ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய், ஒவ்வொரு பயிர் வாரியாக ஒவ்வொரு ஏக்கருக்கு இவ்வளவு ரூபாய் என்று செய்ய முடிந்தால், இன்ன மகசூல் செய்தால் இவ்வளவு என்று இருந்தால், அந்த முறையைச் செய்ய அரசாங்கத்திற்கு ஏற்றதாக இருந்தால் [illegible] தெரிவித்துக்கொள்கிறேன். நாம் வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே விதிகளை அமைக்கும்போது, அனுபவிக்கக்கூடிய அந்த நடைமுறை விதிகளை ஏற்படுகின்ற கஷ்டங்களை நிவர்த்தி பண்ணக் கொண்டு, விவசாயிகளுக்கு [illegible] கேட்டுக்கொள்கிறேன்.
செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, விவசாய வருமான வரியைப் பொறுத்த வரையில், இது வரையிலே விவசாயிகள் [illegible] முறையிலே கொடுத்து வந்தார்கள். வருமான வரியை 'காம்பௌண்ட்' முறையிலே இந்தப் பயிர் வரி செலுத்தவேண்டும் [illegible] விவசாயிகள் கணக்கு வைக்கக்கூடிய [illegible] நாட்டிலே கல்வி பயிலவில்லை. அவர்களில் இன்னும் அவர்கள் [illegible] கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் [illegible] கிராம வாசிகள் சொல்வது போல், [illegible] இதற்கான கணக்குகளை எப்படி கணக்கு [illegible] வைத்துக்கொள்வது என்பதை அறியாதவர்களாக இன்றைக்கு எழுதி வைத்துக்கொள்ள [illegible]. அவர்கள் வருமான வரியை நாட்டிலே இருந்துகொண்டு [illegible] கணக்குகளை வைத்துக்கொள்வதற்கு கிராமத்திலே [illegible] அல்லது படித்தவர் இருக்கின்ற [illegible] நம்பித்தான் இருக்கிறார்கள். கணக்கு தெரிந்தவர்கள் [illegible] வேண்டியிருக்கிறது. அந்தக் கணக்குக்கான [illegible] பேசியதைப் போல், இப்பொழுது பயிர் வரி, பெரும் [illegible] பேசியதைப் போல், இப்பொழுது பயிர் வாரி, என்று பலவிதமான பாசனம், நிலத்தடி நீர்ப் பாசனம், [illegible] பாசனம், என்று பலவிதமான [illegible] நிலைமை இன்றும் [illegible] விவசாயிகளின் கஷ்ட நிலைமை இன்றும் [illegible] செட்டு வைத்துப் பாசனம் அதிகமாகிறது. இந்த நிலைமையிலே பயிர் [illegible]

செய்துகொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இப்பொழுதுள்ள வரி தாங்க முடியாததாக இருக்கிறது. சர்சார்ஜ் சகலத்தையும் போட்டு, வரி போடப்படுகிறது. இந்த வரியையெல்லாம் கட்டவேண்டுமென்றால், கடன் வாங்கித்தான் விவசாயிகள் சமாளிக்க வழி செய்துகொள்ள வேண்டும். இந்த நிலைமையில் இந்த விவசாய வருமான வரியை இன்னும் கொஞ்ச நாள் தள்ளிப் போடலாம். மேலும், இந்த வருடத்திலே வறட்சியும், பின் பாதியில் பெரு வெள்ளமும், மழையும், புயலும் இந்த மாநிலம் பூராவையும் பாதித்திருக்கின்றது. ஆகையினாலே, இந்த வருமான வரித் திருத்தத்தைத் தள்ளிப் போடுவதும், அந்த வருமான வரியை வசூலிக்காமல் இருப்பதும் நல்லது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, நில உடைமை உச்சவரம்பு 30 எக்கரிலிருந்து இப்போது 15 எக்கராகக் குறைத்த பிறகு இந்த வருமான வரிக்கு அவசியமில்லை. என்னுடைய அபிப்பிராயம் விவசாய வருமான வரியைத் தள்ளிவிட்டால், மிக நன்றாக இருக்கும். பொறுக்குக் குழுவில் பல விதமான மாறுதல்களைச் செய்திருக்கிறோம். அந்த மாறுதல் ஏற்கெனவே, இருந்து வருகின்ற கஷ்டங்களைக் குறைப்பதற்குத்தான் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை நிறுத்தி வைப்பதனால், ஜனங்களுக்குக் கஷ்டம் அதிகமாகும். அரசு எவ்வளவுக்கெவ்வளவு துரிதமாக நிறைவேற்றுகிறதோ அந்த அளவுக்கு இப்போதிருக்கின்ற கஷ்டத்தைக் குறைக்கும். எங்களாலே இருந்த பல விதமான முடிவுகளை இந்தப் பொறுக்குக் குழுவில் மாற்றியமைத்திருக்கிறோம். அதாவது 30 ஏக்கர் வரைதான் ' காம்போசிஷன் ' செய்யலாம் என்று இருந்தது. இப்போது 50 எக்கர் வரை காம்போசிஷன் செய்யலாம் என்று அது தளர்த்தப்பட்டிருக்கிறது. இது விவசாயிகளுக்கு ஒரு முக்கிய சலுகை. என் மனதில் ஏற்பட்டிருக்கும் சில சந்தேகங்களை, இந்த விவசாய வருமான வரி சம்பந்தமாக, அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு முறை பொறுக்குக் குழுவில் சொன்னதையே, இங்கும் சொல்ல விரும்புகிறேன். அதற்கு அவர் சொன்ன பதிலை இங்கு மறுபடியும் பிரஸ்தாபிக்கும்பொழுது, சொல்லுவார்கள் என்று நினைத்தேன். சொல்லியிருந்தால், இப்போது பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பயிர்க் கணக்கு கர்ணமும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் எடுக்கிறார்கள். பத்து எக்கர் காலை போட்டிருந்தால், தரிசு நிலத்தையும் சேர்த்து 12 எக்கர், 14 எக்கர் என்று கணக்கு எழுதுகிறார்கள். ஆகையினால், எவ்வளவு நிலத்தில் என்ன பயிர் ஒரு மனிதன் செய்தான் என்பதை அவன் சம்மதம் பெற்றுக் கணக்கிட வேண்டும். கர்ணம் வரி ஏடு தயார் பண்ணும்பொழுது, எந்த நிலத்தில் எவ்வளவு பயிர் பண்ணியிருக்கிறேன் என்பதைப் பற்றி சம்பந்தப்பட்ட விவசாயிகளின் ஒப்புதலோடு கூட கணக்கு எழுத வேண்டும். வரி போட வேண்டும்.

இரண்டாவதாக, பயிர் கணக்கெடுக்கும்பொழுது, நன்றாக இருக்கலாம்.
பதினாறு அணா மேனி வரும் அல்லது 10 அணா மேனி வரும் என்று
4-40 கூட கணக்கெடுத்து விடுகிறார்கள். பூச்சி புழு விழுந்து அந்தப் பயிர்
பி.ப. கெட்டுப்போகிறது. கடைசியில் 4 அணா தாரளேயோ அல்லது 2 அணா





தாரளேயோ பயிர் விளைவு ஏற்பட்டால், அதனால் ஏற்படும் கஷ்டங்களுக்கு என்ன செய்வது? ஒரு முறை பயிர் கணக்கு எடுத்துவிட்டால், பின்னால் ஏற்படும் நஷ்டத்தை விவசாய வருமான வரி ஆபீசில் ஒப்புக்கொள்ள மாட்டார்களே என்று சொன்னோம். அமைச்சர் அவர்கள் அதற்கு எங்களுக்கு ஒரு நல்ல பதில் சொன்னார்கள். அந்தப் பதிலையும் இங்கு சொல்லவில்லை. சொல்லியிருந்தாலாவது, 'ரிகார்டு' ஆகியிருக்கும். ஜனங்களுக்குக் கஷ்டம் தீரும் என்று எதிர்பார்த்தேன். அமைச்சர் அவர்கள், பொறுக்குக் குழுக் கூட்டத்தில் "சம்பந்தப்பட்ட விவசாயி தன்னுடைய பயிர் கெட்டுப்போய் விட்டது என்று வருமானவரி ஆபீசுக்கு எழுதிப் போட்டால் போதும், அவர்களே நேரில் வந்து பார்த்து 'அசெஸ்' பண்ணுவார்கள்" என்று சொன்னார்கள். அது ஒருவாறு எங்களுக்குத் திருப்தியளித்தது. அதனால்தான் சம்பந்தப்பட்ட 'கிளாஸை' ஒப்புக்கொண்டோம். ஆகையினால் அதையும் இப்போது அவர்கள் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இது போக, வானம் பார்த்த பிரதேசத்தில் முக்கியமாக பருத்தி, சோளம், துவரை போன்ற பயிர்கள் பயிரிடுகிறார்கள். இவைகள் மழை பெய்தால்தான் விளையும். நீர்ப் பாசனம் எதுவும் கிடையாது. இப்போது நாம் விதித்திருக்கும் விவசாய வருமான வரியில் இதற்குக்கூட வரி போடுகிறோம். வரியில்லை என்று சொல்ல முடியாது. ஏதோ சர்க்கார் நீர்ப் பாசனத்திற்கு இன்ன வரி, சர்க்கார் நீர்ப் பாசனம் அல்லாத மற்ற நீர்ப் பாசனத்திற்கு இன்ன வரி என்று இருப்பதால், நீர்ப் பாசனமேயில்லாமல் மழை பெய்து விளைவிக்கக் கூடிய பயிர்களுக்கு வரியில்லையென்று யாரும் தவறாக நினைக்கக் கூடாது. அதற்கும் வரி போடுகிறார்கள். இது நியாயமா என்பதை அரசு யோசிக்க வேண்டும். [illegible] கடைசியில் இரண்டு மழை குறைந்தால் அந்தப் பயிர் தீய்ந்துவிடும். மூன்று வருஷம், நான்கு வருஷத்திற்கு ஒரு முறை [illegible] பருத்தியும் வேர்க்கடலையும். [illegible] கணக்கு எடுக்கப் [illegible] 4 [illegible] அந்த [illegible] அனுசரித்து [illegible] அந்த [illegible] இந்த நிலைமையில் [illegible] அதை அரசு [illegible]

[illegible] என்று [illegible] சொல்லி [illegible] வைத்து [illegible] என்று [illegible]

அவர்கள் அதற்காகச் செலவிட்டு தண்ணீர் எடுத்து நிலத்தில் பாய்ச்சினாலும், அதுவும் 'கவர்ன்மெண்ட் சோர்ஸ் ஆப் இரிகேஷன்' ஆகிறது. நாங்கள் பொறுக்குக் குழுவில் ஒன்றைக் கேட்டோம். அதை அமைச்சர் அவர்கள் உடனே ஒப்புக்கொண்டதற்காக, பாராட்டையும் அந்தக் கூட்டத்தில் சொன்னேன். அதாவது 'கவர்ன்மெண்ட் சோர்ஸ் ஆப் இரிகேஷன்' என்பது அந்தப் பயிர் பூராவும் கவர்ன்மெண்ட் தண்ணீரால், அணைக்கட்டிலிருந்து அல்லது எரியிலிருந்து பாயும் தண்ணீரால் விளைவதாக இருந்தால் மட்டும், கவர்ன்மெண்ட் சோர்ஸ் ஆப் இரிகேஷன் என்று வைத்துக்கொள்ள வேண்டும். எதாவது கொஞ்சம் தண்ணீர் வேறு கிணற்றிலிருந்து வேறு இடத்திலிருந்து கொண்டுவந்து பாய்ச்சினால் அதுவும் 'கவர்ன்மெண்ட் சோர்ஸ் ஆப் இரிகேஷன்' என்று ஒத்துக்கொள்ளக் கூடாது, எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னோம். அதை, அப்படியே அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஒரு தண்ணீர் வேறு சோர்ஸிலிருந்து பாய்ச்சினாலும் கூட 'கவர்ன்மெண்ட் சோர்ஸ் ஆப் இரிகேஷன்' என்று வைத்துக்கொள்ள வேண்டியதில்லையென்று சொன்னார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, ஒரு விவசாயி அடுத்த வீட்டுக் கிணற்றிலிருந்து அல்லது அடுத்த கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சினால் அதை எப்படிக் கணக்கிடுவது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: உறுப்பினருக்கு நன்றி. அது மாதிரி அவருக்கு வேறு தண்ணீர் பாய்ச்சியதாக விவசாயி சொன்னால், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். விவசாயி சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை நம்ப முடியவில்லை என்று சொல்லக் கூடாது. விவசாயி சொல்லுவதை நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும், அல்லது அதற்கு வேறு எதாவது ஒரு [illegible] அமைச்சரவர்கள் இப்போது சொல்ல வேண்டும். அதிலும் '[illegible]டிபிகல்டீஸ்' இருக்கின்றன. சட்டம் 'பாஸ்' பண்ணிவிடுகிறோம். விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நிதர்சனமான, அனுபவ பூர்வமான கஷ்டம் [illegible] ஆகையினால்தான் இதற்கும் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றபடி பொறுக்குக் குழுவில், விரிவாக அலசிப் பார்த்து, கூடுமான வரையில் என்ன குறைகள் தெரிந்ததோ அவற்றை நிவர்த்தி செய்தார்கள் அமைச்சர் அவர்கள். இவைகளுக்கும் நிவர்த்திகள் செய்யுமாறு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, விவசாய வருமான வரி குறித்து, அங்கத்தினர்கள் நேரம் இல்லாத காரணத்தால், போதிய அவகாசம் இல்லாத காரணத்தால், சுருக்கமாகவே கருத்துக்களைச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக, சொன்னவர்கள் எல்லோரும் இந்த நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்குச் சிரமம் வரக் கூடாது, சிரமமில்லாமல் வரி விதிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நண்பர் எதிர்க் கட்சித் தலைவர் உயர்திரு. ராஜாராம் அவர்கள் வரியே கூடாது, அதையும் யோசியுங்கள்





என்று சொல்லிவிட்டார்கள். இப்போது பொதுவாக மத்திய சர்க்காரிலும் திட்டக் குழுவிலும் விவாதிக்கப்படும்பொழுது, வரி போடாத இனமாக விடப்பட்டிருப்பது விவசாயம்தான். அதற்கு அதிகமாக வரி போடவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திலிருந்து வருகிற வருமானத்துக்கு வரி போடாமல் இருக்க முடியாது. மத்திய சர்க்கார் கமிட்டி, ராஜ் கமிட்டியுடன் விவாதிக்கப்பட்டபொழுது, வேறு சில யோசனைகளும் சொன்னார்கள். அவர்கள் அறிக்கையில் பல யோசனைகள் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அமுலாக்கும்போது, சிரமம் ஏற்படும் என்று கருதித்தான் பொதுவாக விவசாயிகளுக்குச் சிரமத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைப்பதற்காக இந்தப் புதிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பயிர் பூமியில் இருக்கும்பொழுது, அதை 'சேஷாக' கருதிவிடக் கூடாது என்று சொன்னார்கள். உயர்திரு. நாராயணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதை அரசு அப்படி எடுக்காது. எந்த ஆண்டில் அது அறுவடைக்கு வருகிறதோ அந்த ஆண்டுக்கான கணக்கில் அந்த டிரஸ்டைப் பொறுத்தவரையில் செலவு போக மிச்சத் [illegible] வரி விதிப்பார்கள். இப்படி வரிவிதிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இப்படிப்பட்ட டிரஸ்டுகளுக்கே இந்த வரியிலிருந்து விலக்கு அளித்துவிடலாம் என்றால், இந்த நாட்டில் பெரும் பணக்காரர்கள், செல்வந்தர்கள் டிரஸ்டுகள் என்ற பெயரால் நிலங்களை எழுதிவைத்து விட்டு, அரசினை ஏமாற்றுவதற்கு வழியாக அமைந்துவிடும். எனவே அப்படிப்பட்ட கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் "எங்களை மீண்டும் கிராம அதிகாரிகளிடம்தானே கொண்டுபோய் விடுகின்றீர்கள்" என்று குறிப்பிட்டார்கள். இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. எப்படி சாதாரண வருமான வரி கட்டுகின்றவர்களுக்கு வருமான வரி இலாகாவினர் "எந்தெந்த வருமானம், என்னென்ன செலவு" ஃபாரத்தை அனுப்பி அதுபோன்று விவசாய வருமான என்று கணக்குக் கேட்கின்றார்களோ [illegible] 4-50 பி. ப.
வரி இலாகாவினர் விவசாயிகளுக்கு "ஃபாரங்களை" முன் கூட்டியே அனுப்பி வைப்பார்கள். அப்படி அனுப்பும் "ஃபாரத்தில்", எவ்வளவு எக்கர் பயிரிட்டிருக்கின்றார்கள், என்னென்ன பயிர் செய்ய இருக்கின்றார்கள் என்ற விவரங்களையெல்லாம் விவசாயிகள் அவற்றில் எழுதிக் கொடுக்கலாம். அதில் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளும் அவசியமான உதவியை அளிப்பார்கள். இப்படிப்பட்ட விளக்கங்களை அதிகாரிகளிடம் கொடுத்து விட்ட பிறகு, போடப்பட்ட பயிர் கெட்டுவிட்டால், பூச்சியால் அல்லது தண்ணீர் இல்லாத காரணத்தினால் பயிர் பாதிக்கப்பட்டு விட்டது என்ற நிலை ஏற்பட்டு விட்டால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதியனுப்பினால், எழுதிக் கொடுத்த பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குள் அதிகாரிகள் வந்து "அஸ்ஸெஸ்மென்ட்" செய்வார்கள். அதில் பயிர் பாதிக்கப்பட்டு விட்டது என்று அவர்கள் கண்டால், அதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, வருமான வரியிலிருந்து விலக்களிப்பார்கள். இப்படிப்பட்ட விலக்குகள் அளிக்கப்படும் என்பதனை இது பொறுக்குக் குழுவின் [illegible] இருந்தபோதும் தெரிவித்திருக்கிறோம் என்று எண்ணுகிறேன். இதிலும் அப்படிப்பட்ட பாதுகாப்பளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்

னுகிறேன். பொறுக்குக் குழுவின் முன்பு இருந்தபோதே இதுபற்றிக் குறிப்பிட்ட காரணத்தினால்தான் இங்கே இதைக் குறிப்பிடவில்லை. நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் "எது உண்மையான ரெக்கார்டு, எது யாரிடத்தில் இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்பது சிரமம்" என்று குறிப்பிட்டார்கள்.

**Honest records may not be available. Maintain** பண்ணுவதும் ரொம்பவும் சிரமம் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதெல்லாம், உண்மையான ரெகார்டுகளைக் கண்டு பிடிப்பதற்கு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்று. இப்படிச் செய்வதில் அவர்கள் எந்த விதத்திலும் கொடுமைப்படுத்தப்பட மாட்டார்கள் என்று உறுதி கொடுக்கிறேன். இப்போது கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளில் மிக முக்கியமானது "காம்பௌண்டு", இணக்கம் செய்து கொள்ளுவதாகும். எவ்வளவு நிலம் இருந்தாலும், செய்து கொள்ளலாம் என்று ஒன்றைக் கொடுத்திருக்கிறோம். ஐம்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லியிருப்பதெல்லாம் மலைப்பிரதேசங்களுக்குப் பொருந்தும். தரைமட்டத்திலுள்ள நிலங்களைப் பொறுத்த மட்டில், எவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தாலும், அவர்கள் கணக்குக் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் "காம்பௌண்டு" செய்து கொள்ளுவது என்பதற்கு இணக்கம் தெரிவித்துவிட்டால், அதை அரசு ஏற்றுக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னந்தோட்டம், பழத்தோட்டம் அல்லது கரும்பு பயிரிட்டிருந்தால் எந்த ஆண்டிற்கு அது அறுவடையாகிறதோ அல்லது எந்த ஆண்டில் அதிலிருந்து பலன் கிடைக்க ஆரம்பிக்கிறதோ, அப்படிப் பலனை அந்த ஆண்டிலிருந்துதான் கணக்கெடுத்துக் கொள்ளுவோமே தவிர, தென்னையை நட்டு விட்டார்கள் என்பதற்காக அவற்றை நட்ட ஆண்டிலிருந்தே கணக்கிலெடுத்துக் கொள்ள மாட்டார்கள். பலன் தரும் ஆண்டிலிருந்துதான் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும். கரும்பாக இருந்தால், எந்த ஆண்டுக் கணக்கில் அறுவடையாகிறதோ அந்த ஆண்டிற்குதான் அறுவடைக் கணக்காக எடுத்துக் கொள்ளப்படும். வாழை இறுதியில் இருந்தால், எந்த ஆண்டுக் கணக்கில் எடுத்துக் கொள்ளுவார்களோ, மார்ச்சு மாதக் கணக்கிலா அல்லது ஏப்ரல் மாதக் கணக்கிலா என்று அச்சத் தேவையில்லை. பெருவாரியான அளவில், மெஜாரிட்டியாக எப்போது அறுவடையாகிறதோ அந்த ஆண்டுக் கணக்கில்தான் அதை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தீட்சிதர் அவர்கள் இதை இன்னும் ஒரு ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடலாம் என்று குறிப்பிட்டார்கள். தள்ளிப் போடுவதால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, விவசாயிகளுக்குச் சிரமம் ஏற்படுமே தவிர, அவர்களுக்கு இதனால் லாபம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதில் ஏற்கனவே உள்ள சட்டத்தினை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் புதிதாகச் சட்டம் ஒன்றினைப் போட்டிருக்கிறோம். இப்போது அந்தப் புதிய சட்டத்திற்குப் புதிய திருத்தம் ஒன்றினைக் கொண்டு வருகிறோம். இப்போது இந்தத் திருத்தத்தினைக் கொண்டு வரத் தவறிவிட்டால், ஏற்கனவே உள்ள சட்டம்தான் அமலுக்கு வருமே தவிர, வேறு வழியில்லை. அப்போது கட்டாயம் வரி கொடுக்க வேண்டிய அவசியத்திற்குள்ளாவார்கள் அவர்கள். வரி விதிப்பினைப் பின்



தேதிக்குத் தள்ளிப்போட முடியாது. முன்தேதிக்குத் தான் தள்ளிப் போட வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு இலாபம். அந்த முறையில்தான் 1—1—1972லிருந்து அமுலுக்கு வரும் என்று போட்டிருக்கிறோம். முன்பே குறிப்பிட்டதுபோல், ஏதாவது புயலினால் பயிர் பாதிக்கப்பட்டு விட்டால், அதை அரசாங்கம் நியாயமாகக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவசியமான அளவிற்குச் சலுகைகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தருகின்றேன். இன்னும் ஒன்றை மன்றத்தின் மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் எந்தத் தகராறும் கிடையாது. விவசாயிகளைக் கொடுமைப்படுத்தி வரிகளை வசூலிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இதைக் கொண்டுவரவில்லை. நியாயமான வரியை வசூலிப்பதற்காக சட்டத்தினை ஏற்படுத்துகிறோம். அதில் ஏதேனும் சிக்கலிருந்தால், திரு. ஆர். கே. அவர்கள் குறிப்பிட்டது போல ஏதேனும் சிக்கலிருந்தால், அவற்றைக் களைவதற்குத் தயங்க மாட்டோம். சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்தால்கூட, அவசியம் இருந்தால், அவற்றைத் திருத்திக் கொள்ளலாம், இதில் தவறில்லை என்று தெரிவித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தினைப் பொறுத்தமட்டில், இது ஒரு நல்ல சட்டம், ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டிய சட்டம், விவசாயிகளுக்கு நன்மையைத் தரும் சட்டம், இதனை இந்த அவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று அரசின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு உரையினை முடித்துக் கொள்ளுகின்றேன். நன்றி.

திரு. பா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, பொறுப்புள்ளது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். யாருக்கு அப்படியது என்று பரிசீலனை செய்யும் அதிகாரம் யாருக்கிருக்கிறது, அதற்காக என்ன முறை கையாளப்பட இருக்கிறது என்பதுபற்றிக் குறிப்பிட்டால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. பா. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் கண்காணிப்பில் போடுகிறோம். அரசு அதிகாரிகள் பொறுப்பு அளிப்பார்கள். அவர்களை வரி கட்டுக் கொள்ளும் நபர்களுக்கு அளிப்பார்கள். கர்ணம், கணக்குப்பிள்ளை இவர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை. விவசாயிகளையும் இதில் நம்பியிருக்கிறோம். கர்ணம், கணக்குப்பிள்ளை இவர்களை நம்பித்தான் இப்படிச் செய்கிறோம் என்று இல்லை. இன்னும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு அரசு என்றால், அது எந்த அரசாக இருந்தாலும், மேல் மட்டத்திலுள்ள சீஃப் செக்ரடரியிலிருந்து ஆரம்பித்து கீழ்மட்டத்திற்குப் போகும் நேரத்தில் கர்ணம், கணக்குப்பிள்ளை, தோட்டி, தலையாரிவரையில் போய்த்தான் தீர வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளை நம்பித்தான் அதற்கு மேலுள்ள அரசாங்கத்தின் கட்டடத்தினைக் கட்ட முடியும். கீழ்மட்ட அதிகாரிகளை நம்பவில்லையென்றால், எந்த அரசும் செயல்பட முடியாது. கீழ் மட்டத்திலுள்ளவர்கள் ஏதாவது தவறு செய்தால், அவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டுமே தவிர, கீழ் மட்டத்திற்கே போகக் கூடாது என்று எண்ணுவது நியாயமாகாது. தவறு செய்கின்றவர்களைச் சுட்டிக் காண்பித்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

THIRU A. R. DAMODARAN: I want a clarification, Sir. Under the composition formula, is there any provision to exempt an agriculturist from payment of tax, because only if we submit accounts, the exemption can be granted? The Hon. Minister says that under composition also, due provision can be made for cyclone, floods, etc. May I know whether such a provision exists in the Act?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தலைவர்களே, பயிர் புயலினால் பாதிக்கப்பட்டு விட்டது என்றாலும் சரி, அல்லது தீ விபத்தின் காரணத்தினால் பாதிக்கப்பட்டு விட்டது என்றாலும் சரி, வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி, பாதிக்கப்பட்ட விவசாயி விவசாய அதிகாரிக்கு எழுதிப் போட்டு விட்டால், பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குள் அந்த அதிகாரி அந்தக் கிராமத்திற்குப் போய் பாதிக்கப்பட்ட நிலங்களை "அஸ்மாயிஷ்" செய்ய வேண்டும் என்று நாங்கள் போட்டிருக்கிறோம். இப்படிச் செய்யும் "அஸ்மாயிஷில்" உண்மையிலேயே அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று ஏற்பட்டால், அந்த அடிப்படையில் தான் வரி விதிக்கப்படும். அந்தச் சலுகை நிச்சயமாக அளிக்கப்படும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1972) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்டமுன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, எடுத்துக் கொள்ளப் பட்டது.

(பரிந்துரைகள் இல்லை.)

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 37/1972) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1972) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(2). தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43/72).

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Sixth Amendment Bill, 1972 *(L.A. Bill No. 43 of 1972), as passed by the Assembly, be taken into consideration".

Under the existing section 18 (3) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), the surplus land vests in the Government with effect from the date of the publication of the notification under sub-section (1) of section 18. This notification is published after all the procedural formalities are complied with. Though section 7 prohibits that no person should hold land in excess of the ceiling area after the date of the commencement of the Act, by reason of sub-section (3) of section 18, the owner continues to be in possession of the surplus land after the date of the commencement of the Act and before the date of the vesting of the surplus land in the Government. In some cases this period ranges to some years, during which the owner continues to enjoy the surplus land. It has been suggested that, having regard to the spirit of the land reform measure, the surplus lands as finally declared by the competent authority should vest in the Government even from the date of the commencement of the Act which is the crucial date for the purposes of fixing the ceiling area and that the owner of the land or any person deriving benefit therefrom should be made liable to pay to the Government an amount as compensation for the use and occupation of the land for the period for which he was in possession of the surplus land. Clause 3(2) of the Bill seeks to achieve this object.

Under section 22, any transfer made after the date of the commencement of the Act but before the notified date is declared void by the authorised officer if such transfer defeats the provisions of the Act. Under section 10(4), the owner has the option to choose the land which is to be included within his ceiling area. In many cases the owners of land who have transferred the land during the period mentioned in section 22, have indicated in their return their desire that the land so transferred, and which transfer has been declared void, should be taken by the Government as surplus land. This results in a double advantage to the landowner, namely, that in addition to the consideration received by him from the purchaser, he is entitled to compensation from the Government for such surplus land. The Government have decided that such unintended benefit should not enure to the owner of the land

*84—86-ஆம் பக்கங்களில் II-இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[P. U. Thiru Shanmugham] [1972 டிசம்பர் 14

and that lands the transfer of which was declared void under section 22 should be compulsorily included within the ceiling area of the transfer or by the authorised officer, without affecting the rights of the transferee. The result will be that the purchaser will not be disturbed from the possession of his land and the transferor will not be entitled to any compensation. Clause 3(1) of the Bill seeks to achieve this object.

Under section 21-A as amended by clause 3(8) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Third Amendment Bill, 1972, partition is permissible between the 15th February 1970 and the 2nd October 1970. The intention is that the partitions effected to defeat the purpose of the Act made after the 2nd October 1970 and during the period referred to in section 22, should not be permitted. Clause 4 of the Bill seeks to achieve this object.

A new section 88-A is proposed to be inserted in the Act providing for punishment for those persons who have specified in their return that the lands, the transfer of which was declared void under section 22, should be taken over by the Government as surplus land of the transferor. Clause 5 of the Bill seeks to achieve this object.

Sir, I commend the motion for the acceptance of the House.

தலைவர் அவர்களே, சுருக்கமாக இதில் இருப்பதைச் சொன்னேன்.
இதில் இருக்கக் கூடியவை இரண்டு மூன்று திருத்தங்கள்தான். இது
என்ன திருத்தம் என்று கேட்டால், ஒருவருக்கு அதிகபட்ச நிலமிருந்து
இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியில் அதிகமாக
நிலம் இருந்தால், இந்த நடைமுறை விதிகளைக் கடைப் பிடித்த பிறகு
தான் அவர்களுக்கு எவ்வளவு நிலமிருக்கிறது என்று பார்த்து அதை
பி.ப. அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற விதி இருக்கிறது. இதில்
.00 நாம் முடிவெடுப்பதற்கு முன் பல ஆண்டுகள் ஆகிவிடுகிறது. இதைத்
தடுக்க சில விதிகளைச் சொல்லியிருக்கிறோம். அது என்னவென்று
கேட்டால், அதிகமாக நிலம் இருந்தால், ஒருவருக்கு அது அதிகமா என்று
தீர்மானிக்கிற நாள்வரை அந்த நிலத்தை அவர் அனுபவிப்பதற்காக
அரசாங்கத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இப்போது அதை
அவர்களே அனுபவித்து வருகிறார்கள். அது கூடாது. இப்படி அவர்கள்
அனுபவிப்பதைத் தடுக்க சட்டம் கொண்டு வருகிறோம். உதாரணமாக,
ஒன்றைச் சொல்கிறேன். ஒருவருக்கு 200 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம்
இருக்கிறது. சட்டப்படி இருக்க முடியாது. ஆனால் அனுபவதைப் பேசுகி
றேன். ஒருவருக்கு 25 எக்கருக்கு மேல் இருக்கக் கூடாது. மீதம் 175
எக்கர் நிலத்தை உபரி நிலம் என்று நிர்ணயிக்கிற காலம்வரை அவர்
அதை அனுபவித்து வருகிறார். அதை அரசாங்கம் எடுக்கப் போகிற
நேரத்தில் அந்த நிலச் சொந்தக்காரர் உயர்நீதி மன்றத்திற்கு மனு
போட்டுவிட்டு அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார். அப்படி வருகிற
நேரத்தில் அதற்காக ஒரு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அவருடைய
நிலத்தை முன்பே நாம் எடுத்திருந்தால், இன்னொரு நிலமில்லாத
வருக்கு அந்த நிலத்தைக் கொடுத்திருப்போம். இப்படி ஒருவர்
அந்த நிலத்தை அனுபவிக்கக் கூடாது என்று முடிவு செய்திருக்கிறோம்.



1972 டிசம்பர் 14] திரு. ப. உ. சண்முகம்]

அடுத்து, இன்னொரு பிரிவைச் சேர்த்திருக்கிறோம். சில பேர்கள்உபரி
நிலம் எவ்வளவு என்று தீர்மானிப்பதற்கு முன்னால் தங்களுக்கு இருக்கிற
உபரி நிலத்தை விற்று விடுகிறார்கள். அப்படி விற்றுவிடுகிறபோது,
விவசாயிக்கு ஒரு சலுகை இருக்கிறது. அதற்கு விவசாயி எந்த நிலம்
சொந்த நிலம், எது உபரி நிலம் என்று சொல்லலாம் என்று சட்டத்தில்
இருக்கிறது. அதை பயன்படுத்திக்கொண்டு விற்றுவிட்ட நிலம் உபரி,
என்று சொல்கிறார். இப்படி விற்று விட்ட நிலத்தை உபரி நிலம் என்று
சொல்லலாம் என்று உரிமை இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு
அவர் இப்படிச் செய்வதால் வாங்குகிற ஏழை தான் அதில் ஏமாந்து
போகிறார். இப்படி ஏமாறக் கூடாதென்பதற்காகப் புதிய சட்டத்தைக்
கொண்டு வருகிறோம். இப்படி நிலச் சொந்தக்காரர் விற்றுவிட்ட நிலம்
உபரி நிலமா இல்லையா என்று நிர்ணயிப்பதற்கு "ஆதரைஸ்டு ஆபீஸர்"
போட்டு அவர் தான விற்று விட்ட நிலம் சொந்த நிலம் என்றும், வைத்
திருப்பது உபரி நிலம் என்றும் சொல்லி அதை அரசாங்கம் எடுத்து
வினியோகிக்க வேண்டுமென்று இந்தத் திருத்தத்தைப் போட்டிருக்கி
றோம். இப்படிப் போடுவதால் ஏழைகள், நிலத்தை வாங்குகிற ஏழைகள்
ஏமாற மாட்டார்கள் என்பதற்காகப் போட்டிருக்கிறோம். இதிலே இப்போது
நிலத்தை விற்றவர்களுக்கு இரண்டு அனுகூலங்கள் இருக்கின்றன.
அவர்கள் உபரி என்ற நிலங்களை விற்றதால் கிடைக்கக் கூடிய பணத்தோடு,
அவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈட்டுத் தொகையும்
போய்ச் சேருகிறது. இப்படி நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், இதைக்
கொண்டு வந்திருக்கிறோம். இப்படி நல்ல திருத்தங்கள் நாட்டில் ஏற்பட்
டிருக்கிற சோஷலிஸ சமுதாயத்தை அடிப்படையாக வைத்து,
கொண்டு வரப்பட்டிருக்கின்றன. தலைவர் அவர்களே, இந்தத்
திருத்தங்கள் கொஞ்சம் கடினமாக இருக்கலாம். இது கடுமையாகக்
கூட இருக்கலாம். நிலச்சட்டம் என்ற பெயரில் பல நிலப் பிரபுக்கள்
சட்டத்திலுள்ள ஓட்டைகளை வைத்துக்கொண்டு தங்களிடம் இருக்கும்
உபரி நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். இதை அரசாங்கம்
சட்டம் போட்டுத் தடுக்க முயற்சித்திருக்கிறது. இதை திரு. ஆர். கிருஷ்ண
சாமி நாயுடு போன்றவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.
ஏனென்றால் சோஷலிஸத்தில் அவர்களுக்குத் திடமான நம்பிக்கை உண்டு
என்று நம்புகிறேன். அவர்களின் சிரிப்பிலிருந்தே இந்த மசோதாவை
அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: அவர் இரண்டு மூன்று சைசாகச் சிரிப்பார் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: எனவே இதை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43–72) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :— "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஆறும் திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 43–72) நிறைவேற்றப்படவேண்டும்."

தீர்மானம் மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

* * *

(3) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44–72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட பேரவை சட்ட முன் வடிவு எண் 44–72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் விதித் துறையின் கீழ், பயிரிடும் குத்தகைத்தாரர் ஒருவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஐந்து ஸ்டாண்டர்டு எக்கர் என்னும் உச்ச வரம்பிற்கு உட்பட்டு, ஒரு பொதுப் பொறுப்புக் கழகம் தன் வசம் உள்ள 20 ஸ்டாண்டர்டு எக்கர் நிலத்திற்கு மேலிருக்கும் நிலங்களை பயிரிடும் குத்தகைத்தாரருக்கு குத்தகை விட வேண்டும். பல

@86–19 பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



நேர்வுகளில், பொதுப் பொறுப்புக் கழகங்கள் ஐயத்திற்கிடமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனால் இச்சட்டத்தின் நோக்கத்தையே தோல்வியுறச் செய்யும் வகையில் நிலங்களைப் பகிர்ந்தளிக்கின்றன என்று முறையீடுகள் வந்துள்ளன. நிலங்களை குத்தகைக்கு விடும் அதிகாரம் பொதுப் பொறுப்புக் கழகங்களிடமே உள்ளது. சட்டத்தின் விதித் துறைகளைச் செயற்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு, நிலங்களை குத்தகைக்கு விட அதிகாரமில்லை. எனவே, கீழ்க்காணும் நேர்வுகளில், பொதுப் பொறுப்புக் கழகங்களின் சார்பாக நிலங்களைப் பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு குத்தகை விட, அனுமதி பெற்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்தைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது ஒரு டிரஸ்டு, பொதுப் பொறுப்புக் கழகம் இருக்குமானல், 20 ஸ்டாண்டர்டு எக்கர் வரை அவர்களே பயிர் வைக்கலாம் என்று இப்போது இருக்கின்ற சட்டத்தில் இருக்கிறது. மேற்கொண்டிக்கிற நிலத்தை 5 ஸ்டாண்டர்டு எக்கர்களாகப் பிரித்து குத்தகைக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதை வைத்துக்கொண்டு, இப்போதிருக்கிற சட்டத்தை வைத்துக்கொண்டு, பல தவறுகள் நடக்கின்றன என்று அரசுக்கு முறையீடுகள் வந்திருக்கின்ற காரணத்தினால்—ஆதரைஸ்டு ஆபிசருக்கு யாருக்கு விடவேண்டுமென்று அதிகாரம் இது வரையில் இல்லை. ஆகவே கீழ்க் காணுகின்ற வகையில் தவறுகள் ஏற்படுமானல் அவர் அதிகாரங்களை எடுத்துக் கொள்வார் என்று இப்போது முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அவை யாவன :—

(அ) சட்டத்தின் விதித் துறைகளுக்கு ஏற்ப பொதுப் பொறுப்புக் கழகங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடாத போது —

நிலங்களை குத்தகைக்கு விடவில்லையென்று சொன்னல், குத்தகைக்கு விடுகிற அதிகாரத்தை ஆதரைஸ்டு ஆபிசர் எடுத்துக் கொண்டு செய்ய, நிலத்தைத் தரிசாக விட்டிருந்தால் குதகைக்கு விடுகிற அதிகாரத்தை அவருக்கு அளிக்கிறது.

(ஆ) பொதுப் பொறுப்புக் கழகமே சொந்தமாகப் பயிரிடுகின்ற நிலம் சரிவர நிர்வகிக்கப்படாதபோது —

20 ஸ்டாண்டர்டு எக்கர் வரை அவர்களே பயிரிடலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. அதை சரிவர நிர்வகிக்கவில்லை, அதைப் பயிரிடவில்லையென்றால் அதையும் எடுத்து குத்தகைக்குக் கொடுக்கலாம். நிலத்தைத் தரிசாகப் போட்டால் என்ன செய்வது என்பதால் இந்த அதிகாரத்தை இப்போது அளிக்கிறோம்.

(இ) பொதுப் பொறுப்புக் கழகத்தினால் நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்து, அத்தகைய த்தகை உண்மை நிலையைக் காட்டாத போது.

[திரு ப.உ. சண்முகம்] [1972 டிசம்பர் 14

பொதுவாக ஒரு கோயிலுக்கு நிலம் சொந்தமாக இருந்து 300, 400 ஏக்கர் யார் பேரிலோ பினமி தாரர் பேரில் போட்டிருந்து யாரோ ஒருவர், குறிப்பிட்ட நபர் ஒருவர் அனுபவித்து வருவாரானுல் அந்த முறைகேடுகளைக் கண்டு பிடித்து ரத்து செய்கிற அதிகாரம் ஆதரைஸ்டு ஆபீசருக்கு இது வரையில் சட்டத்தில் இல்லை. புதிய சட்டப்படி அந்த அதிகாரத்தை எடுக்கிறோம்.

சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ், பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்பட்டு வைத்திருக்கும் நிலங்கள் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்படும். பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர், உச்சவரம்பு அளவிற்கு மேற்பட்டு வைத்திருக்கும் நிலங்கள் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு மாற்றப்படவேண்டுமென்று மட்டுமே அனுமதி பெற்ற அதிகாரி அறிவிக்கலாம் என்றும், ஆனுல் நில உடைமையை வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும் பயிரிடும் குத்தகைத்தாரர் நிலத்தின் உடைமையை பொதுப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்க மறுத்தால் மேற்படி கழகம் அந்த நிலத்தின் உடைமையை எடுத்துக் கொள்ள சிவில் நீதி மன்றத்திடம் முறையிட வேண்டுமென்றும், 1365–66-ஆம் எண் ரிட் மனுவில் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. இத்தகைய நடவடிக்கையினுல் பொதுப் பொறுப்புக் கழகத்திற்கு வீணை தொல்லைகள் ஏற்படுவதோடு இச்சட்டத்தை முறையாகச் செயற்படுத்துவதில் சிக்கலையும் ஏற்படுத்தும். எனவே, பயிரிடும் குத்தகைதாரர்கள் நில உச்ச வரம்பு அளவிற்கு மேல் வைத்திருக்கும் நிலங்களின் உடைமையை அனுமதி பெற்ற அதிகாரி தானுகவே மேற்கொண்டு பொதுப் பொறுப்புக் கழகங்களிடம் ஒப்படைக்க் இயலும் வகையில் சட்டத்தில் விதித் துறைகளைச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சட்டத்தில் 2(6) பிரிவில் பயிரிடும் குத்தகைதாரர் ஒருவர் வைத்திருக்கும் நிலத்தின் உச்ச வரம்பு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் ஒவ்வோர் உறுப்பினரின் பெயரிலும் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தை குத்தகை எடுப்பதின் மூலம் இந்த விதித் துறையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழி ஏற்படுகிறது என்றும் அதன் மூலம் இச்சட்டத்தின் நோக்கம் தோல்வியுற வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் முறையீடு வந்துள்ளது. எனவே, ஒருவர், அவரது மனைவி, வயது வராத மகன், திருமணமாகாத மகள், பயிரிடும் குத்தகைதாரர் என்ற முறையில் அல்லது சொந்தக்காரர் அல்லது சுவாதீன அடமானதாரர் என்ற முறையில் வைத்து வரக் கூடிய நிலத்தின் மொத்தப் பரப்பளவு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்பதற்கிணங்க விதித் துறை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்போதிருக்கிற சட்டப்படி ஒருவருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒதுக்கி விடலாம். வீட்டில் 10 பேர்கள் இருந்தால் ஒவ்வொருவருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றுல் 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிருர்கள். அதை ஒழுங்கு படுத்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அதிகாரத்தை எடுக்கிறோம்.



1972 டிசம்பர் 14] [திரு. ப.உ. சண்முகம்[

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

இச்சட்டத்தின் 51-வது பிரிவு, பழத் தோட்டங்களாக அல்லது தோப்புகளாக அல்லது பாக்குத் தோட்டங்களாக மாற்றப்பட்ட நிலங்களுக்கு மேற்படி சட்டத்தின் விதித் துறைகளினின்றும் விலக்களிக்கிறது. பழத் தோட்டங்கள், தோப்புகள் என்னும் சொற்களுக்கு சட்டத்தின் முறையே 2(18), 2(29) பிரிவுகள் பொருள் விளக்கம் தருகின்றன. வாழை பயிரிடப்பட்டுள்ள நிலங்கள், சட்டத்தில் விவரித்துள்ளது போல் பழத் தோட்டங்கள் என்பதன் கீழ் வருமா என்பது பற்றி வாழை ஒரு மரம் என்ற ஒரு கருத்தும், அது மரமில்லை என்ற மற்றொரு கருத்தும் இவ்வாறு இதில் கருத்து வேறுபாடு உள்ளது. வாழை மரமா அல்லது பழத் தோட்டமா, எப்படிச் சொல்வது என்பதில் உயர் நீதி மன்றத்தில் சிக்கல் வந்தது. அதன் காரணமாக சட்டத்தின் கீழ் வாழையை மரமாக கருதிஞல் வாழை பயிரிப்பட்டுள்ள நிலங்கள், பழத் தோட்டங்கள் தோப்புகள் என்பதன் கீழ் வருவதோடு சட்டத்தின் விதித் துறைகளினின்றும் அவற்றிற்கு விலக்கு அளிக்கப்படும். வாழையை ஒரு மரமாகக் கருதக் கூடாது என்பதே நோக்கமாகும். இந்த நோக்கத்தைத் தெளிவாக்கும் பொருட்டு, வாழை பயிடப்படும் நிலங்களை பழத்தோட்டம், தோப்பு என்னும் பொருள் விளக்க வரம்பிலிருந்து நீக்கும் வகையில் இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள "பழத் தோட்டம்" "தோப்பு" என்னும் சொற்களின் பொருள் விளக்கங்களைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு மேற்கண்ட நோக்கங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

இதை ஏற்குமாறு தலைவரவர்களே, தங்கள் மூலம் இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : உப தலைவரவர்களே, இந்த மசோதாவின் மூலமாகவுள்ள சில சந்தேகங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். அறநிலையங்களுக்கு, கோயில்களுக்கு, தேவஸ்தானங்களுக்கு இவைகளுக்கெல்லாம் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று அமைச்சரவர்கள் நான் கேட்டபோது சொன்ஞர்கள். சில தேவஸ்தானங்களை எடுத்துக்கொண்டால், அவைகளுக்கு இந்த 20 ஏக்கரா என்பது போதாது. ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார்

தேவஸ்தானத்தை எடுத்துக்கொண்டால் ஆண்டுக்கு 300 கோட்டை நெல் தேவை. அவர்களுடைய நிலங்கள் விளைவில்லாமல் போன காரணத்தினால் அந்த 2, 3 ஆண்டுகளாக 300 கோட்டை நெல் அவர்கள் விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல தேவஸ்தானங்கள், ஆலயங்கள் இருக்கின்றன. அவைகளுக்குத் தேவைப்படக்கூடியது 20 ஏக்கரில் வந்து விடுமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. மற்ற டிரஸ்டுகளை விட, இந்த தேவஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அவற்றுக்கு குறிப்பாக ஆண்டுதோறும் எத்தனை உற்சவங்கள், பிரமோற்சவங்கள் இருக்கின்றன, எவ்வளவு செலவாகும், என்பதை அனுசரித்து அந்தந்த ஸ்தலங்களில் எவ்வளவு நெல் தேவையாக இருக்கிறது என்று தெரிந்து கொண்டு, இந்த 20 ஏக்கர் என்று நிர்ணயித்துவிடாமல் அவைகளுக்கு மற்றச் செலவுகளுக்கு எவ்வளவு இருக்கிறதோ அதையும் அனு-
பி.ப. 5-20. சரித்து மேற்படி ஏக்கரை நிர்ணயிக்க வேண்டும். அதற்கு இந்தச் சட்டத்தில் ஏதேனும் ஏற்பாடு செய்தால் நல்லது அல்லது நடைமுறைக்கு வரும்போதாவது [illegible] செய்ய வேண்டும்.

சட்டத்திலே 20 ஏக்கர் என்று சொல்லியிருந்தாலும், நடைமுறையில் விதிகளைத் திருத்திக்கொள்ள முடியுமா என்பது தெரியவில்லை. ஆகையினால் அமைச்சர் அவர்களும், அரசும் இதுபற்றி ஆவன செய்ய வேண்டும். அந்தக் கோவில்களின் நிலங்களையும், மற்ற ஸ்தாபனங்களின் நிலங்களையும் 5 ஏக்கருக்கு மேலே சொந்த நிலம் வைத்திருப்பவர்கள், குத்தகைக்குப் பெற முடியாதென்ற நிலை இந்த மசோதாவிலே இருக்கிறது. சொந்த நிலம் 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள், அந்த ஸ்தாபனங்களினுடைய நிலங்களை மேலும் குத்தகைக்குப் பெற முடியாது. சொந்த நிலம் 2 ஏக்கர் இருந்தால், மேலும் 3 ஏக்கர் இந்த ஸ்தாபனங்களின் மூலம் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கெல்லாம் விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளின் நடைமுறையில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களைப் போக்குவதற்கு அதிலே இருக்கக்கூடிய முறைகேடான வழிகளைத் தடுப்பதற்கு, இந்த மசோதாவை அரசு கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அதே போல, வேறு துறைகளில் நல்ல வருமானம் வரக்கூடிய குடும்பங்கள், வேறு வகையிலே தொழில் செய்யக்கூடியவர்கள், இந்த நிலத்தைக் குத்தகைக்குப் பெற வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான, லட்சக் கணக்கான ரூபாய்களில் வேறு தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்கள் நிலமில்லை என்ற காரணத்தால் இந்த ஸ்தாபனங்களிலிருந்து நிலங்களைக் குத்தகைக்குப் பெற முயற்சித்தால், அவர்களைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். 5 ஏக்கர் சொந்த நிலம் வைத்து உழக்கூடியவர்கள் பல பேர் இருக்கலாம். அதற்குப் போதிய சக்தியும் அவர்கள் குடும்பத்தில் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் 5 ஏக்கருக்கு மேலே குத்தகைக்குப்





பெற முடியாதென்ற நிர்பந்தம் இருக்கிறபோது, பத்தாயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் சம்பாதிக்கக்கூடியவர்கள் இந்த வகை நிலங்களைக் குத்தகைக்குப் பெற முயற்சிப்பதைத் தடுக்க அரசு முக்கியமாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

கோவில் நிலங்கள் 20 ஏக்கர் என்றபோது, அந்தந்தக் கோவில்களுடைய முந்தைய வருடத்துத் தேவைகளை அனுசரித்து, அந்த ஏக்கர் [illegible] நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: துணைத் தலைவரவர்களே, நிலத்தை உழுபவர்களைப் பொறுத்த முறையில், இப்படிப்பட்ட ஒரு பாதுகாப்புச் சட்டம் தேவையென்ற பொதுப்படையான கொள்கையில் எனக்கு அரசோடு மாறுபாடும் இல்லை. ஆனால் நிறைந்த வரவேற்பும், அறநிலையங்களுக்கு ஏற்படுகிற சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது, பொதுவாக 4 ஆண்டுகளுக்கு அவர்கள் பாக்கி சிக்கல்கள் பல உண்டு. அதை இப்போது நம்முடைய அரசு வசூல் செலுத்தாமலிருந்தார்கள். குத்தகைக்கு விடுகிறவர் ஒருவர், செய்ய உத்திரவிட்டிருக்கிறது. நிச்சயமாக கடந்த கால பாக்கியாளர் ஒருவர் என்று சொன்னால், சிரமங்கள் அதிகமாகும். அரசு அறநிலையத்துறையில் [illegible] அரைகுறையாக நம்முடைய நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செய்வதை விட, அவற்றை வசூலிக்கின்ற [illegible] பூரணத்துவ அதிகாரியிடத்தில் கொடுத்தால், அரசு [illegible] சிக்கலில்லாமல் நடைபெற முடியும். இல்லை [illegible] "நான் அதனை [illegible] செய்வது?" என்று அந்த [illegible] சுமுகமான உறவு [illegible] அரசு கவனத்தில் [illegible] வேண்டுமென்பது, [illegible] சிக்கல். [illegible] பல கோவில்கள் [illegible] இப்போது பாதிக்கப்பட்டிருக்கும் [illegible] பார்த்துக்கொள்வார், [illegible] அந்த நிர்வாகத்தில் பெரிய [illegible] அறநிலையச் சட்டத்தின் மூலம், [illegible] இந்த அறநிலையச் சொத்துக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் [illegible] அவர்களைக் கண்டித்து [illegible] குத்தகைக்கு [illegible] அந்த அதிகாரம் [illegible] எந்த விதமான [illegible] கணித்து [illegible] கொள்ள [illegible] அறநிலையப் [illegible] கொள்கையில் [illegible] பொதுப் பொறுப்புக் கழகங்களுக்குப் பாதுகாப்பு [illegible]

குள்ள நிலங்களை குத்தகைக்கு விடவேண்டுமென்று சட்டம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் குறிப்பிட்டது போல், தவறுகள் இருக்கின்றன என்பதை, கணபதியா பிள்ளை அறிக்கை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. அதிலே அடிப்படை உரிமைகளில் மாறுதல் இல்லை. அந்தத் துறையை அமுல்படுத்தும் நிர்வாக அதிகாரி, ஒரு டிரஸ்டியோ பொதுப் பொறுப்பிலே இருக்கிற நிலத்தை முறையாகக் குத்தகைக்கு விடாதுபோனால், அது கடுமையான தண்டனைக்குரியது, நடவடிக்கைக்குரியது என்றிருக்க வேண்டும். அதை யார் செய்ய வேண்டுமோ அவரிடத்தில் நிர்ணயம் காணாமல், அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுமேயானால், அல்லது வேறு இடத்திற்கு மாறிக்கொண்டே போகுமேயானால், காலப்போக்கில் இதற்கு ஒரு எல்லைக்கோடு இல்லாமல் போகுமோ என்பதை அன்பு கூர்ந்து நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஆராய வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். பொதுவாகக் கோவில்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கும், குடிமக்களுக்கும் நிர்வாக உறவு மட்டுமல்ல, வேறு சில உறவும் இருக்கிறது. அவர்கள் பல்வேறு பணிகளுக்கும் வருகிறார்கள். இவர்களிலே இன்னொருவர் dual என்று சொல்வார்களே, அவர் புகுகிறபோது, அவர் கோவில்களில் வேறு வேலைக்கு வருவதற்குக்கூட இடர்பாடுகள் வருகின்றன. அவர் நிலத்தை உழுகிறார். அவர் வேறு பல பணிகள் செய்வதற்கும் கோவிலுக்கு வருகிறார். இந்த இடைப்பட்ட நிலையை அந்த உறவுகள் எதுவும் பாதிக்காதபடிக்குச் செய்ய வேண்டுமென்றும், பொதுப்படையாக மீண்டும் நினைவூட்ட ஆசைப்படுகிறேன். ஒரு அறநிலையத்தினுடைய தலைவர் என்ற பொறுப்பில், இந்த மாதிரிச் சட்டங்கள் வந்து, அறநிலையத்தைப் பாதிக்கப்படக்கூடிய அந்தக் கருத்துக்களைச் சொல்ல நான் தயாராக இல்லை. நடைமுறைச் சிக்கல் வராமல் தற்காப்பு கொடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு, பொதுப்படையாக இதை வரவேற்று, சிக்கல்கள் வராமல் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விடை பெற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொதுவாக இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கும், அறக்கட்டளைகளின் பொறுப்புக் கழகங்களுக்கும் தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதே பேசிய அங்கத்தினருடைய கருத்து என்று நான் நினைக்கிறேன். பொறுப்புக் குழுக்கள் தாங்களாகவே 20 ஏக்கர் பயிர் வைத்துக் கொள்ளலாம். அப்படித் தாங்களாகவே பயிர் வைத்துக்கொள்ளலாம் என்ற முறையை வைத்துக்கொண்டு, பயிர் வைக்காமல் வேறு முறைகேடுகள் நடக்குமேயானால், அப்போது அதிகாரிகள், "ஆதரைஸ்டு ஆபீஸர்" அங்கே குறுக்கிடுவார்கள். அவர்கள் அங்கே இருக்கிற நிலத்தை எடுத்து இன்னொருவருக்குக் கொடுக்க, இதன் மூலம் அதிகாரம் கொடுக்கிறோம். இன்னொன்று, 5 ஏக்கருக்கு மேல் ஒருவருக்குக் குத்தகை விடக்கூடாதென்று சட்டம் வைத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி வைத்திருப்பதைக் கொண்டு, இந்த நாட்டில் பெரியவர்கள் போர்வையில் இருக்கும் பல பேர், கோவில் நிலங்களை, பல



பினாமிதாரர்கள் பேரில் போட்டுவிட்டு, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் என்று கண்டுபிடிக்கவும், பினாமிதாரர்கள் இருந்தால் குத்தகையை ரத்து செய்வதற்கும், அதை இன்னொருவருக்குக் கொடுக்கின்ற அதிகாரமும் இதுவரையில் சட்டத்திலேயில்லை. ஆனால் அப்படி இருப்பார்களேயானால், அவர்களின் குத்தகையை ரத்து செய்து, வேறு ஒரு குத்தகைதாரருக்குக் கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. எனவே நடக்கின்ற கோவில் திருப்பணிகளுக்கோ அல்லது விவசாயிக்கும் பொறுப்புக் கழகத்துக்கும் இருக்கின்ற நல்லுறவைக் கெடுக்கின்ற அளவுக்கோ சட்டத்திலே எதுவுமில்லை. நிச்சயமாக அரசு அதிகாரிகள் பாதுகாப்பார்கள் என்ற உறுதியை நான் தெரிவித்து, இந்தச் சட்டத்தை....................(குறுக்கீடு) இருபது ஸ்டாண்டர்டு ஏக்கர் போதாது, இன்னும் அதிகமாக நிலம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இது பழைய சட்டத்திலேயே இருக்கிறது. நாம் பழைய சட்டத்திலுள்ள வரையறையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க வேண்டுமென்று நினைக்கிறோம். 20 ஏக்கரை, 10 ஏக்கராக்காமல் இருக்கிறார்களே என்பதற்கு நன்றி தெரிவிக்க வேண்டுமே தவிர, 20 ஏக்கர் 20 ஏக்கராக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அப்போது போட்ட சட்டம் எனவே 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னாலேயே அதிக நிலம் வந்துவிடும். அதையே பல கோவில்களால் நிர்வகிக்க முடியவில்லை. எனவே நான் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். பல கோவில்களிலுள்ள சிக்கல்களைச் சொல்ல முடியவில்லை. ஆகவே இதுவே போதுமென்று கூறி, சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன் வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

திரு ப.உ. சண்முகம் [1972 டிசம்பர் 14

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :—துணைத் தலைவரவர்களே "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 44/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72).

5-30 பி.ப. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : "துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

இப்போது யாராவது சொத்து வாங்கினால், ஸ்டாம்ப் ட்யூட்டி கட்ட வேண்டுமென்பதற்காக சொத்தின் மதிப்பீட்டைக் குறைத்துப் பதிவு செய்து கொள்வார்களேயானால், நீதிபதி ரூபாய் 5,000 வரை அபராதம் விதிக்க இப்போது சட்டத்தில் வழி இருக்கிறது. இந்தப் புதிய மசோதாவில் ஸ்டாம்ப் ட்யூட்டியை விதிக்கப்படும் அபராதத்துடன் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வருகிறோம். அவ்வளவு தான். எனவே இந்தச் சட்ட முன் வடிவை இந்த மேலவையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

* 90 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1972 டிசம்பர் 14]

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : துணைத் தலைவரவர்களே, இதில் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அரசாங்கம் அதனுடைய வருமானத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையோடு இதற்கான ஏற்பாடுகளை சட்டத்தின் மூலம் தேடிக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசு, இந்திய முத்திரைத்தாள் சட்டப்படி ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலேயும் அந்தந்தப் பகுதியிலுள்ள நிலங்கள் ஏக்கருக்கு எவ்வளவு பெறுமானது என்பதற்கு ரெகார்டுகளை வைத்துப் பராமரிக்கின்றது. அந்த அளவு விலையில்தான் ஸ்டாம்பு வாங்கி அந்த நிலங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அனுபவத்திலே பல இடங்களிலே அரசாங்கம் நிர்ணயித்திருப்பதைவிட, பாதி விலைக்குக்கூட போகாத நிலங்கள் இருக்கின்றன. அதில் நாலில் ஒரு பங்குகூட விற்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன—அந்த நிலங்களை, ஏழைகள், கஷ்டப்படக்கூடியவர்கள் நிர்பந்தத்தின் காரணமாக, தாங்கள் அதை வைத்துப் பராமரிக்க முடியாது என்ற நிலைமையில் இருக்கும்போது, நியாயமாக விற்க முன் வந்தால், அவ்வளவு "ஸ்டாம்பு டியூட்டி" கட்டி வாங்கக்கூடிய அளவுக்குக்கூட அந்த நிலங்கள் பெறாது என்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டங்கள் நிவர்த்திக்கப்படாமல் பல பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றியும் அரசு யோசிக்க வேண்டும். இன்னின்ன இவ்வளவு விலை என்று நிர்ணயித்திருந்தும், அரசாங்கத்தினுடைய பல்வேறு அவசியங்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, அரசாங்கம் தான் நிர்ணயித்துள்ள விலையைக் கொடுப்பதற்குக்கூட மறுக்கிறது. சாதாரணமாகச் சொல்வார்கள் "கானத்தைக் கண்டால் வாயைத் திறக்கும், கடிவாளத்தைக் கண்டால் வாயை மூடும்" என்று. அதுமாதிரி அரசாங்கமும் இந்த மாதிரி சந்தர்ப்பம் அறிந்து இப்படி நடந்துகொள்ளக் கூடாது என்பதை ஆய்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதிலே வந்த நிலத்தை மார்க்கட் வேல்யுவிற்குக் கொடுக்க வேண்டுமென்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள். நிலத்தை ஆர்ஜிதம் செய்வதைப்பற்றி இந்தச் சட்டத்திலே இல்லை. அதற்கு "அக்குவிசிசன்" என்று ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. இதற்காக ஒரு தனி அதிகாரியைப் போட்டிருக்கிறோம். ஸ்டாம்ப் சட்டம் தவறு என்று சொல்கிறார்கள். ஸ்டாம்பு சட்டத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இப்போது பலர் ஸ்டாம்பு டியுட்டி ஏற்கெனவே கட்டவில்லை. அதனால் கட்டவேண்டிய ஸ்டாம்பு டியுட்டிகளை வசூலிக்க வேண்டுமென்றுதான் இப்போது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. எனவே இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு @ (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, ப்ரீஹோல்ட் என்று இந்த நாட்டிலே நிலங்கள் இருக்கின்றன. அது என்னவென்று கேட்டால், 20 ஆண்டுக் காலம் ஒருவர் இருக்கிற நிலத்தீர்வையை அரசாங்கத்திற்கு மொத்தமாகக் கொடுத்துவிட்டால், காலாகாலத்திற்கு அந்த நிலத்திற்குத் தீர்வை கட்ட வேண்டாமென்று ஒரு விதி, "போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்"லே, இருக்கிறது. இதைப் பயன்படுத்திக் கொண்டு பலபேர் இந்த நாட்டிலே ஏராளமான ப்ரீஹோல்ட் நிலங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வரியே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவைகள் ரயத்துவாரி பூமிகள்தான். அந்த நிலத்திலே பல சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. நிலத்தை யார் யார் அனுபவித்து வருகிறார்கள்

@ 93, 134-ஆம் பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



என்றெல்லாம் சிக்கல் இருக்கிறது. ரயத்துவாரி பூமியாக இருந்தும்கூட, வரி வசூலிக்காத காரணத்தால், வேறு பல சிக்கல்களும் வருகின்றன. அந்த ரயத்துவாரி பூமிக்கான அந்த ப்ரீஹோல்ட் டெனுரை மாற்றிய மைத்து, வரி வசூலிக்கின்ற அதிகாரத்தை எடுப்பதாகும். இப்போது தமிழ் நாட்டில் எவ்வளவு நிலத்திற்கு வரி போடாமல் விடப்பட்டிருக் கிறது என்று கணக்கைச் சேகரித்துப் பார்க்கும்போது, நமக்கே ஆச்சரிய மாக இருக்கிறது, இவ்வளவு நிலங்கள் வரியே இல்லாமல் இருக்கின்ற னவா என்று. சேலம் குமாரபாளையம் அக்கிரகாரம் என்று சொல்லப் படுகின்ற ஒரு இடத்தில் மட்டும் 1,40,178 ஏக்கரா நிலம் "ப்ரீஹோல்ட்"ஆக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களைப் பல பேர் இந்த நாட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த குமாரபாளையத்திலே உள்ள விசித்திரம் என்னவென்றால், அங்கே மைசூர் மகாராஜாவுக்குப் பணம் வசூலித்துக் கொடுத்தார்கள் என்றும், அவர்கள் அந்த நிலங்களை வைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் சொன்னதாகச் சொல்லப்படு கின்றது. அம்மாதிரியே இந்த நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் ரத்து செய்ய வேண்டும். அந் நிலங்களுக்கு வரி போட வேண்டுமென்பதற்காக, "ப்ரீஹோல்ட்" என்பதை ரத்து செய்கின்ற இந்தச் சட்டம் சிக்கல் இல்லாத சட்டம். இதையாவது திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன் வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, எடுத்துக்கொள்ளப் பட்டது.

(பரிந்துரைகள் இல்லை).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 46/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/ 72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

குதிரைப் பந்தய வரிக்கு மேல் வரி விதிக்க வகை செய்வதற்காக தமிழ்நாடு 1935-ம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/1935), தமிழ்நாடு 1971-ம் ஆண்டு 44-வது சட்டத்தால் 1971-ல் திருத்தப்பட்டது. மேல்வரி 1972 ஜனவரி 1-ம் நாளிலிருந்து விதிக்கப்பட்டுள்ளது. "பந்தய கணிப்புப் பொறி வரி" மீது மேல்வரி விதிப்பதற்கு 1971-ம் ஆண்டு சட்டம் வகை செய்யவில்லை. ஆனால், "பந்தய கணிப்புப் பொறி வரி" மீதும் 1972-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாளிலிருந்து மேல் வரி வசூலிக்கப்பட்டது. இவ்வாறு வசூல் செய்ததற்குச் செல்திறன் அளிக்கப்பட வேண்டியிருந்தது. மற்றும் "பந்தய கணிப்புப் பொறி வரி"-க்கும் தொடர்ந்து மேல் வரி விதிக்கப்பட வேண்டுமென்பதுதான் குறிக்கோள். எனவே, இக்குறிக்கோளுக் கிணங்க, சட்டத்தை அவ்வாறு திருத்துவது அவசியமெனக் கருதப் பட்டது. மேற்கண்ட குறிக்கோளை எய்துவதற்காக தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 4/72) 1972 நவம்பர் 21-ம் நாளன்று சாற்றுரைக்கப்பட்டது.

சட்ட மன்றத்தின் முன்புள்ள இச்சட்ட வரைவு, சட்ட மன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலம் மேற் சொன்ன அவசரச் சட்டத்தை ரத்து செய்ய விழைகிறது.

சட்ட மன்றத் துணைத் தலைவரவர்களே, இச்சட்ட வரைவை இம் மேலவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

@13 , 133-ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக எடுத்துக் கொள்ளப் பட்டது.

(பரிந்துரைகள் இல்லை.)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு பந்தய வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/72) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. 1972–73 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாவது துணை விவர அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி. பி ப. 5·40..

* திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துணைமதிப் பீட்டில் நமக்குத் தந்திருக்கிற பிரதிப்படி மூன்று விஷயங்கள் புதிதாகவும் முக்கியமானவையாகவும் இருக்கின்றன. ஒன்று வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக்காகப் பெருவாரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் 900 "கிராஜுவேட்" பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்பதற்காக வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது முதலாவதாக சொல்ல வேண்டிய விஷயம். இரண்டாவதாகச் சொல்லவேண்டிய விஷயம், பள்ளிக்கூடத்துப் பையன்களுக்கு ஒரு வைத்திய பரிசோதனை, அதாவது அவர்கள் எவ்வளவு தூரத்திற்கு நல்லவிதமாக இருக்கிறார்கள் என்று அவ்வப்பொழுது டாக்டர்களால் பரிசோதிப்பதற்கு புதிய ஒரு திட்டம். அது கோடிட்டுக் காண்பிக்க வேண்டிய ஒரு திட்டமாகும். மூன்றாவதாக, சூரியகாந்திச் செடி இருக்கிறதல்லவா, அதை மேற்கொண்டு பயிரிடு வதற்கு விவசாயத் துறையில் கிட்டத்தட்ட ரூ. 30 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்த மூன்று விஷயங்கள் இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டுக் காட்டக்கூடியவைகளாக இருக்கின்றன.

அது மாத்திரம் அல்ல. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற நிலைமையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்கெனவே இருக்கும் மெடிக்கல் காலேஜ், அது மாத்திரமல்ல

நாட்டு வைத்தியக் காலேஜ், இந்த இரண்டு கல்லூரிகளுக்கும் புதிதாக அநேக படுக்கைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளையெல் லாம் கவனிக்கிறபொழுது, இந்தப் புதிய திட்டங்களினுல் அநேக நன்மை கள் மக்களுக்கு ஏற்பட இருக்கின்றன.

இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட்டுக் காண்பிக்க விரும்பு கிறேன். ஒரு தனிப்பட்ட மனிதனுடைய சராசரி வருமானம், "பெர் கேப்பிடா இன்கம்" நாளாவட்டத்தில் நம்முடைய மாநிலத்திலே, இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னுல், கொஞ்சம் கொஞ்சமாக ஏறி வந்திருக்கிறது. நமக்கு மேலே நான்கு மாநிலங்கள் இருக்கின்றன. அதாவது பஞ்சாப், ஹரியானு, மகாராஷ்டிரா, குஜராத் என்பவை நமக்கு மேலே இருந்துகொண்டிருக்கின்றன. ஆனுல் குஜராத் சம்பந்தப்பட்ட மட்டில், நாம் கிட்டத்தட்ட இன்று நெருங்கிக்கொண்டு வந்திருக்கிறோம். இந்த அரசு தன்னுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னுல் குஜராத்துக்கும் தமிழ் நாட்டிற்கும் உண்டான இடைவெளி பெரிதாக இருந்தது. அது இன்று சுருங்கிக்கொண்டே வந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் எட்டிக்கூட பிடித்திருக்கிறோம் மேலேகூட போயிருக்கிறோம், இரண்டு குதிரைகள் ஓட்டப் பந்தயத்திலே எந்தவிதமாக ஓடும்பொழுது முன்னும் பின்னுமாக ஓடுகின்றனவோ, அதே பிரகாரம் இன்று குஜராத்தும் நாமும் கிட்டத்தட்ட ஒரே நிலைமைக்கு வந்துவிட்டோம் என்று மிகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தலைவர் அவர்களே, இனி நான் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற நிலைமையிலும் அங்கு நடந்த இரண்டொரு விஷயங் களைப் பற்றி இங்கே பிரஸ்தாபிக்கப்பட்டதாலும், அவற்றைப்பற்றி இரண் டொரு வார்த்தைகள் சொல்லித் தீரவேண்டிய அவசியம் இருக்கிறது. குற்றங் குறைகள் எத்தனையோ சொன்னுர்கள். அரசின் மீது அது தப்பிதம், இது தப்பிதம், அது செய்தார்கள் பிசகு, இது செய்தார்கள் பிசகு, இது வேண்டுமென்றே செய்தார்கள் என்றெல்லாம் குறைகள் சொல்லப்பட்டன. இங்கு மாத்திரமல்ல. பொது மேடையிலும் அநேக குறைகள் சொல்லப்படுகின்றன. பத்திரிகைகளிலும் அநேக குறைகள் சொல்லப்படுகின்றன. அடுத்த மன்றத்திலும் அநேக குறைகள் சொல்லப் பட்டன. ஆனுல் நல்ல நல்ல விஷயங்கள் எவைகள் உண்டோ அவைக ளெல்லாம் மூடி மறைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சொல்லு வதற்கு ஆள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவைகளைப்பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லுவதற்கு விழைகிறேன்.

முதலாவதாக, போலீஸ்காரர்கள் ஒரு வாத்தியாரை அடித்ததாகச் சொல்லப்பட்டது. ஆனுல் போலீஸ்காரர் செய்த நல்ல விஷயத்தைப் பற்றி யாராவது ஒரு வார்த்தையாவது சொல்லுவார்களா என்று கேட் டால், அது சொல்லுவதற்குத்தான் ஆள் கிடையாது. சூப்பிரண்டனட் ஆப் போலீசுக்கு விஷயம் தெரிந்தவுடனே அவர் "போன்" பண்ணிக் கேட்டார். "வாத்தியார் தரையில் உட்கார்ந்திருக்கிருரா, நாற்காலியில் உட்கார்ந்திருக்கிருரா?" என்று முதலில் கேள்வி கேட்டார். "தரையில் உட்கார்ந்திருக்கிருர்", என்று பதில் சொல்லப்பட்டது. "உடனே அவரை நாற்காலியில் உட்கார வையுங்கள். அதற்குப் பின்னுல் போனில்



தொடர்பு கொள்வேன்" என்று சூப்பிரண்டனட் ஆப் போலீசு சொல்லி, வாத்தியாரைப் போலீஸ் ஸ்டேஷனில் நாற்காலியில் உட்காரவைத்து அதற் குப் பிறகுதான் தொடர்பு கொண்டார். "நான் உடனே வருகிறேன், உடனே உங்களை வெளியேற்றுகிறேன்" என்று சொன்னுர்.

அது மாத்திரமல்ல. சூப்பிரண்டனட் ஆப் போலீஸ் கல்லெறியால் முழங் காலுக்குக் கீழே காயப்படுத்தப்பட்டு, அப்படியிருந்தும் அவர் அந்த இடத்தைவிட்டு அசையாமல் தன்னுடைய கடமையைச் செய்தார் என்பது இருக்கிறதே, அதுபற்றிச் சொல்லுவாரும் இல்லை, பிரஸ்தாபிப்பாரும் இல்லை. அது மாத்திரமல்ல. 2, 3 நாளாக சூப்பிரண்டனட் ஆப் போலீசு வீட்டுக்குப் போகாதபடி, சாப்பாடு கூட இல்லாதபடி, தூக்கம் இல்லாதபடி, பொது நன்மைக்காக, திருநெல்வேலி பாளையங்கோட்டையில் சாதாரண போலீஸ் கான்ஸ்டேபிள் எந்த விதமாகக் கடமை ஆற்றுகிருரோ அந்த விதமாக இரவு பகல் பாரா செய்துகொண்டு வந்தார் என்ற விஷயம் இருக்கிறதே, அது சொல்லப்படாமல் இருந்து வருகிறது. அது மாத்திர மல்ல. போலீஸ்காரர்கள் ஒரு 20 பேர்களை, "வழியில் சந்தேகாஸ்பதமாக நின்று கொண்டு இருந்தார்கள், அவர்கள் பழைய காலத்துக் கற் காலத்து ஆயுதங்களுடன் நின்றுகொண்டிருந்தார்கள்," என்று அவர்களை மடக்கிக் கொண்டு வந்தார்கள் ஒரு நாள் இரவு. அந்த இடத்திற்குத் தற்செயலாக சூப்பிரண்டனட் ஆப் போலீசு வந்தார். அவர் "நீங்கள் 20 பேர் யார்?" என்று கேட்டார். அப்புறம் கேட்டார், "உங்களில் மாணவர்கள் எத்தனை பேர்?" என்று கேட்டார். மாணவர்கள் கையைத் தூக்கினுர்கள். ஒரு காலேஜைச் சேர்ந்தவர்கள் மூனறுபேர் கையைத் தூக்கினுர்கள். இன் னெரு காலேஜைச் சேர்ந்த இரண்டு பேர் கையைத் தூக்கினுர்கள். "நீங்கள் இந்த ஐந்து பேர்கள் மாத்திரம் போங்கள், மற்றவர்களை மாத்திரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் கேள்வி கேளுங்கள்" என்று சொன்ன பெருந்தன்மை இருக்கிறதே, அது வெளியே வரவில்லை. அதைப்பற்றிப் பேசுவாரும் இல்லை, சொல்லுவாரும் இல்லை.

அது மாத்திரமல்ல. மாணவர்களும் ஆசிரியர்களும் நாங்கள் இன்று ஊர்வலமாக வரப்போகிறோம் என்று சொன்னுர்கள். எதற்காக? ஒரு மனு கலெக்டர் ஆபீசில் கொடுப்பதற்காக. "ஆஹா, மனுக் கொடுப்பதற் காக ஊர்வலமாகப் போக வேண்டியதில்லை. நானே வருகிறேன். ஊர்வலமாக வரும்பொழுது சில கெடுதல்களும் சில தப்பிதங்களும் ஏற்படலாம். ஆகையினுல் நானே வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்", என்று கலெக்டர் சொன்னுர் அல்லவா, அதை வாத்தியார்களும் மாண வர்களும் மறுத்துவிட்டார்கள் அல்லவா. அந்த விஷயத்தைச் சொல்லு பவர்கள் இல்லை. கலெக்டரின் அந்தப் பெருந்தன்மையைச் சொல்லு வாரும் இல்லை, பேசுவாரும் இல்லை.

இன்னொரு விஷயம், சுற்றிவர கற்கள் வீசப்பட்ட சமயத்தில்கூட பல விதமான இடையூறுகள் செய்து, போலீஸ்காரர்கள் உயிர்கள் ஆபத்தில் இருந்தபோதும் கூட, அவர்கள் தங்கள் கடமையைச் செய்துகொண் டிருக்கிற காலத்தில் கூட, அவர்களுக்குத் திட்டவட்டமான உத்தரவு இருந்தது என்று நினைக்கிறேன். "எக்காரணத்தாலும் துப்பாக்கியைப் பயன்படுத்தி விடாதீர்கள், துப்பாக்கியைத் தொட்டுவிடாதீர்கள்" என்று.

ஆகவே அவர்கள், "அரவு உயர்த்தோன் கொடுமையினாம் முரசு உயர்த்தோய் உனது அருளுக்கு அஞ்சினேனே," என்பதாக அவ்வட்டத்திலேயே நின்றுகொண்டு கடமையைச் செய்தார்கள் அல்லவா? அவர்கள் மட்டும் கடமையைச் செய்யாதபடி பயந்து ஓடிப்போயிருந்தால், பாளையங்கோட்டை மக்கள் எத்தனை மக்களின் உயிர் போயிருக்கும்! இன்னும் எவ்வளவு சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கும்! ஆகவே அவர்களைப்பற்றி நல்ல வார்த்தைகள் ஒருவர் சொல்லித்தான் ஆக வேண்டும். பொது ஜன நன்மையை உத்தேசித்து, சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது.

அங்கு நடந்த இந்த கலாட்டாக்களைக் கவனித்துப் பார்க்கும்போது, இரண்டு உயிர்கள் போயின. இரண்டும் நாம் மதிக்க வேண்டிய உயிர்கள், நாம் அன்போடு ஆதரவோடு அணைக்கவேண்டிய உயிர்கள். இரண்டு உயிர்கள் போயின. ஒன்று மாணவனுடைய உயிர், இன்னொன்று போலீஸ்காரர் உயிர். இரண்டு பேர்கள் காயம் பட்டார்கள். ஒன்று வாத்தியார் மேல்பட்ட காயம், இன்னொன்று ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் மேல்பட்ட காயம். சப்-இன்ஸ்பெக்டர் தாறுமாறாக அடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இரண்டு பேர் உயிர் இழந்தார்கள். இரண்டு பேர் காயம் பட்டார்கள். ரூ. 65 லட்சம் பெறுமான சொத்துக்கள்
5.50. பி.ப. பல இடங்களில் நாசப்படுத்தப்பட்டன. அறுபது லட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டன என்பது மட்டுமின்றி, அறுபது கோடி ரூபாய் பெறும் மாணவர்களுடைய படிப்பு அவ்வளவும் நாசமாயிற்று. அது மட்டுமில்லை. 600 கோடி ரூபாய் செலவழித்தால்கூட ஈடு செய்ய முடியாத அளவிற்கு தமிழர்களுடைய மானம், மரியாதை அனைத்தும் நாசமாகத்தக்க அளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்தேறிவிட்டன. மற்றவற்றுக்குக்கூட இல்லை, தமிழர்களுடைய மானம் போயிற்றே, இரண்டு பிணங்களோடு தமிழர்களோடு மானம் மரியாதை என்ற மூன்றாவது பிணத்திற்குத்தான் நான் அழவேண்டியிருந்தது, மற்றவற்றுக்குக் கூட வருந்தவில்லை, தலைவரவர்களே!

இன்று ஒரு சேதி, எல்லோரையும் கேட்க எனக்கு உரிமை உண்டு, கேட்க விரும்புகின்றேன். இந்த மாதிரி ஒரு நேரத்திலே சிறந்த முறையில் கடமையாற்றினார்களே போலீஸ்காரர்கள்—ஒரு போலீஸ்காரரை நான் நின்று பார்த்தேன், சுற்றிலும் கல் விழுந்தது, ஒரு பஸ்ஸை உடைத்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன், ஒரு பையன் ஆற்றுக்குள் விழுந்துவிட்டான் என்ற செய்தியினைக் கேட்ட இரண்டு நிமிஷத்திற்குள் நான் அங்கே வந்துவிட்டேன். கல்விழும் நேரத்தில்கூட ஒரு போலீஸ்காரர் தன்னுடைய இடத்தை விட்டு அகலாது நின்றிருந்தாரே, தலைவரவர்களே, குற்றம் சொல்லுகின்றவர்களைப் பார்த்துக் கேட்கின்றேன், "நீங்கள் அந்த அதிகாரத்தில் இருந்தால், நீங்கள் அந்தப் போலீஸ்காரர் ஸ்தானத்தில் இருந்திருந்தால், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்"? குற்றம் சாட்டுகின்றவர்களைப் பார்த்து இதைத்தான் கேட்கின்றேன், வேறு ஏதாவது செய்திருக்க முடியுமா? பஸ்களை உடைத்தவர்களைத் துரத்தாமல் இருக்க முடியுமா? ஒரு பஸ்ஸில் 50, 60 குழந்தைகள்—அவர்களுக்கு 16, 17 வயதிருக்கலாம், அவர்கள் பஸ்களை உடைத்துக்கொண்டிருக்கின்றார்கள் டி.வி.எஸ்ஸுக்கு முன்பு. நான் பார்த்தேன், போலீஸ்காரர் ஒருவர்



ஒரு தடியைச் சுழற்றிச் சுழற்றி அவர்களைத் துரத்தினார். அடிக்கவேயில்லை. இதுகூடச் செய்யாமலிருந்தால், பொதுமக்களின் சொத்துக்களை எப்படிக் காப்பாற்றுவது என்று நான் கேட்கின்றேன்.

கல்விக்காக இன்னும் ஒரு 60 லட்சம் ரூபாய் அதிகமாகக் கேட்கலாம் என்றிருந்தேன். ஆனால் இப்போது கேட்டால், 60 லட்சம் ரூபாய்க்கு அரசாங்கச் சொத்துக்களை நாசப்படுத்திவிட்டார்களே, அதற்கு எங்கே போவது என்று கேட்பார்களே என்று அதைக் கேட்பதற்குத் தயங்குகின்றேன். அறுபது லட்ச ரூபாய் சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டுவிட்டன என்றால், அவை அனைத்தும் மக்களுடைய வரிப்பணம் அல்லவா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்னும் ஒரு சம்பவம், திருச்சியிலே மதிப்பிற்குரிய ஒரு சுவாமியார்—கத்தோலிக்க சுவாமியார், அவர்களுடைய உடையினைக் கிழித்து எறிந்ததாகக் கேள்விப்பட்டேன். நான் கேட்கின்றேன், இன்று இதற்காக பரிதாபப்பட்டு மக்கள் முன் அணியில் நிற்பவர்கள், "சுவாமியார் அவர்களுடைய உடையினைக் கிழிக்கிறதா?" என்றும் கல்லூரிகளுக்குள் போவதா என்றெல்லாம் அவர்களுக்காகப் பரிதாபப்பட்டுக் கேட்கும் இதே கம்யூனிஸ்டு நண்பர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு என்ன சொன்னார்கள் தெரியுமா?. Religion is the opite of the people "மதம் என்பது மக்களுடைய மனதை மயக்கும் ஒரு போதை வஸ்து" என்று அல்லவா சொன்னார்கள்? கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிபுரியும் நாட்டினைப் பார்த்திருக்கின்றேன், ரஷ்யா நாட்டைப் பார்க்கவில்லை. ஆனால் செக்கோஸ்லாவாகியா நாட்டைப் பார்த்திருக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பாளையங்கோட்டை, திருச்சியில் நடைபெற்ற சம்பவங்களையொட்டி நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் காரணத்தினால், அவற்றைப்பற்றி ஏதாவது குறிப்பாகச் சொல்லலாமே தவிர, அவற்றின்மீது நீண்ட விளக்கங்களைத் தருவது என்பது நீதி விசாரணைக்குப் பாதகமாகும். இதுபற்றிக் காலையில் கூட சட்டப் பேரவையில் பேசப்பட்டிருக்கின்றது. அப்போதும், "இதில் விரிவாகப் பேசவேண்டாம்" என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதுவும் காலையில் சட்டப் பேரவையில் மதிப்பிற்குரிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பாளையங்கோட்டையில் "கல்லூரி ஆசிரியர் தாக்கப்பட்டது, மாணவர் ஒருவர் ஆற்றில் விழுந்து இறந்தது" இந்தச் சம்பவங்களுக்காக நீதி விசாரணை என்று இருந்ததை "சம்பவத்தின் தொடக்கம் முதல், பேராசிரியர் சீனிவாசன் தாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து" நீதி விசாரணை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே இந்தச் சம்பவங்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமாக விளக்கிப் பேசாமலிருந்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: நேரம்கூட அதிகமாக ஆகிவிட்டது.

* திரு எஸ். டி. ஆதித்தன் : துணைத் தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு, இதைப்பற்றி விளக்கமாகப் பேசுவதை நிறுத்திக் கொள்ளுகிறேன். ஒரு வேளை நானே அங்கு நேரில் சில விஷயங்களைக் கண்டதற்காக, நானே சாட்சியாகக்கூட வரலாமோ என்று எண்ணியும் அதைப்பற்றி இந்த இடத்தில் பேசுவது ஒரு வேளை தப்பாகக்கூட இருக்கலாம், எனவே இதை இந்த அளவோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

துணைத் தலைவரவர்களே, ஒன்றும் ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி விட்டு அதோடு நிறுத்திக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஒரு "பந்த்" என்று நடத்தியதாகவும் இந்த அரசின்மீது மக்கள் நம்பிக்கையினை இழந்துவிட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. 15-ம் தேதி "பந்த்" என்றால், அதற்கு முந்தைய நாள் "இந்து" பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. 14-ம் தேதியன்று, திருச்சியில் தாங்கள் கடைகளை மூடிவிடப்போவதாகவும் பஸ்களையெல்லாம் ஓட்டாமல் இருந்து விடப்போவதாகவும் வியாபாரிகளும் பஸ் சொந்தக்காரர்களும் தீர்மானித்துவிட்டார்கள் என்ற செய்தி வந்தது. அதற்குக் காரணம் சொல்லப்பட்டது, "ஒரு கண்ணாடி உடைந்தால் 300 ரூபாய் ஆகுமே" என்று சொன்னார்கள். இதுதான் பந்துக்கு முன்பு மக்களுக்கு இருந்த எண்ணம். பந்துக்குப் பிறகு "இந்து" பத்திரிகையில் அதே பிரகாரம் முதல் பக்கத்தில் கட்டம்போட்டு ஒரு சமாசாரம் வெளி வந்தது. மதுரையில் ஒரு சலூனில் ஒருவருக்கு அரைகுறையாக வேலை செய்துகொண்டிருந்த போது, வெளியேயிருந்து யாரோ ஒருவர் சற்று உரத்த குரலில், "இன்று பந்த் அல்லவா" என்று நினைவுபடுத்தியபோது, வேலை செய்துகொண்டிருந்த* உடனே அந்த வேலையை நிறுத்திவிட்டான். நிறுத்திவிட்டு, ** ஐயா, நான் தங்கள் வீட்டிற்கு வந்து மறுபாதியை முடிக்கின்றேன், இப்போது கடையை மூடவேண்டியிருக்கின்றது" என்று கடையை வேகவேகமாக மூடிவிட்டதாகப் பத்திரிகையில் வந்திருக்கின்றது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, முடி திருத்தும் தொழிலாளர்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வார்த்தை சபையின் நடவடிக்கைக்குறிப்பிலிருந்து அகற்றப்பட்டு, அதற்குப் பதிலா முடி திருத்தும் தொழிலாளர் என்ற வார்த்தையினைப் பயன்படுத்தும்படி உத்திரவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : அவ்விதமே ஆணையிடப்படுகிறது.

* திரு எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, எங்கள் ஊரிலுள்ள வழக்கத்தின் அடிப்படையில் சொல்லிவிட்டேன். முடிதிருத்தும் தொழிலாளர் என்பதுதான் சரியான வார்த்தை. அந்த முடி திருத்தும் தொழிலாளர் உடனே அந்த வேலையை நிறுத்திவிட்டு அவர் தமது கடையை மூடிவிட வேண்டியதாகிவிட்டது. இப்படிப்பட்ட ஒரு பீதி மக்கள் மத்தியில் நிலவியிருந்தது அந்த நேரத்தில். அங்கே மட்டுமில்லை தமிழ் மாநிலம் முழுதும் இப்படி ஒரு பீதி, பயங்கரம் நிலவியிருந்தது என்பதை நாம் எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* Expunged as ordered by the Chair.



ஆகவே இன்று இருக்கும் இந்த நிலையில் நான் இதற்கு மேலே பீதியினை உண்டாக்கும் விதமாக மேடைகளிலே பேசுகிறதை, பத்திரிகைகளில் எழுதிவருவதை அல்லது மற்றக் காரியங்களைச் செய்து வருவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பதிலாக மக்களிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு ஒற்றுமையை உண்டாக்க முடியுமோ அந்த அளவிற்கு நாம் எல்லோரும் பாடுபடுவது நல்லதாக இருக்கும். பத்திரிகையிலும் சரி, மேடைப் பேச்சுக்களிலும் சரி, இந்த மன்றங்களிலும் சரி, வெளியிலும் சரி நாம் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் நேரத்தில் இந்த அரசோடு ஒத்துழைத்து, சுமுகமாக ஜனங்கள் வாழ்வதற்கு ஏற்ற முறையில் நாம் நினைக்க வேண்டும், சொல்ல வேண்டும், நடந்து கொள்ள வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டு இரண்டாவது துணை மதிப்பீடு பற்றிய விவாதத்தில் ஒரு சில கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இப்போது சில தினங்களுக்கு முன்பிலிருந்து தமிழகம் முழுவதும் தேவைக்கு அதிகமான அளவிற்கு மழை பெய்த காரணத்தினால், நன்மையும் தீமையும் கலந்து, அவற்றை நாம் அனுபவிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இருக்கிறோம். இவ்வளவு மழை பெய்தும் கூட கடந்த நான்கு ஐந்து வருஷங்களாக எங்களுடைய தாலூக்காவில் ஏற்பட்டதைப் போல இரண்டு மூன்று ரெவின்யூ பிர்க்காக்களில் மழை பொய்த்துவிட்டது என்று சொல்ல வேண்டிய நிலை இன்னும் அங்கே நீடிக்கின்றதே என்று உங்கள் மத்தியில் ஒரு பரிதாபத்துக்குரியவனாக நின்றுகொண்டு நான் கூற வேண்டியிருக்கின்றது. 6-00 பி.ப.

நான் ஊருக்குச் செல்வதற்கு முன்பு அந்தப் பகுதிகளில் இந்த மழையின் காரணமாக கண்மாய்களெல்லாம் நிறைந்துவிட்டன என்ற செய்தி வராதா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். "கதிர் பெரும் செந்நெல் வாட கார் குளம் கண்டு சென்று கொதி திரை கடலிற் பெய்யும் கொள்கை போல" என்று சொல்வார்கள். இப்போது எங்கள் பகுதியில் உள்ள நிலைமையைப் பார்க்கிறபோது இது எவ்வளவு பொருத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உணர்கிறேன். இந்த நேரத்தில் நான் சொல்லவேண்டியது என்னுடைய கடமை. ஏனென்றால், இந்த மழை பெய்யாத பகுதிகளில் நிலவரி, கடன் தவணைகளை ஒத்திவைக்கக் கோரிக்கை தெரிவித்தபோது, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அந்த ஜில்லா மட்டத்தில், தாலூகா மட்டத்தில் உள்ள வருவாய் அதிகாரிகள் அனுப்பிய ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு அவர்கள் நல்ல மழை பெய்திருக்கிறது, இவ்வளவு வருமானம் வரும் என்று அறிக்கைகள் இருக்கின்றன, ஆகவே, இதில் சலுகைகளைத் தருவதற்கில்லை என்று இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டார்கள். இப்போது அரசுக்குத் தெரிவிப்பது இந்த நிலைமை மறுபடியும் வரவேண்டாம். ஒருகால் இந்த நிலை ஏற்பட்டுவிட்டால், இப்போது அந்தப் பகுதிகளில் சோழபுரம், கமல்லி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய மூன்று ரெவின்யூ பிர்க்காக்களில் எந்தெந்தக் கண்மாய்க்களில் எவ்

வளவு தண்ணீர் இருக்கிறது, அங்கேயுள்ள கிணறுகளில் எவ்வளவு
தண்ணீர் இருக்கிறதென்பதை இப்போதே அறிந்து, அதைக் கணக்கிடும்
படியாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், வருவாய்த்
துறையில் உள்ளவர்கள் விவசாயிகள் போராட்டமோ, பொதுக்கூட்டமோ,
ஊர்வலமோ நடத்தியதன் காரணமாக, தாலூகா அரசு அலுவலகங்களின்
முன்னால் அவர்கள் கோஷம் போட்டதின் காரணமாக ஏதோ ஒரு
காரணத்தால் வெறுப்பு ஏற்பட்டு அவர்கள் அரசுக்குச் சரியாக விவரங்கள்
தெரிவிக்கவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட வரு
வாய்த்துறை அதிகாரி அங்கே வந்து அங்கேயுள்ள அதிகாரிகளைக் கூட
வைத்துக்கொண்டு அங்கே எல்லோரையும் இத்தனை அணு விளைவுக்குக்
கீழ் கணக்கில் காட்டக் கூடாதென்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்.
அவ்வாறு அவர்களைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். இதில் அரசியல்
கலந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் மாறு
பட்ட கருத்துள்ள தி. மு. க. அன்பர்கள் கூட அங்கேயுள்ள நிலைமை
களைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பதால், அங்கேயுள்ள
அரசு அலுவலர்களின் நடவடிக்கைகளில் இவர்களின் யோசனையும் கலந்
திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் துருவித்
துருவிப் பேச விரும்பவில்லை. இன்னும் அப்படி ஏற்பட வேண்டாம்
என்பதற்காக இதைச் சொல்கிறேன். ரெவின்யூ போர்டு மெம்பர் அவர்
கள் அந்தப் பகுதிக்குச் சென்றபோது நான் கூடவே அவர்களுடன்
செல்லவிடாது செய்வதற்காக மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களும்,
மற்றவர்களும் சூழ்ச்சி செய்தார்கள், முயற்சி செய்தார்கள் என்று குற்றஞ்
சாட்ட விரும்புகிறேன். இதை அவர்களுக்கே தெரிவித்திருக்கிறேன்.
என்னைச் சில மைல் தூரம் செல்லவிடாமல் சதி செய்தார்கள். எந்தப்
பக்கத்தில் பசுமையாக விளைச்சல் இருக்கிறதென்று பார்த்து, 12 மைல்
தூரத்திற்கு அப்பாலே அந்த அதிகாரியைக் கூட்டிச் சென்றார்களோ,
அந்த இடத்திலே கூட இவர்களின் மதிப்பீடு தவறு, தவறு என்பதை
அந்த ரெவின்யூ போர்டு மெம்பருக்கே தெரிவித்துக்கொள்ளும்படியான
விதத்திலே நிதர்சனமாகக் காட்டினேன். ஒரு மாதம் தண்ணீர் வந்து
கிணறுகளில் தண்ணீர் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு பருத்தி
முதலியவைகள் பயிரிடப்பட்டு விளைந்திருக்கின்றன. 10 மைல்களுக்கு
அப்பால் அந்த இடத்தில் பசுமை தெரிகிறதென்று சொல்லி இவ்வளவு
விளைச்சல் ஏற்பட்டிருக்கிறதென்று அவர்கள் கூட்டிச் சென்று காட்டினார்
கள். நான் அவர்களிடம் கிணற்றைச் சென்று பாருங்கள் என்று
சொன்னேன். கிணற்றைச் சென்று பார்க்க வேண்டுமென்று
அந்த இடத்தில் ஒன்றைக் காட்டினேன். அந்த இடத்தில் 79 அடிக்குக்
கீழேயும் அதிகக் கூலி கொடுத்து வெட்டிக் கொண்டிருந்தார்கள்.
பகலில் கரண்ட் இல்லாததால் இரவில் அந்த வேலையைச் செய்து கொண்
டிருந்தார்கள். அதைக் காட்டினேன். பருத்தி 3 அடி உயரமிருக்
கிறது என்று அந்த அதிகாரியிடம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு
அனுபவமில்லை. அதனால் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்
பலன் என்ன ? பாருங்கள் என்று பக்கத்தில் கொண்டுபோய்க் காட்
டினேன். 50, 60 காய்கள் தான் இருந்தன. பருத்தி வெடித்த
காய்கள் இரண்டு, மூன்றைத் தவிர, மற்றவைகள் அநாதையாக இருப்
பதைப் பாருங்கள் என்று காட்டினேன். இதையெல்லாம் அவர்கள்
சரியாகப் புரிந்துகொள்ளாமல் இப்படி அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்



கிறார்கள். ஜில்லா அளவிலே, தாலூகா அளவிலே உள்ளவர்களுக்குக்
கூட விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையில்லை. விஷயங்
களைப் புரிந்துகொள்ள வேண்டுமே என்ற ஆர்வமில்லை. அப்படிப்பட்ட
நிலையில் அவர்கள் விவரங்களைத் தருகிறார்கள். ஆகவே இதைச் சொன்
னேன். ஆகையினால் தான் இப்போது இந்த நிலை மறுபடியும் வர
வேண்டாம் என்று பிரார்த்தனை பண்ணிக்கொண்டிருக்கிறேன். இந்த
நிலை அங்கே இருக்கிறது என்பதைத் தெரிவிக்க இதை நான் சொன்
னேன். இந்தச் சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் அவர்களும், மற்றவர்களும்
இதில் ஒரு உடன்பாட்டினைக் கண்டார்கள். இன்று வந்த விவசாய
வரி மசோதா, மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட நட
வடிக்கைகள் தவிர, கடன்களை பின் வருடங்களுக்குத் தள்ளிப் போடுவது
போன்றவற்றைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ரெவின்யூ போர்டு
அங்கத்தினர்கள், அந்த அதிகாரிகள், ஜில்லா மட்ட அதிகாரிகள் என்ன
அறிக்கை அனுப்பினார்கள், அவர்களின் முடிவு என்ன, அவர்களின்
ஆய்வு என்ன, மதிப்பீடு என்ன என்ற விவரங்கள் தெரியவில்லை.
அதைப்பற்றி நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்வது, ரெவின்யூ
போர்டு அதிகாரிகள் வந்தபோது எந்தெந்தக் கிணறுகள் எத்தனை எத்தனை
ஆயிரம் ரூபாய் செலவழித்து வெட்டப்பட்டன, இப்போது அவைகள்
எப்படிக் கிடக்கின்றன ; எவ்வளவு துருப்பிடித்த மோட்டார்கள் எப்படி
இருக்கின்றன என்பதையெல்லாம் காட்டினேன். இப்போது கூட மழை
பெய்துவிடுகிறதென்று வைத்துக்கொள்வோம். அநேக கிணறுகள் மழை
பெய்து நிறைந்துவிடுகின்றனவென்று வைத்துக்கொள்வோம். 4, 5 ஆண்
டுக்காலம் என்று அவர்கள் பட்ட கடன்களை ஒரே தவணையில் அவர்களால்
செலுத்திவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே,
பின்னால் கடன்களை 2, 3 வருடங்கள் தள்ளிப் போட்டால், நன்றாக
இருக்கும். அதில் தவறு ஒன்றுமில்லை. அதை அபராத வட்டியில்
லாமல், கிரமமான வட்டியுடன் வருடங்களில் வாங்கிக்கொள்ள வேண்டும்.
இதை முதலமைச்சர் அவர்கள் ரிசர்வ் பங்கோடு கலந்து ஆலோசித்து
வேண்டியதைச் செய்வதாய்ச் சொன்னார்கள். அதை இந்த சந்தர்ப்
பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்குக் காலம் கழிந்து
விட்டது. ஞாபகத்தோடு இதை மனதில் வைத்துக்கொண்டு அதனைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு பல விஷயங்கள்
இருக்கின்றன. முக்கியமான விஷயம் என்னவென்றால், விவசாய விளை
பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதை மத்திய சர்க்காரோடு கலந்து
ஆவன செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஒன்று நம் எல்
லோருக்கும் தெரிந்த விஷயம். பருத்தி என்ன விலை விற்கிறது ?
மில்களோடு போட்டிப் போட்டுக் கொண்டு கைத்தறி நெசவாளர்கள்
லாபம் காண முடியவில்லை. அந்த அளவுக்கு நூல் விலை விற்கிறது.
அப்படியிருந்தும் கூட பஞ்சு விலை எப்படி இருக்கிறது, பருத்தி விலை
எப்படி இருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். 40-ம் நம்பர்
நூல் என்ன விலை விற்கிறது ? ஆனால் அதற்கான பருத்தி என்ன
விலை விற்கிறது ? நம்முடைய கூட்டுறவு மில்கள் நல்ல வகையில் லாபம்
அடைந்துவருகின்றன. மற்ற மில்கள் எவ்வளவு லாபம் சம்
பாதிக்கின்றன ? கடந்த பல ஆண்டுகளில் மொத்தத்தில் இவ்வளவு
லாபத்தை வேறு எந்த மில்களும் அடையவில்லை என்பதை ஞாபகத்தில்
வைக்க வேண்டும். இப்படி இருக்கிற நிலையில் நூல் விலை எப்படி

உயர்ந்திருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும். இவ்வளவு அரிய மான நூல் விலை உயர்ந்துகொண்டு போகிறது. ஆகவே இது விஷயத்தில் மத்திய சர்க்காரோடு நம்முடைய அரசு துணையாக இருந்து, இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளின் ஒப்பந்தப்படி அரசு நடக்கவில்லையென்று அந்தக் குழுவின் தலைவர்கள் சமீபத்தில் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

போலீஸ் நடவடிக்கைகள் சம்பந்தமாக விவசாயிகள் போராட்ட சந்
6·10. தர்ப்பத்திலே நடைபெற்ற விஷயங்களைப்பற்றி இப்பொழுது நான் பேச
பி.ப. முன்வரவில்லை. குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. சமீப சில வாரங்களாக தமிழ் நாட்டில் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது? அரசியல் கட்சிகளுடைய உணர்வுகள் எவ்வாறு இருக்கின்றன? ஒரு கட்சியிலே உள்ளவர்கள் மத்தியிலே ஏற்பட்டுள்ள வாத விவாதங்களால் அல்லது மற்ற காரணங்களால் என்ன ஏற்பட்டிருக்கின்றன? இப்படிப் பட்ட ஒரு சோதனையான நேரத்தில் தேசம், நாடு, மக்கள், எதிர்காலம், மக்களுடைய பண்பாடு, நாகரீகம், எதிர்கால வாழ்வு இவைகளைப் பற்றி நம்முடைய நாட்டு மக்களுடைய வாழ்க்கையும், மரியாதையையும், செயல் திறமையையும், வெளி நாட்டார் போற்றுகின்ற அளவுக்கு இந்த நாட்டிற்குப் பெருமை ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையில் என்ன ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது? அரசியலில் இப்படிப்பட்ட நிலைமை வந்திருப்பதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம், ஆர்வமும் அக்கறை கொண்டவர்கள் அரசியலில் அக்கறை உள்ளவர்கள். இந்த சந்தர்ப்பத்திலே கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளை, அல்லது தாலூகா அளவில் உள்ளவர்களின் செயல்களும், போக்குகளும் சரியில்லையே என்று வருத்தத்தோடு இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஒவ்வொன்றையும் விரிவாகக் கூற விரும்பவில்லை. அரசியல் கட்சிகள், எதிர்க் கட்சிகள் என்ற வகையில் அரசியல் என்பது எவ்வளவு புனித மான எதிர்காலத்தில் ஏற்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும், நம் சந்ததிகள் எவ்வாறு அரசியலில் ஈடுபட வேண்டுமென்பதை அதிகமாக நினைத்தால் கூட, பல இரவுகளில் தூக்கமின்றி நாள் கழித்திருக்கிறேன் என்பதை இந்தச்சந்தர்ப்பத்தில் மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: வயதானதால் அதிக மாகக் கவலைப்படுகிறீர்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: அவ்வாறு வயது காரணமாக மட்டுமல்ல. என்னுடைய உடல் கொஞ்சமும் தளர்ந்துவிடவில்லை. மனோ திடமும் குறைந்துவிடவில்லை. நிதானமும் குறைந்துவிடவில்லை. அறிவும் குறைந்துவிடவில்லை. அத்தனை சக்தியும் எனக்கிருக்கிறது. பலஹீனம் காரண மாக எனக்குத் தூக்கம் வராமலில்லை. இவைகளை ஏற்க முடியாத பலஹீனம் வந்து விடவில்லை. சரியோ, தப்போ, என் தலைமேல் ஒடு



கிறது என்று நான் தவருக நினைத்துக் கொண்டேனே என்னவோ, பல சந்தர்ப்பங்களில் கவலைகள் என்னை வாட்டியிருக்கின்றன. அப்படிப் பட்ட ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. போலீசிலே தலையீடுகள் பட்ட ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அது எங்கே இருக்கின்றன என்பதைப் பொதுவாகச் சொல்கிறேன். அது எங்கே நடந்தது என்று சொன்னால், சிலவற்றை அல்லது பலவற்றைக் குறிப் பாகச் சொல்ல முடியும். வேண்டாமென்று நான் விடுக்கிறேன். அரசிய லில்லையென்று விடுக்கிறேன். அதற்காகப் பின் வாங்குகிறேன் என்று முதலமைச்சர்கள் நினைக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இதுமாதிரிச் சொல்லி நான் "ஐஸ்" வைக்க விரும்பவில்லை. மனதில் பட்டதைத் தெளிவாகச் சொல்கிறேன். கசப்பான விஷயங்களைத் தொடர்ந்து பேசு வதில் இஷ்டப்படாதவன் நான். இதைச் சொல்லி நான் விடுக்கிறேன். போலீஸ் செயலிழந்திருக் கிறது. நகரங்களில் சுகாதார விதிகள் மீறப்படுவதைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் "லைட்" இல்லாமல் இருக்கின்றன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். "லைட்" இல்லாமல் போன சைக்கிள்களில் தைரியமாகப் போகிறார்கள். கீழே விழுந்து கையில் இரண்டு சைக்கிள் என்மீது மோதி நானே கீழே விழுந்து கையில் இரண்டு நாட்களுக்குக் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தேன். ஒரு வழியில் வருகிற போது 37 சைக்கிள்களை எண்ணிக்கொண்டு வந்தேன். போலீஸ் ஸ்டேஷ னுக்குப் போய் உங்கள் ஸ்டேஷனுக்கு முன்னால் 37 சைக்கிள்கள் வந்தன. அதில் 3 சைக்கிள்களில் லைட் இருந்தன என்று சொன்னேன். அவர் களுக்கு அந்த உணர்வு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. "லைட்" இல்லாத சைக்கிளைப் பிடித்தால் பல பேர்கள் சிபார்சுக்கு வந்துவிடுவார்களே, நமக்கு எதற்கு வம்பு என்று அஞ்சுகிறார்கள். இதைப் புரிந்துகொள்ள வேண்டும். நான் சொல்லக்கூடிய அந்த நேரத்தில் ஸ்டேஷனுக்கு யாரும் அந்த நேரத்தில் போகக்கூடியவர்கள் அல்ல. அப்படிப் பழக்கமாகிவிட்டது. சாதாரண சட்டம், விதிகள், நடைமுறையில் உள்ள விதிகளெல்லாம் சில காலமாக நடப்பதற்கான முறைகளாக இம்மாதிரி தற்போக்காக கண்டபடியே நடப்பதற்கான முறை களாக இம்மாதிரி தற்போக்காக வந்துவிட்டன. ஆகையினாலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அரிஜனங்கள் என்னிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். நான் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வரவில்லை. பக்கத்திலுள்ள கமிட்டிக்கு வந்தவர்கள், ஊருக்குச் செல்லவில்லை. எனக்கு இரண்டு அரிஜனங்கள் நீண்ட கடிதங்களை எழுதியிருந்தார்கள். போலீஸ் ஸ்டேஷ னில் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி எங்களைத் திட்டினார்கள். எங்களுடைய புகார்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது என்னவிற்று என்று தெரியவில்லை, அதிகாரிகளுக்கெல்லாம், அமைச்சர்கள் முதற் கொண்டு போட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இரண்டு பேர்களும் நேராகவே வந்து விட்டார்கள். உங்களுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். பல அதிகாரிகளுக்கு, மேலேயுள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறோம், கவனிப்பார்கள் என்று அவர்களிடத்தில் சொல் னேன். அவர்கள், இவ்வளவு காலத்திற்கு என்றும் அனுப்பியும்கூட இல்லாதிருக்கிறதென்று சொன்னார்கள். அரிஜனங்கள் புகார்களில் கூட இந்தத் தலையீடுகள்தான் என்று அவர்கள் சொல்கிறார்கள். திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், தாலுகா அளவிலே இருக்கக் கூடியவர்கள், சில பேர்கள் குறுக்கிடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆகையினாலே இதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, வன இலாகா இருக்கிறதே, காட்டிலாகா அது இல்லை. அது செயல்படவில்லை, இருப்பதற்கு அடையாளம் மரத்தைக் குத்த கைக்கு விடுகிறோம், யாரோ காண்டிராக்ட் எடுக்கிறார்கள் என்று இருக் கிறது. காவல் இருக்கிறதா ? இல்லையென்று சொல்கிறேன். நான் ஊரிலிருந்துகொண்டு பேசவில்லை. அத்தனை பாரஸ்டுக்கும் போயிருக் கிறேன். மலையேறி இருக்கிறேன். விவரங்கள் அத்தனையும் எனக்குத் தெரியும். பொது மக்கள் மனதில் என்ன ஏற்படுகிறது ? வேலை தேடிச் சம்பாதிக்க வேண்டியவர்கள், உடல் உழைப்பினாலே தண்ணீர் பாய்ச் சியோ, மண் வெட்டியோ சம்பாதிப்பது போல பாரஸ்டில் உள்ள மரத்தை வெட்டிக்கொண்டு வந்து விற்று அதன் மூலமாகச் சம்பாதிப்பதும், ரொம்ப நியாயம்தான் போலிருக்கிறது. இது நியாயம் என்று மக்களி டத்தில் வந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலைமை வந்து விட்டது. பொது மக்கள் யாரேனும் தப்புச் செய்தால் அரசாங்கம் சும்மா இருக்கிறது. பாரஸ்டுகாரனுக்கு அவனுக்குக் கட்டுக்கு இவ்வளவு என்று கொடுத்து விட்டால் சரியாகிவிடுகிறது. மத்தியில் எவனாவது இதைப் பற்றிக் கேட் டால், இவன் என் வந்து கெடுக்கிறான் என்று சொல்கிற நிலைமை, இதைத் தடுப்பதற்கு அஞ்சுகிறார்கள். இதை அவன் தர்மமாக நினைக் கிறான். நியாயமாக நினைக்கிறான். மரத்தைத் தானே வெட்டுகிறோம். பாரஸ்டு அழியாது என்ற எண்ணம் உணர்வு அவர்களுக்கு இருக்கிறது. தடுப்பதற்குப் பல பேர்கள் முன் வரவில்லை. நல்ல மரங்களை வெட்டிக் கொண்டு வருகிறார்கள். வாங்குவதற்குப் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாகரீகமாக இருப்பார்கள். ரொம்ப சம்பாத்தியம் பண்ணு வார்கள். மரங்களை விற்பதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது. இந்த நிலைமை இருக்கிறது. பாரஸ்டை அழித்துவிடாதபடி என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

உர வினியோகம் சம்பந்தமாக 50 பேர்கள், 60 பேர்கள் உரத்தை அதிகமான விலையில் விற்கிறார்கள். அவர்கள் லைசென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்கிறார்கள். தாலுகா அளவிலே செய்கிறார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் இதைப் பற்றிய அதிகாரம் உள்ளவர்கள் அந்த விவசாய விஸ்தரிப்பு அலுவலர், ஏ.இ.ஓ. அவரிடத்தில் சொன்னால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்கிறார். ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே சொன்னால், முடியவில்லை என்கிறார்கள். போலீசாரிடத்தில் சொன்னால், "உனக்கு வேறே வேலையில்லை" என்று சொல்கிறவர்களிடத்தில் சொல் கிறார்கள். இம்மாதிரி நடக்கிறது. மார்க்கெட்டிங் சொசைடியில் கட்டுப் பாடான விலை 49 ரூபாய் என்றால், வெளியில் ரூ. 72, ரூ. 92 என்று விற்கிறதென்று சொன்னார்கள். வாங்குகிறார்கள், விற்கிறார்கள், மீறப் படுகிறது. இதிலே கூட நான் சொன்ன கஷ்டம், தொந்தரவுகள் அதிக மாக இருக்கின்றன. தைரியமாக நான் சில பேர்களைச் சொல்ல முடியும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், மார்க்கெட்டிங் சொசைட்டியில் நாங்கள் கொடுத்த மூட்டைகளைக் கிராமத்தில் கொண்டு போய் விற்காமல், மழை பெய்கிறது, உரத்தை ஒரு இடத்தில்



வைப்போம் என்று சொல்லி, மார்க்கெட்டிங் சொசைடியில் இருக்கிற லாரி டிரைவரை ஏமாற்றி நகரில் மூட்டைகளை இறக்கி அதிக விலைக்கு விற்றார்கள். அதோடு நான் நிறுத்திக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்வதானால், அவர்கள் மட்டுமா செய்கிறார்கள், மற்றப் பேர்களும் செய்கிறார்கள். இவர்கள் மட்டும் செய்கிறார்கள், மற்றவர்கள் நாணயமாகப் பண்ணுகிறார்கள் என்று சொல்லவில்லை. தப்புப் பண்ணுகிறவர்கள் எல் லோரும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இப்படி மீறப் படுவதை விவசாயிகள் பார்க்கிறார்கள். இதைக் கண்காணிப்பார் இல்லை. அவர்கள் மீது கேஸ் போடுவதற்கு யாருமில்லை. பிடித்தால் கேஸ் போடுவதற்கு கூடுதலாகப் பணம் செலவாகிறது. இதற்கு துணை இருக் கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. 49 ரூபாய் எங்கே, 82, 92 ரூபாய் எங்கே, ரூபாய்க்காக அல்ல நான் சொல்வது, இந்தப் பழக்கம் நாளடைவில் தர்மம் மாதிரி ஆகிவிடும். இப்படி மீறப்படுகிறது நியாயம், இப்படித் தான் தொழில் செய்ய வேண்டும், இதுதான் வழக்கம் என்று ஆகிவிடும். இரஷியாவைப் பற்றி, சீனாவைப் பற்றிச் சொன்னால் அங்கு எவ்வளவோ நடந்தன. இன்றைக்கு அவைகள் அந்தச் சமுதாயத்தில் தர்மமாக ஆகி விடவில்லையா ? இதுதான் மனித நியதி என்று கொள்ளப்படவில்லையா ? இங்கே அப்படி ஏற்பட்டால், நாளடைவில் இது நியாயம், தர்மம் என்று எதிர்காலத்தில் கொள்ளப்படும். அந்தக் கவலையோடு நான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உர வினியோகம் சம்பந்தமாக உள்ள கட்டுப்பாடுகளை மீறினால், அரசு ஒன்று இருக்கிறது, அது தண்டிக்கும் என்ற நிலைமை வர வேண்டும். எந்த ஆசாக இருந் தவறுகள் செய்தால், தண்டிக்க வேண்டும். தாலும் இந்த நிலைமை ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுபற்றிப் பேச வேண்டும். அதைப் பற்றிப் பேசு வதற்கு நேரமில்லை. அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும், நேர மில்லை. மேலும் கூட்டுறவு அமைச்சரவர்களும் இல்லை. நானும் கூட்டுறவு அமைச்சரவர்களும் இரண்டுபேரும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசினால் எங்களுடைய பேச்சுக்களை இந்தச் சபை அனுபவிப்பது போல பொழுது போக்காக கருதுவதுபோல உணருகிறேன். அப்படி நான் நினைப்பது சரியோ, தவறோ தெரியாது. அதில் நியாயமில்லை. கூட்டுறவு சம்பந்தப் பட்ட மட்டில், தான் இருக்கிறதற்குள்ளே கூட்டுறவின் தத்துவம், ஸ்தாப 6·20
ணங்கள் பின்னாலே நிலைகுலைந்து தலை எடுக்காமல் போகவேண்டுமென்று பி.ப.
அவர் இருக்கிறார் என்று நினைக்கிறேன். மனதில் பட்டதை அப்படியே சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் கடந்த கூட்டத்தில், நான் தெரிவிக் கிறபோதுகூட, திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வழக்கம் போல் பேசினார்கள், இதில் அவர் தலையிட்டு எங்களுக்குள் இருக்கக்கூடிய சுமுக மான உறவு குலைந்து போக வேண்டாமென்ற மாதிரிப் பேசினார்கள்.

தமிழ்நாட்டிலே பல்லாண்டுகளாகக் கூட்டுறவு நல்லபடியாக இருந்தது. நல்ல தத்துவங்கள் இங்கே நிலைத்து இருந்தன. போகிற போக்கிலே அவை அழிந்து விடும் போல் இருக்கின்றன. கூட்டுறவில் ஜனநாயகமே யில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். நில அடமான பாங்குகளின்

தேர்தல்கள் சில மாதங்களுக்கு முன்னால் நடைபெற்றன. அடுத்து, மார்க்கெட்டிங் சொசைடி தேர்தல், மாநில அளவிலேயுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல்கள் வந்து தீர்ந்தன. அதற்கு அடுத்தபடி ஜில்லா அளவிலே வந்து திர்ந்தது. இப்போது தாலூகா அளவிலே வந்திருக்கிறது. செண்ட்ரல் சொஸைடீசுக்கு ஒரு சட்டம் செய்திருக்கிறோம். அதற்கு விதிமுறைகளையெல்லாம் ஏற்படுத்துவது இங்கே, ரிஜிஸ்டிரார் ஆபீசில் போய், மார்க்கடிங் சொஸைடிபற்றிஎன்ன ரூல்ஸ் செய்திருக்கிறீர்கள் என்று கேட்டால், ஒரு காகிதம் கூட இருக்காது. எல்லாம் இங்கேதான் வரும். இப்படிப்பட்ட ஸ்தாபனங்களையெல்லாம், கட்சி சார்பில் உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதற்காக, எவ்வளவு சாதகமான விதிகள் தீட்டப்பட வேண்டுமோ, அவ்வளவும் செய்யப்படுகிறது. இப்போது ஒரு சட்டம் செய்தார்கள். அதன் நோக்கங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. விதிகளைச் செய்யும்போது, சட்டங்களுடைய நோக்கங்களுக்கு மாறாகச் செய்வது நியாயமா என்பதை முதலமைச்சர்களே, சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவ்வாறு கடந்த காலத்திலே கூட்டுறவு சம்பந்தமான அந்தச் சட்டங்களைச் செய்யும் பொழுது, அந்தச் சட்டங்களுக்கான விதி முறைகளை வகுக்கும் போது, சொல்லப்பட்ட விஷயத்திற்கேற்ப விதிமுறைகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதை உங்களுடைய நியாயபுத்திக்கு விட்டுவிடுகிறேன். இப்போது நீங்களே பாருங்கள். நிலவள வங்கிகள் என்னவாயிற்று? நிலவள வங்கிக்கு யார் யாரை நியமிக்க வேண்டுமென்பது பற்றி, தேர்தல் நடைபெறும் அன்று. சென்னையிலிருந்து "போன்" மூலம் பேசப்படுகிறது. நிரூபிக்க முடியுமா என்று கேட்டால், முடியும், எந்த வகையிலாவது, அன்றைய தினம் "போன்" மூலம் பேசுவதற்கு என்ன வேலை இருக்கிறது என்று நான் கேட்கிறேன். " அவரைப் போடு, அவர் எவ்வளவோ முழுச்சிக்கிட்டு இருக்கிறரோ, அவருக்குத் தவணை கடந்த கடன் இருக்கிறது. ஆகையால் இவரைப் போடு?" இப்படியெல்லாம் நடைபெறுகிறது. நிறையத் தகராறுகள் ஏற்படுகின்றன. ரொம்ப நாளாக அப்படி தழும்பேறிவிட்டது. அந்த முறையிலே காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அடுத்து, மார்க்கெடிங் சொஸைடி. நிலவள வங்கியிலிருந்து நான் ராஜிநாமா செய்துவிட்டேன். இந்த விதிமுறைகளின் கீழ், இவைகளுக்கு மத்தியிலே என்னால் இருக்க முடியாது என்ற காரணத்தினால் விலகிவிட்டேன். "இருப்பு அடிக்கிற இடத்திலே ஈக்கு வேலையில்லே" என்கிற மாதிரி நினைத்தேன். இப்படிப்பட்ட நிலைமையில் எங்கள் ஊர் மார்க்கெடிங் சொஸைடிக்குஎப்படி வருகிறதோ? தெரியவில்லை அது வரையில் நான் இருப்பேனே, மாட்டேனே. அதை 27,000 ரூபாய் நஷ்டத்திலே என் தலையில் கட்டினார்கள். 10 லட்சம் ரூபாய் சொத்து வைத்திருக்கிறேன் இப்போது, 15 லட்சம் ரூபாய் அளவுக்கு வேலைகள், திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. மேலும், மேலும் அவை வளர்ச்சியடைந்து வருகின்றன. நிலவள வங்கிகள் சம்பந்தப்பட்ட மட்டிலே, அதற்கும் அங்கே தேர்தல் நடக்குமானால், அடியேன் அங்கு இருக்கமாட்டேன். (சிரிப்பு) நிச்சயமாக. "இவர் இருக்க விரும்பினாலும், இருக்க அங்கு இடம் பெற முடியாது. இவர் பந்தியிலேயே உட்கார முடியாது. அங்கு எப்படிப் போக முடியும்?" அம்மாதிரிச் சிக்கல்கள் சிருஷ்டிக்கப்படும். எதாவது உயிர் இருக்கிறதா என்று பார்த்தால், அந்தச் சங்கங்களெல்லாம் செத்து கிடக்கின்றன. தேர்தல் நடைபெறுகின்ற காலங்களில் மிகத் திறமையாகக் காரியங்களைச் செய்கிறார்கள்



மார்க்கெடிங் சொசைட்டி தேர்தல் காலத்தில், எப்படி இருந்தால் இத்தனை ஸ்தாபனங்கள் நியமனம் மூலமாக அல்லது ஸ்தாபனத்தினுடைய பிரதிநிதித்துவம் மூலமாக ஏற்படுத்தினால் இவர்களை வெளியேற்றலாம் என்ன போன்றவற்றையெல்லாம் நன்றாக திறமையாகச் செய்கிறார்கள். இப்படியெல்லாம் அந்த ஸ்தாபனத்தினுடைய தேர்தலில் பண்ணுகிறார்கள். பிறகு இந்த சர்வீஸ் சொசைட்டி Lift-Irrigation Society இவைகளெல்லாம் எப்படியோ மறைந்து போகும். 3 வருடங்களுக்கு முன்னால் ஏற்பட்ட நிலவள வங்கிகள் 70 தவிர, மற்றைய 374 வங்கிகளுக்கு கதி என்ன? அந்த ஜில்லா சங்கங்கள் தேர்தலில் இது வந்தது. ஆகையினாலே, இது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல குடும்பங்கள், பதவி இவை பெரிய காரியமல்ல. இதன் மூலம் பல ஊழல்கள் மேலும் மேலும் பெருகிக்கொண்டு இருந்தால் கூட்டுறவுத் தத்துவங்கள் நம்முடைய நாட்டிலே மங்கிப் போய்விடும். உண்மையான சோஷலிசத் தத்துவங்கள் சமதர்மதத்துவங்களுக்கு அடி கோலக் கூடிய இணைந்து நிற்கக்கூடிய தத்துவத்தைக் கொண்டது கூட்டுறவு. கூட்டுறவை இந்த மாதிரியான நிலைமையிலே கொலை பண்ணினால் நிலைமை என்னவாகும் என்பதைப் பற்றிச் சிந்தித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத்தலைவர் : ரொம்பக் குறிப்பு இருக்கிறதோ.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம் தான். சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

மதுபானக் கடைகள் சம்பந்தப்பட்ட மட்டிலே, முன்பு ஒரு சமயம் முதலமைச்சரவர்களிடத்திலே கூட நான் சொன்னேன் எங்கள் ஜில்லாவினுடைய கலெக்டர் அவர்கள் இந்த விஷயத்திலே அசைகிறவராக இல்லை. நான் சொன்னால் கேட்கமாட்டார்கள். உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சாத்தூரில் செய்தது மாதிரி, அந்தக் கள்ளுக்கடைகளுக்கு, அந்த சாராயக்கடைகளுக்குப் போய் எதாவது பண்ணினால், உடனே கலெக்டர் இங்கே வருவார். என் வார்த்தை கேட்காது. 2 இடங்களிலே சாராயக் கடை இருக்கிறது. அவ்வளவு பிரதானமான இடத்திலே இருக்கிற கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னேன். அதற்கு எங்கள் டி.ஆர்.ஓ. நீங்களே ஒரு இடத்தை சாராயக் கடைக்கு பாருங்கள் என்று சொல்கிறார் ஜில்லாக் கூட்டத்திலே. இந்த இடத்திலே சாராயக் கடை இருக்கிறது, இங்கு நீ கடை விடுகிறாயா, எந்த இடம் பொருத்தம் என்று நான் போய் வேலை செய்ய வேண்டுமாம். என்ன தைரியம் அவருக்கு அவ்வளவு இங்கிதமாக என்னைச் சொல்கிறார். சாராயக் கடைக்கு இடம் பார்க்க நான் போக வேண்டுமாம். என் தலையெழுத்து. ஆகவே அது சம்பந்தமாக எவ்வளவோ சொல்லியும், எழுதியும் பயனில்லாமல் போய்விட்டது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மேலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் போராட்டத்திலே சிவலிங்கபுரம், கன்னிசேவன் பட்டி என்ற இரண்டு இடங்களிலே இரண்டு கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. இவர்கள் சர்வ கட்சி கூட்டமென்று விவசாய பிரச்சினைகளை ஆராய்ந்தார்கள், இங்கு இந்த முயற்சிகளையெல்லாம் செய்து பார்த்த பிறகு முடி-

[திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு] [1972 டிசம்பர் 14

அவர்கள் பக்கத்திலே, அவர்கள் கோரிக்கையிலே நியாயம் இருந்ததாலேயே—நான் சம்பந்தப்பட்டது 4 மாதங்களுக்குப் பின்னுல் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்— எவ்வளவு சுமுகமாக அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று நான் முயற்சி எடுத்தேனே, அவ்வளவும் பயன்படாமல் போனதால்தான் நான் அந்த விஷயத்திலே மேலும் தலையிட அவசியமும், நியாயமும் இருந்தது. அந்த சந்தர்ப்பத்திலே ஜூன் மாதத்திலே அந்தக் குற்றம் இழைக்கப்பட்டதாக "எப்.ஐ.ஆர்." தயார் பண்ணி, இப்போது அக்டோபர் 22-ம் தேதி "சார்ஜ்-ஷீட்" போடப் பட்டிருக்கிறது. இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிருர்கள். இது எவ்வளவு தூரம் நியாயமோ? இதிலே சொல்லி என்ன வரப்போகிறது ? 4 அல்லது 5 அல்லது 10 ரூபாய் அபராதம் வரப்போகிறது. இதிலே பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு என்ன நேர்ந்தது? அரசு கொடுத்த வாக்குறுதிக்கு மாருக இது உள்ளது. அரசு சொல்லியதை அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். அதற்கு மாருக 2 வழக்குகள் சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே இவ்வளவு காலம் கடந்து பதிவாகியுள்ளது. அதையும் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1972–73 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வரவர்கள் இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிற இந்த மதிப்பீடுகளை முழு அளவுக்குப் படித்து பார்த்தேன். இதில் ஏதேனும் குற்றம் குறைகள் கண்டுபிடிக்கவோ அல்லது ஏதேனும் எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறதா என்று பார்த்தால், அந்த அளவுக்கு எதுவுமில்லை. இல்லாதவர்கள் பக்கம், சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்கள் பக்கம், ஏழை எளியவர்கள் பக்கம் மட்டுமே கண்ணேட்டத்தைச் செலுத்தி, இப்படியொரு மதிப்பீட்டைச் சமர்ப்பித்திருக்கிருர்கள். அதை எனது கட்சியின் சார்பிலே ஆதரிப்பதோடு மட்டுமல்ல, பாராட்டவும் செய்கிறேன். இப்படிப்பட்ட மதிப்பீடுகளை சர்க்கார் தரப்பிலிருந்து பாராட்டுகிற நேரத்திலே, "பாராட்டுக் கூட்டமா அல்லது பட்ஜெட் கூட்டமா" என்று நண்பர் ஒருவர் கேட்டார். உண்மையில் பாராட்டுவதற்கான வகையில் இருக்கிற மதிப்பீடுகளைப் பாராட்டித்தான் தீர வேண்டும். இதில் எந்த விதமான அரசியல் கண்ணேட்டத்திற்கும் இடம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உண்மையில் ஏதேனும் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமானுல் இது குற்றமில்லாத முறையில், ஏழை எளியமக்களுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடாகத் தரப்படுவதுதான் குறையே தவிர, வேறு எல்லா வகையிலும் நிறைந்தவையாக இருக்கின்றது. குறிப்பாக இதில் 12 வரிசைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகள் இருக்கின்றன. நேரமாகிவிட்ட காரணத்தினுல் இதில் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்வதற்கு நான் விரும்பவில்லை, இந்திய விடுதலைப் போராட்ட



1972 டிசம்பர் 14] [திரு. ஆர். சக்தி மோகன்]

வீரர்களுக்காக முதல்வரவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி, நமது நாட்டின் விடுதலையின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக, 50 ரூபாய் என்றிருந்த வீர மானியத்தை 75 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிருர்கள்.

அதற்காக தியாகிகளின் சார்பில் குறிப்பாக I. N. A. வீரர்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதில் சில வேண்டுகோள் 6·30.
கள், குறைபாடுகள் அல்ல. இந்த சில வேண்டுகோள்களை மட்டும் பி.ப.
வைக்க விரும்புகிறேன். இந்த 75 ரூபாய் மான்யத்தைப் பெறுவதற்காக சில வரம்பு முறைகள் வைத்திருக்கிருர்கள். வருமான வரம்பு ரூ. 100 என்று இருக்கிறது. 7, 8 வருஷங்களுக்கு முன்னுல் அன்றைக்கு இருந்த விலைவாசிகளை வைத்து அன்றிருந்த சர்க்கார் ரூ. 100 வருமானத்திற்கு உட்பட்டிருப்பவர்கள் மட்டும் தான் வீர மான்யம் பெற முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். இன்று இருக்கிற நிலையிலே வேறு பல மாநிலங்களைப் பார்க்கிறபோது, ரூ. 100 என்று இருந்த வரம்பு குறிப்பாக கேரளத்திலே ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே மற்ற எல்லா மாநிலங்களையும் கணக்கெடுத்துப்பார்க்கின்றபோது, நம் மாநிலம் இப்போது தியாகிகளுக்கு அதிகமாக மதிப்புக் கொடுத்து அவர்களுடைய வீர மான்யம் எந்தவிதமான தங்கு தடையில்லாமல் கொடுக்கப்படுகிறது என்றுலும் கூட, உச்ச வரம்பு என்று இருப்பதால், தியாகிகள் அவர்களுடைய மான்யத்தை மாதாமாதம் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. ஒரு சாதாரண அப்பாவி அந்தக் கிராமத்தில் இருக்கிற கீழ் அதிகாரிகளுடைய அவதிக்கும், அவர்கள் கேட்கின்ற பல கேள்விகளுக்கும் இலக்காகி அந்த மான்யத்தைப் பெறுவதற்கு பெரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிருன். இதோடு, அடுத்து அண்டையில் இருப்பவர்கள், தியாகிகளுக்கு ரூ. 100 வருமானம் என்ற வரம்பு இருப்பதனுல், அந்தத் தியாகிக்கு ரூ. 100 க்கு மேற்பட்டு வருமானம் இருக்கிறது என்று ஏதாவது போலியாக மொட்டை மனுக்கள் போட்டு விட்டால், அவர்களுக்கு வருகின்ற அந்த மான்யம் நிறுத்தப்படுகின்றது. எனவே இப்படி ஒரு குறைபாடு இல்லாமல் மான்யம் என்று பார்க்கிற போது, யார் யார், தியாகிகளோ, யார் யார் விடுதலைக்காகப் பாடுபட்டவர்களோ அவர்களுக்குத்தான் நாம் கொடுக்கின்றோம், எனவே இதற்காக வருமான வரம்பு என்று ஒன்று வேண்டியதில்லை என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றொன்று விடுதலைப் போராட்டத்தில் சேவை செய்தவர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னமாக தாமிரப் பத்திரங்கள் கொடுப்பதாக மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதில் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே, ஏதோ 100 பேர்கள் என்று இருந்ததை இன்றைக்கு 1,000 பேர்களாக நமது அரசு மாற்றியிருக்கிறது. இந்தத் தியாகிகளில் தாமிரப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள், தாமிரப் பத்திரம் பெறுவதற்குத் தகுதியில்லாதவர்கள் என்று பாகு படுத்திப் பார்க்காமல் இப்போது நம் மாநிலத்தில் ஏறக்குறைய 7,000 அல்லது 7,500 பேர்கள் வீர மானியம் பெற்று வருகின்றுர்கள். அந்த வீர மான்யம் பெற்று வருகின்ற அத்தனை பேருக்குமே தாமிரப் பத்திரத்தைக் கொடுத்து கௌரவிக்க வேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன், தியாகிகளின் சார்பாக.

அடுத்து, இந்தத் துணை மானியத்திலே பொதுமக்களுடைய நிலைமையைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் விவரமாகவும் விளக்கமாகவும் பேசினார்கள். பாளையங்கோட்டை-திருச்சி சம்பவத்தைப் பற்றி நான் தலையிட விரும்பவில்லை. அது நீதி விசாரணைக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதால் அதைப்பற்றி நான் எதும் விவரம் சொல்ல வேண்டியதில்லை. என்றாலும்கூட இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஆர்ப்பாட்டங்கள், அவற்றின் மூலம் அரசுக்கு ஏற்படுகின்ற சொத்து நஷ்டங்களையெல்லாம் பார்க்கிறபோது, நமது அரசாங்கம் ஜனநாயகத்திற்கு அதிக வாய்ப்புகள் கொடுக்கிறதோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது என்று ஒரு விவரம் அறிந்த நண்பர் எழுதியிருக்கிறார். ஆகவே ஜனநாயகத்திற்கு ஓரளவுக்கு இன்னும் சொல்லப்போனால் இந்த ஜனநாயக நடைமுறைக்கு, ஜனநாயக அனுபவத்திற்குக்கூட நாம் ஒரு சீலிங் வைத்துக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு எடுத்ததற்கெல்லாம் ஆர்ப்பாட்டம் என்றால் அது ஜனநாயக நடைமுறைக்கு நன்றாக இல்லை. மக்களுடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது என்பதை அறியாமல் எடுத்தவுடனே ஒரு சின்ன சர்ச்சை ஏற்பட்டாலும்கூட, அந்த இடத்திலே அரசாங்க பஸ் கொளுத்தப்படுகிறது, மற்ற அரசாங்கச்சொத்துக்களுக்கும் சேதம் உண்டாக்கப்படுகிறது. பொது மக்களுக்கு ஸ்தம்பிதமான நிலைமை உண்டாக்கப்படுகிறது. குடியரசு முறை என்று சொன்னால், குடிமக்களுக்கு சாதகமாக, மக்களுடைய சர்க்காருடைய சொத்துக்களுக்குப் பாதகம் ஏற்படக் கூடாது என்ற ஒரு ஜனநாயகப் பண்பை அல்லது ஜனநாயகத்தை எடுத்துச் சொல்வதற்கு எந்த அரசியல் கட்சிகளும் முன்வராத ஒரே காரணத்தால் ஜனநாயகத்தை அதிக அளவுக்கு வரை கடந்து அனுமதிக்கிறோம் என்ற குறைபாடு சில வட்டாரங்களிலே ஏற்படுகின்றது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், படித்து வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு திட்டம் இதிலே காணப்படுகிறது. உண்மையிலேயே வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்தாக வேண்டுமென்பது சர்க்காருடைய கடமை என்றாலும்கூட, இதுமாதிரி வேலை தேடிக்கொடுப்பது என்ற முறையை வைத்துக்கொள்ளும்போது, படித்தவர்கள் சிலர் பொறுப்பில்லாமல் தினசரி காரியத்தைப் பார்த்துக்கொண்டும், மாதா மாதம் காலண்டரைப் பார்த்து சம்பளத்தை வாங்கிக் கொண்டும், நாம் எதற்குப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஒரு நிலைமையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒரு நிலை உருவாகாமல், படித்தவர்களுக்கு அவர்களுடைய அக்கறைக்கு ஏற்றவாறு, அவர்களுக்கு எந்தத் தொழிலில் ஆர்வம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு, அதற்கான வழியில் அவர்களுக்குத் தொழில் வசதி ஏற்பாடு செய்து கொடுத்து, அவர்கள் சொந்தமாகப் பொறுப்பேற்றுக்கொண்டு, தேசீயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான வகையில் உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படித்தவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புத் தேடித் தருவது என்ற நிலையை நாம் வளர்த்துக்கொண்டே போவோமேயானால், இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளிலே, மொத்த ஜனத்தொகையில் 5-ல் ஒரு பகுதி ஜனத்



தொகை சர்க்கார் சிப்பந்திகளாக மாறி, வரி கொடுப்பதற்கு மக்கள் தொகை குறைந்துவிடும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகள் இல்லாதவர்கள் பக்கமே சார்ந்திருக்கிறது. இருப்பவர்கள், இல்லாதவர்கள் என்ற இரண்டு ஜாதியாக மனித குலத்தை நேற்றைக்கு அவர்கள் பிரித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உலகத்திலே இரண்டு ஜாதிதான் இருக்க முடியும். அது, "ஹாவ்ஸ் அண்டு ஹாவ் நாட்ஸ்"—இருப்பவர்கள், இல்லாதவர்கள். இந்த இரண்டு ஜாதிதான் எனக்குத் தெரிகிறது. அதிலே இருப்பவர்கள் மைனாரிடி, இல்லாதவர்கள் மெஜாரிடி. இந்த மெஜாரிடி பக்கம்தான் நான் இருப்பேன் என்று அதற்காக அவர்கள் ஒரு செயல் திட்டத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதற்கு ஏற்ப இந்த அரசினுடைய செயல்களைப் பார்க்கும்போது, இருப்பவர்கள் பக்கம் கொஞ்சம்கூட கவனம் காட்டவில்லை. இல்லாதவர்கள் பக்கம்தான் கவனம் காட்டப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொண்டு விடை பெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அண்மையில் நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் புயல், வெள்ளம் இவைகளால் ஏற்பட்டிருக்கும் சேதத்தைப்பற்றி நான் முதலில் சில நிமிடங்கள் பேச விரும்புகிறேன். அதைப்பற்றி, அரசாங்கத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருந்தேன். இன்று அந்தத் தீர்மானத்தைப் பற்றிப் பேசுவதற்கு அவசியமில்லை என்று தெரிவித்துக்கொண்டு, இரண்டு வார்த்தைகள் சொல்ல நான் முற்படுகின்றேன். எனக்கோ 63 வயதாகின்றது. எனக்குத் தெரிந்த வரையில், கடந்த 50 ஆண்டுக் காலமாக தமிழ் நாட்டில் நடந்த விஷயங்களில், இவ்வளவு பெரிய வெள்ளச் சேதம், பயங்கரமான சேதம் தமிழ் நாட்டில் ஏற்பட்டதில்லை. இன்று பார்லிமெண்டில், சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள், டாக்டர் ராவ் அவர்கள் பதில் சொல்லும்போது, தமிழ் நாட்டில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் சுமார் 20 கோடி ரூபாய் இருக்கும் என்று பேசியிருக்கிறார்கள். கடந்த சில நாட்களாக எங்கள் காரியாலயத்துக்கு வந்திருக்கும் தகவல்களின்படி சேலம், கோவை, திருச்சி, வடாற்காடு, செங்கற்பட்டு, தென் ஆற்காடு ஆகிய ஜில்லாக்களில் (குறுக்கீடு: தஞ்சாவூர் ஜில்லாவில்தான் சேதம் அதிகம்). அந்தந்த ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்து எங்கள் காரியாலயத்துக்கு வந்திருக்கும் தகவல்களைப் பார்க்கும்போது, மத்திய அரசில் சொல்லப்பட்டிருப்பதைப் போல் இரண்டு பங்கிருக்கும், குறைந்தது 40 கோடிக்கு இருக்கும் எனத் தெரிகிறது. அரசாங்கச் சொத்திற்கும் ஜனங்களுக்கும் சேர்த்து 40 கோடிக்குக் குறையாமல் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்கிறது என்று தெரியவில்லை. மற்றக் காரியங்களை வேண்டுமானாலும் நிறுத்தி வைத்துவிட்டு, முனைப்பாக நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கும்கூட இருக்கின்ற கஷ்டங்கள் குறையவில்லை. மக்கள் ரோடு மூலமாக மதுரைக்குப் போய்ச் சேர முடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இன்றும்கூட தொலைபேசியின் மூலமாக, டைரக்ட் டயலிங்கூடப் பேச முடியாமல் இருக்கிறது. இதை இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்கான தீவிர நிவாரண வேலைகளை அதிகமாகக் கவனிக்க

வேண்டுமென்று அரசாங்கத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு தகவல் கிடைத்திருக்கிறது. தஞ்சாவூரிலே 45,000 ஏக்கர் நிலம் வரை தண்ணீரில் ஒரு வாரமாக மூழ்கியிருக்கிறது என்றும், இந்தத் தண்ணீரை வெளியேற்ற முடியவில்லை, "டிரெயின்" பண்ண முடியவில்லை என்றும் கலெக்டர் அவர்களும் சொன்னார்கள் என்று காங்கிரஸ் காரியாலயத்துக்கு தகவல் வந்திருக்கிறது.

இம்மாதிரியெல்லாம் இருந்தால், நமக்குச் சேதம் எவ்வளவு ஆகும் என்று மிகவும் அச்சமுறுகிறேன். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் சட்டசபை முடிந்தவுடனே சம்பந்தப்பட்ட ஜில்லாக்களில் நேரில் சென்று இருந்து போக்குவரத்துக்கான காரியங்களையும் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களுக்கு உடனடி நிவாரணம் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, துணை மதிப்பீட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்
6·40 தைப் பற்றிப் பல துறைகளில் அதற்கான நிவாரணங்கள் சொல்லப்பட்
பி.ப. டிருக்கின்றன. முன்பே ஒரு முறை முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் துணை மதிப்பீட்டில் கண்டிருப்பவை மிகவும் குறைவு. ஆனால் மாநில அரசாங்கம் மட்டும் செய்யவில்லையென்று நான் புகார் சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இதில் மத்திய அரசாங்கத்திற்கும் அதிகமான பொறுப்பு இருக்கிறது. மத்திய அரசாங்க உதவி மாநில அரசுக்கு அதிகமாக வேண்டும். படித்தவர்கள் லட்சக்கணக்கானவர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். இடறி விழுந்தால் "கிராஜுவேட்" மேல் தான் விழவேண்டியிருக்கிறது. எங்கு போனாலும் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., இதற்குக் குறைவில்லாத படிப்புடையவர்கள் எந்த வேலை கொடுத்தாலும் செய்கிறேன் என்று வருகிறார்கள். லட்சக் கணக்கானவர்கள் "எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்"சில் பதிந்து வைத்திருக்கிறார்கள். இதற்கு நாம் துணை மதிப்பீட்டின்படி உத்தியோகங்கள் பி.டி. படித்தவர்களுக்குக் மட்டும் 900 ஆசிரியர்களுக்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரிக்கும்போது டைரக்டர், இந்த வருஷம் பாஸ் பண்ணியவர்களுக்கு இல்லை. இதற்கு முன்னால் பாஸ் பண்ணியவர்களுக்கு யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிவிட்டார். இம்மாதிரி வேலையில்லாத் திண்டாட்டம் அளவு மீறிப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசிடம் சண்டை போட்டு எவ்வளவு அதிகமாக உதவி பெற முடியுமோ அதைப் பெற்று வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க வேண்டும்.

இப்போது பலவிதமான இடைஞ்சல்கள், சட்டத்திற்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டு வருகிறது என்றால், அதற்கு இதுவும் ஒரு காரணம். மாணவர்கள் மத்தியில் "குறிப்பாக டிக்ரி கோர்ஸ்" படிக்கிறவர்கள் தங்கள் எதிர்காலம் என்ன என்பது தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் படித்து "டிக்ரி" வாங்கியபின் நல்ல உத்தியோகத்திற்குப் போகிறோம் என்ற எண்ணத்தின் மேலே அதே கவனத்தில் படித்துக்கொண்டிருக்க வேண்டியவர்களுக்கு தங்கள்



எதிர்காலம் சூனியமாகத் தோன்றும்பொழுது, எதையும் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆகவே, சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்க இம்மாதிரி வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிக்க வேண்டும். படித்தால் வேலை கிடைக்கும், வேலையென்றால் அரசாங்க வேலைதான் என்று எண்ணிக்கொண்டிருப்பது தவறு. ஏதாவது ஒரு வேலை கொடுக்க வேண்டும். சொந்தத்திலாவது வேலை செய்வதற்கான முயற்சிக்கு அரசாங்கம் வழி காண்பிக்க வேண்டும். வேறு இன்ன வேலைகளாவது செய்யுங்கள் என்று ஏற்பாடு செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு ஒரு பூர்ணப்பான திட்டத்தை வகுக்க வேண்டும்.

அடுத்தபடி, விலைவாசி உயர்வு கட்டுக்கடங்காத நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. நேற்று ஒருவரை மார்க்கட்டுக்கு அனுப்பி சில விலைகளைக் குறித்துக்கொண்டு வரச்சொன்னேன். நல்லெண்ணெய் போன வருஷம் இருந்தது கிலோ ரூ. 4–60. இந்த வருஷம் இதே நேரத்தில் 12 மாதத்திற்குள் மாறுதல், ஒரு கிலோவுக்கு விலை ரூ. 6–70. கடலை எண்ணெய் விலை ரூ. 4–40, இப்போது ரூ. 5–50. தேங்காய் எண்ணெய் ரூ. 6–75, இப்போது ரூ. 8. துவரம் பருப்பு ரூ. 2–30 லிருந்து இப்போது ரூ 4–50. சில பொருள்களின் விலைகள் மட்டும்தான் எழுதியிருக்கிறார்கள். நான் விலை ஏறியிருக்கிறது என்று சொல்லுகிறேன். குறைந்திருக்கிறது என்றால், அப்புறம் நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். ஆகவே, உதாரணத்திற்குச் சொன்னேன். இதுமாதிரி விலைகள் ஏறுகின்றன. அதைக் குறைப்பதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். அரசாங்கத்திலிருந்து காய்கறிகள் கடை வைத்து விலையைக் குறைப்பது நல்ல ஏற்பாடாகத்தான் தெரிந்தது. அரசாங்க உதவி பெற்று கவர்ன்மெண்ட் எஸ்டேட்டுக்குள் காய்கறி மார்க்கட் வைத்தார்கள். காய்கறி வந்தவுடன் கடைக்காரர்களுக்கு மொத்தமாகக் கொடுத்துவிடுகிறார்கள். யாராவது வீட்டிலிருந்து காய்கறி வாங்கப்போனால், கிடைப்பதே இல்லை. கடைக்காரர்கள் வாங்கிக்கொண்டுபோய் சில்லறைக் கடைகளில் அதிக விலைக்கு விற்கிறார்கள். சர்க்கார் உதவி பெற்று சர்க்கார் எஸ்டேட்டில் மௌண்டு ரோடு எஸ்டேட்டில் விற்கக்கூடிய கடையில் ஜனங்களுக்கும் விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். வந்தவுடனே எல்லாக் காய்கறிகளையும் சில்லறைக் கடைகளுக்கு மொத்தமாகக் கொடுக்கிறார்கள். அவர்களோ அதிக லாபத்திற்கு விற்கிறார்கள். டொமெடோ, தக்காளிக்காய் 4 அல்லது 6 அணாவுக்கு விற்ற 6 அணாதான் ஒரு கிலோ, நேற்று விலை ரூ. 2½. தக்காளிக்காய் நேற்று ரூ. 2½. சொல்லவே பயங்கரமாக இருக்கிறது. குடும்பம் எப்படி நடத்துவது, சமையல் எப்படிப் பண்ணுவது என்று தெரியவில்லை. இதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: எஸ்டேட்டில் காய்கறி வாங்காமல் அழுகிப் போய்க்கொண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: அடுத்தபடியாக, துணை மதிப்பீட்டில் இல்லாது போனாலும் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குச் சொல்லுகிறேன். தேவிகுளம், பீர்மேடு பகுதியில் தேயிலைத் தோட்டமும், ஏலக்காய்த்

தோட்டமும் இருக்கின்றன. மதுரை மாவட்டத்திலிருந்து ஏராளமான பேர்கள் அங்கே போய் கூலி வேலை செய்கிறார்கள். முன்போல் நடமாட்டம்கூட முடிவதில்லை. ஒரு இனத்தவரைப்பற்றிப் பேசும் பேச்சாகப் போய்விடுமோ என்று பயப்படுகிறேன். கேரள அரசாங்கத்துடன் நம் அரசாங்கம் தகுந்த பேச்சு வார்த்தை நடத்தி, தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஆயுதங்களோடு நடமாடுகின்றவர்களை ஒழிய ஒத்தை சத்தையில் தேவி குளம், பீர்மேடு பகுதியில் நடமாட முடிவதில்லை. அந்தப் பகுதியிலிருந்து விரட்டுவதற்காக மிரட்டுகிறார்கள். அதிலிருந்து பாதுகாப்புத் தரவேண்டும். நிறைய கம்பெனிகள் வந்திருக்கின்றன. அந்த மாநிலத்து உள் துறை அமைச்சர், தொழில்துறை அமைச்சர் இவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அப்படி விரட்ட முற்படுபவர்களுக்கு பலவிதமான உதவிகள் இருக்கின்றன. அந்த மாநில தொழிற்சங்கத் தலைவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள், இங்கிருந்து அங்கு சென்றவர்கள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆபத்தான நிலைமை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரம் விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப் படுகிறது. மின்சார விநியோகத்தில் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. ஆனால் ஒரு பகுதியில் இத்தனை மணி நேரம் நான் இன்ன கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்கும் என்று தெரிய வேண்டும். ஒரு வாரத்திற்குக் காலையில் கிடைக்கட்டும், ஒரு வாரத்தில் மாலையில் கிடைக்கட்டும், அடுத்த வாரத்தில் இரவில் கொடுக்கலாம். காலையில் வரும் என்று எண்ணி தொழிலாளர்களை அழைத்துக் கொண்டு போய் நிலத்தில் வேலை செய்யத் தயாராய் இருந்தால், உடனே மின்சாரம் நின்று விடுகிறது. தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காமலிருக்க முடியாது. 50 பேர், 60 பேருக்குச் சம்பளம் கொடுத்து மின்சாரம் இல்லாமல் தண்ணீர் இறைக்க முடியவில்லை. வேலை செய்ய முடியவில்லை. இம்மாதிரி இடைஞ்சல்கள் எங்கள் மதுரை ஜில்லாவில் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படியில்லாமல் "சிஸ்டமேட்டிக்" ஆக இருக்க வேண்டும். அன்றைக்கு மின்சார இலாகா நிதி நிலை அறிக்கை பற்றிப் பேசும்போது இதைப் பேச முடியவில்லை. ஒரு வாரத்திற்குத் தொடர்ந்து அந்த கிராமங்களுக்குக் காலையில் கொடுக்க வேண்டும். அடுத்த வாரம் மாலையில் கொடுக்கலாம். மாறிமாறிக் கொடுக்கலாம். அதை முன் கூட்டிச் சொல்லிவிட வேண்டும். சொன்னபடி மின்சாரம் சரியாக விவசாயிகளுக்கு இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மின்சார "கட்", குறைப்பு ஏற்பட்டதிலிருந்து தொழில்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில், கேரளாவிலிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமாக மின்சாரம் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதோ 10 லட்சம் யூனிட்டுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம், டிசம்பர்



18-க்கு மேல் 20 லட்சம் யூனிட்டுகள் கொடுப்பதாகச் சொன்னதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை எவ்வளவு அதிகமாக அவர்களிடம் கேட்டுப் பெற முடியுமோ அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது மேட்டூர் தேக்கம் பெருகிவிட்டதால் மேட்டூர் பிளாண்டில் நமக்கு முழு உற்பத்தி கிடைக்கும், ஓரளவு நமக்கு பளு குறையும் என்று நினைக்கிறேன். ஆகையால் விவசாயிகள் விஷயத்திலும், தொழில்கள் விஷயத்திலும் அதிகமாகப் பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். மற்ற விஷயங்களைப் பற்றி மற்ற அங்கத்தினர்கள் பேசி விட்டார்கள். அவைகளை நான் பேச வேண்டுமென்று எண்ணவில்லை. இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, துணை மதிப்பீட்டின் அடிப்படையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்க ளுடைய கருத்துக்களை மிக விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். 6-50 பி.ப

துணை மானியத்திலே குறிப்பிட்டிருக்கின்ற விஷயங்களின்பேரில் அதிக மாகச் சொல்லாததிலிருந்து அதில் விவாதத்திற்குரியவையாக, பிரச்சினை களாக எதும் இல்லையென்று நான் கருதுகின்றேன். எனவே அதனை வரவேற்றிருக்கின்றார்கள் என்றே நான் நம்புகின்றேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள், மற்றும் உறுப்பினர்கள் தமிழகத்தில் அண்மையில் பெய்த பெருமழை, வீசிய பெருங்காற்று ஆகியவற்றால் தமிழ் நாட்டிலே பல மாவட்டங்களிலே ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளையும் அதற்கு உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளையும் குறிப்பிட்டார்கள். அண்மையிலே பெய்த மழையினால் ஏற்பட்டுள்ள சேதங்கள்பற்றி நான் சட்டப் பேரவையில் விளக்கமாக எடுத்துரைத்து, தமிழ் நாட்டு அரசாங்கம் எந்தெந்த வகையிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்ன நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக் கின்றது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கின்றேன்.

அமைச்சர் பெருமக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் சென்று சுற்றிப்பார்த்து அந்தப் பகுதியின் தேவைகளை அறிந்து வந்திருக்கின் றார்கள். எந்த அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற விவரங் களையும் என்னிடத்திலே தந்திருக்கின்றார்கள். நம்முடைய போக்கு வரத்து அமைச்சர், மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள் 10-ந் தேதியன்று விமானம் மூலமாக, தென்னாற்காடு, செங்கற்பட்டு, திருச்சி, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களை சுமார் மூன்றரை மணி நேரத்திற்கு மேலாகச் சுற்றிப்பார்த்து, அவர்களுடன் அதிகாரிகளும் இருந்து, குறிப்புகளை எடுத்து, அந்த விவரங்களை என்னிடத்திலே அளித்திருக்கின்றார்கள். அன்று சென்னை வந்திருந்த மத்திய நிதி அமைச்சர் திரு. சவாண் அவர்களிடத்திலே நான் விளக்கிச் சொல்லி, மழையால் ஏற்பட்டிருக்கின்ற வெள்ளம், வெள்ளத்தினால் வீடு இழந்து தவிக்கும் மக்கள், இத்தருணத்தில் தமிழகத்திற்குத் தேவை யான நிதி உதவி, அரசு ஈடுபாடு செய்து கொண்டிருக்கின்ற முயற்சிகள் இவைகள் அனைத்தையும் எடுத்து விளக்கியிருப்பதோடு உடனடியாக, மத்திய அரசு பெரும் தொகை உதவிட வேண்டும் என்றும் கேட்டுச்

கொண்டிருக்கின்றேன். சட்டப் பேரவையில் அறிவித்தபோது, முதல் கட்டமாக மூன்று கோடி ரூபாய் அளவிற்கு பாதிக்கப்பட்ட பகுதிகளில் செலவழிக்க வேண்டும் என்றும், உடனடியாக ஒரு கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டிருக்கின்றது என்றும் எடுத்துச் சொன்னதற்கு ஏற்ப அந்தத் தொகை இப்போது அந்தப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது. வரும் 19-ம் தேதியன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் சென்னைக்கு வருமாறு கேட்டிருக்கின்றோம். அவர்கள் அந்தந்த மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற சேதார விவரங்களையெல்லாம் குறிப்பெடுத்து வர வேண்டும் என்றும், எவ்வளவு தொகை அந்தந்த மாவட்டங்களில் நிவாரணப் பணிகளுக்காகத் தேவைப்படுகின்றது என்ற கணக்குகளை அந்தக் கூட்டத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். பேரவையிலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் வேண்டுகோள் விடுத்தேன். எல்லாக் கட்சியிலும் இருக்கின்ற சட்டப் பேரவை உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கின்ற இழப்புகளைக் குறித்து தலைமைச் செயலாளர் அலுவலகத்திலோ அல்லது முதலமைச்சருடைய அலுவலகத்திலோ விவரங்களை அளிக்க வேண்டும், அவை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குப் பெரிதும் பயன் தரக்கூடியதாக இருக்கும் என்றும் சொன்னேன். அது போன்றே சட்டப் பேரவை உறுப்பினர்கள் மட்டும்தான் அந்தப் பணியில் ஈடுபட வேண்டும் என்று இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பணியில் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். பேரவையிலே அறிவித்த வகையில் வீடிழந்தவர்களுக்கு அளிக்கும் பண உதவி இதுவரையில் குடும்பம் ஒன்றுக்கு நாற்பது ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை இனி எண்பது ரூபாயாக உயர்த்தியளித்திட ஆணையிடப்பட்டிருக்கின்றது. சம்பாதிக்கும் குடும்பத் தலைவனை இழந்து விட்ட குடும்பத்திற்கு ரூபாய் இரண்டாயிரம் மானியம் வழங்கப்பட வேண்டும் என்று அறிவித்திருக்கின்றேன். அனாதையாகிவிட்ட குழந்தைகளைக் கவனிக்க அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட கறவை மாடுகள், விவசாயத்திற்கான கருவிகள், காளைகள் ஆகியவற்றை வாங்குவதற்கு தாராளமாகக் கடன் கொடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, உடைப்பு ஏற்பட்ட அணைகள், சிறு அணைக்கட்டுகளின் எண்ணிக்கை 7 ஆகவும், சேதம் அடைந்த அல்லது உடைப்பு ஏற்பட்ட ஏரிகள், கால்வாய்கள் மற்றும் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 300 ஆகவும், உடைந்த அல்லது சேதம் அடைந்த மற்ற சிறு சிறு ஏரிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 100 ஆகவும் நமக்குத் தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல தகவல்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிந்திடும் வாய்ப்பு எங்களுக்கு ஏற்படும். அந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு உடனடிப் பணிகள் அனைத்தும் தமிழகத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிறைவேற்றப்படும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்,



நான் அமைச்சர்களைக்கூடக் கேட்டுக் கொண்டேன். அதிகாரிகள் ஒரு நான்கைந்து நாட்களுக்கு அவரவர்கள் பகுதிகளில் இந்த விவரங்களைச் சேகரிப்பதற்கு ஏதுவாக அமைச்சர்கள் அந்தப் பகுதிகளுக்குச் செல்லாமல் இருப்பது நலம் என்றுகூடச் சொன்னேன். ஏனென்றால் அமைச்சர்கள் சென்றால், அதிகாரிகள் அமைச்சர்களோடு இருக்க வேண்டிய சங்கடங்கள் ஏற்பட்டு விடும். ஆகவே அதிகாரிகள் தாராளமாக பல பகுதிகளுக்குச் சென்று விவரங்களைச் சேகரித்து விட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குப் பிறகு அமைச்சர்கள் சென்று அந்தப் பணிகளைக் கண் காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திற்குப் பிறகு, நானும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் சென்று வேலைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதை அறியவும் மேற்கொண்டு வேலைகளை எப்படித் தீவிரப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளோடு கலந்து பேசவும் ஒரு சுற்றுப்பயணத்தினை மேற்கொள்ளுவதாக இருக்கின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, இது கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைவிட பெரிய வெள்ளம் என்பதும், அதனால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பினை ஒப்பிட்டு நோக்குகின்ற நேரத்தில், இதற்கு முன்பு ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளைவிட அதிகம் என்பதையும் நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். தகவல்கள் நமக்குத் தாமதமாக வந்து சேர்ந்தன. ஆகவேதான் உடனடியாக அறுதியிட்டு, "இவ்வளவு சேதம்" என்று நம்மால் கணக்கிட முடியவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் போய்ப் பார்த்துவிட்டு வந்து சொன்ன பிறகுதான் "மழையால் இவ்வளவு சேதமா" என்று பெருமூச்சிடும் வகையில் சேதம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடிந்தது. ஆகவே இதனை அரசியல் சார்பற்ற முறையில் ஒரு போர்க்கால நடவடிக்கை போலக் கருதி, அனைவரும் இந்தப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். எப்படி 1969-ஆம் ஆண்டு வறட்சியில் தமிழகம் பாதிக்கப்பட்ட காலத்தில், தமிழக அரசுக்கு உறுதுணையாக அதிகாரிகளும், வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களும்—எக்கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஒத்துழைத்து, அந்த வறட்சி நிவாரணப் பணிகளை வெற்றிகரமாக ஆக்குவதற்கு உதவினார்களோ, அதே போல இந்த நேரத்திலும் அரசியல் கட்சிப்பு உணர்ச்சிகளையெல்லாம் கொஞ்சம் தொலைவிலேயே வைத்துவிட்டு, ஒரு போர்க்கால நடவடிக்கை போல இந்த வெள்ளத்தால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்க, அவர்களுடைய பழைய வாழ்வு மீண்டும் அவர்களுக்குச் கிடைக்க, அவர்கள் இழந்த பொருள்களுக்கு ஈடாக மீண்டும் அவர்கள் தங்கள் வாழ்வினைத் தொடங்குவதற்கான சாதனங்களை அவர்களுக்குப் பெற்றுத்தர அரசாங்கம் எடுக்கின்ற எல்லா முயற்சிகளிலும் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஈடுபட வேண்டும் என்கின்ற அழைப்பினை இந்த மாமன்றத்தின் மூலமாக விடுக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அரசியல் கட்சிகளுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு தமிழ் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பெரிய பாதிப்பிலிருந்து மீள அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் பொருள்களையும் பெற்றுத்தரவும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற தீங்கினைக் களைவதற்கும் ஒருமித்த குரலில் அனைவரும்

ஒன்று சேர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுவேன். 1969-ஆம் ஆண்டில் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் சொன்னேன், "பாதகங்களைச் சாதகமாக ஆக்கிக் கொள்ளும் மன வலிமையோடு நாம் இந்தப் பணிகளில் ஈடுபட வேண்டும்" என்று மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டத்தில் கேட்டுக் கொண்டேன். "இதை ஒரு வாய்ப்பாகக் கருதி நமது பணிகளைக் கிராமப்புறங்களில் நடத்திட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். வெள்ளத்தினால் பெரும் பாதிப்புகள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன என்றாலும் ஒன்றினை நாம் மறந்துவிடக்கூடாது. 1969-ஆம் ஆண்டிலே ஏற்பட்ட வறட்சி நேரத்திலே நாம் ஆற்றிய பணிகளின் காரணமாக இன்று ஏற்பட்டிருக்க வேண்டிய பயங்கரமான விபத்துக்களிலிருந்து நாம் தப்பித்திருக்கிறோம். அன்றைக்கு ஏரி களுக்குக் கூட எழுப்பிய உயர்ந்த கரைகள் நாம் அடுத்துப் போட்ட சாலைகள், இணைப்புப் பாதைகள், நாம் தூர் எடுத்த ஏரிகளின் நிலைமைகள் இவையெல்லாம் இன்றைக்கு இந்தப் பெரிய விளைவிலிருந்து தமிழ் நாட்டை ஒரு அளவிற்குக் காப்பாற்றியிருக்கின்றன. அதைப் போலவே, இந்த வெள்ளச் சேதத்திற்குப் பிறகு அடுத்தடுத்த மழையால் நீர்ப் பற்றுக்குறையில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டு, நல்ல வளமான விவசாயம் ஏற்படச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆனால் இப்போது தற்காலிகமாக ஏற்பட்டிருக்கிற இந்தப் பாதிப்பைக் களைவதற்கு அரசாங்கம் எல்லாவிதமான முறையிலும் செயல்படும் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விவசாயிகள் போராட்டம் முடிந்த பிறகு, விவசாயிகளுடைய கோரிக்கைகளில் ஏற்பட்ட உடன்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். இப்போது புதிதாக ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்கள்.

7·00 பி.ப. மாண்புமிகு சட்ட மன்ற துணைத் தலைவர்: அவையின் நேரத்தை நீட்டி வைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுவும் அரசாங்கம் செய்து கொண்ட உடன்பாட்டை மீறி நடந்துகொண்டிருக்கின்றது என்ற கருத்தைப் பரவலாக எழுதுவதற்கு நியாயமில்லாமல் போய்விடவில்லை என்று அவர்கள் பொதுவாகச் சொன்னார்கள். விவசாயப் போராட்டம் முடிந்து செய்து கொண்ட உடன்படிக்கை எதையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்கிற ஒரு குறைபாட்டை விவசாயப் போராட்டத்திற்குப் பிறகு சொன்னார் கள். நான் இந்த விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயத் தலைவர் களை, அதற்குப் பிறகு பல முறை சந்திக்கிற வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். அந்தப் போராட்டத்தில் எடுக்கப்பட்ட உடன்பாட்டுக்கை முடிவுகள் என்ன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதல் 100 யூனிட்டுக்கு மின் கட்டணம் 12 பைசா, 100 யூனிட்டுக்கு மேற்பட்ட ஒவ்வொரு யூனிட்டுக்கும் 11 பைசா என்று முடிவெடுத்து அதை நிறைவேற்ற எம்.எஸ். 1354, 1–8–1972 நாளிட்ட அரசு ஆணையில் மேற்கண்ட உத்திரவு அமுலாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே உடன்படிக்கையை மீறிவிடவில்லை. உடன்படிக்கை அலட்சியப்படுத்தப்படவும் இல்லை.



மேலும், அரசு உத்திரவு 90728, 12721 நாள் 3–8–1972 பொதுப் பணித் துறை உத்திரவின்கீழ் கீழ்க்கண்ட சலுகைகளுக்கும் ஆணையிடப்பட்டது. அதில் 1972 வரையிலுள்ள பாக்கியை ஆகஸ்டு 1972-க்கு மேல் 4 அல்லது 5 தவணையில் செலுத்தலாம் என்று அனு மதியளிக்கப்பட்டிருக்கிறது.

மின்சார பாக்கிக்காக போடப்பட்டுள்ள சிவில் வழக்குகள் திருப்பிப் பெறப்பட்டன. மின்சார பாக்கிக்காக விதிக்கப்படுகிற தாமதக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்கிற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது ரத்து செய்யப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. துண்டிக்கப்பட்ட மின் இணைப்புகளுக்கு மீண்டும் இணைப்புத் தருவதற்காக வசூலிக்கிற 6 ரூபாய் தேவையில்லை என்று கொடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள் ளப்பட்டு அந்தக் கோரிக்கையின்படி வசூலிக்க வேண்டாமென்று விலக் களிக்கப்பட்டு அதுவும் வசூலிக்கப்படவில்லை. கடந்த பாக்கிகளை வசூ லிப்பது சம்பந்தமாக வருவாய் வாரிய உறுப்பினர்கள் மாவட்ட வாரியாக சுற்றுப் பயணம் செய்து, அவர்கள் கொடுத்த அறிக்கையின்படி இது வரை எடுக்கப்பட்ட ஜப்தி போன்ற நடவடிக்கையை எடுக்காமலிருப்பது என்ற உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு, அதற்கேற்ப வருவாய் வாரிய உறுப்பினர் மாவட்ட அறிக்கை 10–9–1972 அரசு ஆணை எண் 2415–ல் உத்திரவு போடப்பட்டுள்ளது. வருவாய் வாரிய உறுப்பினர்கள் பாதிக்கப் பட்டவைகள் என்று குறிப்பிட்ட நிலம் வரை, கடன்கள் , விவசாய வருமான வரி வசூல் முதலியவைகள் 31–12–1972 வரை தள்ளிவைக்கப் பட்டன.

மற்ற இடங்களில் ஏற்கனவே அரசு 30–6–1972 ஆணை இடப்பட்ட ஜப்திகள் போன்ற நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டும்.

வறட்சிப் பகுதிகளில் குடி நீர் வசதிக்காக ரூ. 25 லட்சத்தை ஒதுக்கி மாவட்டங்களுக்கு நிதி வினியோகிக்க வேண்டும்.

கூட்டுறவுக் கடன், குறுகிய காலக் கடன்களை, நீண்ட காலக் கடன்களாக மாற்றுவதற்கு ரிசர்வ் வங்கிக்குக் கடிதம் அப்போதே எழுதப்பட்டது. அதற்கு ஆதரவாக பதில் நேற்றுத்தான் வந்தது. நாலரை கோடி ரூபாய் குறுகிய காலக் கடனை மைய காலக் கடனாக மாற்ற ரிசர்வ் வங்கியின் அனுமதி வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற் கிடையே கூட்டுறவுக் கடன்களை வசூலிக்க எந்த விதமான ஜப்தி போன்ற நடவடிக்கைகளும் எடுக்க வேண்டாமென்று கூட்டுறவுத் துறை அதிகாரி களுக்கு உத்திரவிடப்பட்டது.

விவசாய வருமான வரி சம்பந்தமாக உடன்பாட்டிலே முடிவு தெரி விக்கப்பட்டது. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மேலவையிலும் நிறைவேற்றப்பட்ட விவசாய வருமான வரி மசோதாவில் எவ்வளவு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிடுவதற் கில்லை. அது மாத்திரம் அல்ல, அன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்கூட இப்போது விவசாய வருமான வரிச் சலுகைகளைப் பார்த்துவிட்டு, இது ஏதோ பணக்காரர்

டாக்டர் மு. கருணாநிதி [1972 டிசம்பர் 14

களுக்கு அதிகமான [illegible] சலுகைகள் [illegible] என்று வெளியே
[illegible] அறிக்கை [illegible]. இதை நான்
நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். [illegible] பகுதியில் நீர்
பாசன வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொள்ளப்
பட்டது. அதற்கு வேண்டிய அனுமதி கிடைத்து [illegible] முடிவு செய்ய
வேண்டும். [illegible] அனுமதி [illegible] கிடைக்கவில்லை. நம்முடைய
அரசு [illegible] செய்கிற காரியமாக [illegible]. இதைப் போலவே
பயிர் [illegible] வேண்டுமென்று கோரப்பட்டது. அது பற்றி அரசு
எடுக்கக்கூடிய முடிவு அல்ல என்று [illegible] தெரிவிக்கப்பட்டது.
அது சம்பந்தமாக, இது மத்திய அரசின் [illegible] இருக்கிற காரணத்
தால், மத்திய அரசோடு தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. கோவை
மாவட்டத்தில் சில ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு [illegible] சம்பந்தமான
விவரங்கள் சேகரிக்கப்பட்டு கொடுக்கப்பட வேண்டும். அந்த விவரங்கள்
கொடுக்கப்பட்டவுடன் அதற்குமேல் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு
மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே [illegible] நிலங்
களுக்குப் பட்டா வழங்குவது சம்பந்தமாக, இது [illegible] பரிசீலனை
செய்ய வேண்டிய விஷயம் என்று உடன்பாடு செய்கிற நேரத்திலேயே தெளி
வாக விளக்கப்பட்டு, இதுபற்றிப் பல [illegible] ஒழிக்கப்பட்டு
சட்டத்தின்படி பட்டாக்கள் வழங்கப்பட வேண்டுமென்றும், மேலும்
இது பற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்ப வேண்டுமென்றும், கேட்டுக்
கொள்ளப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூட சேம
நல நிதி ஏற்படுத்துவது சம்பந்தமாக [illegible] ஏற்பட்டது. இதற்காக
சென்ற சட்டமன்றக் கூட்டத் [illegible] சட்டம் நிறைவேற்றப்
பட்டு, பிறகு விரைவிலேயே அது [illegible]ப்படுத்தப்பட்டது. விவசாயத்
தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ய நாம்
ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அதற்காக குழு ஒன்று [illegible]
அந்த வாரத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரியப்
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குடியிருப்பு நிலங்களையும், புறம்
போக்கு நிலங்களையும் நிலமற்ற ஏழைகளுக்கு அடமானம் செய்வதைப்
பற்றி உடன்பாட்டின்போது பேசப்பட்டது. அது புதிய கோரிக்கையல்ல.
கடந்த 5 வருட காலத்தில் ஏழை எளிய மக்களுக்குப் புறம்போக்கு
நிலங்களுக்கு, குடியிருப்பு நிலங்களுக்கு எந்த அளவுக்குப் பட்டா வழங்கப்
பட்டிருக்கிறது என்பதை அவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள்
நன்கு அறிவார்கள். ஆனாலும், இந்த அரசு 1972–73-ம் ஆண்டுக்கு
மாத்திரம் 72 ஆயிரம் ஏக்கர் புறம்போக்கு நிலத்தை, 54 ஆயிரம்
ஏக்கர் காட்டு இலாகா நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்கு அடமானம்
செய்தது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பிறகு, அதை [illegible]
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து[illegible]. ஆகவே,
விவசாயிகள் போராட்டத்திற்குப் பிறகு நாங்கள் செய்துகொண்ட உடன்பாட்டை
நாங்கள் அலட்சியப்படுத்தவும் இல்லை, புறக்கணிக்கவும் இல்லை. முடிந்த
அளவிற்கு அநேகமாக எல்லாக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்ட
நிலையில் இந்த அரசு தன்னுடைய முயற்சியை மேற்கொண்டு அமுல்
படுத்தியது என்பதற்கான விவரங்களை நான் இங்கே தெரிவித்தேன்.



1972 டிசம்பர் 14] (டாக்டர் மு. கருணாநிதி)

நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இன்னும் ஒன்றைரி
சொன்னார்கள். அவருடைய பகுதியில் [illegible]யான இடங்களில் அதிகாச்
கள், அதிலும் [illegible] துறை உறுப்பினர் போர்டு மெம்பர் அங்கே
[illegible]போது, அவர்களோடு செல்வதற்கே அனுமதிக்கப்படவில்லை, நிறையத்
[illegible] இருந்தது என்று சொன்னார்கள். தடை இருந்தது என்று
[illegible] தவிர, தான் செல்லவில்லை என்று குறிப்பிடவில்லை.
சொன்னார்களே [illegible] அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை ரொம்ப கொவ
அனுமதி மீறி அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆகவே, அவர்கள் தடுத்தாலும்
மாக அவர்கள் போயிருக்கிறார்கள். ஆர்வத்தின் காரணமாக, அக்கரையின்
கேட்காமல் நான் அதை எண்ணி எண்ணி அவரைப் பாராட்டுகிறேன்.
காரணமாக. சில அதிகாரிகள், பசுமை தெரிகிறது, இங்கே
அப்படிப் போகும்போது, அதிகாரிகள், கூட்டிச் செய்யப்பட்ட அதிகாரிகளிடம்
என்ன வறட்சியா என்று திரு ரா. கி. சொன்னார்கள். அதிகாரிகள் என்ன,
சொன்னார்கள் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காலத்தில், 1969–ஆம்
உங்களோடு [illegible] இருந்து வருகிற காலத்தில், உங்க
ஆண்டிலே தமிழ் நாட்டில் வறட்சி காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த, இப்போது உங்க
ளுடைய பழைய அன்பு தலைவராக இருந்த அவர்கள், நான்
ளோடு இல்லாவிட்டாலும், கூட்டிக்கொண்டு வந்து வறட்சிப் பகுதி
பிரதமரைத் தமிழ் நாட்டிற்குக் திட்டாக பசுமை இருக்கிறதே, இந்த
களைக் காட்டியபோது, இங்கே திட்டுத் வந்திருக்கிறானே பைத்தியக்காரன்
நேரத்தில் பிரதமரை அழைத்து ரா. கி. அவர்கள் மறந்திருக்க
என்றெல்லாம் சொன்னதை நம்முடைய சாதாரண அதிகாரிகள்
மாட்டார்கள். தலைவரே அப்படி இருக்கும்போது, பொறுத்துக் கொள்ள
தவறு செய்தால், நம்முடைய ரா. கி. போன்றவர்கள் அப்போதே அவர்களுக்கு அந்
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் கூட இப்போது ரா. கி. அவர்
தக் கோபம் வந்திருக்குமேயானால், அனுதாபப்பட்டிருப்பேன். அவர்கள்
கள் சொல்லியபோது மிகவும் நடைபெறுகிறதோ, அதை நெற்றிக்
எங்கே நேர்மை தவறி ஒரு காரியம் குற்றமே என்று கண்டிக்கக்கூடிய பெரிய
கண்ணைக் காட்டினாலும் குற்றம் இப்போது சொல்லியிருக்கக் கூடும். பி. ப.
[illegible] ரா. கி. அவர்கள் என்று நான் பிரதமர் இந்திரா காந்தி 7-10
[illegible] அவருடைய கட்சியின் தலைவர், தமிழ் நாட்டில் பசுமை இருக்கிறதே
அப்போது அவர்கள் வந்தபோது, சொன்னபோது தலைவராக இருந்தாலும்
[illegible] வறட்சியிருக்கிறதென்று குற்றம் குற்றமே என்று அன்றைக்கு
எங்கே நெற்றிக் கண்ணைக் காட்டினாலும், இன்றைக்கு இந்த அதிகாரி
ரா. கி. அவர்கள் சொல்லியிருப்பார்களானால், நான் உள்ளபடியே மகிழ்ச்சி
பற்றிக் குறை சொல்கிற நேரத்தில், சந்தேகப்படுகிறார்கள்? இன்றைய மத்
யடைந்திருப்பேன். யார் என்று காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் இருந்த
திய அமைச்சராகவும், அன்றைய சொன்னார்கள். பெயர் தெரிகிறது என்றால்,
திரு. சுப்பிரமணியம் அவர்கள் பெயர் ஞாபகத்திற்கு வந்திருக்கிறது
விஷயம் தெரிகிற காரணத்தினால், [illegible] சொல்லுவது நல்லதல்ல
சொன்னார்கள் என்பதில் சந்தேகம் [illegible] செய்தி அப்போது வந்திருக்கிறது
[illegible] பத்திரிகைகளிலும் [illegible] பெயரை ரா. கி. அவர்களுக்கு நான்
[illegible] தான் இதைப் பெயரை
ஞாபகப்படுத்துகிறேன்.

போலீஸ் குறுக்கிடுவதைப பற்றியெல்லாம் சொன்னார்கள். போலீஸ் குறுக்கீடு என்று பொதுவாகச் சொன்னார்கள். போலீசிலே குறுக்கீடா அல்லது போலீஸ் குறுக்கீடா என்று புரியவில்லை. ஆனால் நான் ஒன்றை அவர்களுக்கு ஞாபகப்படுத்துவேன். நம்முடைய தமிழகத்தில் கடந்த 1947-லிருந்து நடைபெறுகிற நம்முடைய ஆட்சிச் சக்கரம் சுழலுவதில் போலீசாருடைய நடவடிக்கைகளுக்கு இந்த ஆட்சியிலே நீதி விசாரணைகள் ஏற்பாடு செய்யப்படுவதைப் போல், இதற்கு முன்பிருந்த ஆளும் கட்சி நீதி விசாரணைகளை ஏற்பாடு செய்யவில்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். முதுகளத்தூர் போன்ற பெரிய சம்பவங்கள் எல்லாம் நடைபெற்றபோது, 40, 50 நாட்கள் முதுகளத்தூர் சீமையே ரணகளமான அந்த நேரத்திலும் சரி, 1965-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் புரட்சியாக தமிழகத்திலே மாறிய அந்தக் காலத்திலும் சரி,—சிதம்பரத்தில்—ஓரேயொரு இடத்தில் மாத்திரம் 1965-லே நீதி விசாரணை வைக்கப்பட்டது. வேறு எந்த இடத்திலும் வைக்கப்படவில்லை. 53 பேர் முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கொடுத்த கணக்கின்படி, துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்து போயிருந்தார்கள். அந்த நேரத்தில் கூட நீதி விசாரணை வைக்கப்படவில்லை. அதைப் போலவே முதுகளத்தூர் சம்பவத்திலும் நீதி விசாரணை வைக்கப்படவில்லை. ஆனால் இன்றைக்கு திருச்சி, பாளையங்கோட்டை போன்ற இடங்களில்—பாளையங்கோட்டையிலாவது ஒரு மாணவர் இறந்தார், ஆனால், திருச்சியிலே கலவரம் தான் நடைபெற்றது. ஒரு ஹாஸ்டலுக்குள்ளே நுழைந்துவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது. ஆக, இருவகையான தகவல்கள் வந்தன, அடி உதைதான், இருந்தாலும் கூட, திருச்சியைப் பொறுத்த வரையிலும் கூட ஒரு நீதி விசாரணை இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே போலீசார் தாராளமாகத் தவறு செய்யலாம் என்று யாரும் இன்றைக்கு அனுமதித்து விடவில்லை. எங்கே எதிர்க் கட்சிகள் குரல் எழுப்பினாலும், எங்கே ஏதோ தவறு நடந்துவிட்டது என்று குறிப்பிட்டுச் சொன்னாலும், சுட்டிக் காட்டினாலும், அந்த இடங்களில் இந்த அரசு தயவு தாட்சண்யமில்லாமல் எதிர்க் கட்சிக்காரரர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அந்தக் கோரிக்கையை அலட்சியப்படுத்தாமல் எத்தனை நீதி விசாரணைகளை வைத்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். அவர்கள் மிகுந்த வேதனைப்பட்டார்கள். தமிழ் நாட்டினுடைய அரசியல் எப்படியெல்லாம் ஆகிவிட்டதென்று தான் கவலைப்படுவதாகச் சொன்னார்கள். வயதான அவர்களுக்கே, அனுபவம் பெற்ற அவர்களுக்கே அவ்வளவு இருந்தால், என்னைப் போன்றவர்களுக்கு எவ்வளவு இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்கள் அரசியலில் என்னை விட அதிகமாக, பல ஆண்டு காலமாக அடிபட்டவர்கள், அனுபவம் பெற்றவர்கள், அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லையென்றால், இன்றைக்கு இந்த ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிற நாங்கள் எத்தகைய அரசியல் பண்பாடு அற்றவர்களால் தாக்கப்படுகிறோம், எத்தகைய இழி மொழிகளுக்கு, பழிச் சொற்களுக்கு ஆளாக்கப்படுகிறோம் என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து, அவர்கள் தமக்காகக் கவலைப்படுகிற நேரத்தில், அவர்கள் வீட்டுக் குழந்தைகள் போல் உள்ள எங்களுக்காகக் கொஞ்சம் கவலைப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் தனக்காகக் கவலைப்படாமல் எங்களுக்காகக் கவலைப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



நல்ல அரிய கருத்துக்களை காங்கிரஸ் கட்சி சார்பாகவும், மற்றும் முஸ்லீம் லீக், நம்முடைய பார்வார்டு பிளாக், தமிழரசுக் கழகம், ஆகிய கட்சிகள் சார்பாகவும், ஆளும் கட்சி சார்பாகவும், இங்கே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கருத்துக்களைச் சொன்ன அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தத் துணை மானிய மதிப்பீட்டை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டு இந்த அளவில் விடைபெறுகிறேன். வணக்கம்.

• திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, நான் பேசும்போது மின்சாரம், இன்று நிறைவேற்றப்பட்ட விவசாய வருமான வரிச் சட்டம் இவை நீங்கலாக என்றுதான் நான் பேசியபோது சொன்னேன். ஆகையினாலே மின்சாரம் சம்பந்தப்பட்ட அளவிலேயும், விவசாய வருமான வரிச் சட்டம் சம்பந்தமாகத் திருத்தம் கொண்டுவருவதிலும் அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சட்டத்திலே பேசும்போது சொன்னேன். அந்த விஷயங்களைச் சொன்னேன். வேறு ஒன்றுமில்லை. குஜராத்தில் ஏதோ பயிர் இன்ஷ்யூரன்ஸ் என்று ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்த மாநில அரசு பயிர் இன்ஷ்யூரன்ஸ் சம்பந்தமாக ஏதோ நடவடிக்கை எடுத்தது போன்ற நிலைமை தெரிகிறது. அது நம் மாநிலத்திற்கு நல்லதாக இருக்குமா என்பதைப் பற்றியும் யோசிக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு 'பிராவிடண்ட் பண்டு' போன்ற ஏதோ நிதியை ஏற்படுத்துவதற்கு, அவர்களுடைய பிற்காலத்தில் உதவ வேண்டுமென்பதற்கு யோசிப்பதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள் என்று முன்னொரு நாள் நான் பேசியபோது கேட்டேன். அப்படி ஒன்றுமில்லையென்று பதில் வந்தது.

கடன்கள் சம்பந்தப்பட்டமட்டில், கிணறுகளை வெட்டி, கடன்கள் பெற்று பெற்றுத கடன்கள் சம்பந்தமாக அவைகளைப் பின் வருஷங்களுக்கு ஒத்தி வைக்கும்படியாகக் கோரிக்கைகள் இருக்கின்றன. இதைக் குறித்துச் சொன்னேன். இந்தக் காரியங்களில் எந்த அளவு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. நிவாரணம் இல்லையென்றால், அந்தக் கடனிலிருந்து மீளுவதற்கோ அல்லது கடனைக் கட்டுவதற்கு வசதியோ பெற முடியாமல் போய்விடுவார்கள்.

தடுத்தது என்பது, என்னை அவர்களுடன் செல்லவொட்டாது, அவர் போகிற நேரத்திற்குத் தக்கவாறு, அவருடன் தொடர்ந்து போவதை அவர்கள் தடுக்கிற முறையிலே தவறான செய்திகளை எனக்குச் சொல்லி நான் அவர்களோடு தொடர்ந்து செல்ல விடாதபடி முயற்சி நடந்தது. தாலுகா அளவிலே சின்ன அதிகாரி மட்டுமல்ல, ஜில்லா அதிகாரிகளும் கூட என்பதைத்தான் மறுபடியும் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு விவகாரங்கள் ஒன்றுமில்லை.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: சட்ட மன்றத்தின் இன் றைய நிகழ்ச்சிகள் யாவும் முடிந்தது சட்ட மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும். பி.ப. 7-15

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

7. மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

Nil.

*B. Reports, Notifications and Other Papers.*

***15. The Tamil Nadu District Police (Amendment) Bill 1972 (L.A. Bill No. 52 of 1972), as passed by the Assembly.**

***16. The Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 37 of 1972), as passed by the Assembly.**

***17. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Sixth Amendment Bill, 1972 (L.A. Bill No. 43 of 1972), as passed by the Assembly.**

***18. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1972 (L.A. Bill No. 44 of 1972), as passed by the Assembly.**

***19. The Indian Stamps (Tamil Nadu Amendment) Bill, 1972 (L.A. Bill No. 45 of 1972), as pased by the Assembly.**

***20. The Tamil Nadu Levy of Ryotwari Assessment on Free-hold Lands Bill, 1972 (L.A. Bill No. 46 of 1972), as passed by the Assembly.**

***21. The Tamil Nadu Betting Tax (Second Amendment) Bill, 1972 (L.A. Bill No. 50 of 1972), as passed by the Assembly.**

---

*** Circulated to all M.L.Cs. on 12th December 1972.**



**11 ஆம் பக்கத்தில் இனம் 5(1) க்கான அடிகுறிப்பைக் காண்க.**

**L. A. BILL No. 37 OF 1972.**

**(As passed by the Assembly.)**

*A Bill further to amend the Tamil Nadu Agricultural Income-tax Act,* 1955.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Act, 1972.

(2) It shall be deemed to have come into force on the 1st April 1972.

2. *Amendment of section* 2, *Tamil Nadu Act V of* 1955.—In section 2 of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955) (hereinafter referred to as the principal Act),—

(i) for clause (*j*), the following clause shall be substituted, namely :—

"(*j*) "exempted extent of land" means ten standard acres ;" ;

(ii) after clasue (*m*), the following clause shall be inserted, namely :—

"(*mm*) "hill area" means any area comprising a hill as the Government may, by notification, from time to time specify, after taking into consideration such factors as may be prescribed ;"

(iii) in clause (*r*), the word "cinchona" shall be omitted.

(iv) in clause (*vv*),—

(*a*) for items (i) to (iii), the following items shall be substituted, namely :—

"(i) one-third of an acre of land used for growing arecanut, or

(ii) (1) one-fourth of an acre of land used for growing grapes and irrigated from a Government source of irrigation, or

(2) one-third of an acre of land used for growing grapes and not falling under category (1), or

(iii) (*a*) in any area (other than a hill area)—

(1) one-half of an acre of land used for growing banana and irrigated from a Government source of irrigation, or

(2) one acre of land used for growing banana and not falling under category (1), or

(b) in any hill area, in the case of land used exclusively for growing banana, that extent of the land specified in item (iv-h), (v), (vi), (vii) or (viii), as the case may be ; " ;

(b) for items (iv-a), (iv-b), (iv-c), and (iv-d), the following items shall be substituted, namely :—

"(iv-a) (1) one-half of an acre of land used for growing sugarcane and irrigated from a Government source of irrigation, or

(2) one acre of land used for growing sugarcane and not falling under category (1), or

(iv-b) (1) one acre of land used for growing groundnut and irrigated from a Government source of irrigation, or

(2) one and one-half acres of land used for growing groundnut and irrigated from a source other than a Government source of irrigation, or

(iv-c) (1) one acre of land used for growing cotton and irrigated from Government source of irrigation, or

(2) one and one-half acres of land used for growing cotton and irrigated from a source other than a Government source or irrigation,

(iv-d) (1) one acre of land used for growing coconut and irrigated from a Government source of irrigation, or

(2) two acres of land used for growing coconut and not falling under category (1), or " ;

(c) after *Explanation I*, the following *Explanations* shall be inserted, namely ;—

" *Explanation I-A*.—In the case of any land used for growing groundnut or cotton, as the case may be, but not falling under item (iv-b) or (iv-c), as the case may be, standard acre shall be calculated in accordance with item (vii) or (viii), as the case may be.

*Explanation I-B*.—For the purposes of clause (vv) the, expression "irrigated from a Government source of irrigation " shall mean,—

(i) irrigated by direct flow of water from such source, or

(ii) irrigated by lifting water from such source, or

(iii) irrigated by percolation of water from such source.



*Explanation I-C*.—For the purposes of clause (vv), a land used for growing any crop and irrigated from a Government source of irrigation shall be deemed to be so irrigated, if such crop is grown wholly with the water from such Government source. " ;

(d) *Explanation III*, the following proviso shall be added, namely :—

" Provided that in any case falling under clause (a) where banana is grown in any hill area, for purposes of shade for any plantation crop, the area cultivated with banana shall be demed to be cultivated with the plantation crop concerned ; " ;

(v) to clause (y), the following *Explanation* shall be added, namely :—

" *Explanation*.—The expression 'fruit trees' and the expression 'orchards' shall not include any of the crops mentioned in clause (vv). "

3. *Amendment of section* 4, *Tamil Nadu Act V of* 1955.—In Section 4 of the principal Act,—

(i) for clause (b), the following clause shall be substituted, namely :—

" (b) any agricultural income derived from property held under trust, wholly or partly for charitable or religious purposes, to the same extent to which income derived from property held under trust wholly or partly for charitable or religious purposes, is not included in the total income for purposes of the Income-tax Act, 1961 (Central Act 43 of 1961) ; " ;

(ii) the *Explanation* shall be omitted.

4. *Amendment of section* 10, *Tamil Nadu Act V of* 1955.—In sub-section (1) of section 10 of the principal Act, for the words "seven and a half standard acres", the words "ten standard acres", shall be substituted.

5. *Substitution of section* 65. *Tamil Nadu Act V of* 1955.—For section 65 of the principal Act, the following sections shall be substituted, namely :—

" 65. *Composition of agricultural income-tax*.—(1) Notwithstanding anything contained in this Act, but subject to the provisions of sub-section (3),—

(i) any person who holds land wholly grown with non-plantation crops, may apply to the prescribed officer for permission to compound the agricultural income-tax payable by him and to pay in lieu thereof a lump sum at the rate or rates specfied in Part II of the Schedule to this Act ;

(ii) (*a*) any person who holds land, not exceeding fifty standard acres, grown wholly with plantation crops or grown partly with plantation crops and partly with non-plantation crops, may apply to the prescribed officer for permission to compound the agricultural income-tax payable by him and to pay in lieu thereof a lumpsum at the rate of rates specified in Part II of the Schedule to this Act ;

(*b*) any person who holds land exceeding fifty standard acres, grown with plantation or non-plantation crops and whose extent of land grown with plantation crops does not exceed fifty stanadard acres, may apply to the prescribed officer for permission to compound the agricultural income-tax payable by him and to pay in lieu thereof a lump sum at the rate or rates specified in Part II of the Schedule to this Act ;

(*c*) any person who holds land exceeding fifty standard acres grown with plantation or non-plantation crops and whose extent of land grown with plantation crops, exceeds fifty standard acres, may apply to the prescribed officer for permission to compound the agricultural income-tax payable by him on the income derived from land grown with non-plantation crops, if any, and to pay in lieu thereof a lump sum at the rate or rates specified in Part II of the Schedule to this Act ;

Provided that for the purposes of clause (ii) (*c*), the rate for the first ten standard acres shall be construed to be Rs. 15 per standard acre.

(2) In respect of the income derived from land grown with plantation crops by the person referred to in clause (ii) (*c*) of sub-section (1), the provisions of Chapter V shall apply as if such person had no other income.

(3) No registered firm or unregistered firm treated under section 17 (5) (*b*) as a registered firm shall be entitled to apply for permission to compound under this section but any partner of such firm may apply for permission to compound the agricultural income-tax payable by him on the aggregate of the income derived by him from—

(*a*) the land held by him individually ; and

(*b*) his proportionate share of the land held by the firm.

(4) Every application under sub-section (1) shall be submitted in such form, in such manner and within such time as may be prescribed.

(5) The prescribed officer may after satisfying himself that the particulars specified in the application are correct, by order in writing, grant the permission.



(6) Subject to the provisions of sub-sections (8) to (11), and of section 65-A, the permission granted to any person under sub-section (5) shall commence from the financial year for which such permission was granted and shall conitnue in force, until such person exercises an option under sub-section (8) to submit a return.

(7) Subject to the provisions of sub-sections (10) and (11) in respect of the period during which the permission granted under sub-section (5) is in force, the provisions of this Act regarding the submission of returns, accounts or other documents, the assessment to agricultural income-tax or any other matter incidental thereto shall not apply in relation to the grantee.

(8) Notwithstanding anything contained in sub-section (6), a person to whom permission has been granted under this section to compound the agricultural income-tax payable by him on the total agricultural income for any previous year may opt to submit under sub-section (1) of section 16, a return of the total agricultural income of the next succeeding previous year or the subsequent previous year and upon the submission of such return, the permission granted under this section shall cease to have effect and accordingly assessment shall be made under this Act.

(9) If at any time during the period when the permission granted to any person under sub-section (5) is in force, the person concerned has ceased to hold any land or the extent of standard acres held by him is reduced by reason of a change in the crop grown, he may apply to the prescribed officer in such form, in such manner and within such time as may be prescribed, for reducing the amount specified in the order granting such permission and the prescered officer may after satisfying himself that the particulars specified in the application are correct, reduce such amount suitably.

*123 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the work done by the Boys' Clubs in the State attached to the Police Department?

சிறுவர் கழகங்கள் (Boys' Clubs).

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்;—

இம் மாநிலத்தில் காவல் துறையுடன் இணைந்துள்ள சிறுவர் கழகங்களால் (Boys' Clubs) ஆற்றப்படும் பணி யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குற்றங்கள் மலிந்த பகுதிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் வளர்ந்துவரும் குழந்தைகளின் உள்ளத்தில் நல்ல குடிமகன் என்ற உணர்வை உருவாக்குவதும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஊட்டுவதுமே சிறுவர் சங்கங்களின் முக்கிய நோக்கமாகும்.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் வாழ்க்கை நலனும் வசதியும் இன்றி வாழும் குழந்தைகளின் பயனுக்காக இச்சங்கங்கள் மனமகிழ் இடங்களாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே காவலர் சிறுவர் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, சிறுவர்கள் ஓய்வு நேரத்தில் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி கேளிக்கை, கல்வி வசதிகள் உள்ளன; படிப்பதற்குப் புத்தகங்கள் இருக்கின்றன. கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் முறையான மேற்பார்வையின் கீழ் நடைபெறுகின்றன. இச்சங்கத்தின்கண் சிறுவர்கள் ஆர்வத்தை வளர்க்கும் பொருட்டு அவர்களுக்கு திரைப்படங்கள் காட்டவும், முக்கியமான இடங்களுக்குச் சுற்றுலாச் செல்லவும் இசை நிகழ்ச்சிகள், பல்வகை கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. இவை தவிர இயன்ற அளவுக்கு இவர்களுக்குச் சிற்றுண்டியும் வழங்கப்படுகின்றது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற சங்கங்கள் மாவட்ட வாரியாக எந்தெந்த மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன, அதில் எவ்வளவு மாணவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: தலைவர் அவர்களே, இது போல சென்னை மாநகரத்தைச் சேர்த்து 15 சங்கங்கள் இருக்கின்றன. சென்னையில் மூன்று, கோடம்பாக்கம், சிந்தாதிரிப்பேட்டை, ராயபுரம். திருச்சி ஜில்லாவில் புதுக்கோட்டை, சேலத்தில் சோமரசம்பேட்டை, பொன்னம்மாபேட்டை, அதிசிப்பாளையம். கோயம்புத்தூரில் காமராஜபுரம். நீலகிரியில் ஊட்டி. தஞ்சை ஜில்லாவில் கும்பகோணம், தஞ்சாவூர். தென்னாற்காடில் கடலூர், சிதம்பரம். மதுரை ஜில்லாவில் பழனி, திண்டுக்கல். மதுரை நகரத்தில் காசிமால் தெரு, புடுத் தோப்பு, ஆழ்வார்புரம், காமராஜபுரம். இராமநாதபுரத்தில் சிவகங்கை, அருப்புக்கோட்டை, ராமநாதபுரம். திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில். செங்கற்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டு, காஞ்சிபுரம். வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர். தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி. ஆக கிட்டத்தட்ட 30 இடங்களில் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் குறிப்பு இல்லை. சங்கங்கள் தான்.

**Thiru A. R. DAMODARAN**: Sir, may I know the object of attaching the Boys' Clubs to the Police Department instead of to certain Social Welfare Agencies? When these Boys' Clubs were started 15 years ago, there was no Social Welfare Agency to look after those Clubs and so they were given to the Police Department. Inasmuch as there are very many Social Welfare Agencies now, may I suggest to the Hon. Minister to consider whether these Clubs could not be handed over to some other agencies instead of the Police Deparment?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: அவர்கள் இளமையிலேயே தவறு செய்யக் கூடியவர்களாகப் பிடிக்கப்பட்டுள்ள காரணத்தால், அவர்கள் போலீஸ் இலாகாவின் மூலமாக குற்றவாளிகளாக நடத்தப்படாமல், அவர்களைப் பிரஜைகள் என்ற உணர்வோடு மாணவர்களாக வைத்து நல்லெண்ணத்தைப் புகுத்த வேண்டுமென்ற அடிப்படையில் அந்த இலாகாவின் பராமரிப்பின் கீழ் நடந்து வருகிறது.

**Thiru A. R. DAMODARAN**: Sir, am I then to understand that only prospective juvenile delinquents are attached to these Boys Clubs? I was under the impression that it was not so. From the Minister's reply it appears that only prospective juvenile delinquents are attached to these Clubs.

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: அவர்கள் கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அவர்கள் மீது தவறு என்று குற்றம் கண்டு பிடிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டு அழைத்து வரப்படுபவர்கள் அல்ல. குற்றம் செய்யக்கூடிய சூழ்நிலையில் இருக்கும் சிறுவர்கள் அந்தச் சங்கத்தில்— அது சங்கம்தான், விடுதி அல்ல — சேர்க்கப்படுகிறார்கள். இந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் நல்ல பிரஜைகளாக உருவாக்கக்கூடிய



அத்தனை சூழ்நிலைகளும் செய்து தரப்படுகின்றன. அது ஒரு சமூகப் பணி என்றுதான் போலீஸ் இலாகா மூலமாக நலத்துறை பொறுப்பில் நடக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, போலீஸ் துறையுடன் இந்தச் சங்கங்களை இணைப்பதன் நோக்கம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தவறான பாதையில் செல்லும் இளஞ்சிறுவர்களை ஒன்று சேர்த்து ஓய்வு நேரத்தில் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடும் பொருட்டு அவர்களுக்குக் கல்வி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுதான் இச்சங்கத்தின் நோக்கம். நான் முதலில் சொன்ன காரணம் இங்கே தரப்படுகிறது. அவர்கள் குற்றம் செய்யக் கூடிய வர்கள் வாழ்க்கையிலே சில தவறு செய்யக்கூடியவர்கள் என்கிறதைப் பொறுத்து, அவர்கள் இந்த இடத்திலே கொண்டுவந்து வைக்கப்படுகிறார்கள். இளஞ்சிறுவர்கள் குற்றம் புரியாதவண்ணம், குற்றம் நிகழக்கூடிய பகுதிகளில் இந்தக் குழந்தைகளுக்குத் தூண்டுகோலாக அமையக் கூடிய சூழ்நிலையை— அகற்றத் தான், இந்தக் குழந்தைகள் இந்தச் சங்கங் களுக்குக் கொண்டு வரப்படுகிறார்கள். இச்சங்கங்கள் காவல் துறையால் 1960 ஆம் ஆண்டிலிருந்து வைக்கப்படுகிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, மதுரை, இராமநாத புரம் மாவட்டங்களில் குற்ற பரம்பரைச் சட்டம் அமலில் இருந்தபோது "கள்ளர் ரிக்ளமேஷன்" இலாகா போலீஸ் இலாகா மேற்பார்வையில் தான் இருந்தது. அதெல்லாம் இப்போது மாற்றப்பட்டு, அந்தப் பாடசாலைகள் பள்ளிகள் எல்லாமே கல்வி இலாகாவுக்கு மாற்றப்பட்டிருக் கின்றன. அதே மாதிரி இந்த "பாய்ஸ் கிளப்"-ஐயும் கல்வி இலாகாவுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முற்படுமா, அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் போலீஸ்காரர்கள் "பாய்ஸ் கிளப்"-ஐ மேற்பார்வை பார்ப்பதும் சரியானபடி நடந்துகொள்ள வேண்டுமென்று பயமுறுத்துவதும் பிள்ளைகளைத் திருத்துவதாகாது. ஆகையால் "சைக்காலஜி" படி கல்வி இலாகாவுக்கு அந்த நிர்வாகத்தை மாற்றுவது நல்லதல்லவா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: குற்றம் செய்பவர்கள், செய்யக்கூடியவர்கள் என்பதை உணர்ந்து தான் அந்தப் பிள்ளைகளை இந்த இலாகாவின் மூலமாகக் கொண்டு வரச் செய்து அவர்கள் மேற் பார்வையில் இந்தச் சமூகப் பணி ஆற்றப்படுகிறது. இதைத் தவிர்த்து சமூக நலத் துறையிலே சமூகப் பணியாளர்கள் மேற்கொண்டு இவர்களை நல்வழிப்படுத்த முயல்வார்களேயானால், அந்தப் பிள்ளைகளுக்கு அச்சம் இருக்காது. ஒரு அச்சம் போலீசில் இருப்பதால்தான், அவர்கள் திருந் தக்கூடும் என்ற எண்ணத்திலே, போலீஸ்காரர்கள், நேரடியாக போலீஸ் சட்டத்தின் படியல்ல, அவர்களைக் கொண்டுவருவது. சமூக நோக்கத்தோடு போலீஸ் இலாகாவின் மூலமாக நடத்தப்படுகிறது. அதுவும் மாண்புமிகு உறுப்பினர் சரியாக இயங்க முடியாது என்று கருதுவார்களே யானால், அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. கே. ராஜாராம்: நான் அதைத்தான் சொன்னேன். குற்ற பரம்பரை எனச் சொல்லப்பட்டவர்களுக்கென தனியாகச் சட்டம் போட்டிருந்ததைக்கூட ரத்து பண்ணியிருக்கிறோம். அப்படி இருக்கும்போது இந்தக் குழந்தைகள் குற்றம் செய்வார்கள் என்று கருதி போலீஸ் இலாகாவில் ஒப்படைக்க வேண்டுமா? அந்தச் சட்டத்தை ரத்து பண்ணிய பிறகு இதை என் செய்ய வேண்டும் என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: எக்ஸ்-கிரிமினல் டிரைப்ஸ் என்று கூறுகிற அந்தப் பரம்பரையினர் இப்போதும் இல்லை. அவர்கள் குற்றம் செய்வது கிடையாது. ஆனால், வெறும் புகார்கள், நிரூபிக்க முடியாத சில புகார்கள் இருக்கின்றன. இங்கே திருடினான், பொய் சொன்னான், அதைத் தூக்கிக் கொண்டு போனான் என்று சொல்லப்படுகிற பிள்ளைகளைத் தொடர்ந்து பார்க்கும்போது, திருத்த முடியாத சில பிள்ளைகளை சில பெற்றோர்களேகூட இது போன்ற சங்கங்களில் திருந்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் தாங்களாகவே வந்து போலீசாரிடத்தில் ஒப்படைக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட பிள்ளைகள் குற்றவாளி பரம்பரையினர் அல்ல. பொதுவாக எல்லா வீட்டுப் பிள்ளைகளும் இந்தச் சங்கங்களில் இடம் பெறுகின்றனர். ஒரு குறிப்பிட்ட சமுதாயக் குழந்தைகள் மட்டுமல்ல.

திரு. தி. க. சண்முகம்: தலைவர் அவர்களே, இது போன்ற சிறுவர் கழகங்களில் ஓய்வு நேரங்களில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவது உண்டு என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எத்தகைய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன? இசை நிகழ்ச்சியா, நாடக நிகழ்ச்சியா அல்லது வேறுமாதிரியான கலை நிகழ்ச்சிகளா—என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நல்ல திரைப்படங்கள், முக்கியமான இடங்களுக்குச் சுற்றுலா செல்லுதல், கலைத்திறனை வெளிப்படுத்த உறுப்பினருக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை. சிறுவர்கள் கலை நிகழ்ச்சிக்கான தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI: Sir, may I know whether the Hon. Minister will be able to enlighten us on whether there are any Reformatory Schools, like the Borstal Schools, attached to the Police Department?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: என்னிடம் இப்போது சரியான தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தர முடியும்.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, புகார்கள் வந்துள்ள சிறுவர்கள்தான் இதில் அங்கத்தினர்களாக எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இராமநாதபுரம் நகரத்தில்



“பாய்ஸ் கிளப்” இருக்கிறது. ஆண்டுதோறும் போலீஸ் “ஆன்யுவல் ஸ்போர்ட்ஸ்” நடக்கும்போது, அவர்களுக்கெல்லாம் பரிசுகள் கிடைக்கின்றன. அதில் இருக்கிறவர்கள் எல்லாம் எந்தவிதமான குற்றத்திற்கும் சம்பந்தப்பட்டவர்களாகத் தெரியவில்லை. ஆகையினால் இந்தக் கழகங்களில் குற்றம் செய்யாத சிறுவர்களையும் சேர்த்துக் கொள்ளுகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அந்தப் பிள்ளைகள் என்ன குற்றம் செய்திருக்கிறார்கள் என்று அந்த அந்த வட்டாரத்தில் இருப்பவர்களைக் கேட்டால்தான் தெரியும். பொதுவாக நான் ஆரம்பத்திலே கூறியதெல்லாம் குற்றம் செய்து வழக்கு மன்றத்தில் நிரூபிக்கப்பட்டு அதற்குப் பிறகு ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் அல்ல. புகார்கொடுக்கப்பட்டு, தொடர்ந்து அந்தக் குற்றங்கள் நிரூபிக்கப்பட முடியாமல் இருப்பவர்கள், பொய் பேசிக் கொண்டிருக்கும், பள்ளிக்குச் செல்லாமலிருக்கும், வீட்டுக்கு அடங்காத பிள்ளைகளாக இருக்கும், சிறுவர்களைக் குற்றவாளியாக நிரூபிக்க முடியாது. அப்படி அடங்காத பிள்ளைகளை இந்த இடத்தில் கொண்டுவந்து நல்வழிப் படுத்தத்தான் இந்தச் சங்கம் போலீஸ் இலாகா மூலம் நடைபெறுகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதிலிருந்து, குற்றம் செய்யக்கூடிய வாய்ப்பு உள்ள குழந்தைகளை இந்தச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளுகின்றார்கள் என்று தோன்றுகிறது. அப்படியானால், குற்றம் புரிந்து நிரூபிக்கப்பட்டால், சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியதில்லை என்று சொல்லப்பட்ட மாதிரி இருக்கின்றது. அப்படியென்றால், குற்றம் புரிந்த குழந்தைகளுக்கு ஏதாவது அசோஸியேஷன் அல்லது என். ஜி. ஓ.க்கள் மூலமாய் யாராவது ஒரு குழுவினை ஏற்படுத்தி அப்படிப்பட்ட குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு, அவர்களிடம் நல்ல ஒழுக்கம், டிஸிப்ளின் ஏற்பட ஏதாவது ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு என தனியாகப் பள்ளிக்கூடங்கள், இல்லங்கள் உண்டு என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

### *Prawn Fishing.*

*124 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the places where prawn fishing is done on a large scale in this State; and

(*b*) the steps taken to expand them?

## இறால் மீன் பிடித்தல்.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இம்மாநிலத்தில் பெருமளவில் இறால் பிடிக்கப்படும் இடங்கள் யாவை ?

(இ) இறால்களை இன்னும் அதிக அளவில் பிடிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இந்த மாநிலத்தில் இறால் மீன் பிடித்தல் கணிசமான அளவுக்கு சென்னை, கடலூர், மண்டபம், தூத்துக்குடி கடற்கரையோரப்பகுதிகளிலும் கன்னியாகுமரி மாவட்டக் கரையோரப்பகுதிகளிலும் நடைபெறுகிறது.

(இ) மீனளத் துறையின் கடல் நீர் மற்றும் ஆற்றுநீர் ஆராய்ச்சி நிலையங்களில், தூண்டுதல் முறையில் இறால் மீன் வளர்ப்பது சம்பந்தமாக ஆராயப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் "கூன் இறால் கடல் மீனளம்" பற்றிய திட்டம் ஒன்றை மீனளத்துறை இயக்குநர் அனுப்பி யுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

## *Unemployed Persons.*

* †78 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the number of unemployed has increased or decreased in our State during the years 1970–71 and 1971–72;

(b) the total number of unemployed who are educated up to S.S.L.C. and above as on 31st March 1972; and

(c) the plans under contemplation to reduce unemployment ?

## வேலையில்லாதவர்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் நமது மாநிலத்தில் வேலையற்றோர் எண்ணிக்கை உயர்ந்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா ?

† Postponed from the list of questions for 6th December 1972.



(இ) 31–3–1972 நிலவரப்படி, எஸ்.எஸ்.எல்.சி.யும் அதற்கு மேற்பட்டும் படித்த வேலையற்றிருப்போர் மொத்தம் எத்தனை பேர் ?

(உ) வேலையின்மையைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கருதியுள்ள திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) இம் மாநிலத்தில் 1970–71, 1971–72 ஆண்டுகளில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை கூடுதல் ஆகியுள்ளது.

(இ) 3,94,030.

(உ) படித்தவர் படிக்காதவர்களிடையே நிலவும் வேலைவாய்ப் பின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டம் தேசீயத் தன்மைவாய்ந்த பொதுவான வேலைவாய்ப்புக் கொள்கையையும், முதலீடு செய்வதற்குக் கிடைக்கக் கூடிய வளவாயில்களையும் சார்ந்ததாகும். இப் பிரச்சினையைப் பொருளாதார வரி விதிப்புக் கொள்கைகளினின்றும் தனியே பிரித்துப் பரிசீலனை செய்ய இயலாது. நீண்டகால அடிப்படையிலேயே இப் பிரச்சினையைத் தீர்க்கவியலும். மத்திய அரசும் மாநில அரசும் வேலைவாய்ப் பின்மைப் பிரச்சினையை நன்கு அறிந்துள்ளன. வரும் ஆண்டுகளில் இப் பிரச்சினை கணிசமான அளவு குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, கிட்டத்தட்ட நான்கு லட்சம் பேர்களுக்கு வேலையில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதற்கான திட்டம் ஏதாவது இந்த அரசின் கையில் இருக்கின்றதா ? அப்படியிருந்தால், எவ்வளவு பேரை எவ்வளவு காலத்திற்குள் வேலையில் அமர்த்தக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது, அதற்கான திட்டம் என்ன என்பதை விளக்க முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே, இது ஒரு பெரும் பொருளாதாரப் பிரச்சினை. இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லி விட முடியாது. வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தவும், புதிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து, தொழில் வாய்ப்புக்களை ஏராளமாக உருவாக்கினால்தான் நிரந்தரமாக வேலையற்ற தன்மையை நாம் சமாளிக்க முடியும் என்றுதான் நாம் கருதுகிறோம். மாநில அரசினைப் பொறுத்த வரையில், ஐ.டி.ஐ. படித்த மாணவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுக்க வேண்டும், அவர்களுக்காக மூவாயிரம் ரூபாய் கடன் தொகை கொடுத்து தொழிலில் ஊக்குவிக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தினைக் கொண்டுவந்தோம். அதே போன்று ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், எஞ்சினீரிங் படித்த டிப்ளோமா அல்லது பட்டதாரிகளுக்கு 'அப்ரெண்டிஸ் ஸ்கீம்' என்ற முறையில் அரசு உதவி செய்து தொழில் அதிபர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதுடன் அப்படிப்பட்டவர்கள் சிறு தொழில்களை ஆரம்பிக்க ரூபாய் ஏழாயிரம் வரையில், கடனுதவி கொடுக்க வேண்டும் என்று தனியானதொரு திட்டம் போட்டு, அதற்கான முழு உதவியையும் மத்திய அரசு செய்ய முன்வரும் என்ற

ஆலோசனையை மத்திய அரசு தெரிவித்திருக்கின்றது. இப்படிப்பட்ட
முயற்சிகளில் தமிழகத்திலுள்ள பெரிய, சிறிய தொழில் அதிபர்களுடன்
கலந்து பேசி இப்படிப்பட்ட இஞ்சினியர்களுக்கு வேலை வாய்ப்பினை
ஏற்படுத்தித் தர ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்காக ஒரு குழு
அமைக்கப்பட்டு, அந்தக் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றது. அந்த
அடிப்படையில் நிதியுதவி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம்
கேட்டிருக்கின்றோம். எவ்வளவு திட்டங்கள் இருந்தாலும், படித்தவர்
களிடையே வேலையின்மை என்பது ஒரு பெரும் பிரச்னையாகத்தான்
இருக்கின்றது.

<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப்</u> : தலைவரவர்களே, சுமார் நாலு
லட்சம் பேருக்கு வேலையில்லை என்று குறிப்பிட்டார்கள். அதோடு
சென்ற ஆண்டை விட வேலையின்மை என்பது இந்த ஆண்டு கூடுதலாக
இருக்கின்றது என்பதையும் சொன்னார்கள். 'எம்ப்ளாய்மெண்டு எக்ஸ
சேஞ்சு, மூலமாக ஒரு ஆண்டில் எவ்வளவு பேருக்கு வேலையளிக்கப்
படுகின்றது என்பதனை தயவு செய்து தெரிவிக்க முடியுமா என்று அறிய
விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்</u> : தலைவரவர்களே, அந்தப் புள்ளி
விவரங்கள் என்னிடம் இல்லை. இருந்தும் புள்ளி விவரங்களும் தேவை
யில்லை என்றே கருதுகின்றேன். காரணம் வேலை கொடுக்கப்படுபவர்களின்
எண்ணிக்கைக்கும் வேலையின்றிக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கைக்
கும் சம்பந்தமே இல்லாது இருக்கின்றது. அந்த அளவிற்கு வேலை
யின்மை இருக்கின்றது என்பதுதான் உண்மை.

<u>திரு. எல். பலராமன்</u> : தலைவரவர்களே, வேலை தேடித் தரும்
ஸ்தாபனங்களிலே சீனியாரிட்டிப்படி வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்
கொடுப்பதில்லை என்ற ஒரு பொதுவான குறைபாடு, குற்றச்சாட்டு இருந்து
வருகின்றது. இது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்
பட்டிருக்கின்றதா, இக் குறைப்பாட்டினைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன
நடவடிக்கை எடுத்திருக்கின்றது அல்லது எடுக்க இருக்கின்றது என்பதையும்,
இப்போது மாவட்ட வாரியாக 'வேலையில்லாதோர் சங்கம்' என்று ஆரம
பித்திருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றதா,
அப்படிப்பட்ட சங்கங்களைப் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா
என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

<u>மாண்புமிகு திரு செ. மாதவன்</u> : ஒவ்வொரு மாவட்ட வேலை வாய்ப்
பினைத் தேடித் தரும் அலுவலகத்திலும் ஒரு பட்டியல் வைக்கப்பட்டிருக்
கின்றது. ஒரு சிலர் பல மாவட்டங்களிலே பதிவு செய்துகொள்ளுகின்றார்
கள். சில சமயங்களிலே ஒரு மாவட்டத்திலுள்ள அலுவலகத்திலிருந்து
தங்கள் பெயர் வேறு மாவட்டத்திலுள்ள அலுவலகத்திற்கு 'டிரான்ஸ்ஃபர்'
செய்யப்பட வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார்கள். ஒவ்வொரு
பட்டியலிலிருந்தும் வரிசைப்படி தான் அனுப்பப்பட வேண்டும் என்பது
கொள்கை. ஆனால், அதை நிறைவேற்றும் நேரத்தில், பல தவறுகள்
ஏற்பட்டு விடுகின்றன. அது பற்றிப் பல சந்தர்ப்பங்களில் புகார்கள்



வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்ப்பதுதான் பெரிய
பிரச்சினையாக இருக்கின்றது. காரணம் அந்தப் பட்டியலிலிருந்து பெயரை
அனுப்பும்போது சில சந்தர்ப்பங்களிலே தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன.
'வேறு ஒரு பட்டியலிலிருந்து அனுப்பிவிட்டோம்' என்று சொல்லப்பட்டு
விடுகிறது. இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்ப்பதற்கு என புதியதொரு
முறையினைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றோம். எம்ப்ளாய்மெண்டு
எக்ஸ்சேஞ்சில் நிரந்தரமாக ஒரு பட்டியல் தயார் செய்து அப்படிப்பட்ட
பட்டியலை ஒவ்வொரு இலாகாவிற்கும் அனுப்பிவிட்டு, அந்தப் பட்டியலில்
உள்ளவர்களுக்கு எப்போது எப்போது வேலை அளிக்கப்படுகிறதோ அப்
போது அவர்களுடைய பெயர்களை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம்.
அந்தப் பட்டியலிலிருந்து யாரை வேண்டுமானாலும் அவர்கள் முறைப்படி
தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று அந்தந்த இலாக்காக்களுக்கு ஒரு
வாய்ப்பினை அளித்துவிட்டால், இப்போது எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்
சேஞ்சுகளில் தவறுகள் நடந்துவிட்டது என்று சுட்டிக் காட்டும் வாய்ப்பு
குறையுமா என்று முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றோம். அது
வெற்றி பெறுமா என்று பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

### *Starting of New Industries*

*£79 *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have issued an order that the State Governement should not start any new industries; and

(*b*) if so, the details thereof?

### <u>புதிய தொழில் தொடங்குதல்</u>

<u>திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்)</u> : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிய தொழில் எதனையும் மாநில அரசு தொடங்கக் கூடாது என இந்திய அரசு ஆணை பிறப்பித்துள்ள தென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) No.

(*b*) Does not arise.

---

£ Postponed from the list of questions for 6th December 1972.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, நடவடிக்கைகளுக்குள்ளான சங்கங்களின் பட்டியலிலே 4-வது பக்கத்தில் மேல ஸ்ரீவில்லிபுத்தூர் பண்டகசாலை என்றும் 20-வது வரிசையில் திருவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலை என்றும் இரண்டு ஊர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஊர்களும் எங்கே இருக்கின்றனவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, 4-வது பக்கத்தில் 20-வது எண்ணைச் சொல்கிறார்கள், 20-வது எண்ணில் திருவில்லிப்புத்தூர் என்று இருக்கிறது. எங்கேயிருக்கிறது என்று கேட்கிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூர் தான் திருவில்லிப்புத்தூர்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, சங்கங்களுடைய பெயர்கள் பதிவு செய்யப்பட்டபோது திருவில்லிப்புத்தூர் என்றும், மேல ஸ்ரீவில்லிப்புத்தூர் என்றும் இருக்கிறதா என்று சொல்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் என்று இது வரையில் பெயர் இருந்தால் கூட அங்குள்ள மக்கள் விருப்பப்படி திருவில்லிப்புத்தூர் என்று சாதாரணமாகப் பேசப்படுவதால் அப்படி வழங்கப்படுகிறது. பொது மக்களுடைய நிறுவனம் என்பதால் பேசப்படுகிற பெயர்கள் போடப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : பிரபந்தத்திலே திருவில்லிப்புத்தூர் என்று தான் இருக்கிறது. நாயுடு அவர்களுக்குத் தெரியும்.

பாட்டு.

" ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே, உயர் அரங்கற்கேணி
முகம்
அளித்தாள் வாழியே, மறுவாரம் திருவில்லி வளநாடுகள் வாழியே
அன்புதுவை
மலர்க்கோவை மலர்பாதங்கள் வாழியே,
ஆண்டாள் வாழ்க, அரங்க மாநகர் வாழ்க..............."

திரு எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, கையாடல் செய்தவர்களின் லிஸ்டைப் பார்த்தேன். சாதாரணமாக கோவாபிரேடிவ் மார்கெடிங் சொசைடியிலிருந்து உப்பை எடுத்துக்கொண்டு போகிறார்கள். கிரெடிட்டில் கொடுக்கிறோம். அதை விற்று விட்டு அந்தப் பணத்தைக் கொடுக்காமல் அவர்கள் காலம் கடத்தி வருகிறார்கள். உதாரணமாக அருப்புக்கோட்டை தாலுகாவிலே நான் தலைவராக இருக்கிற விருதுநகர் மார்கெடிங் சொசையிட்டியில் 5 ஆயிரம் ரூபாய்க்கு உப்பு எடுத்துக் கொண்டு போகப்பட்டு 4½ வருஷமாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. சொஸைடி தலைவருக்கோ, அல்லது காரிய தரிசிக்கோ கையாடல் செய்து விட்டார்கள் என்று போலீசிலே குற்றச்சாட்டைக் கொடுப்பதற்கு அதிகாரமில்லையென்று சொல்கிறார்கள். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் நாங்கள் போலீசில் புகார் செய்வதற்கு அதிகாரம் வழங்க ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஒருவேளை தெரியாது என்று கருதுகிறேன். இப்போது தனியாக போலீஸ் இலாகாவில் ஒரு பிரிவு கூட்டுறவுத் துறைக்கென்றே ஒதுக்கப்பட்டு, கூட்டுறவுத்துறையில் நடக்கின்ற கிரிமினல் குற்றங்களைப் புலனாய்வு செய்து கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழ்ந்திருக்குமானால், அந்த இலாகாவிற்குத் தெரியாமல் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, ராஜபாளையம் நகர கூட்டுறவுப் பண்டக சாலையில் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார்: தலைவரவர்களே, நான் லட்சக் கணக்காக என்று சொல்லவில்லை. இங்கே நஷ்டம் 2,66 ஆயிரம்தான் வைத்திருக்கப்பட்ட பட்டியல் கிரிமினல் குற்றம் செய்தவர்கள் மீது புலனாய்வு செய்கிற பட்டியல். ஏறத்தாழ 350 வழக்குகள் புலனாய்வு செய்யப்பட்டு கோர்ட்டுகளில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், சிவில், அதாவது பணம் வருவாய், அதைப் பற்றுதல் செய்வதற்கென்று தனியாக சர்சார்ஜ் என்று நியமித்து அதற்கு வேண்டிய முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அதன்படி சர்சார்ஜ் செய்வதற்கு வேண்டிய செயற் குறிப்பு இருக்கிறது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் 127, 128 ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Thondi Port.*

*129 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR ; Will the Hon. Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to expand the Thondi Port?

### தொண்டித் துறைமுகம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

தொண்டித் துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

*Agricultural Schools.*

*130 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the Government are proposing to establish a net-work of Agricultural Schools in Thanjavur district; and

(b) if so, the nature of the scheme?

வேளாண்மைப் பள்ளிகள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், ஆங்காங்கே வேளாண்மைப் பள்ளிகள் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Aerial Spraying.*

*131. Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) the acreage in which aerial spraying was carried out during 1970–71 in North Arcot District; and

(b) the amount collected per acre from the agriculturists for this aerial spraying?

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்தல்.

திரு எல். பலராமன்: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970–71ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்தில் விமானம் மூலம் பூச்சி மருந்து எவ்வளவு ஏக்கர் நிலத்தில் தெளிக்கப்பட்டது?



(இ) தெளிக்கப்பட்ட மருந்துக்காக ஏக்கருக்கு எவ்வளவு தொகை விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: (அ) 1970–71ம் ஆண்டு விமானம் மூலம் நெல், நிலக்கடலை ஆகிய பயிருக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது. தெளிக்கப்பட்ட ஏக்கர் விவரம்:

| விவசாயப் பிரிவு. | மருந்து தெளிக்கப்பட்ட பயிர்களின் விபரம். (லட்சம் ஏக்கரில்) | | |
|---|---|---|---|
| | நெல். | நிலக்கடலை. | மொத்தம். |
| வேலூர் .. .. .. | 0.101 | 0.302 | 0·403 |
| ராணிப்பேட்டை .. .. | 0.275 | 0.020 | 0.295 |
| செய்யார் .. .. .. | 0.386 | 0.073 | 0.459 |
| திருவண்ணாமலை .. .. | 0.090 | .. | 0.090 |
| | 0.852 | 0.395 | 1·247 |

(இ) விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கும் தொகை விவசாயப் பிரிவுகளில் மாறுபட்டு இருக்கும். பொதுவாக, நிலக்கடலைப் பயிருக்கு ரூ. 7.85 முதல் 8.00 வரையிலும், நெற்பயிருக்கு ரூ. 12.25 முதல் 15.65 வரையிலும், வசூலிக்கப்படுகிறது. இந்தத் தொகையில் ரூ. 5 விமான வாடகையும், மீதமுள்ளவை பூச்சி மருந்துக்கான கிரயமும் ஆகும்.

திரு எல். பலராமன்: தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து வசூலிக்கக் கூடிய தொகை ஏக்கருக்கு மாவட்ட வாரியாக வித்தியாசம் ஆகுமாவென்று அறிய விரும்புகிறேன். மாநில அளவில் எவ்வளவு ஏக்கருக்கு மருந்து தெளிக்கப்பட்டது என்ற விவரத்தை அறிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏக்கருக்கு மாவட்டந்தோறும் ஒரே வகையாக வசூலிக்கப்பட்டது. பொதுவாக இந்தத் திட்டம் 1961–62 ஆண்டு முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது. 1970–71ல் 6.974 லட்சம், 1971–72ல் 9,803 லட்சம் ஏக்கர்களில் தெளிக்கப்பட்டிருக்கிறது.

*Growing of Vegetables.*

£ 108 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the incentive given to individuals for growing vegetables in their homes?

காய்கறிகளைப் பயிரிடுதல்.

திரு எல். பலராமன் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

தனிப்பட்டவர்கள் தங்களுடைய இல்லங்களில் காய்கறிகளைப் பயிரிடுவதற்கு ஊக்கமளிப்பதற்காகச் செய்து தரப்படும் வசதிகள் குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: சென்னை மாநகரில் தங்கள் வீடுகளில் காய்கறித் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் கீழ்க்காணும் வசதிகள் செய்து தரப்படுகின்றன :—

(1) ஈடு செய் விலையில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.

(2) 31–3–1972 வரை, பயிர் பாதுகாப்பு மருந்துகள் 15 சதவீத ஈடுசெய் விலையில் கொடுக்கப்பட்டு வந்தன.

(3) தொழில் நுட்ப ஆலோசனைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

(4) ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சைச் செடிகள் போன்ற பழச் செடிகள் 25 சதவீத ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன.

செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வடார்க்காடு, தென்னார்க்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காய்கறிச் செடிகள் பயிரிடுவோருக்குக் குறுகிய காலக் கடன்கள் சொந்தப் பிணையத்தின் மேல், பருவம் ஒன்றிற்கு, நபர் ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 240 க்குட்பட்டும் ஒரு ஏக்கருக்கு ரூ. 120 வீதம் கொடுக்கப்படுகின்றன. இதில் ஒரு பகுதியைப் பொருட்களாகவும் மற்றொரு பகுதியை ரொக்கமாகவும் பெறலாம். பயிரிடுவோருக்கு இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதோடு ஈடுசெய் விலையில் விதைகளும் வழங்கப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, whom are we to approach to get these facilities in Madras City?

£ Postponed from the list of questions for 8th December 1972.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, சென்னை மாநகரக் காய்கறி வளர்ச்சி சங்கத்தின் மூலமாக இது நடைபெற்று வருகிறது. இங்கே வேளாண்மை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அணுகுவார்களானால், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know the total amount set apart in 1972–73 for this incentive scheme?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 1971–72ம் ஆண்டு முடிய இருக்கிறது. 1972–73ம் ஆண்டிற்கு இன்னும் முடிவு பெறவில்லை. 1971–72க்கு பழைய தோட்டங்களைப் பேணிக் காப்பதில் 3,003 தோட்டங்களும் புதிய தோட்டங்கள் என்ற அளவில் 1,169 தோட்டங்களும் செயல்பட்டு வருகின்றன.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, சென்னை நகரத்திலே புதிதாகக் கொடுக்கப்பட்ட உதவிகளைப் பெற்ற வீடுகள் சென்ற ஆண்டு எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : மொத்தம் 4,172.

*Dry Farming Project at Dharmapuri.*

† 109 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(a) whether there are proposals under the consideration of the Government for the formation of a Dry Farming Project at Dharmapuri and

(b) if so, the details thereof?

புன்செய்ப் பண்ணைத் திட்டம், தருமபுரி.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரியில் புன்செய்ப் பண்ணைத் திட்டம் ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்புக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

† Postponed from the List of questions for 8th December 1972.

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) தருமபுரி மாவட்டத்தில் மண்வள ஆய்வு வேலை நடைபெற்று வருகிறது. இப்பணி முடிக்கப்பட்டதும், புன்செய் நில மேம்பாட்டுச் சிறப்புத் திட்டங்கள் தயாரிக்கும் பணியை சிறப்புப் பணியாளர்களிடம் ஒப்படைத்து அவற்றைத் தயாரிக்க வேண்டும்.

*Sugarcane Price.*

@ 110 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether the North Arcot Co-operative Sugar Factory has demanded higher price for sugarcane during 1972-73 ; and

(*b*) if so, the decision taken thereon by the Government?

கரும்பு விலை.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, கரும்புக்கு 1972-73ம் ஆண்டுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்து அரசு எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தற்போது கரும்பு உற்பத்தியாளர்களுக்கு சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக் கூடிய விலை கட்டி வரவில்லை என்ற கோரிக்கை பரவலாக இருந்து வருகிறது. சர்க்கரை ஆலை நிர்வாகிகளும் தலைவர்களும் விவசாயிகளுக்குக் கரும்பு விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்குக் கோரிக்கை அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அது வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இல்லையென்றால், அதுபற்றிப் பரிசீலிக்க அரசு ஆவன செய்யுமா என்று தெரிவிக்கவிரும்புகிறேன்.

@ Postponed from the List of questions for 8th December 1972.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கரும்பு விலையில் உற்பத்தியாளருக்கு அதிகமாகக் கிடைக்க வேண்டு மென்று மத்திய சர்க்காரால் யோசனை சொல்லப்படுகிறது. பல முறை ஒரு உத்தரவு வழங்குங்கள் என்று நாங்கள் எழுதியும் இது வரை பதில் இல்லை. ஆனால், 80 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது இந்த ஆண்டு 85 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 85 மாத்திரம் அல்லாது அவர்களுக்கு எந்த அளவுக்கு அந்த உற்பத்தித் திறன் இருக்கிறதோ அந்தத் திறன் அடிப்படையிலும் அதற்கு 1 சத விகிதம் கூட்டி அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கப் படுகிறது. பல இடங்களில் திறன் அதிகமாகி, இப்பொழுது 85 க்குப் பதிலாக 90, 96, 100 என்று கூட திறன் அடிப்படையில் கொடுக்கப் படுகிறது. அவ்வாறு தகுதி அளவில் திறன் இருந்தாலும் நாம் நிர்ணயித்த விலை 85 ரூபாய்க்குக் குறையக் கூடாது என்று வலியுறுத்திப் பேசப்பட்டு இன்று நடைமுறையில் வருகிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரெகவரி திறன் என்று கூறுவதுபோல, 9 லிருந்து 10 அளவு என்று வருவதை நாம் இப்பொழுது 80 லிருந்து 100 க்கு உயர்த்தியிருக்கிறோம். அந்தத் திறனுக்கு என்ன விலை என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா? அல்லது மத்திய சர்க்கார் நிர்ணயித் திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 9.4•க்கு மேல் இருந்தால் தான் அதற்கு மேல் திறன் அடிப்படையில் கொடுக்கப்படும்.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, திறனுக்கு ஏற்ப என்னென்ன அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது என்ற விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தனியாகக் கேள்வி போட்டால், பட்டியல் தெரிவிக்கிறேன்.

*Sri Dharmaraja Koil at Saidapet, Madras.*

*132 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are aware that Sri Dharmaraja Koil at Saidapet, Madras, is in a dilapidated condition ; and

(*b*) if so, the action taken thereon?

சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (திரு. எஸ். வெள்ளை பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள ஸ்ரீ தர்மராஜா கோயில் இடிந்த நிலையிலுள்ளதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) : தர்மராஜா கோவில், கருவறையும், முன் மண்டபமும் நல்ல நிலையில் உள்ளன. விமானத்தில் சுதை வேலைப்பாடுகளும், தெற்கு, வடக்கு, மேற்குப் பக்கங்களிலுள்ள மதிர் சுவர்களும் பழுது பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. தகுந்த சீரமைப்புகள் மேற்கொள்ள இக்கோயிலுக்கு திருப்பணிக்குழு ஒன்று இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் அமைக்கப்பெற்றுள்ளது.

## *Deposits of the Retired Executive Officers of Temples.*

*133 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the deposits of a number of retired Executive Officers of Temples have not been refunded ; and

(b) if so, the steps taken to refund these deposits ?

கோவில் நிர்வாக அதிகாரிகள் பிணைய வைப்புத் தொகை.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஓய்வு பெற்ற கோயில் நிர்வாக அதிகாரிகள் பலரின் பிணைய வைப்புத் தொகை திருப்பித் தரப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதைத் திருப்பித் தருவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.



(இ) நிர்வாக அதிகாரிகளுக்கு சேரவேண்டிய தொகையைத் திருப்பித் தருவதற்கு முன்பு அவர்கள் கட்ட வேண்டிய தொகை ஏதேனும் உள்ளதா என்பது பற்றி அறிய வேண்டிய சமய நிறுவனங்களின் தற்போதைய நிர்வாக அதிகாரிகளிடமிருந்தும் இந்து சமய-அறக்கட்டளை துறை சார்நிலை அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகளை இந்து சமய-அறக்கட்டளைத் துறை ஆணையாளர் கேட்டுள்ளார். நிர்வாக அதிகாரிகளுக்குப் பிணைய வைப்புத் தொகை திருப்பித் கொடுக்கப்பட வேண்டியுள்ள நேர்வுகளில் அவர்கள் பணியாற்றிய சமய நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள், கணக்குகளையும் இதர ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னரே மேற்படி தொகை அவர்களுக்குக் கொடுக்கப்படலாம். அவர்கள் பணி புரிந்த எல்லா சமய நிறுவனங்கள் குறித்தும் அவர் கட்ட வேண்டிய தொகை முடிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கட்ட வேண்டிய தொகை ஏதேனும் முடிவு செய்யப்பட்டிருப்பின் பிணையத் தொகையிலிருந்து அத்தொகையினைக் கழித்துக் கொண்டு எஞ்சியுள்ள தொகை திருப்பக் கொடுக்கப்படும். முடிவு பெறுமல் இருக்கும் நேர்வுகளை விரைவில் முடிக்க இந்து சமய-அறக்கட்டளை துறை ஆணையாளர். இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறுர்.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்

## *Attack on the Manager and the Assistant Manager of the Chamraj Estates.*

27 Q.—THIRU V. ISVARMURTI : }
THIRU M. ARUMUGASWAMI } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Manager and the Assistant Manager of the Chamraj Estates were attacked by the workers on 14th May 1971 ; and

(b) if so, the action taken thereon ?

A.— (a) Yes.

(b) A statement @ is placed on the table of the House.

## *Pension.*

28 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that pension has not been finalised in the case of subordinate Police Officers of the State who have retired and are re-employed in Central Government Service?

@ 234 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(b) if so, the number of cases and the period for which they are pending; and

(c) the action proposed o be taken by the Government in this matter?

A.—(a) Yes.

(b) Three cases.

One case is pending from 1970 and the remaining two cases from 1971.

(c) In two cases, particulars regarding pay fixed on re-employment and the Last Pay Certificates of the Officials are awaited from the Subsidiary Intelligence Bureau, Government of India In the remaining one case, a revised pension proposal was forwarded to Accountant-General on 3rd July 1972 and his final approval is awaited. The Government have issued instructions to all Heads of Departments to keep close track of pension and gratuity proposals to ensure their quick disposals. The Inspector-General of Police has also been asked to give instructions to the Heads of Offices concerned to ensure that pension papers are submitted to the Accountant-General complete in all respects and well in advance of retirement of officials, so as to avoid delay.

*Idol Theft Cases.*

29 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state:—

(a) the number of idol theft cases in Thanjavur district registered by the Police during the last five years; and

(b) the number of cases detected?

A.—(a) and (b) A statement * is placed on the Table of the House.

* 234-ஆம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது



பட்டா நிலங்களில் ஆக்கிரமிப்பு

30 வினா.—திரு. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி தாலுக்காவில் பரமனேடை கிராமத்தில் 71-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிலர் ஆயுதங்களுடன் சென்று தனிப்பட்டவர்களின் பட்டா நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்தார்களா?

(இ) ஆமெனில், அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

பதில்.— (அ) ஆம்.

(இ) நில ஆக்கிரமிப்பாளர்கள் அபராதம் விதிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள்.

அமைச்சரின் கார் மீது தாக்குதல்

31 வினா. திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 12—2—1972 அன்று இராசபாளையத்தில் மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அவர்களது கார் தாக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

A.—(a) Some of the black flag demonstrators allowed their flag sticks to come into contact with the car of the Minister and attempted to cause damage. The Police intervened and made way for the car to proceed.

(b) A case in Rajapalayam South Police Station was registered and investigated by the Police. Further action was dropped on 30th April 1972 as the miscreants could not be identified.

*Textile workers strike.*

32. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the total expenditure incurred by the Government in connection with the steps taken to meet the textile workers strike at Coimbatore, during February and March 1972 on (i) Police and on (ii) maintaining the prisoners?

A.—(i) The expenditure incurred by the Government in connection with the textile workers strike at Coimbatore during February and March 1972 for maintaining the Police is Rs. 90,104·58.

(ii) The expenditure incurred on maintaining the prisoners is Rs. 6,234·58.

*Corruption charges against Gazetted and Non-Gazetted Officers.*

33 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state the details of the (1) Gazetted and (2) Non-Gazetted Officers against whom action has been taken during years 1971–72 for corruption ?

*A.*—The details are given below :—

92 Gazetted Officers and 266 Non-Gazetted Officers were involved in preliminary enquiries and 32 Gazetted Officers and 107 Non-Gazetted Officers in detailed enquiries. Cases have been registered for specific instances against Seven Gazetted Officers and two Non-Gazetted Officers. Nine Non-Gazetted Officers were involved in trap cases.

*Higher Dearness Allowance for Pensioners.*

34 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government are aware of the demands for higher Dearness Allowance by pensioners from Sirkali about April 1972 ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

*Obscene phone calls to Lady Telephone Operators.*

35 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether obscene phone calls to lady telephone operators working in Government Departments in Madras City are on the increase recently ; and

(*b*) if so, the steps taken to minimise the same ?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.



*Gherao.*

36 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Madura-Ramanathapuram Chamber of Commerce has requested the Government to curb gheraoes, about May 1972 ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

*A.*—(*a*) Yes.

(*b*) Suitable instructions were issued by the Superintendent of Police, Madurai Urban, to all police officials to deal firmly with such action on the part of the workers.

*Tamil Nadu Slum Clearance Board, Madras.*

37 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Tamil Nadu Slum Clearance Board, Madras has undertaken the construction of tenements at Swatantra Nagar, Madras ; and

(*b*) if so, the details therefor ?

*A.*—(*a*) and (*b*) The lands required for the Swatantra Nagar Slum Clearance Scheme belong to the Wakf Board and steps are taken by the Government to acquire the lands under the provisions of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971. A scheme for construction of tenements in this area will be formulated after the lands are acquired.

*Harsh treatment of Harijans.*

38 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have received complaints regarding harsh treatment meted out to Harijans residing at Maruthur Rajendram in Kulithalai Taluk, Tiruchirappalli district during the months of May and June 1972 ;

(*b*) if so, the nature of the incidents ; and

(*c*) the action taken thereon ?

*A.*—(*a*) No.

(*b*) and (*c*) Do not arise.

### *Secessionist Activities*

39. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Government of India have brought to the notice of the State Government, reports of secessionist activities in the State;

(*b*) if so, the nature of the communication; and

(*c*) the action taken on the same?

*A.*—(*a*) No.

(*b*) and (c) Do not arise.

### *State Administrative Reforms Commission*

40 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when the work of the State Administrative Reforms Commission is expected to be completed; and

(*b*) the steps taken to get the work of the Commission done soon?

*A.*—(*a*) The Administrative Reforms Commission is expected to complete its work by the end of 1973.

(*b*) The Government have permitted the Commission to constitute such Working Groups and Study Groups as the Commission may consider necessary to expedite it work. Special staff of Analyst and Assistants has also been sanctioned to enable systematic work being done by the Commission. The Commission has been requested to have a programme for each quarter and it has accordingly drawn up a provisional programme fixing a time-schedule for each report.

### *City Compensatory Allowance and House Rent Allowance*

41 *Q.*—THIRU S. MUTHUSWAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether request for the sanction of City Compensatory Allowance and House Rent Allowance at the Madras City rates was received from the Teachers' Association and Non-Gazetted Government Officers' Association for the entire Chingleput District; and



(*b*) if, so, what action has been taken by Government?

*A.*—(*a*) Request for the sanction of City Compensatory Allowance and House Rent Allowance at Madras rates, for Chingleput and Kancheepuram Municipal limits was received from the Tamil Nadu Non-Gazetted Government Officers' Union, Kancheepuram, only.

(b) The request was examined and could not be complied with.

### *Police Training College, Vellore*

42. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to shift the Police Training College from Vellore; and

(*b*) if so, the reasons therefor?

*A.*—(*a*) Yes.

(b) The Police Commission has pointed out that a new and modern campus is necessary for officers undergoing training at the Police Training College. It is also found that accommodation available in the old buildings of the Vellore Fort is not satisfactory and that light, ventilation and other facilities are inadequate.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்புகள்

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி

MR. CHAIRMAN: I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1972.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN: I have also received messages from the Deputy Speaker, Tamil Nadu Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1972 (L. A. Bill No. 34 of

1972) and the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 51 of 1972) as passed by the Assembly, and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

(3) உடுக்குறியிட்ட வினுக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினுக்களாக விடை.

MR. CHAIRMAN: I have to announce to the House that answers to sixteen starred questions, which have been received from the Government, are laid on the Table of the House today as unstarred questions Nos. 27 to 42.

## 3. கவன ஈர்ப்பு

(1) தமிழாசிரியர்களிடையே இரண்டு வேறு நிலைகள் உள்ளதை நீக்குவதில் தாமதம் குறித்து

MR. CHAIRMAN: On behalf of the hon. Member Thiru V. Isvarmurti, Thiru L. Balaraman will call the attention of the Minister.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியினைக் குறித்து மாண்புமிகு கல்வி உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழாசிரியர்கள் இடையே இரண்டு வேறு நிலைகள் உள்ளதை நீக்க வேண்டும் என்று கோரி இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் ஏறத்தாழ 10,000 பேர் விடுத்திருந்த கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிப்பதில் அரசு காட்டி வரும் தாமதம் காரணமாக அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

[மாற்றுத் தலைவர் திரு. எம். ராஜா அய்யர் தலைமை].

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் தற்போது முதல் நிலை, இரண்டாம் நிலை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். முதல் நிலை தமிழாசிரியர்கள் பி.டி. ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தையும், இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தையும் பெறுகிறார்கள். இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக்கு புலவர் பட்டமும், 5 மாத ஆசிரியர் பயிற்சியும் கல்வித் தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. புலவர் பட்டம் நான்கு ஆண்டுகள் படிப்பிற்குப் பின் அடையலாம். இப்படிப்பிற்குச் செல்லுமுன் பொதுக் கல்வித் தகுதி ஒன்றும் பெறத் தேவையில்லை. முதல் நிலை தமிழாசிரியர் பதவிக்கு பொதுக் கல்வித் தகுதியாக பள்ளி இறுதிப் படிப்புத் தேர்ச்சிகளில் தேர்வு பெற்றும் புலவர் பட்டம் அல்லது தமிழ் மொழியில் பல்கலைக் கழகப்



பட்டமும், ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழும் தொழில் தகுதியாகப்பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ் மொழியில் பல்கலைக் கழகப் பட்டமும், பி.டி., பயிற்சிப் பட்டமும் பெற்றிருக்க வேண்டும். இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் நடுத்தரப் பள்ளிகளிலும், முதல் நிலை ஆசிரியர்கள் இடைநிலைப் பள்ளிகளிலும் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். தமிழாசிரியர்கள் கழகம் இரண்டாம் தமிழ் நாடு ஊதியக் குழுவிற்கு, இவ்விரு நிலைகளில் பாகுபாடு நீக்கப் பெற்று, தமிழாசிரியர்கள் ஒரே நிலையில் தான் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என முறையிட்டுள்ளார்கள். கற்பிக்கும் மொழியில் உள்ள அறிவு ஆழத்தைத் தான் கணக்கில் கொண்டு ஆசிரியர் நிலை வகுக்க வேண்டுமே அல்லாது, அம்மொழியில் பாண்டித்தியத்தை அடைவதற்கு முன் பெற வேண்டிய பொதுக் கல்வியை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர்களின் நிலை அமையக் கூடாது என்பது அவர்களது கோரிக்கையின் அடிப்படை [illegible]. இரண்டாம் தமிழ் நாடு ஊதியக் குழு இதனை [illegible] ஆராய்ந்தது. ஆரம்பப் பள்ளியிலும் இடைநிலைப் பள்ளியிலும் சமூகம் மொழியின் தரத்தில் வித்தியாசம் எளிதில் அறியக் கூடியது என்றும், பொதுக் கல்வியின் அடிப்படையில் மொழி ஆசிரியரின் நிலையை வகுத்தல் தேவையற்ற ஒன்று அல்ல என்றும் கூறியுள்ளது. உயர்ந்த பொதுக் கல்வியுடைய ஒருவர், ஒரு மொழியைச் சிறப்பாகக் கற்பித்தால் அல்லாமல் அம்மொழியினை உயர் வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கும் நிலையை எளிதில் அடையக் கூடுமாதலால், தமிழாசிரியர்களை பொதுக் கல்வி அடிப்படையில் இரு நிலைப் படுத்தியது சரியென்றும், அந்நிலையைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் எனவும் இரண்டாம் தமிழ்நாடு ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. இக்கருத்து அரசினரால் ஏற்கப்பட்டது. இருப்பினும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் எவ்வப்பொழுது முதல் நிலை தமிழாசிரியர்கள் கல்வித் தகுதி பெறுகிறார்களோ அப்போது அப்பணியிடங்கள் முதல் நிலைகளாக உயர்த்தப்பட்டு, அப்பணியிடத்திற்கு உரியவருக்கு முதல் நிலை ஊதிய விகிதம் அளிக்கப்படலாம் என அரசு முடிவு செய்துள்ளது. தகுதியுள்ள எல்லா இரண்டாம் நிலை தமிழாசிரியர்களும் முதல் நிலை தமிழாசிரியர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது 813 இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் மாத்திரமே உள்ளனரே தவிர, கவன ஈர்ப்புக் குறிப்பில் கூறியது போல், 10,000 இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அல்ல.

திரு. கே. [illegible]: கேள்வியாகப் போடா விட்டாலும், அமைச்சரிடமிருந்து விளக்கம் கோருகிறேன்.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER): Only the hon. Member who has called the attention of the Hon. Minister can put two questions and I think, according to the rules, Thiru L. Balaraman alone is entitled to put questions.

திரு. எல். பலராமன்: [illegible] கள் பொதுவாக தாங்கள் [illegible] தமிழாசிரியர் [illegible] பெற்றிருக்கின்றனர். [illegible]

தேவையில்லை என்ற அடிப்படையில் இந்த விவரத்தை வேண்டியிருக்கிறார்கள். அந்த முறையில் அமைச்சர் அவர்களைச் சந்தித்த தமிழாசிரியர்கள் தூதுக்குழு அவர்களிடம் விளக்கமாகக் கூறியுள்ளது. இதில் கால தாமதத்தைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசும் ஆவன செய்யுமாறு தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, விளக்கத்தில் தெளிவாகக் குறிப்பிட்டேன். இதில் இருக்கும் சங்கடங்கள் இரண்டு. ஒருவர் 5-வது படித்து விட்டு 4 ஆண்டில் புலவர் படிப்பு முடித்து 8-வது ஆண்டில் பி.எ., பி.டி., படித்தவர் வாங்கும் சம்பளம் வாங்குவது எந்த விதத்திலும் நியாயமில்லை. இப்பொழுது, அடிப்படையில் பள்ளி இறுதிப் படிப்பு மூலம் பொது அறிவு பெற்று, அதனுடன் தமிழ் அறிவு கொடுக்கும் நிலையில் முதல் தமிழ் ஆசிரியர் ஆக்குவது பொருத்தமா என்று இரண்டாவது ஊதியக் குழுவினர் கூட கேட்டிருக்கிறார்கள். பல்வேறு வாய்ப்புகள் செய்து தந்திருக்கிறோம். 10-வதுடன் 9-வதுடன் நிறுத்தியவர்கள் தனியாக 10-வது பள்ளி இறுதித் தேர்வு எழுதி முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாவதற்கு உரியவர்களாக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 2,185 இரண்டாம் நிலையில் உள்ளவர்களை முதல் நிலையாக ஆக்க வழி வகை செய்திருக்கிறோம். இப்பொழுது 813 பேர் இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக இருக்கிறார்கள். அதைத் தனியாகக் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறார்கள். 20, 25 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் இருந்தவர்கள் முதல் நிலையாகக் கூடாதா வென்று விண்ணப்பம் கொடுத்து அதைத் தனியாகப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். இரண்டு நிலையும் வேண்டாமென்றே இருக்க வேண்டுமென்றே சொல்லிவிட்டால், எதிர் காலத்தில் கல்வியின் தரம் சரியாக வராது. எப்படியாக இருந்தாலும் சரி, உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஆங்கிலத்தில் பேசிப் பழகி வருகிறவர்களை, பி.எ. ஆங்கிலம் படித்தவர்களை 10-வது படிக்கிறவர்களுக்கு நடத்தச் சொல்லலாம். ஆங்கில அறிவு இருக்கிறது என்பதற்காக கல்வித் தகுதி வேண்டாமென்று சொல்லுவதற்கில்லை. ஆகவே, முதல் நிலைக்கு என்று முறை வைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அநேகமாகச் சேர்க்கப்படுகிறவர்கள் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றுவது சேர்க்கப்படுகிறார்கள். 813 ஆசிரியர்கள் நிலை கவனிக்கப்படும். அந்த அளவிற்குச் செய்யப்படுமா என்பதை ஆராய வேண்டியிருக்கிறது.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER) : Thiru Balaraman can put just one more question only.

5·00 பிற் பகல் திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, முதல் நிலை தகுதி பெற்ற தமிழாசிரியர்கள்கூட பலபேர் வேலையில்லை என்ற காரணத்தினால் இரண்டாம் நிலையில் பணி புரிவதை, தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் அமைச்சரவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கிறது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதல் நிலை தகுதி பெற்று, இரண்டாம் நிலையில் பணியாற்றுகிறவர்களைப் படிப்படியாக எடுத்துக் கொள்ளலாம் என்கிற முயற்சியை நாம் மேற்கொண்டு வருகிறோம். அப்படித்தான் செகண்டரி கிரேடு தகுதியில் படித்துவிட்டு, ஹையர் கிரேடில் வேலை பார்த்தாலும்கூட, அவர்களுக்கு செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கிற முயற்சியில் கிட்டத்தட்ட 24,500 ஆசிரியர்கள் சென்ற 4, 5 ஆண்டுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையில் முதல் நிலை தமிழாசிரியர்களாக இருந்து, இரண்டாம் நிலை ஆசிரியர்கள் பதவியிலே பணி புரிபவர்களுக்கு, முதல் நிலை தமிழ் ஆசிரியர் சம்பளம் தர வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அது படிப்படியாக கவனிக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை தகுதி பெற்றவர்கள் தங்களை முதல் நிலையாக ஆக்கிக்கொள்வதற்கும் வாய்ப்பும் வசதியும் செய்து தரப்பட்டிருக்கின்றன.

(2) பால கவுண்டன் பூசாரி இந்து சமய அறக் கட்டளைத் துறை உதவி ஆணையரைத் தாக்கியது குறித்து.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே அறநிலைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு :—

பால கவுண்டன் பூசாரி என்ற ஒருவர், இந்து அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் ஒருவரை அவருடைய அலுவலில் இருக்கிறபோது தாக்கியிருக்கிறார். அதனாலே அவர் மருத்துவ நிலையத்திற்கெல்லாம் சென்று, கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அதனாலே அலுவல் புரிபவர்களுக்கு அச்ச உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கை போன்றவைகளை அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, சேலம் நகரம், சின்னக்கடை வீதியில் உள்ள ஸ்ரீ தர்மராஜா கோயிலில் பூசாரி திரு. பால கவுண்டன் என்ற ஒருவர் 23—11—72 அன்று மாலை சுமார் 6-30 மணிக்கு சேலம், இந்து சமய அறக் கட்டளை (நிர்வாகத்) துறை உதவி ஆணையாளர், திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து அவரைத் திட்டியதோடு அவரது கன்னத்தில் அறைந்து விட்டு ஓடிவிட்டதாக மேற்படி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். இதுபற்றி சேலம், பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் புகார் ஒன்றை தாம் பதிவு செய்ததாகவும் காவலரின் ஆலோசனையின் பேரில் அந்நாளன்றே மருத்துவப் பரிசோதனைக்காக அரசுத் தலைமையிட மருத்துவ மனைக்குச் சென்று இரவு சுமார் 10 மணிக்கு வீடு திரும்பியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். உதவி ஆணையாளர் கொடுத்த புகார் பள்ளப்பட்டி காவல் நிலையத்தின் 388/72-ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 3—12—72-ல் பூசாரி கைது செய்யப்பட்டு 5—12—72-ல் ஜாமீனில் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குற்றப் புகார் விசாரணையில் உள்ளது.

__திரு. கே. ராஜாராம் :__ தலைவர் அவர்களே, ஒரு சிறிய "Point of Information" இந்த "Call Attention"-ஐக் கொண்டு வருகிறவர் தவிர வேறு யாரும் இதில் விளக்கம் கேட்பது கூடாதென்று சொன்னது மாதிரி நான் நினைக்கிறேன். இந்த விதியில் "There shall be no debate on such statement at the time it is made" என்று இருக்கிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். "Debate" வேண்டியதில்லை. "but the Chairman may, in his discretion, permit not more than two questions by the member who has called the attention of the Minister, by way of elucidation or clarification".

சம்பந்தப்பட்ட அந்த உறுப்பினர் 2 கேள்விகள் மூலம் விளக்கம் கேட்பதை அனுமதிக்கலாமென்று இருக்கிறது. ஆனால் மற்ற உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்கள் யாரும் விளக்கம் கேட்கக் கூடாதென்று இதில் எந்த விதியிலும் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அந்த சம்பந்தப்பட்ட மெம்பர் 2 கேள்விக்கு மேலாகக் கேட்க அனுமதிக்கக்கூடாது, சேர்மன் அனுமதிக்கமாட்டார் என்றிருக்கிறது.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER): By implication, it means that other Members cannot put questions.

THIRU K. RAJARAM: I am not questioning the ruling of the Vice-Chairman. I think it would not mean that the other Members should not put questions seeking clarification or elucidation. அப்படி ஒன்றுமில்லை.

VICE-CHAIRMAN (THIRU M. RAJAH IYER): I may bring to the notice of the hon. the Leader of the Opposition that the previous position was that not even a single question could be put and the whole thing ended with the statement of the Hon. Minister. In the Rules Committee it was discussed in detail and to serve the cause of justice and fairness, it was decided that the hon. Member who drew the attention of the Hon. Minister must have an opportunity to put at least a couple of questions by way of elucidation. The rule clearly says ". . . . permit not more than two questions by the member who has called the attention of the Minister". Those who have not called the attention of the Minister have no right to interfere with the call attention notice. If necessary, this could be discussed at the next meeting of the Rules Committee.

## 4. அரசினர் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாறுதல் குறித்து

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவர் அவர்களே, "சட்ட மன்ற விதி 21, உப விதி (3)-ன் கீழ் அரசின் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பில் முதலாவதும், ஆறுவதுமாகிய தமிழ்நாடு 1972-ஆம்



ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவும், தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவும் முதலில் அவையின் தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

__மாற்றுத் தலைவர் :__ மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

"சட்ட மன்ற விதி 21, உப விதி (3)-ன் கீழ் அரசின் சட்ட முன் வடிவுகள் என்ற தலைப்பில் முதலாவதும் ஆறுவதுமாகிய தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவும், தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவும் முதலில் அவையின் தீர்மானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/72).

__மாண்புமிகு திரு. செ. மாதவன் :__ தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறை (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட பேரவைச் சட்ட முன்வடிவு எண் 52/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

சென்னை மாநகரிலுள்ள பொது இடங்களில் மக்கள் கூடுவதையும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் முறைப்படுத்துவதற்கும் சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் 41-வது பிரிவு காவல்துறை கமிஷனருக்கு அல்லது அவரது ஆணைகளுக்கு உட்பட்டு தலைமைக் காவலர் பதவிக்கு மேற்பட்ட காவல்துறை அதிகாரி எவருக்கும் அதிகாரமளிக்கிறது. தமிழ்நாடு 1859-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறைச் சட்டத்தில் அத்தகைய விதித்துறை எதுமில்லை.

தமிழ்நாடு 1859-ஆம் ஆண்டு மாவட்டக் காவல்துறைச் சட்டத்தின் 54-எ பிரிவு, அச்சட்டத்தில் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளனவாகிய 1888-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் விதித்துறைகளை எந்த நகரத்துக்காகிலும் நீட்டிக்க வகை செய்கிறது. அவ் விதித்துறைகளை மாவட்டங்களில் உள்ள நகரங்கள் நீங்கலாக உள்ளூர் பகுதிகளுக்கு நீட்டிக்க மேற்சொன்ன பிரிவு வகை செய்யவில்லை.

சென்னை மாநகரக் காவல்துறைச் சட்டத்தின் 41-வது பிரிவும், மாவட்டக் காவல்துறைச் சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் ஒன்றாகத் தற்போது இல்லை.

---

* 235-ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்]

41-வது பிரிவால் வழங்கப்பட்டுள்ள மேற்சொன்ன அதிகாரங்களைப்
பொதுமக்களது அமைதியையும், பாதுகாப்பையும் கருதி, மாநிலத்தின்
எந்த உள்ளூர் பகுதியிலும் பயன்படுத்த காவல்துறை அதிகாரிகளுக்கு
அதிகாரமளிப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. இச்சட்ட வரைவு
மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

தலைவர் அவர்களே, இத் தீர்மானத்தை ஏற்குமாறு அவையைக்
கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எம். ராஜா அய்யர்) : முன்மொழியப்பட்ட
தீர்மானம் :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம்
ஆண்டு மாவட்டக் காவல்துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 52/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட
வேண்டும்."

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, இந்த
"சிடி போலீஸ் ஆக்டை" இப்போது ஜில்லாக்களில் அமல்படுத்த வேண்டு
மென்பதில், அரசுக்கு ஏதோ உள் நோக்கம் தனிப்பட்ட முறையில்
இருக்கிறதென்று நினைக்கிறேன். இது வரையில் ஜில்லாக்களில் கூட்டங்களை
ஒழுங்குபடுத்துவதற்கு விதிகள் இருந்திருக்கின்றன. அதனால் எந்த
சிரமமும் ஏற்படவில்லை. ஆகவே இந்தச் சட்டம் திருத்தப்பட்டு, அமல்
படுத்தப்படுமேயானால், நாங்களும், மற்றைய எதிர்க்கட்சிகளும் கூட்டங்கள்
நடத்துவதற்கு உத்தரவு வாங்குவதிலும், கூட்டங்கள் நடத்துவதிலும்,
கூட்டங்களில் பேசுவதிலும் ஏதாவது சிரமம் ஏற்படுமோ என்ற அச்ச
மிருக்கிறது. தனிப்பட்ட முறையில் எதிர்க் கட்சிகளை அடக்குவதற்காக
அரசுக்கு, இந்த மசோதா கொண்டுவரப்படுகிறதென்று கருதுகிறேன்.
எனவே இந்தச் சட்டத்தைச் திருத்த வேண்டிய அவசியமில்லையென்று
கருதுகிறேன்.

5–10 * திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, பொதுவாக நகரங்களில்
பிற்பகல் இது ஏற்கனவே அமுலில் இருந்துகொண்டிருக்கிறது. அதனால் நன்மை
தான். கெடுதல் என்று நான் சொல்ல முடியாது. பல கட்சிக்காரர்கள்,
அதாவது இரண்டு கட்சிக்காரர்கள் ஒரே இடத்திலே மீட்டிங் போட
வேண்டும் என்று சொல்வார்கள். அதை "ரெகுலேட்" பண்ணிக்
கொடுத்து இன்னார்தான் இன்றைக்கு மீட்டிங் போட வேண்டுமென்று
சொல்வார்கள். இத்தனை மணிக்கு மீட்டிங் போட வேண்டுமென்று
ஒரு கட்சிக்காரர்கள் மனுக் கொடுக்கிறார்கள். இத்தனை மணிக்குமேல்
வேறு ஒரு கட்சிக்காரர்கள் கூட்டம் போடவேண்டுமென்று சொல்கிறார்கள்.
அதற்கேற்ப சரி செய்து உத்தரவு பிறப்பித்து "ரெகுலேட்" செய்ய
போலீஸ்காரர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்று இருப்பதற்கு
இது மிகவும் அவசியம்தான். அதற்கு இது வழி செய்கிறது. அது



[திரு. கே. ராஜாராம்]

நன்றாகத்தான் செயல்படுகிறது. அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆனால்
கிராமப்புறங்களில் ஒரு அமைச்சர் அல்லது வேறு ஒரு கட்சித் தலைவர்
சுற்றுப்பயணம் செய்யவேண்டியிருந்தால், ஒரு நாளைக்கு 10, 20 கிராமங்
களுக்குப் போகிறார்கள். இந்த 20 கிராமங்களிலும் போலீஸாரின்
லைசென்ஸ், அனுமதியைப் பெற்றுத்தான் கூட்டங்கள் போட வேண்டு
மென்றும், 20 கிராமங்களுக்கும் ஸ்டாம்புகள் ஒட்டி மனுக்கள் போட
வேண்டுமென்றும் கட்டுப்பாடு செய்வது சரியில்லை. 10, 12 மைல்கள் சென்று
போலீஸ் அதிகாரி, சப் இன்ஸ்பெக்டர் இருக்கக்கூடிய இடத்தைத் தேடிச்
செல்ல வேண்டும். யாருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள்
என்றும் தெரியாது. அனுபவத்தில் சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுப்பதற்கு
10, 20 மைல்கள் போக வேண்டியிருக்கும். அல்லது டெபுடி சூப்பிரண்டெண்ட்
என்றால், 30 மைல்கூட போக வேண்டியிருக்கும். திருமங்கலம் தாலுக்கா
வில் பேரையூரில் ஒரு "மீட்டிங்" போட வேண்டுமென்றால், திருமங்கலத்
திலே இருக்கக்கூடிய டெபுடி சூப்பிரண்டெண்ட், அல்லது சர்க்கிள் இன்ஸ்
பெக்டர் கையெழுத்து வாங்கவேண்டியிருக்கும். இப்படியெல்லாம் சிரமம்
இல்லாமல் கொடுக்கக்கூடிய நிலையிருக்க வேண்டும். கிராமங்களில்
இது அவசியமா? சட்டத்தை நிறைவேற்றிக் கையில் வைத்துக்கொண்டு
கொஞ்சம் கொஞ்சமாக அமல்படுத்தி ஒவ்வொரு பகுதியாக அமலுக்குக்
கொண்டுவந்தால், மிகவும் நலமாயிருக்கும். இது மிகவும் கஷ்டத்தை
எல்லோருக்கும் உண்டுபண்ணும். எதிர்க்கட்சிக்கு மட்டும் என்று நான்
சொல்லவில்லை. எல்லாக் கட்சிகளுக்கும் இது மிகவும் சிரமத்தைக்
கொடுக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. கிராமங்களில் ஒரு கட்சிக்
காரர் கூட்டம் போட்டால், இன்னொரு கட்சிக்காரர் கூட்டம் அங்கே போட
மாட்டார்கள். நகரங்களில் இந்தமாதிரி மோதல்கள் வரும். கிராமங்களில்
கட்டுப்பாடு என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே அவசி
யமா? அப்படிப் போட்டால் மிக கஷ்டத்திற்குள்ளாவார்கள் அவர்கள்.
ஒரு ஊர்க்காரர் போய் போலீஸாரை அணுகி அனுமதி பெற்றுக்கொண்டு
வந்துதான் "மைக்" வைத்துக்கொள்ள வேண்டும், "மீட்டிங்" போட
வேண்டும். இந்த நிலைமையால் எவ்வளவு கஷ்டமுண்டாகும் என்பதை
அரசாங்கம் யோசித்ததா என்று தெரியவில்லை. ஆகையால் இதை
ஒரு முறைக்கு இரு முறை ஆலோசிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
மைக் லைசென்ஸ் பற்றிச் சொல்லுகிறார்கள் என்று எண்ணுகிறேன்.
இது அந்தச் சட்டம் அல்ல. இது "ரெகுலேட்டரி ஆர்டர்" என்று முன்
னாலே வரவேற்றுச் சொன்னார்கள். "மைக்" லைசன்ஸைப் பொறுத்த
வரையில் அந்த விதி முறைகளும் சிரமங்களும் கிராமங்களிலே இருப்பது
உண்மை. அதை மாற்றுவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுப்
போமோ அவைகளை எடுக்கலாம் என்றுதான் கருதுகிறேன். சிடி போலீஸ்
ஆக்டிலே பிரிவு 41 இருப்பதுபோல், கிராமங்களிலே ஏதாவது இப்படி ஒரு
நிலை ஏற்படுமானால், இந்தப் பிரிவைப் பயன்படுத்தி "ரெகுலேட்" பண்ணு
வதுதான் இந்த மசோதாவினுடைய நோக்கம். அதை எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களும் வரவேற்கிறார்கள். அவர்கள் கட்சியைச் சேர்ந்த

[திரு. செ. மாதவன்]

வர்கள் உள்நோக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். உள்நோக்கம் இருப்பதாகச் சொல்லிவிட்டு இந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் சொன்னார்கள். அதிலிருந்து இந்த அதிகாரம் தேவையென்றே நானும் ஊகிக்கின்றேன். அவருடைய ஆதாரங்களிலிருந்து உண்மையாக இருக்குமென்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன சங்கடங்கள் இந்த மசோதாவிலே இல்லை. "சலான்" கட்டிவிட்டு "பெர்மிஷன்" வாங்க வேண்டுமென்பது மைக் லைசென்ஸ் கொடுப்பதிலே இருக்கிறது. அது வேறு பிரச்னை. தனியாகக் கவனத்திற்குக் கொண்டுவந்தால் பரிசீலிக்கலாம்.

* திரு. கே. ராஜாராம்: கூட்டம் போடுவதாக இருந்தால், போலீஸாருடைய அனுமதி தேவையா? எழுதி அனுமதி வாங்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது மைக் லைசென்ஸுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலே அதுபற்றிப்போடவில்லை. அதிலே சிரமங்கள் இருக்கின்றன. அப்படிக் கொடுக்காவிட்டால் போலீஸ்காரர்களுக்குத் தெரியாமல் போகும். சண்டைகள் வர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதற்கு லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதிலேயுள்ள சிரமம் எல்லாம் டெபுடி சூப்பிரண்டெண்டுக்குக் காட்ட வேண்டும். அதற்குக் காலமாகும். "சலான்" தாலூக்கா ஆபீஸிலே போய் வாங்கிக் கட்ட வேண்டும். இந்த விதி முறைகள்தான் சிரமமாக இருக்கின்றன. அதுகூட வேண்டியதில்லை என்றால், அதைத் தனியாகக் கேட்டால், பரிசீலிக்கலாம்.

*திரு. கே. ராஜாராம்: இதிலே இருக்கிற சிரமத்தை நான் கட்சி பேதம் இல்லாமல் சொல்கிறேன். எல்லாக் கட்சிக்காரர்களுக்குமே இதிலே கஷ்டம் வரும். ஒரு தலைவர் அல்லது ஒரு அமைச்சர் 20 கிராமங்களில் அல்லது 15 கிராமங்களில் ஒவ்வொரு நாளும் சுற்றுப்பயணம் செய்வதென்றால், இந்த 15, 20 கிராமங்களுக்கும் அனுமதி வாங்க வேண்டும். தனித்தனியாக "அப்ளை" பண்ணி வெவ்வேறு லைசென்சுகள் வாங்க ஏற்பாடு செய்பவர்களுக்கு இருக்கக் கூடிய கஷ்டங்களைப் பற்றி நான் சொல்லுகிறேன். அவர்களுக்கு எவ்வளவு சிரமம்? மாவட்டக் காங்கிரஸ் கட்சி வட்டச் செயலாளர் அல்லது மாவட்டச் செயலாளர்—இவர்களுக்கெல்லாம் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் போலீஸாரின் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. "நோட்டிபை" பண்ண வேண்டும். இன்னின்ன பகுதிகளில்தான் இதை அமுலுக்குக் கொண்டு வருகிறோம் என்று சொல்லி ஏதாவது குறிப்பிட்டிருக்கிற பகுதிகளில் மட்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் அமுலுக்கு வரவேண்டியதில்லை என்று சொல்வதால் சிரமங்கள் எவ்வளவோ



[திரு. கே. ராஜாராம்]

குறையும். குறிப்பிட்ட நேரம், அதாவது "நோட்டிபை" பண்ணுகிற நேரத்திலே மட்டும் அனுமதி வாங்கினால் போதும், மற்ற நேரத்திலே தேவையில்லை என்றாலும் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த மசோதாவே அதற்குச் சம்பந்தப்பட்டதல்ல. 41-வது பிரிவு தேவையென்றால், இந்த மாதிரிப் பிரச்னைகள் வந்தால், 41-வது பிரிவு போடலாம். அப்படிப் போட்டால்தான் அனுமதி வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் சொன்ன விவகாரம் வேறு. மைக் லைசென்ஸ் தகராறு பற்றித்தான் அவர்கள் சொல்லுகிறார்கள். அது இந்தச் சட்டத்திலே வரவில்லை. அதற்குச் சில விதி முறைகள் இருக்கின்றன. இருக்கிற அந்த விதிகளைத் தளர்த்த வேண்டுமானால், அதைப் பரிசீலிப்பதிலே தவறில்லை. அந்த விதிகள் சம்பந்தமாக, கிராமங்களைப் பொறுத்து சிரமங்கள் இருப்பது உண்மை என்பதை ஆய்ந்து இந்த அரசாங்கம் உணர்ந்து, சில விதிகள் தளர்த்தப்பட்டன. அது வேறு பிரச்னை. இந்த 41tவது பிரிவால் நிரந்தரமான பரிகாரம் கிடையாது. எங்கெங்கே வேண்டுமோ அங்கங்கே போட்டுக் கொள்ளுகிறோம். குறிப்பிட்ட கால அளவிற்குப் பின்னால் எடுத்து விடுகிறோம். ஆகையால் இந்த விதியினால் எந்த விதமான சிரமமும் அரசியல் கூட்டங்களுக்கும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் ஏற்படாது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: நகரப் பஞ்சாயத்துக்கள், முனிசிபல் நகரங்கள் இவைகளைத் தவிர, மற்றக் கிராமங்களுக்கு இந்த மைக் லைசென்சு பெறவேண்டியதில்லை என்று இருக்கிறது. இப்போது கொண்டு வரக்கூடிய சட்டத்தினாலே மைக் லைசென்ஸ் வாங்க வேண்டுமென்ற நிலைமை ஒன்றும் ஏற்படாது அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்கேயாவது இரண்டு மூன்று கூட்டங்கள் நடை பெறுகிறதா அல்லது கலகம் வருகிறதா என்று பார்த்து, ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டு, அதற்குப் பின் அதிகாரிகள் இதை புரமல்கேட் செய்தால், அதற்குப் பின்னாலே சாதாரணமான கூட்டங்களுக்கு லைசென்சு வாங்கவேண்டியதில்லை.

மாற்றுத் தலைவர் (திரு. எம். ராஜா அய்யர்): மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 52/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன் வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

[மாற்றுத் தலைவர் திரு. எம். ராஜா அய்யர்]

பிரிவு 2-ம் 3-ம் மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 52/72) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன் மோழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எம். ராஜா அய்யர்): மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்டக் காவல் துறை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 52/72) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 51/72).

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 51/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

என்று நான் முன்மொழிகின்றேன்.

ஒரு மனைக்கு மேற்பட்ட நகர்ப்புற நிலங்களுக்குப் படிப்படியான நிலைகளில் வரி விதிப்பு முறையைச் செயல்படுத்துவது மூலம் மாநிலத்தின் வருவாயைப் பெருக்க 1971-ல் தமிழ் நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டம் திருத்தப்பட்டது. அதே நேரத்தில் நகர்ப்புற சிறு நில உடைமையாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, ஒரு மனையும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 1381-ஆம் பசலி ஆண்டிலிருந்து (1971-72-லிருந்து) நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து அரசு விலக்கு அளித்தது.

---

235-240-ஆம் பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



[திரு. செ. மாதவன்]

1971-ஆம் ஆண்டு 30-வது சட்டத்தால் திருத்தப்பட்டுள்ள தமிழ் நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தைச் செயல் படுத்துவதனால், தங்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் குறித்து வரி செலுத்துவோர் செய்துகொண்ட முறையீடுகளின் பேரில், வரி விலக்கு உச்ச வரம்பை ஒரு மனையிலிருந்து இரண்டு மனையாக உயர்த்தவும், இரண்டு மனைகளுக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரையில், இரண்டு மனைகளுக்கு மேற்பட்டு அவர்கள் வைத்திருக்கும் நகர நிலங்களின் மொத்தப் பரப்பின்மீது அவர்களுக்கு நகர்ப்புற நிலவரி விதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நகர்ப்புற நிலங்களில் குடியிருப்பதற்காகவென்றே அவற்றின் சொந்தக்காரர்கள் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு அவர்களே அவற்றில் வசித்துவரும் பட்சத்தில், அந்த நிலங்களுக்கு சட்டத்தின்கீழ் 25 சதவீதமாக அனுமதிக்கப்பட்டு வந்த வரிவிலக்கினை 50 சதவீதமாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள விதித் துறைகளின்கீழ் தரும நிலையங்கள் வைத்திருக்கும் நிலங்களுக்கு மட்டுமே இதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குப் பதிலாக, சமய, அற அல்லது தரும நிலையங்களான அரசு அறிவித்துள்ள நிலையங்களுக்குச் சொந்தமாகவுள்ள அனைத்து நிலங்களுக்கும் இந்த விலக்கு அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

[மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் தலைமை]

நகர்ப்புற நிலச் சொந்தாக்காரர்கள் விவரக் கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கான கால வரையறையை நீட்டிக்கவும் சட்டத்தில் சில விதித் துறைகளைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. மேலும், சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடுகள் எவையேனும் இருப்பின், அவற்றை ஆணை ஒன்றின் மூலம் நீக்க சட்டத்தின் 44-வது பிரிவு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. ஆனால், இந்த அதிகாரம் நிர்வாக அதிகாரிகளுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட இயலாது என்று தலைமை உயர் நீதி மன்றம் தீர்ப்புக் கூறியதனால், இப்பிரிவை மேற்படி சட்டத்திலிருந்து நீக்கிவிட முடிவு செய்யப்பட்டுள்ளது அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ், மத்தியச் சட்டம், மாநிலச் சட்டத்தைவிட மேலோங்கி நிற்கும் என்பதனால், மத்திய அரசுக்குச் சேர வேண்டிய வரிகளையே முதலில் செலுத்தியாக வேண்டும். அதற்கிணங்க, ஐயத்திற்கு இடமின்றி வகை செய்வதற்காக இந்த நிலையைத் தெளிவாக்கும் பொருட்டு, சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு, மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது. இச்சட்ட வரைவினை ஏற்குமாறு இச்சட்டமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்: "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* THIRU S. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I most heartily welcome this Bill, more particularly the spirit behind this Bill which has sought to understand the difficulties of the taxpayers—particularly urban land tax, which comes on top of the municipal taxes. The man who owns property in Madras City feels half a dozen different pinches starting from the wealth tax, the income-tax, the property tax and maintenance which is also a tax, and on top of it the urban land tax. Therefore, the concessions now given are extremely welcome. I hope a similar spirit will animate the Government in giving discriminatory concessions to those who are hit hard by owning properties and encouraging them to build more houses, in order that scarcity of housing may be relieved.

I welcome the Bill.

பிற்பகல் 5-20

THIRU A. R. DAMODARAN: Sir, I congratulate the Government on having had the courage to alter certain provisions of their 1971 Urban Land Tax (Amendment) Act. In fact, when we debated it in the Legislative Council, we tried very hard to bring in certain amendments which would give some concessions to the owners of urban property in Madras City whereby certain amount would be exempt from tax, and I am glad that although one and a half years have elapsed, our amendments have been accepted today in the modified Bill that has been presented to this House.

Sir, the object is very laudable. Only one ground was exempt and even then it was specifically stated that if a person owned more than one ground, the exemption would not be given even for the basic one ground that the man possessed. I am glad that under the new Bill 2 grounds have been exempted. Not only that. If a person owns more than 2 grounds, the basic exemption would be given for the 2 grounds and he would be charged only for that land which he possesses in excess of 2 grounds. The other welcome concession that has been given in this Bill,* Sir, I think, this will be widely welcomed by that class of middle-class property owners especially retired officials and persons who have no income after they have retired either from business or from other Government service—is that the man who occupies the house is entitled to a rebate of 50 per cent of the urban land tax. Formerly it was 25 per cent. It has now been increased to 50 per cent. I think this is a very good concession that is being given to pensioners and other people who have been hard hit by inflationary prices and I must congratulate the Government on its display of anxiety and feeling for the welfare of this class.



[Thiru A. R. Damodaran]

There is only one point, Sir, which struck me and I have moved an amendment in this regard. A person may have two properties in Madras City; he may own 2 grounds, 2½ grounds in a costly locality like Mount Road; and he may own 2 grounds in a comparatively less expensive locality lying on the outskirts of Madras City. According to the Bill, Sir, the exemption will be granted for 2 grounds; it will not be at the choice of the owner but it will be at the choice of the Urban LandTax Officer and he will necessarily choose the 2 grounds which are of lesser value. I think, Sir, when once we have decided that this exemption should be given for 2 grounds, it is not a very great concession that the Government will make, if they allow the owner of urban property to choose the 2 grounds for which he should claim exemption, instead of leaving it to the choice of the Urban Land Tax Officer.

On the whole, Sir, the Bill is very welcome. I would only plead that as time passes the exemption may be made for 5 grounds, because that was our original plea. I am anxious that property owners, at least for one property that they own—if they are single property owners—at least the site on which the house stands, the property on which it is located, should get the maximum concession possible because he is not leasing it out for rent or using it for any other purpose. A man who uses his house for his own residential purpose should not only get a rebate in urban land-tax; but what is far more important, he should get a rebate even in the property tax that is levied by the Corporation.

I, therefore, welcome this Bill, Sir, and congratulate the Government on having made very important amendments which would bring relief to the lower middle class and middle class sections of our society.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னமாதிரி, இரண்டு கிரவுண்டுக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்கள், எந்த கிரவுண்டுக்கு விலக்கு என்பது பற்றி அந்த ஆபீசரின் முடிவுக்கு விடாதபடி, அந்த சொந்தக் காரர் எதை வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறாரோ, அதை அவருக்கு விட்டுவிட வேண்டுமென்று நான் வற்புறுத்த நினைக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, ஏதோ சட்டம் நிறைவேற்றி விட்டோம், அதைத் திருத்தக் கூடாது என்ற எண்ணம் இல்லாமல் இவ்வளவு துரிதமாக ஒரு வருஷத்திற்குள் ஒரு திருத்த மசோதா கொண்டுவந்ததற்கு உண்மையில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நானும் திரு. தாமோதரன் அவர்களும் போன வருஷம் இந்த மசோதா

[திரு. கே. ராஜாராம்]

சட்டமாக நிறைவேற்றப்பட்டபோது இரண்டு கிரவுண்டுகளையாவது வரியில்லாமல் விட்டுவிட வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருந்தோம். அப்போது மறுத்துவிட்டோமே, அதை மீண்டும் நாம் ஏன் ஒப்புக் கொள்ள வேண்டுமென்ற பிடிவாதம் இல்லாமல், ஒரு வருஷத்திற்குள்ளாகவே, அதை ஒப்புக்கொண்டு இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்ததற்கு உண்மையில் நான் மிக்க மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, எனக்கு ஒரு சந்தேகம். "அமெண்டுமெண்ட் ஆப் செக்ஷன் 7" டிரஸ்ட்கள் சம்பந்தமாக இப்போது விலக்கு அளிக்க வேண்டுமென்று ஒரு புதிய கிளாஸ் சேர்த்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். இதில் அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய டிரஸ்டுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஏதாவது ஒரு கொள்கை உண்டா, எந்த அடிப்படையில் எந்தவிதமான டிரஸ்டுகளுக்கு விலக்கு அளிக்கப்படும் என்று தெளிவாக்கிவிட்டால், நலமாக இருக்கும். ஏனென்றால் பலவிதமான டிரஸ்டுகள் இருக்கின்றன. எந்தவிதமான அடிப்படை நோக்கங்கள் கொண்ட டிரஸ்டுகளாக இருக்க வேண்டும்? தார்மீக டிரஸ்டு, மத சம்பந்தமான டிரஸ்டு, கல்வி சம்பந்தமான டிரஸ்டு என்று பலவிதமான டிரஸ்டுகள் இருக்கின்றன. இந்த டிரஸ்டுகளுக்கு, அல்லது தனக்கு வேண்டியவர்களுக்கு ஒன்று, வேண்டாதவர்களுக்கு ஒன்று என்று செய்யும்படியான நிலைமை வந்துவிடக்கூடாது, அந்தப் பெயர் அரசாங்கத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். அவர்கள் இஷ்டம்போல் செய்தார்கள் என்ற எண்ணம் இல்லாமல் ஏதாவது ஒரு அடிப்படையை வகுத்து அதன்படி நடக்க வேண்டும். அதற்கு ஏதாவது அரசாங்கம் யோசனை செய்திருக்கிறதா, எந்த நோக்கத்தோடு அந்த முடிவைச் செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எல்லோரும் ஆதரித்து வரவேற்றார்கள். ஆகவே அதிகம் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். "having the lowest value" என்று இருப்பதால், அந்த அதிகாரிக்கு டிஸ்கிரீஷன் இல்லாமல் எப்படிப் பயன்படுத்த வேண்டுமோ அப்படிப் பயன்படுத்துவார்கள். டிரஸ்டுகளைப் பொறுத்த வரையில், "எஜுகேஷனுக்கு" ஏற்கெனவே புரொவிஷன் இருக்கிறது. டிரஸ்ட் என்றால் "Religious and Charitable Trust, Philathropic" என்றெல்லாம் போட்டிருக்கிறோம். அதற்குள்ளே எல்லா டிரஸ்டுகளும் வரும். அந்த டிரஸ்டு 'charitable and religious' டிரஸ்டா, 'Philanthropic' டிரஸ்டா என்று பார்க்க அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஆனால் இரண்டு டிரஸ்டுகள் இருந்து ஒன்றுக்குக் கொடுத்துவிட்டு இன்னொன்றுக்கு கொடுக்காமலிருக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. அப்படியிருந்தாலும், கோர்ட் ஒப்புக் கொள்ளாது.

<u>மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :</u> மன்றத்தின்முன் உள்ள கேள்வி "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 51/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".



தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக, பிரிவுவாரியாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பிரிவுகள் 2 முதல் 9 வரை : பரிந்துரைகள் எதும் இல்லை.)

THIRU A. R. DAMODARAN : Sir, I beg to move the following recommendation :—

"In the proposed sub-section (2) of new section 20-A, *for* the words 'having the lowest market value', *substitute* the words 'according to the choice indicated by the owner of the land'"

The recommendation was duly seconded.

*THIRU A. R. DAMODARAN : Sir, in the introductory remarks I made welcoming the Bill, I already pointed out that it was quite possible that an owner might be having two sites located in different parts of the City and this is a very small concession, Sir, that could be made by the Government. He may have one property in a locality where the value is Rs. 40,000 per ground and another property in a newly developed locality where the value is only Rs. 5,000 per ground. He may have only two grounds in these respective localities. But, the Government will give exemption only for the land having the lowest value. I would request, Sir, that the choice may be left to the owner, as in the case of other Bills, because, after all, he is not having an enormous concentration of land, the basic exemption is only for two grounds and the tax is going to be charged for the extent in excess of that. I, therefore, suggest that this amendment may be easily accepted.

In this connection, I have to point out certain anomalies in the valuation fixed by the officers. For example, in Anna Nagar and also in other newly developed localities, plots are sold to the owners at Rs. 5,500 per ground, whereas the Urban Land Tax Officer—I do not know whether it is to avoid the responsibility under the Land Acquisition Act, because the compensation has not yet been paid to the owners of the land—has fixed the value of the plots for the purpose of urban land tax only at Rs. 2,500 per ground. While the sites have been actually purchased at Rs. 5,500 per ground, the Urban Land Tax Officers have fixed the valuation at Rs. 2,500 per ground, much lower than the actual value that has been paid. I understand that this is because of

certain complications that they envisage in the payment of compensation for the acquired land. I would suggest that this anomaly may be rectified, because, in other areas, when the market value is only Rs. 8,000 per ground, the Officers have no hesitation in fixing the valuation at Rs. 16,000 or Rs. 18,000 per ground. One does not realise why this should happen in Madras City. Having said this, I would request the Hon. Minister to kindly accept this amendment.

* **THE HON. THIRU Si. Pa. ADITANAR:** Sir, the hon. Member mentioned that regarding the valuation of property for the purpose of urban land tax, some difficulties might arise. Actually difficulties arose. It is because of that the enforcement of this Act has been delayed for such a long time. The question about the method of valuation to be adopted went to the Courts and the High Court has decided upon certain method by which the valuation should be made. So, it is not either the market value or the value fixed by a certain method. The High Court has decided the manner in which the value should be fixed and we are bound to follow the decision of the High Court. Regarding exemption for the two grounds having the lowest market value, the hon. Member is claiming an additional exemption. Supposing a man owns about four grounds, two grounds having higher market value and two grounds vacant land having no value, the proposal made by the hon. Member is that only that area which has got the lowest value should be taken into account for levy of tax.

**THIRU S. NARAYANASWAMY:** The hon. Member did not want exemption but wanted only a discretion to the owner.

* **THE HON. THIRU Si. Pa. ADITANAR:** What is now provided for is that the exemption will apply to that portion of the land which has got the lowest value. But, my hon. Friend desires to have exemption for the portion which has got the highest value. There will arise the question of finding out the best method of assessment. I hope there will be no practical difficulty in this method. It is only when the extent exempted is being increased to two grounds, we exempt the portion which has got the lowest value. What is being done is only fair and therefore, this amendment is not acceptable to the Government.

**MR. CHAIRMAN:** Does the hon. Member press his amendment?

**THIRU A. R. DAMODARAN:** The result will be the same either way, Sir. I do not press my amendment.

The amendment, was by leave, withdrawn.

[மற்றப் பிரிவுகள்: பரிந்துரைகள் இல்லை.]



**THE HON. THIRU Si. Pa. ADITANAR:** Sir, I move "That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1972 (L. A. Bill No. 51 of 1972), as passed by the Assembly, be returned".

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/72) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

6. அரசினர் தீர்மானம்.

1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் III-ஆம் அட்டவணையில் III-ஆம் பாகத்தின் 17 (d) விதியை மாற்றுதல் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்டவாறு முன்மொழிகிறேன்.

"1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் அச் சட்டத்தின் III-ஆம் அட்டவணையைச் சேர்ந்த III-ஆம் பாகத்தின் பிற 17-வது விதியிலுள்ள (d) துணை விதியை மாற்றுவதற்காக தமிழ் நாடு பகல் ஆளுநர் அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவுத் திருத்தத் 5-30 திற்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

வரைவுத் திருத்தம்.

1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) III-ஆம் அட்டவணையைச் சேர்ந்த III-ஆம் பகுதியின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியின் கீழ், ஒரு நிதியாண்டிற்கான இறுதித் தணிக்கை அறிக்கையை மேற்படி மாநகராட்சியின் நிலைக்குழுவிற்கும் அதன் நகலை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டிய கால அளவு அந்த நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து எட்டு திங்களுக்குள் இருக்க வேண்டுமென தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் இதனால் அறிவிக்கிறார்".

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 15

மேலவைத் தலைவரவர்களே, 1972-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் III-வது விவர அட்டவணையைச் சேர்ந்த III-வது பாகத்தின் 17 (d) விதியில் மதுரை மாநகராட்சிச் சம்மந்தப்பட்ட கணக்குகளின தணிக்கை பற்றிய விவர அறிக்கையை நிதி ஆண்டு முடிவிலிருந்து 3 திங்களுக்குள்ளாயினும் அல்லது அரசு அறிவிக்கக்கூடிய வேறு கால அளவிற்குள்ளாயினும் அந்த மாநகராட்சியின் நிலைக் குழுவிற்கும் அந்த அறிக்கையின் இரண்டாவது படியை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந் தனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. தணிக்கையாளர்கள் இறுதித் தணிக்கை அறிக்கை அனுப்புவதற்கு இவ்விதியில் குறிப்பிட்டுள்ள மூன்று திங்கள் கால அளவு மிகக் குறைவு என்று உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆய்வாளர் எடுத்துக்கூறி சென்னை மாநகராட்சியில் உள்ளது போல் எட்டு திங்கள் காலத்தை இதற்கென வரையறுக்கலாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். இவரது வேண்டுகோள் நியாயமானதெனக் கருதப்படுகிறது. இதற்கிணங்க 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 17 (d) விதியை மாற்றியமைப்பதென்று கருதப்படுகிறது. இச்சட்டத்தின் V, VI விவர அட்டவணைகள் நீங்கலாக, எந்த ஒரு விவர அட்டவணையையும் திருத்தியோ, சேர்த்தோ அல்லது ரத்து செய்தோ 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அரசு விதிகள் இயற்றலாம். ஆனால் III-வது விவர அட்டவணையின் III பாகத்தில் 17 (d) விதியை மாற்றி யமைப்பதற்காகச் செய்யக் கருதியுள்ள ஒரு திருத்தத்தின் வரைவு இந்தச் சட்டத்தின் 431 பிரிவின் (5) உட்பிரிவின்படி சட்ட மன்ற இரு அவைகளின் முன் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இதற்கிணங்க செய்யக்கருதியுள்ள வரைவுத் திருத்தத்திற்கு இம் மன்றம் ஒப்புதல் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இதிலுள்ள கருத்து என்னவென்றால், தற்போதுள்ள 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் அந்நகராட்சியின் ஒரு நிதியாண்டிற் கான இறுதித் தணிக்கை அறிக்கையை அம்மாநகராட்சியின் நிலைக் குழுவிற்கும் அரசுக்கும் தணிக்கையாளர்கள் அந்த நிதி ஆண்டிலிருந்து மூன்று திங்களுக்குள் பணிந்தனுப்ப வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த மட்டில், அதை நிதி ஆண்டு முடிந்த எட்டு மாத காலத்திற்குள் அனுப்பிவிட வேண்டும் என்று இருக்கின்றது. இப்போது மதுரை மாநகராட்சியில் மூன்று மாத காலத் திற்குள் தணிக்கை அறிக்கையை அனுப்புவது கடினமாக இருக்கின்றது என்பதால் சென்னையைப் போன்று மதுரைக்கும் எட்டு மாத காலத்திற்குள் அனுப்ப வேண்டும் என்று இந்தத் திருத்தத்தின் மூலம் வகை செய்ய இருக்கின்றது. ஆக மூன்று மாத காலத்திற்குள் என்று இருப்பது எட்டு மாத காலத்திற்குள் என்று ஆகிறது. இந்தத் திருத்தத்ினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்</u>: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1971) 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அச்சட்



1972 டிசம்பர் 15] [மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்]

டத்தின் III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பாகத்தின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியை மாற்றுவதற்காக தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவு திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்."

<u>வரைவுத் திருத்தம்.</u>

1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பகுதியின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியின் கீழ், ஒரு நிதியாண்டிற்கான இறுதித் தணிக்கை அறிக்கையை மேற்படி மாநகராட்சியின் நிலைக் குழு விற்கும் அதன் நகலை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டிய கால அளவு, அந்த நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து எட்டு திங்களுக்குள் இருக்க வேண்டுமென தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் இதனால் அறிவிக்கிறார்."

**Thiru A. R. DAMODARAN**: Sir, although this is a non-controversial measure and might escape the notice of hon. Members, the extension of time from 3 monthsto 8 months, for finalisation accounts of Sir, may exist in Madras Corporation, but, I do not see why we should extend it to Madurai Corporation. The reason is this, Sir, there are concerns which have invested Rs. 40 crores and Rs. 50 crores and under the Company Law, it is binding on the Directors of the Board that they should place before the General Body, within 6 months after the end of an accounting year, a full statement of accounts pertaining to the Corporation. Now, Sir, when we have big companies which can compile their accounts within 6 months after the end of the accounting year, I do not see why we should set a premium on inefficiency in local bodies which are notoriously inefficient in accounting procedure. Everybody is aware of the number of years it takes to get a rebate or a refund from a local body, purely because, Sir, the whole thing is in financial shambles. It takes two to three years for audit to be completed and it takes even longer for us to find out whether a defalcation has taken place in the collection of revenue. Therefore, I feel, Sir, that it would be more than sufficient if the statutory limit of six months is kept for these local bodies instead of keeping on extending it to eight months. They will not complete it even in eight months. Sir, probably they may get special permission and extend it to one year and 1½ years. At a time when the pace of progress is developing so fast, I think our local bodies should shed their inertia and lethargy and should also take active steps to see that their accounts are closed as early as possible and definitely within six months after the end of an accounting period.

[THIRU A. R. DAMODARAN] *[1972 டிசம்பர் 15*

Even the Hon. Minister for Co-operation is aware how in Co-operative Societies for three years and even four years, accounts are not completed ; audit is not completed. We should not allow our local bodies also to suffer the state of our co-operative societies, where it takes years to find out a defalcation. It is, therefore, with a very good intention, Sir, that I wanted to bring to the attention of the Hon. the Minister for Local Administration, this fact and to request him to see that the period is restricted strictly to six months, instead of eight months.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறிய கருத்து
உள்ளபடியே சிந்திக்கப்பட வேண்டிய கருத்துதான். இப்போது மூன்று
மாதமாக இருப்பதை எட்டு மாதமாக மாற்ற வேண்டுமா என்று
பிற்பகல் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதைக்கு இதை நிறைவேற்றி, பிறகு
அவர்கள் கூறியபடி ஆறு மாத கால அளவில் கொண்டு வர முடியும்.
5-40 இதைக் கருத்தில் வைத்துக்கொண்டு, இப்போது எட்டு மாதமாகத் திருத்தி
விட்டு, பின்னர் அதை ஆறு மாதமாக ஆக்குவதுதான் நல்லது என்றால்,
சென்னை-மதுரை இரண்டு மாநகராட்சிகளுக்குமே சேர்த்து எட்டு மாதங்
களை ஆறு மாதங்களாக மாற்றிக் கொள்ளலாம். வேறு பல நிறுவனங்
களிலேயெல்லாம், ஐம்பது, அறுபது கோடி ரூபாய் மூலதனம் உள்ள
நிறுவனங்களிலேயெல்லாம் ஆறு மாத காலத்திற்குள் கணக்குகளைக்
கொண்டுவர முடிகின்றது என்ற நிலையிருந்தால், அந்த அளவிற்குத்
திறமையை உள்ளாட்சி மன்றங்களுக்கும் கொண்டு வருவது பொருத்த
மாக இருக்கும். எனவே இப்படிப்பட்ட நல்ல கருத்தானது சிந்தனையில்
கொள்ளப்படும். எதிர்காலத்தில் ஆராயப்படும் என்று சொல்லி இப்போது
அவையின் முன்னுள்ள இந்த வரைவுத் திருத்தத்தினை நிறைவேற்றித்
தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள
கேள்வி :

" 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 15/1971) 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அச்சட்டத்
தின் III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பாகத்தின் 17-வது
விதியிலுள்ள (d) துணை விதியை மாற்றுவதற்காக தமிழ்நாடு ஆளுநர்
அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவுத் திருத்தத்திற்கு
ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

வரைவுத் திருத்தம்.

1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 15/1971) III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பகுதியின்
17-வது விதியிலுள்ள (d) துணை விதியின் கீழ், ஒரு நிதியாண்டிற்கான



*1972 டிசம்பர் 15]* *[மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்]*

இறுதித் தணிக்கை அறிக்கையை மேற்படி மாநகராட்சியின் நிலைக் குழு
விற்கும் அதன் நகலை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந்தனுப்ப
வேண்டிய கால அளவு, அந்த நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து எட்டு
திங்களுக்குள் இருக்க வேண்டுமென தமிழ்நாடு ஆளுநர் அவர்கள்
இதனால் அறிவிக்கிறார்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த) சட்ட
முன்வடிவை உறுதிப்படுத்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேல
வைத் தலைவரவர்களே, "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறை
வேற்றப்பட்டு, 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த)
சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல்
அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின்
நோக்கத்தின்கீழ் வருபவையுமான திருத்தங்களை இம்மன்றம் இசைவுடன்
உறுதிப்படுத்துகிறது." என்று நான் முன்மொழிகின்றேன்.

நாடாளு மன்றத்தின் இரு பேரவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள
1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (முப்பதாவது திருத்த) சட்ட வரை
வானது, சொத்துரிமை (சிவில்) வழக்குகளில் தலைமை உயர்நீதி மன்றம்
மேல் முறையீட்டு விசாரணை அதிகாரத்தைச் செலுத்துவதற்கு வழக்கி
லுள்ள சொத்தின் மதிப்பினை அடிப்படையாகக் கொள்வதை நீக்கும்
பொருட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 133 (1) பிரிவைத் திருத்த
விழைகிறது. இத்திருத்தச் சட்ட வரைவு, அரசியலமைப்புச் சட்டத்தின்
368-வது பிரிவைச் சேர்ந்த (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ்
மாநிலச் சட்ட மன்றத்தின் இசைவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 133 (1) பிரிவின் (அ) பகுதியில்
குறிப்பிட்டுள்ள ரூ. 20,000 என்ற குறைந்த அளவு வரம்பானது 1950 ஆம்
ஆண்டில் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் சமயத்தில் முடிவு
செய்யப்பட்டது. ரூபாயின் நாணய மதிப்பில் ஏற்பட்ட மாற்றத்தின் காரண
மாக இந்த வரையறை மிகக் குறைவு என்றும், பெருந்தொகை சம்
பந்தப்பட்ட வழக்கிலன்றி ஏனைய வழக்குகள் தலைமை உயர் நீதி மன்றத்
திற்கு எடுத்துச் செல்லப்படக் கூடாது என்றும் 1969-ல் கருதப்பட்டது. இந்த
வரையறையை ரூ. 1 லட்சத்துக்கு உயர்த்த வகை செய்யும் சட்ட வரைவு
1969-ல் முகவுரைக்கப்பட்டது. இது குறித்து சட்ட ஆணைக்குழு கலந்து
ஆலோசிக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 133 (1) பிரி
வைச் சேர்ந்த (சி) பகுதியின் கீழ் உயர் நீதி மன்றம் வழங்கும் தகுதிச்
சான்றிதழின் அடிப்படையில்தான் மேல் முறையீடு அனுமதிக்கப்பட

வேண்டுமென்றும் (ஏ), (பி) பகுதிகள் விடப்படலாம் என்றும் சட்ட ஆணைக் குழு கருத்து தெரிவித்தது. எனினும், இச்சட்ட வரைவு 1970 ஆகஸ்டு திங்களில் ராஜ்ய சபையினால் நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர், மக்கள் பேரவை கலைக்கப்பட்டதால் இச்சட்ட வரைவு காலங்கழிந்ததாகி விட்டது.

சட்ட ஆணைக்குழு இது குறித்து மீண்டும் கலந்தாலோசிக்கப்பட்டது. வழக்குகள் மதிப்பு குறித்த வரையறை, நீதி வேண்டி தலைமை உயர்நீதி மன்றத்திற்குச் செல்வதில் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்குமிடையே நியாயமற்ற வேறுபாட்டினை உருவாக்குகிறது என்று சட்ட ஆணைக்குழு கருத்து தெரிவித்தது. இது குறித்து நடவடிக்கை எடுக்குமுன், இது மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு டாக்டர் பி. பி. கஜேந்திர கட்கர் அவர்கள் தலைமையின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட சட்ட ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. ஒரு வழக்கில், பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பிரச்னை பெரிதும் அடங்கியுள்ளது என்றும், உயர் நீதி மன்றத்தின் கருத்துப்படி அப்பிரச்னை தலைமை உயர்நீதி மன்றத்தினால் முடிவு செய்யப்பட வேண்டுமென்றும், உயர் நீதி மன்றம் சான்றளிக்கும் வழக்குகளில் மட்டுமே மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் புதிய சட்ட ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. உயர் நீதி மன்றம் முடிவு செய்யும் ஒவ்வொரு வழக்கிலும் தலைமை உயர் நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு இருக்கக் கூடாது. எத்தகைய வழக்குகளில் மேல் முறையீடு செய்து கொள்ளப்படலாம் என்பதை வரையறுக்க ஓர் எல்லைக்கோடு வகுக்கப்பட வேண்டும். ஆனால் மேல் முறையீட்டில் அடங்கியுள்ள பிரச்னைகளைக் கவனிக்காமல் சொத்து மதிப்பின் அடிப்படையிலேயே இந்த எல்லைக்கோட்டை வகுப்ப தென்பது இயல்புக்கு இயலாத ஒன்றாகும். மேலும், செல்வம் படைத் தவர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே பொருந்தா வேற்றுமை ஒன்றை அது உருவாக்குகிறது. இந்நிலையைத் தவிர்ப்பதே தற்போதைய திருத்தத் தின் நோக்கமாகும். ஒரு வழக்கில் பொது முக்கியத்துவம் வாய்ந்த சட்டப்பிரச்னை பெருமளவில் அடங்கியுள்ளது என்றால், அவ்வழக்கின் சொத்து மதிப்பு எவ்வளவிருப்பினும் அதைக் கருத்திற் கொள்ளாமல் அவ்வழக்கு குறித்து தலைமை உயர்நீதி மன்றத்துக்கு மேல் முறையீடு செய்யலாம் என்று உயர்நீதி மன்றம் சான்றளிக்கலாம். சொத்து மதிப்பு குறித்த வரையறை அறவே எடுத்து விடப்படுவதால், மேல் முறையீடு செய்து கொள்வதற்குச் சொத்து மதிப்பு முட்டுக் கட்டையாக இராது. சட்ட வரைவில் இடைக்கால விதித்துறைகளும் சேர்க்கப்பட்டுள் ளன. செய்யக் கருதியுள்ள திருத்தம் (i) அது செயல்படத் தொடங்கு கிற நாளில் தலைமை உயர்நீதி மன்றத்திடம் விசாரணையில் உள்ள மேல் முறையீட்டிற்கும், (ii) உயர் நீதி மன்றம் பிறப்பித்துள்ள தீர்ப்பாணை அல்லது இறுதி ஆணை குறித்து அரசியலமைப்பின் திருத்தப்படாது உள்ள இப்பகுதியின் கீழ் சான்றிதழ் ஒன்று முன்னரே பெறப்பட்டிருந்தால் அத்தகைய தீர்ப்பாணைக்கும் அல்லது இறுதி ஆணைக்கும் பொருந்தாது.

தலைவரவர்களே, இத்தீர்மானத்தை ஏற்று நிறைவேற்றுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு, 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (30-வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருப வையுமான திருத்தங்களை இம்மன்றம் இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

தனித்தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(3) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/42.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு @ (தமிழ்நாடு சட்ட முன்வடிவு எண் 47/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று நான் முன் மொழிகிறேன்.

நகராட்சிப் பணியாளர்களின் வகைப்பாடு, பணிக்குச் சேர்த்துக் கொள்ளும் முறைகள், பணி நிபந்தனைகள், சம்பளம், படிகள், பணியாளர் களின் ஒழுக்கம், நடத்தை ஆகியவற்றை முறைப்படுத்துவது குறித்து தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 77-ஏ பிரிவின்கீழ் பிறப்பிக்கப்படவிருக்கும் வரைவு விதிகள் மேற்படிச் சட்டத்தின் 305-ஏ பிரிவின்கீழ் மாற்றத்துடனோ மாற்றமின்றியோ சட்ட மன்றம் ஒப்புதல் வழங்குவதற்காக இரு அவை களின் முன்பும் இன்றைய நிலையில் வைக்கப்படவேண்டும். இதற்கு ஒப்பு தல் அளிக்கப்பட்ட பின்னரே இந்த விதிகள் பிறப்பிக்கப்படலாம். இச் சட்டத்தின்கீழ் வகுக்கப்படும் ஏனைய விதிகளுக்கு இச் சட்டத்தின் 304-ஆவது பிரிவின்கீழ் சட்ட மன்றத்தின் இரு அவைகளின் பின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. அரசுப் பணியாளர் தொடர்பாக விதிகள் திருத்தப் படும்போதெல்லாம் நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகளும் திருத்தப்படவேண்டியது அவசியமாகும். எனவே, நகராட்சிப் பணியாளர் தொடர்பான விதிகள் அடிக்கடி திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. இத்திருத்தம் வாலாயமான திருத்தமாயிருப்பினும், அதற்கு 305-ஏ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைப் பின்பற்ற வேண்டி

@ 240–241-ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

யுள்ளது. நகராட்சிப் பணியாளர்களின் நலனைக் கருதி இத்திருத்தம் கூடிய விரைவில் செய்யப்படவேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளதால் சட்டத்தின் 305-எ பிரிவில் கொடுத்துள்ள விரிவான நடைமுறையைக் கைவிட்டுவிட்டு 304-வது பிரிவில் கொடுத்துள்ள நடைமுறையைப் பின்பற்ற அரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க இச்சட்ட வரைவு விழைகிறது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக்கொண்டு இவ்வரைவினை இவ்வவையின் ஆய்விற்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (தமிழ்நாடு சட்ட முன்வடிவு எண் 47/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: சட்ட மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## (4) 1972-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 5-ஆவது பிரிவில் விதிக்கப்பட்டுள்ளவாறு, சென்னை மாநகராட்சி மன்றத்தில் 120 உறுப்பினர்கள் உள்ளனர் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். மாநகரம் 120 டிவிஷன்களாகப் பிரிக்கப்படுவதற்கு மேற்சொன்ன சட்டத்தின் 45-வது பிரிவு வகை செய்கிறது. சென்னை மாநகரின் நகராட்சிக் காரியங்களுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 6-வது பிரிவின்கீழ் வட்டம் (சர்கிள்) என்பது சென்னை மாநகரத்திலுள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை ஒட்டி வரையறுக்கப்பட்டுள்ளது. 1967-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் சென்னை மாநகரின் சட்ட மன்றப் பேரவை தொகுதிகள் 10 மட்டுமே இருந்தன. அந்த வகையில் 10 வட்டங்களும், ஒவ்வொரு வட்டத்திலும் 10 டிவிஷன்கள் வீதம் 100 டிவிஷன்களும் இருந்தன. தேர்தல் தொகுதிகள் எல்லை வகுக்கும் ஆணைக் குழுவால் தொகுதிகள் வரையறுக்கப்பட்டதின் விளைவாக சென்னை மாநகருக்கான சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 10-லிருந்து 12-ஆக உயர்ந்தது. எனவே, 1967-ல் மூலச் சட்டத்தைத் திருத்த தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு 7-வது சட்டத்தின் வாயிலாக டிவிஷன்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்த்தப்பட்டது. 5-வது பிரிவால் வரையறுக்கப்பட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையும் 120 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது சென்னை மாநகரில் 12 வட்டங்களும் 120 டிவிஷன்களும் உள்ளன. தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 22-வது சட்டத்தால், வட்டம், மத்தியக் குழுக்கள் இவற்றிற்குப் பதிலாக அவ்வட்டச் செயல்களுக்கான குழுக்களை (ஃபங்க்ஷனல் கமிட்டி) அமைத்துக் கொண்டதன்மூலம் சென்னை மாநகராட்சி நிர்வாக அமைப்பு மாற்றப்பட்டுள்ளது. சென்னை மாநராட்சி மன்றம் தற்போது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது—

(1) வட்டங்கள் நீக்கப்பட வேண்டும், சட்ட மன்றம் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கு நிகரான வட்டங்கள் அமைக்கும் கொள்கையும் கைவிடப்பட வேண்டும்.

(2) மாநகராட்சி டிவிஷன்களின் எண்ணிக்கை 120-ல் இருந்து 150 ஆக உயர்த்தப்பட வேண்டும். அரசு மேற்சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு வட்டத்திலுமுள்ள வாக்காளர்களின்

* 241–244-ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.

எண்ணிக்கை ஒரு சீராக இருக்குமாறு செய்வதற்காக பெரும்பாலும் மாநகராட்சி டிவிஷன்கள் அனைத்தின் எல்லைகளையும் மாற்றியமைப்பது அவசியமெனக் கருதப்படுவதால், அதற்கிணங்கச் சட்டத்தைத் திருத்த அரசு முடிவு செய்துள்ளது. அதன் விளைவாக, மாநகராட்சி மன்றத்தி லுள்ள அரிசனங்கள் அல்லது பழங்குடி மக்களைச் சேர்ந்த உறுப்பினர் களின் குறைந்த அளவு எண்ணிக்கையை 12-லிருந்து 15-ஆகவும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 6-லிருந்து 8-ஆகவும் உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக் கூட்டத்திற்கான குறையெண் 33 என்றிருப்பதை 50 ஆக உயர்த்தவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 6 (1) பிரிவைச் சேர்ந்த (2) (d) உட்பிரிவும், 1972-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 9-வது பிரிவைச் சேர்ந்த 3 (d) உட்பிரிவும், மாநகராட்சியின் கணக்குகள் குறித்து நிலைக்குழு நகராட்சி சொத்துக்கு ஏற்பட்டுள்ள இடம்பெறுவதும் அல்லது காலப் போக்கில் ஏற்படும் மதிப்புக் குறைவு எதுவும் மீட்க முடியாதது என்று அக்குழு கருதினால் அத்தொகையை மட்டும் கணக்கிலிருந்து நீக்கிவிட கணக்குகள் நிலைக் குழுவுக்கு அதிகாரமளிக் கின்றது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், இதற்குத் தொகை வரம்பு எதும் இல்லை. ஆனால், மதுரைமாநகராட்சியைப் பொறுத்தமட்டில், ரூ. 1,000 வரைக்கு மட்டுமே இவ்வாறு நீக்கலாமென இவ்வதிகாரத்திற்கு வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குச் சேர வேண்டிய ஏதாவது வரி, கட்டணம் அல்லது ஒப்பந்தமொன்றின் கீழ் அல்லது பிற வகையில் மாநகராட்சிக்குச் சேர வேண்டிய ஏனைய தொகை அல்லது அவை தொடர்பாக செலுத்தத் தக்க ஏதாவது தொகை வசூலிக்கப்பட முடியாதென்று மேற்சொன்ன குழுவுக்குத் தோன்றினால், அவற்றைக் கணக்கிலிருந்து நீக்கிவிட மேற்சொன்ன விதித் துறைகள் அக்குழுவுக்கு அதிகாரமளிக்கவில்லையாதலால், தமிழ்நாடு 1919-ஆம் ஆண்டு 4-வது சட்டத்தையும், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு 15-வது சட்டத்தையும், தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 5/1920) அடங்கியுள்ள நிதித் துறை நகலையொட்டி, அவற்றிற் கிணங்கத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்குகளை ஏற்க விழைகிறது என்று கூறிக் கொண்டு இவ்வரைவினை இவ்வவையில் ஆய்விற்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".



*THIRU A. R. DAMODARAN : Sir, the amendments to the Madras City Municipal Corporation Act are welcome from one point of view in 5-50 பிற்பகல் that it will give a great deal of emotional satisfaction that instead of having 120 Councillors, we will have 150 Councillors, and the smaller the divisions, the greater will be the representative character of the Councillors. So, Sir, purely from the point of view of the representative nature of the Madras City Corporation, this is a Bill that will certainly be welcomed. But, we should go a little deeper than that and find out whether the people who are the ratepayers in Madras City are satisfied with the performance and conduct of our Corporations. In olden days, we had the system not only of having elected members on the corporate body but of having certain persons representing special interests. We had the system of Aldermen being elected to the Council but because that led to a certain amount of abuse, it was discontinued. We have come to the system of entirely electing 120 members to the Corporation Council and now it is going to be 150. Without decrying the system of representative local Government, I would like to suggest to the Hon. Minister that it might perhaps be considered, at the present moment, after reviewing the activities of our local bodies, whether it would not be desirable to have a certain number of people elected as representatives of some special interests in the City, which are also very much concerned with the administration of the Corporation, with the payment of the rates, with the provision of amenities by the Corporation and with the efficient management of the Corporation itself. When I refer to special interests, Sir, I refer not only to the various industrialists who have industries located in Madras City but also such bodies which are representative of transport, of commerce, Port Trust and other special interests, which should, in my opinion, find a place on the corporate Body. Of course, there are many who may question the suggestion because these are days when special interests are not sought to be put on such bodies. We, in the Legislative Council, Sir, have certain seats reserved for special interests and in the Rajya Sabha also, there is provision for nominating members to represent certain special interests. I think it is high time, Sir, that at least 15 or 20 per cent of our local bodies, not only in the Madras City Corporation and the Madurai City Corporation but also other local bodies like Municipalities, should have certain special interests represented. I am not, for a moment, suggesting that the Government should have the power to nominate these persons. We could have special constituencies electing certain special representatives. As I said, a number of industries are located in Madras City and they require water-supply, good roads, and other amenities. But, there is nobody in the Corporation to represent these industries. Our Councillors are there but they are

not generally concerned with such wide-ranging things as provision of facilities and amenities. They are perhaps more concerned with the removal of encroachments or with the non-removal of such encroachments. Perhaps they are concerned, to a certain extent, with the rates that are fixed for properties, reduction or enhancement thereof. It is essential that in a big city like Madras or Madurai we should have all interests represented on it. Therefore,my humble suggestion to the Government would be to consider the desirability not of having power of nomination but of setting apart a certain number of seats, so that special interests might be represented. Perhaps a difficulty may arise in that these special representatives should not have the power of voting in a Mayoral election. We are not anxious for that. Let anybody be elected as Mayor by the elected Councillors. But, as long as suggestions made and criticisms levelled by such special representatives are taken into account by the Corporation, I think these representatives would be happy in that their interests are protected.

The other suggestion that I wanted to make was in relation to the power of write off that was given to the Standing Committees in the Corporation. Sir, even in big Corporations, where, out of the Board of Directors, a small committee of three directors may be formed to sanction contracts or to write off irrecoverable dues, there is always a certain limit fixed for such small bodies. The power now being vouchsafed places no limit on the amount of write off or remission of taxes, etc. I think this is a rather sweeping power. Sir, if the Hon. Minister felt that the amount of Rs. 1,000 as limit is very low, he could possibly have fixed it at Rs. 10,000 or at Rs. 15,000. But to give powers to the Standing Committee to write off lakhs of rupees of tax arrears may, in my opinion, lead to an abuse of power, because there is nothing like placing a subject before a general body when it would be fully debated in the Council, On the other hand, if it goes to a small body such as Standing Committee, there is every possibility that it may lead to abuse of power. I hope the Hon. Minister will consider this, because even in the case of Contract Committees in our local bodies, we had raised the limit from Rs. 1,000 to Rs. 5 000 when he brought an amendment three years ago. Therefore, I see no reason why such sweeping powers should be given to Standing Committees.

While I welcome the Bill generally, I would like to state briefly that members are very anxious that the administration of our Corporation should be improved to a vast extent. At present, Sir, I do not know whether it is due to lack of staff or lack of computer facilities—it is extremely difficult for us to approach the Madras Corporation or perhaps any other local body to get some over-payments refunded or to



get birth certificates for our children. I remember, Sir, that four months
ago I applied for the birth certificate of my son who is studying for his
Matriculation—I did not get a birth certificate when he was born although
he was born in Madras City. But the School authorities said that 6-00
it would be safer to have a birth certificate, because the same is required பிற்
in the case of Matriculation examination. I, therefore, applied to the பகல்
Madras Corporation and it is now over four months, Sir. I do not know
whether they have any doubts whether my son was born in Madras.
Whatever it is, a great deal of delay occurs even in routine administra-
tive matters, which, I think, should not occur in these days, when we
should try to improve the efficiency of our administrative services.
The same thing happens, Sir, when property tax assessments are made
and when a certain over-payment is made, and it takes three to four
years; there is not even a reply to our correspondence. Perhaps the
Corporation officials are overloaded with duties and responsibilities
and they have no time. But, I would request the Department of Rural
Development and Local Administration to take a little more interest in
the affairs of our Corporations and to see not only that the number of
Councillors is increased, which, as I said, would give a certain amount
of emotional satisfaction, but what is far more important is to stream-
line the administration, so that even routine matters are not neglected
to the detriment of the tax-payers. Thank you, Sir.

* திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, சென்னை கார்ப்பொரேஷன்
சட்டத்திலும், மதுரை கார்ப்பொரேஷன் சட்டத்திலும் சில திருத்தங்கள்
செய்வதற்காக இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சென்னையைப்
பொறுத்தவரையில், ஏற்கெனவே 100 அங்கத்தினர்களாக இருந்தது
120 அங்கத்தினர்கள் ஆக்கப்பட்டது. அதை இப்பொழுது 150 ஆகக்
கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான் டிலிமி
டேஷன் கமிஷன் சட்ட சபைக்கும் பார்லிமெண்டிற்கும், புதிய 1971
சென்சஸ்படி தொகுதிகளை மாற்றியமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது.
சட்டம் நேற்று பார்லிமெண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது
வந்தால் ஒருக்கால் சென்னை நகரத்திற்கு 14 அல்லது 16 ஸ்தானங்கள்
ஆகலாம். அப்படி வந்தால் 150 என்பது பொருத்தமில்லாமல் போய்
விடும். 160 ஆகச் செய்யவேண்டி வரலாம் அல்லது 140 ஆகச்
செய்ய வேண்டி வரலாம். அதனால் இதை இப்போதே நிறைவேற்ற
வேண்டியது அவசியமா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லுகிற
பொழுதும், பிரேரேபிக்கும்பொழுதும், சட்ட சபைத் தொகுதிகளும்
டிவிஷன் பிரிவினைக்கும் சம்பந்தமில்லாமல் ஆக்கிவிட வேண்டுமென்ற
எண்ணத்தில் இந்த மசோதா நீடிக்கும் என்று சொன்னார்கள். அது
அவ்வளவு பொருத்தமா என்பதை யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். வெகுகாலமாக ஒரு சட்ட சபைத் தொகுதியில் 10
அங்கத்தினர்கள் என்று இருந்தார்கள். அப்புறம் அதை 12 ஆக ஆக்கி

யிருக்கிறோம். இனி லோகல் ஜனத்தொகைப்படி சட்ட சபை ஸ்தானங்களை 15 அல்லது 16 ஆகக் கூட்டலாம். 15 ஆக வந்துவிட்டால் தகராறு இல்லை. சரியாகப் போகும். இல்லையென்றால் கஷ்டம் ஏற்படும் இன்னும் 15 ஆக்கினால், அதே மாதிரி எல்லாமாவட்டங்களிலும் கூட்டும்படி ஏற்படும். இந்த ஒரு விஷயத்தைப் பொறுத்த வரையில், அது வரை பொறுக்கக்கூடாதா என்று அபிப்பிராயம் ஏற்படுகிறது. இல்லை, இந்த மாதிரி ஒன்றுக்கு ஒன்று தொடர்பு தேவையில்லை. சட்ட சபைத் தொகுதிக்குத் தொகுதி தொடர்பு தேவை இல்லை. அது தனி, அது தனியாக இருக்கட்டும். 2½ டிவிஷன் 3½ டிவிஷனுக்கு ஒரு அங்கத்தினர் என்று போடலாம். 10, 15 டிவிஷன் என்று இருந்தால் அது எவ்வளவு சரியாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இரண்டாவது, ஷெட்யூல்ட் வகுப்பினருக்கும் பெண்களுக்கும் இப்பொழுது உள்ள சட்டப்படி ஸ்தானங்கள் ஒதுக்கப்படவில்லை. ஷெட்யூல்ட் வகுப்பினர் 12 பேர் இருக்க வேண்டியது அவசியம். பெண்கள் 6 பேர் அவசியம் கார்ப்பொரேஷனில் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. பொதுத் தொகுதியில் அவர்கள் நின்று தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும். அப்படி வரவில்லை என்றால், அவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று இருப்பதனால் யாரும் அந்தத் தொகுதியில் போட்டி போட முன் வருவதில்லை. எப்படியாவது செலவில்லாமல் தேர்தலில் போட்டியிடாமல், லேசாக நியமனம் செய்யப்பட்டு வந்து விடலாம் என்ற எண்ணத்தில் போட்டி போட வருவதில்லை. அது ஒரு காரணம். 'ரேர்' ஆக ஒருவர் இருவர் தேர்தலில் நிற்க வருகிறார்கள். ஆகையினால் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் 10 வருஷத்திற்கு முன்பு இருந்தது போல, இரட்டை மெம்பர் தொகுதிகள் ஏற்படுத்தலாம். இப்பொழுது அதைக் கூட 15 ஆகவும் 8 ஆகவும் அதிகப்படுத்த இந்த மசோதாவில் இடம் செய்யப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். 12ஐ 15 ஆகவும், 6-ஐ 8 ஆகவும் கூட்டுவது நல்ல ஏற்பாடுதான். ஆனால், அந்த 15, 8, 23 ஸ்தானங்களை ஏதாவது டிவிஷனில் இணைத்து இரட்டை மெம்பர் தொகுதியாக ஆக்கி ஒரு பொது அங்கத்தினர், ஒரு ரிசர்வ் அங்கத்தினர் இரண்டு பேரும் நின்றுதான வர வேண்டுமென்று வைத்துவிட்டால், கண்டிப்பாக தேவையான எல்லோரும் தேர்தலில் வந்து விடுவார்கள். அரசியல் கட்சிகளுக்கு ஒரு கஷ்டமும் இல்லாமல் போகும். நியமனம் வரும்பொழுது அவர்களைப் போடவில்லை, இவர்களைப் போடவில்லை என்று ஆளும் கட்சியாக தற்போது இருக்கும் உங்களுக்கு மட்டுமல்ல, எதிர்க் கட்சியிலிருக்கும் எங்களுக்கும் இந்தத் தலைவலிதான். நாளைக்கு ஆளும் கட்சியாக யார் வந்தாலும், இதே நிலைதான் வரும். ஆகவே, யாருக்கும் அது இல்லாமல் எல்லோரும் தேர்தலில் அவசியம் வந்து நிற்க வழியாக 23 ஸ்தானங்கள் இரண்டு மெம்பர்கள் தொகுதியாகவும், 15 ஷெட்யூல்ட் வகுப்பினர் அல்லது ஷெட்யூல்ட் ட்ரைபுகள் சேர்ந்த 15, பெண்களைப் பொறுத்தவரையில் 8, இந்த 23 ஸ்தானங்கள் இரட்டை மெம்பர் தொகுதியாக தேர்தலுக்கு நிர்ணயிப்பது நல்லது அல்லவா ? ஜனநாயக மரபு தேர்தலில் நின்று வருவது. அப்படி ஏற்பாடு செய்தால், என்ன



குறை ? முன்பிருந்த அரசாங்கம் அப்படிச் செய்து விட்டது. 'ஆகவே' தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம் என்று இதற்கு பதில் சொல்லத் தேவையில்லை. எவ்வளவோ செய்கிறோம். அது மாதிரி இப்பொழுது தேர்தலில் கஷ்டம் வரும்படி செய்யக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, பார்ட் 3-ல் மூன்றாவது ஷரத்தில் ஸ்டாண்டிங் கமிட்டிக்கு, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், ஒரு லிமிட் வரையறை இல்லாமல் எவ்வளவு தொகையானாலும் அவர்கள் 'ரைட் ஆஃப்' செய்வதற்கு ஏற்கெனவே இடமிருந்தது. ஆனால், மதுரை கார்ப்பொரேஷனில் மட்டும் 1,000 ரூபாய் என்று வரையறை செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வரையறையை எடுத்துவிடுகிறோமென்று சொல்லுவது நல்லதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆளும் கட்சிக்காரர்களுக்குத்தான் சிரமம். அவர்கள் நன்மையை முன்னிட்டும், எங்கள் அரசியல் கட்சி நன்மையை முன்னிட்டும் சொல்லுகிறோம். 'பிரஷர்' அதிகமாகும். உதாரணமாக , பொருள் காட்சி நடக்கிறது என வைத்துக்கொள்ளுவோம். வேண்டியவர்கள் குத்தகைக்கு எடுக்கிறார்கள் கார்ப்பொரேஷனில் இருந்து. கடைசியாக 4 நாளைக்குச் சேர்த்து நஷ்டம் 10,000 அதைத் தள்ளிக்கொடு என்பார்கள். இதற்கு இன்று கொடுக்கும்படி 6-10 பிற்பகல்.
வரும். கொடுக்க வேண்டியது அவசியமிருந்தால், தள்ளிக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால், அந்த ஒரு பொறுப்பை பொறுக்குக் குழு விற்குக் கொடுப்பது அவசியமா ? அப்படி ஒரு வரையறுக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாகத் தள்ளுபடி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றாக வேண்டுமென்று வது ஒரு விதி இருந்தால் நலமல்லவா என்பதைச் சிந்திக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ சென்னையில் இல்லை, வரை யறை இல்லை. ஆகவே, மதுரைக்குத் தேவையில்லை என்று சொல்லுவது அழகல்ல. சென்னைக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து வரையறை செய்துவிடுவது தான் சரி. அது இல்லாமல், சென்னையில் இல்லை, ஆகவே மதுரையில் வரையறை இல்லை என்று இல்லாமல் அந்தத் தொகையையும், தள்ளுபடி 'ரைட் ஆஃப்' செய்ய இடம் கொடுப்பது நல்லதல்ல. இதைச் சிந்திக்க வேண்டும். அரசாங்கம் இவ்வளவு தாராள மாக அதிகாரம் கொடுப்பது நல்லதல்ல. வரையறை செய்ய வேண்டு மென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவந்திருக்கிற திருத்தச் சட்ட வரைவை, பொதுப்படை யாக வரவேற்று, கருத்துக்களை வழங்கிய உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலே, முதலிலே 50 தொகுதிகளாக இருந்து, அது நூறாகி, 120 ஆகி, இப்போது 150 ஆக ஆக்க வேண்டிய கட்டத்திற்கு, அதனுடைய மக்கள் எண்ணிக்கை பெருகி வருகிறதென்பதை உணர வேண்டும். சென்னையில் இருக்கிற ஒவ்வொரு தொகுதியிலும் 20,000-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கிற படியால், உறுப்பினர்கள்,

சில பல தொகுதிகளில் இன்றைக்குக் காரியங்களைச் செய்ய முடியவில்லை.
ஆகவே, 150 தொகுதிகளாக்கினால்தான், அந்தந்தத் தொகுதிகள்
சார்பாக, தகுந்த நடவடிக்கைகளை உறுப்பினர்கள் எடுத்து, தங்கள்
கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முடியும். எனவே தான் மாநகராட்சி
மன்றத்தில் இந்தத் தீர்மானத்தைப் போட்டு, அனுப்பியிருக்கிறார்கள்.
ஆகவே, அடுத்த ஆண்டு இறுதியிலே நாம் தேர்தலை நடத்த வேண்டு
மென்பதால், இப்போது கொண்டுவரப்படுகிறது. 1968-லே மாநகராட்சி
யினுடைய தேர்தலை நடத்தினோம். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும்
தேர்தலை நடத்த வேண்டும். அப்படி நடத்த முடியுமா என்று எனக்கு
ஐயப்பாடாக இருக்கிறது. ஏனென்றால் இதில் பல காரியங்கள் நடைபெற
வேண்டும். இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றி, அதற்கென்று
தனி அதிகாரிகளையும், அலுவலர்களையும் நியமித்து, அவர்கள் அதை
ஆராய்ந்து, இந்த 150 டிவிஷன்களை எப்படிப் பிரிக்கலாம் என்று
ஆராய்ந்து, தொகுதிகளைப் பிரித்ததற்குப் பிறகு, மாநகராட்சியின் ஒப்பு
தலுக்கு வைக்கவேண்டும். பிறகு அவர்கள் பார்த்து தேர்ந்தெடுத்து
அரசுக்கு அனுப்ப வேண்டும். அப்படி அரசுக்கு வந்த பிறகு, அரசு
அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். பிறகு ஆட்சேபனைகளுக்கெல்லாம்
இடம் கொடுத்து, அதில் வாக்காளர்களின் கருத்தையும், உறுப்பினர்களின்
ஆட்சேபனைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதற்கு சம்மதம்
கிடைத்த பிறகு, மாநகராட்சியின் தேர்தலை நடத்த வேண்டும். எனவே,
இப்போதே நாம் வேலைகளைத் துவக்கினால்தான், அடுத்த ஆண்டு இறுதிக்
குள்ளாக இந்த 150 வட்டங்களை அமைக்க முடியும். ஏற்கனவே சென்னை
நகரில், 62-வது சட்டப்படி, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியையும்
ஒரு சர்க்கிளாக வைத்து, 10 வட்டங்கள் அந்த சர்க்கிளுடன் வைக்கப்
பட்டிருக்கின்றன. தேர்தல் தொகுதிகள் எல்லை வகுக்கும் ஆணைக் குழு
வால் தொகுதிகள் வரையறுக்கப்பட்டதன் விளைவாக, மாநகராட்சி
யினுடைய தொகுதிகள் 120 ஆக ஆக்கப்பட்டிருக்கின்றன. இப்போது
சட்டமன்ற அடிப்படையில், மாநகராட்சியினுடைய வட்டங்களை வைக்காத
காரணத்தால், சட்டமன்றத் தொகுதியை அடிப்படையாக வைத்து,
இந்த வட்டங்களைப் பிரிக்க வேண்டாமென்று மாநகராட்சி கேட்டுக்
கொண்டிருக்கிறது.

எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சட்டமன்றத் தொகுதிகளுக்கும்
வட்டங்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தால்தான், பணியாற்றுவதற்கு
சௌகரியமாக இருக்குமென்று சொன்னார்கள். சென்னை மாநகரைப்
பொறுத்த வரை, 15 சட்டமன்றத் தொகுதிகள் ஏற்கப்பட்டுவிடுமேயானாலும்
கூட, அதற்கேற்றாற்போல், சட்டப்படி பிரித்துவிடலாம். நாம் நிர்வாக
சௌகரியத்தை யொட்டி, 10, 10 வட்டங்களை ஒவ்வொரு சட்டமன்றத்
தொகுதிக்கும் அமைத்துக் கொள்ளலாம். பதினைந்து என்று வருமா,
16 என்று அமையுமா என்று தெரியவில்லை. இப்போது 'டி-லிமிடேஷன்
கமிட்டி' போட்டதற்குப் பிறகு எவ்வளவு இடங்கள் கிடைக்கின்றன
என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்போது 39 பாராளுமன்ற இடங்கள்
இருக்கின்றன. அவை 41 இடங்களாக வரக்கூடும். ஆனால் 41 இடங்களை
அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 41 பாராளுமன்ற



இடங்களென்றால், அந்த இடங்களை அப்படியேதான் வைத்துக்கொள்ள
வேண்டும். அதற்குக் கீழே இருக்கிற இடங்களை நம்முடைய விருப்பப்படி
சட்டமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளலாம். ஒவ்வொரு பாராளுமன்றத்
தொகுதியின் கீழ் ஏற்கனவே 5 சட்ட மன்றத் தொகுதிகள் என்று
வைத்திருக்கிறோம். சென்ற தடவை 6 தொகுதிகளாக ஆக்கினோம்.
சில மாநிலங்களில் பாராளுமன்றத் தொகுதிக்குக் கீழே 7 சட்டமன்றத்
தொகுதிகளும், சில மாநிலங்களில் 8 தொகுதிகளும், சில மாநிலங்களில்
9 தொகுதிகளும் கூட வந்து சேருகின்றன. பத்து தொகுதிகள் கூட
சில மாநிலங்களில் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் 6 என்று
வைத்திருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியது போன்று
அப்படி ஒரு அமைப்பு வருமேயானால், நல்லது. வெளியிடங்களில் கூட
சட்டமன்றத் தொகுதிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில ஊராட்சி
ஒன்றியங்கள் கூட துண்டாடப்படுகிற நிலை ஏற்படுகிறது. ஒரு சில கிராமங்
கள் துண்டாடப்பட்டு, சில பகுதிகள் ஒரு தொகுதிக்குப் போய்விடுகிற நிலை
ஏற்படுகிறது. எனவே, கூடுமான வரையில், ஊராட்சிய ஒன்றியப் பகுதி
கள் எல்லாம் ஒரு தொகுதிக்குள் அடங்குகிற மாதிரி வருமா என்பதும்
ஐயப்பாட்டிற்குரியதாக இருக்கிறது. அதை நாம் தனியாகக் கவனிக்க
வேண்டும். இந்த 150 வட்டங்களாக ஆக்குவதன் நோக்கமே
அதுதான். இதில் 12 இடங்களில் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி
மக்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெற வேண்டுமென்று வலியுறுத்தியிருக்
கிறோம். அவர்களில் எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அவர்
களைச் சேர்த்து 12 பேர் இருக்க வேண்டும். ஆக 12 பேரில், 6 பேர்
தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால், மேற்கொண்டு 6 பேரை இந்த மாநகராட்சி
மன்றத்திலே "கோ-ஆப்ட்" செய்துகொள்ள வேண்டும். அவர்கள்
பார்த்து 6 பேரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அரசாங்கமோ, ஆணை
யரோ, மற்றவர்களோ நியமிக்க முடியாது. மாநகராட்சி மன்றம்
பார்த்து, அவர்களை 'கோ-ஆப்ட்' செய்துகொள்ள வேண்டுமென்று விதி
இருக்கிறது. ஆகவே முன்னால் 12 இடங்கள் என்றிருந்ததை, 15 இடங்
கள் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி மக்களுக்காக இருக்க வேண்டு
மென்று சட்டம் கொண்டு வருகிறோம். அதே மாதிரி 6 இடங்கள்
பெண்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று இருந்ததை, 8 ஆக நாம் இப்
போது ஆக்குகிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள்
"எப்படியும் 'கோ-ஆப்ட்' செய்து வந்துவிடலாம்" என்ற தைரியத்தின்
அடிப்படையில், பெண்களோ, மற்றவர்களோ, வராத நிலை ஏற்படும்.
அதற்கு வாய்ப்பும் இருக்கிறது என்கிறார்கள். அது வாஸ்தவம்தான்.
அதற்காக இரட்டை மெம்பர் தொகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றால்,
இந்த 150 தொகுதிகளுக்குள்ளாக அடக்க வேண்டிவரும். அதிலே ஏதா
வது இரண்டிரண்டு தொகுதிகளை எடுத்து, இரட்டை மெம்பர் தொகுதியாக்க
வேண்டும். அதிலும் பல சிரமங்கள் எல்லாம் வந்ததன் காரணத்
தாலே, அவைகளை நீக்கினோம். முன்பு சட்டமன்றத் தேர்தலிலேயும்
இப்படி இரட்டை மெம்பர் தொகுதிகளை வைத்துப் பார்த்தோம்.
மாநகராட்சி மன்றத்திலேயும் இரட்டை மெம்பர் தொகுதி இருந்தது.
அதிலே பல சங்கடங்கள் வருகின்றன. மேலும் இத் தொகுதிகளுக்கு
மட்டும் குறிப்பிட்ட சலுகைகள், வசதிகள் இருக்கின்றன. ஆனால் வார்

காளப் பெருமக்களுக்கு, இரண்டு தொகுதிகளுக்கும் சேர்த்து தேர்ந்தெடுக்க வேண்டிய சிரமம் ஏற்படுகிறது. இப்படிப் பல்வேறு கஷ்டங்கள் வந்ததன் காரணமாகத்தான் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் என்று ஆக்கினோம். ஆனால், சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில்..........

திரு கே. ராஜாராம் : இப்போதும் முனிசிபாலிடியில் அப்படித்தான் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்து, அப்படி இருந்தது. அதையும் மாற்றினோம். மாநகராட்சியிலே அப்படி இருந்தது, அதையும் மாற்றினோம். ஆகவே, இதை மறுபடியும் 'காம்ப்ரஹென்சிவ் பில்' வரும்போது மாற்ற முடியுமா என்பதைப் பற்றிப் பார்க்கலாம். 150 தொகுதிகள் ஆக்கிவிட்டு, பிறகு இது பற்றிப் பார்க்கலாம். இந்தக் கட்டத்தில் கூடச் செய்து கொள்ளலாம். ஆனால் அதிலும் பல சிரமங்கள் இருக்கின்றனவென்ற காரணத்தால், இது குறித்து ஆலோசனை செய்ய வேண்டி இருக்கிறது. உறுப்பினர்கள் 2, 2 தொகுதிகளைச் சேர்த்துப் பணியாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. அதிலேயும் நிற்கிற வேட்பாளர்களின் ஜனநாயகத் தேர்தல் முறையையெல்லாம் நாம் கண்டிருக்கிறோம். அதிலே யார் இணைக்கப்படுகிறார்களோ, அவர் ரொம்ப சௌகரியமாக ஒருவருடைய தோளிலே உட்கார்ந்துகொள்ளக் கூடிய அளவுக்கு, இரண்டு தொகுதி யினுடைய பளுவினை ஒருவரே தாங்கக்கூடிய நெருக்கடி ஏற்பட்டதன் விளைவாகத்தான், ஒவ்வொரு தொகுதியாக வையுங்கள் என்ற கூக்குரலும் எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதையெல்லாம் யோசித்துத் தான் இந்த நிலைமை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களே 'கோ-ஆப்ட்' செய்ய வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அதிலே ஏதாவது திருத்தங்கள் வர வேண்டுமென்றால், பின்னால் பார்த்து, எது சௌகரிய மாக இருக்கும் என்பதைக் கவனித்து நாம் செய்ய வேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு எ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே பேசும்போது, மாநகராட்சி மன்றத்தினைப் பொறுத்த வரையில், அதனுடைய வளர்ச்சியிலும், வசதியிலும், அக்கறை யுள்ள பல்வேறு தரப்பினர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் மாநகராட்சியினுடைய வளர்ச்சிக்குரிய கருத்துக் களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பு இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையில் குறிப்பாகத் தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களும மற்றவர்களும் அதிலே இடம் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதை எப்படி வைப்பது என்பதில்தான் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. ஆகவே, அதற்காக, தனியாக ஒரு தொகுதி, 'கான்ஸ்டிடியுன்சி' அமைப் பது என்றால், அதிலே பல இடர்ப்பாடுகள் ஏற்படும். அதாவது வாக்காளர் களைச் சேர்ப்பது போன்ற நிலைமைகள் ஏற்படும். அல்லது அவர்களுக் கென்று சில பல தொகுதிகளை ஒதுக்குவது பொருந்தி வராது. ஆனால் ஒன்று மட்டும் செய்யலாம். இப்படிச் செய்வதைப் பற்றி யோசிக்கலாம்,



இப்போது 8 பெண்களைக் கட்டாயம் 'கோ-ஆப்ட்' செய்து கொள்ள வேண்டு மென்று சொல்வது மாதிரி, 15 தாழ்த்தப்பட்ட அல்லது பழங் குடியைச் சேர்ந்தவர்களைக் கட்டாயமாக 'கோ-ஆப்ட்' செய்துகொள்ள வேண்டு மென்று இருக்கிற மாதிரி, இவர்களையும் 'கோ-ஆப்ட்' செய்து கொள்ள லாம். இப்படி வருபவர்கள், எக் காரணத்தைக் கொண்டும் மேயராகவோ அல்லது டெபுடி மேயராகவோ நிற்கக் கூடாதென்று அறிவிக்கப்பட வேண்டும். ஏற்கனவே இருந்த 'ஆல்டர்மேன்' மாதிரியாக்கி, அப்படி வருகிறவர்கள் மேயர் பதவிக்கோ, அல்லது துணை மேயர் பதவிக்கோ நிற்கக் கூடாதென்ற ஒரு விதியைச் சேர்த்துவிடுவோமேயானால், அதை மனதிற் கொண்டு யாரும் அதிலே வந்து நுழைந்துவிடாமல் தடுப்ப 6–20 பிற பகல். தற்கு வழி வகை செய்யலாம். ஆனால் அப்படிப் புகுத்த ஆரம்பித்தால், அது எங்கே போய் முடியுமோ என்பதிலேதான் சங்கடங்களெல்லாம் வருகின்றன. ஒரு தொழிற் துறைக்கு என்று கொண்டுவந்தால், அப்புறம் மற்றத் தொழிற் துறைகளுக்குக் கொண்டுவர வேண்டும். டாக்டர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு எங்களுக்கு என்று வருவார்கள். எங்களுக்கு வேண்டுமென்று ஒவ்வொருவரும் சொல்வார்கள். அதிலே என்னென்ன சங்கடங்கள் என்று ஆராயும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப் பற்றி எங்காவது வேறு பல நகராட்சி மன்றங்களைப் பற்றியும் ஆராயும்படி கேட்டுக்கொண்டிருக்கிறேன். வேறு எங்காவது தனிப்பட்ட மன்றங்களில்—பம்பாய், கல்கத்தா அல்லது வேறு மாநகராட்சி மன்றங்களில் அப்படியிருந்து சுமுகமாக இருக்கு மானால், அதைக் கூட நாம் சேர்த்துக்கொள்ளலாம். காம்பிரஹென்சிவ் பில்லிலே அதைப் பற்றி நாம் ஆராயும்படியாக நான் கேட்டுக்கொள் கிறேன். வேறு பல மாநகராட்சி மன்றங்களிலே அப்படிப்பட்ட சூழ்நிலை கள் இருக்குமானால், அதையும் யோசித்து நல்லதொரு முடிவைச் செய்ய லாமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது வரியைத் தள்ளிவிடுவதைப்பற்றி நிலைக் குழுவில் சில அதிகாரங்கள் வைத்திருக்கின்றோம். ஆனால் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலும் ஒரு வரம்புக் கொள்கையில்லை. மதுரை மாநக ராட்சியில் ஆயிரம் ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அது அரசாங் கத்திற்கு வர வேண்டுமென்று சொல்ல முடியாது. ஆனால் அதிலே எது வந்தாலும், கடைசியிலே அதற்கு ஓ.கே. கொடுக்க வேண்டியிருக் கின்ற காரணத்தினால், ஒரு ஆயிரம் ரூபாய் வரை வரம்பு என்று சொல்லுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எக்காரணம் கொண்டும் அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து வசூலிக்கவே முடியாது என்ற நிலை அல்லது கட்டம் வருகிறபோது, இந்த நிலைக் குழுவிற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தள்ளிவிட அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதனால் நினைத்தபடியெல்லாம் செய்ய முடியாது. ஏனென்றால், தணிக்கையாளர்கள், ஆடிட்டர்கள் தள்ளிவிட்டது தவறு என்று சொன்னால், தள்ளிய குழுவின்மீது சர்சார்ஜ் விதிக்க இப்போதே விதியிருக்கிறது. ஆகவே முறை தவறி ஒரு குழு முறையில்லாது ஒரு வருக்கு 2 லட்சம், ஒருவருக்கு 3 லட்சம் தள்ளிவிட்டோம் என்று சொல்லிவிட்டாலும், அந்த ஒருவர் பற்றி "அப்ஜக்ஷன்" எழுப்பி

அதைத் தள்ளுவதற்கு காரணமாயிருந்தவர்கள்மீது சர்சார்ஜ் விதிக்க நம் சட்டத்திலேயே இடம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதைச் சுலபமாக தள்ளிவிட முடியாது. ஏற்கனவே இந்தச் சட்டத்தில் வரி என்ற இனமில்லாமல் வரி பலவற்றைத் தள்ளலாம் என்று இருந்தது. அதனால் அதிலே தணிக்கையாளர்கள், ஆடிட்டர்கள் "அப்ஜக்ஷன்" கிளப்பினார்கள். "டாக்ஸ் என்று இல்லாத காரணத்தினால் டாக்ஸ் தள்ளப்பட உரிமையுண்டா ?" என்று. சட்டத்திலே டாக்ஸ் என்று ஒரு பதம் இல்லை. வேறு பல தன்மைகளிலே இருக்கிறது. ஆகவேதான் "டாக்ஸ்" என்று இருந்தும், சில பேர் 10 ரூபாய், 20 ரூபாய், 30 ரூபாய் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபோது, அதைத் தள்ள வேண்டுமென்றால், அங்கே அப்ஜக்ஷன் வருகிறது.

டாக்ஸ் தள்ளும்படியாக எழுதுகிறீர்களே நீங்கள் என வரியைத் தள்ளுகிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். எனவே இந்த டாக்ஸ் என்ற பதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே எப்படியிருந்தாலும் முறையாக அல்லாதவற்றைத் தள்ளிவிட எந்தக் குழுவிற்கும் உரிமையளிக்கப்பட வில்லை. அதன்மீது அப்ஜக்ஷன் கிளப்புவதற்கு வழிவகைகள் இருக் கின்றன. அந்த நிலைக் குழுக்களால், வரிவ வராத இனம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு, தணிக்கையாளர்களும் ஒப்புக்கொண்டு இது வராத இனம் என்று தள்ளப்படுகிறது. அந்தந்த ஆண்டிலேயே வராது—8 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கழித்துத்தான்—அதைத் தள்ளிவிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இதிலே அதிகக் கஷ்டங்கள். ஏற்படாது என்ற காரணத்தால், இருக்கிற அடிப்படை முறைகளை வைக்க வேண்டுமென்ற முறையில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

* திரு கே. ராஜாராம் : வசூலிக்க முடியாத இனம் என்ற முறையில் தள்ளப்பட்டது என்பது ஒரு வகை. வசூலிக்க முடியும் அந்த நபரிடத்தில் என்று இருந்தும்கூட சில காரணங்களை முன்னிட்டு நஷ்டம் அடைந்து விட்டார், அதற்காக தள்ளுபாடு செய்கிறோம் என்று இருக்கவே கூடாது. அப்படிச் செய்வதாக இருந்தால், அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றுத் தான் செய்ய வேண்டும். இதை விதிகளிலாவது வற்புறுத்த வேண்டும். இல்லையென்றால், லஞ்சத்துக்கு இடம் கொடுக்கும். தவறான எண்ணங் களுக்கும் இது இடம் கொடுத்துவிடும். அப்படியில்லாமல் இருப்பதற்கு ஏதாவது "செக்" இருக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் இதைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதாவது ஒரு குறிப்பிட்ட தொகை, ஆயிரம் ரூபாய் அளவுக்குமேல் தள்ளுவதாக இருந்தால், அப்படி முடிவு செய்தால், அரசாங்கத்தின் அனுமதியை, அங்கீகாரத்தைப் பெற்று Rectify பண்ண வேண்டும் என்று அரசு விதி செய்தால், அது அமலுக்கு வரும். ஆகவே இந்த மாதிரித் திருத் தத்தைச் செய்வதால், தாமதமாகும், பழையபடி அசெம்பளிக்குப் போக வேண்டியிருக்கும் என்பதைத் தவிர்த்து விதிகளிலாவது அதை நிர்ண யிக்குமா என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது "The sum is irrecoverable" என்றுதான் நாம் தெளிவாகப் போட்டி ருக்கிறோம். வசூலிக்கவே முடியாது என்பதைத் தான் தள்ள வேண்டுமென்று இருக்கிறது. வசூலிக்கக்கூடிய இனத்தைத் தள்ளிவிட முடியாது. அப்படித் தள்ளிவிட்டாலும்கூட, அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு முறையிருக்கிறது. ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் வரையறை மதுரை மாநகராட்சிக்கு இருக் கிறது. அது நகராட்சி மன்றமாக இருந்து மாறின காரணத்தினால் அந்த உச்சவரம்பு இருக்கிறது. அது இல்லாது சென்னை மாநகராட்சி மன்றம் இருந்துகொண்டிருக்கிறது. எப்படியிருந்தாலும் கடைசியாக "இர்ரெகவ ரபில்" என்று சொல்லும்போது, ஆயிரம் ரூபாய்க்கு மேல் என்று வரம்பு இருந்து, அது பல கட்டங்களைத் தாண்டி இங்கே வந்து, நாம் மறுபடியும், அதற்கு இல்லையில்லை, நீங்கள் வசூலித்துத்தான் தர வேண்டும் என்று சொல்லக்கூடிய கட்டம் எந்த ஒரு பைலிலேயும் ஏற்படுவதில்லை. ஆயிரம் ரூபாய்க்கு மேலே போனாலும்கூட அது "இர்ரெகவரபில்" என்று சிபாரிசு செய்துவிடுவார்களேயானால், அதை எப்படியாவது வசூலித்துத்தான் தரவேண்டுமென்று திருப்பி அனுப்பக் கூடிய முறை இதுவரை ஒரு பைலிலும் இல்லை. கடைசியிலே அதை ஓ.கே. செய்ய வேண்டிய அவசியம்தான் ஏற்படுகிறது. ஆகவே அனாவசிய மான கட்டம் வரையிலும் வரவேண்டியதில்லை என்பதற்காக அந்த உச்ச வரம்பு மதுரை மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையிலும் இருக்க வேண்டாமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான விதி முறைகள் செய்யும்போது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுவதுபோல், ரொம்பச் சங்கடங்கள் இருக்குமானால், ஆட்சேபணை வருமானால், அதைப்பற்றிக் கவனிக்கலாம் என்று சொல்லி, இந்தத் திருத்தத்தை வரவேற்று இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு வய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இந்த வார்டுகள் "ரீ டிஸ்டிரி பியூஷன்" ஐ வரப்போகிற கார்ப்பொரேஷன் எலெக்ஷன் முடிந்த பிறகு, அமல் நடத்தினால், நல்ல முறையில் இருக்கும் என்று நான் கருது கிறேன். இந்த "ரீ டிஸ்டிரிபியூஷனை" கார்ப்பொரேஷன் எலக்ஷன் வருவதற்குள்ளாக அவசரம் அவசரமாகப் பண்ணுவதைவிட, எலக்ஷன் காரியம் அப்படியே நடந்து கொண்டிருக்கட்டும், இதை அமல் படுத்து வதை எலக்ஷனுக்குப் பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று எண்ணு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஒரு வட்டாரத் திலே, 20,000, 22,000, 24,000 போர்கள் இருக்கிறார்கள். அந்தச் சங்கடங் களை நீக்கவேண்டும். அது மட்டுமல்ல, மறுபடியும் அமல்படுத்துவது என்றால், 5 ஆண்டுக் காலம் ஆகும். 5 ஆண்டு என்று இப்போது தேர்தலுக்குக் காலம் வைத்துவிட்டோம். ஆகவே இப்போது எடுத்தால் இன்னும் ஒரு ஆண்டுக் காலத்திலேயே செய்து முடித்துவிட முடியும். இதற்கு அதிகாரிகளையெல்லாம் போட்டு, வார்டுகளைப் பிரிக்கின்ற

வேலைகள் நடந்து, வருகிற "அப்ஜக்ஷன்"ஐ விரைவிலே தீர்த்துக் கொண்டுவர முடியும், அதை நிறைவேற்ற முடியும். இல்லாவிட்டால் அதிலே வேறு பல சங்கடங்களெல்லாம் ஏற்படக்கூடும்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/72) ஆய்வுக்கு எடுத்துக கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 லிருந்து 11 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகின்றேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/72) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



**(5) 1972-ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72).**

மாண்புமிகு திரு செ. மாதவன்: சட்ட மன்றத் தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன் முடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

நகரியங்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்படும் நகரியக் குழுக்களில் மாநில சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், லோக் சபை உறுப்பினர்களுக் கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று துணைச் சட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. அரசு மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண் டுள்ளது. அதற்கிணங்க, 1940-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 11/1940), 1954-ஆம் ஆண்டு குற்றாலம் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 16/1954), 1954-ஆம் ஆண்டு பவானிசாகர் நகரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1954) ஆகிய சட்டங்களைத் திருத்த முடிவு செய்தது.

இச்சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக்கொண்டு இவ்வரைவினை இம்மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட "1972-ம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்குக் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, "சட்டப் பேரவை யால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

---

@244—247-ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972-ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானி நகரியம் (திருத்த) சட்டப் பேரவை சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72)

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/72) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேறப்பட்டது.

**Mr. CHAIRMAN** : I have to announce to the House that the House will meet at 10 a.m. tomorrow. There will be no Question Hour and the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1972 will be taken up.

6-30 p. m. The House will now adjourn and meet again tomorrow at 10 a.m.

The House then adjourned.

## 8. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. STATUTORY RULES AND ORDERS.

37. Notification issued with G.O. Ms. No. 2782, Revenue, dated the 24th October, 1972, in regard to exemption from payment of sales tax by any dealer on the sales of goods to the Assistant High Commissioner for Malaysia at Madras for his official use. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

38. Notification issued with G.O. Ms. No. 2729, Revenue, dated the 19th October, 1972, in regard to date of commencement of the Tamil Nadu Betting Tax (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 9 of 1972). [*Laid on the table of the House under section* 10 (4) *of the Tamil Nadu Betting Tax Act*, 1935 (*Tamil Nadu Act XX of* 1935).]

39. Notification issued with G.O. Ms. No. 2730, Revenue, dated the 19th October, 1972, in regard to date of commencement of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 3 of 1972). [*Laid on the table of the House under section* 29 (2) *of the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act*, 1939 (*Tamil Nadu Act 6 of* 1939).]



40. Notification issued with R.Dis. No. 154566/72-E5, dated the 25th September, 1972, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Uppiliapuram Town Panchayat in Tiruchirappalli district. [*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

41. Notification issued with R. Dis. No. 155937/72-E5, dated the 7th September, 1972, in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Kalakad Town Panchayat in Tirunelveli district [*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

42. Notification issued with G.O. Ms. No. 2100, Rural Development and Local Administration, dated the 1st October, 1972, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board, for a further period of one month from the 3rd October, 1972. [*Laid on the table of the House under section* 29 (3) *of the Tamil Nadu Khadi and Village Industries Board Act*, 1959 (*Tamil Nadu Act* 18 *of* 1959).]

43. Notification issued with G.O. Ms. No. 2511, Home, dated the 28th September, 1972, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Tamil Nadu Cinemas (Regulation) Act*, 1955 (*Tamil Nadu Act IX of* 1955).]

44. Notification issued with G.O. Ms. No. 2026, Rural Development and Local Administration, dated the 25th September, 1972, in regard to amendments to the rules relating to the reservation of appointments to the Backward Classes. Scheduled Castes and Scheduled Tribes in the services under Municipal Councils. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

45. Notification issued with G.O. Ms. No. 2316, Rural Development and Local Administration, dated the 2nd November, 1972, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board, for a further period of one month from the 3rd November, 1972. [*Laid on the table of the House under section* 29 (3) *of the Tamil Nadu Khadi and Village Industries Board Act*, 1959 (*Tamil Nadu Act* 18 *of* 1959).]

| தொடர் எண்ணும், சங்கங்களின் பெயரும். | மோசடி செய்த நபர்களின் பெயர். | மோசடி செய்யப்பட்ட தொகை. | கண்டு பிடிக்கப்பட்ட தேதி. | காவல் துறையில் புகார் செய்யப்பட்ட தேதி. | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4 தி. சிறுங்கானூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம். | 1 திரு. எம். முத்தையா, தலைவர். 2 திரு. எம். பெரியசாமி, செயலர். 3 திரு. பி. ஷண்முக அம்பலம், பஞ்சாயத்தார். 4 திரு. கே. ஆர். முத்து அம்பலம், செயலர். 5 திரு. ஏ. செல்லையா, மேற்பார்வை யாளர். 6 திரு. ஏ. எஸ். முருகேசன், எழுத்தர். 7 திரு. ஏ. எஸ். குமரகுருபரன், மேற்பார்வையாளர். 8 திரு. கே. தர்மராஜன, மேற்பார்வை யாளர். | 4,833·60 | 25–9–1970 | 24–11–1966 | போலீஸ் புலன் விசாரணையில் உள்ளது. |
| 5 பெரியகரை வேளாண்மை கடன் சங்கம். | 1 திரு. எம். எஸ். நித்தியானந்தம், தலைவர். 2 திரு. எஸ். சோலையா, இயக்குநர். 3 திரு. எஸ். ரத்தினம், இளநிலை ஆய்வாளர். | 4,698·70 | 25–10–1968 | 16–12–1968 | டை |
| 6 வரப்பூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம். | 1 திரு. சி. கே. லக்ஷ்மணன், தலைவர். 2 திரு. வி. ராமசாமி, எழுத்தர். 3 திரு. பி. சக்கரைசுவாமி, மேற்பார்வை யாளர். | 323·75 | 18–12–1969 | 30–5–1970 | டை |
| 7 திருப்பக்கோட்டை வேளாண்மை கடன் சங்கம். | 1 திரு. சுந்தர உடையார், தலைவர். 2 திரு. அருணாசலம், தலைவர். | 5,306·93 | 13–2–1968 | 6–9–1970 | டை |
| 8 எஸ். எஸ். கோட்டை வேளாண்மை கடன் சங்கம். | 1 திரு. பி. முத்தையா சேர்வை, தலைவர். | 2,500·92 | 8–7–1969 | 30–12–1970 | டை |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 மாங்குடி இணைப்பு பண்ணை சங்கம். | 1 திரு. பி. நல்லமெய், தலைவர். 2 திரு. கே. பி. கார்மேகம், இயக்குநர். | 5,542·63 | 21–10–1967 | 15–11–1971 | டை |
| 10 திருவேகம்புத்தூர் .. .. | 1 திரு. என். கிருஷ்ணசாமி ஐயங்கார், தலைவர். 2 திரு. எஸ். உடையப்பன், இயக்குநர். 3 திரு. ஏ. நாராயணன், மேற்பார்வை யாளர். | 9,086·41 | 27–10–1969 | 1–12–1971 | டை |
| 11 சருகை வேளாண்மை கடன் சங்கம். | திரு. ஏ. நாராயணன், மேற்பார்வை யாளர். | 6,280·69 | 28–10–1969 | 4–12–1971 | டை |
| 12 சோமநாத மங்கலம் அரசு பணியாளர் கூட்டுறவு சங்கம். | திரு. கே. ஆர். அம்பலம். .. .. | 5,470·00 | 12–1–1970 | 27–12–1970 | மேல் நடவடிக்கை அரசாங்கத்தால் தடை செய்யப் பட்டுள்ளது. |
" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு @ (எண் 4) (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 54/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு (எண் 4) (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/72) பரிந்துரைகள் செய்வதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு கோரிக்கையின் பேரில், அதில் கண்ட முக்கியமான செய்திகளை மட்டும் நினைவுக்குக் கொண்டுவந்து, அரசினுடைய செயலுக்கு முன்னே வைக்க ஆசைப்படுகிறேன். பொதுவாக மாணிக்கவாசகர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு திருவாசகம் பாடும்பொழுது, " ஊரரார் தத்தம் மனத்தன பேசிட எஞ்ஞான்று போல சாவதுவே " " பொதுவாக ஊரார்கள் மற்றவர்களைப்பற்றிப் பேசும்பொழுது அவரவர்கள் மனத்தில் இருப்பதைப் பற்றித்தான் பேசுவார்களே தவிர மற்றவர்களைப் பற்றி ஆராய மாட்டார்கள். ஆராய்ந்துகொள்ள முயற்சிக்க மாட்டார்கள், அது சமுதாயத்தின் பெரிய குறை" என்று சொன்னார்கள். அதுபோன்ற சுழல் நம் அரசுக்கு ஏற்பட்டாலும், அந்தச் சுழலை மிகச் சிறந்த சூழ் நிலையில் ஈடுகொடுத்திருக்கிற அமைச்சரவையின் முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறேன். அறம் என்பது சமுதாயத்தின் உயிர்நாடி போன்றது. நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சில செய்திகளை

---

@ 343-345 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1972 டிசம்பர் 16

நினேவூட்டும்போது, சில மனப்போக்குகள், காலப்போக்கில்
சமுதாயத்திற்கு தீங்கு தருமென்று குறிப்பிட்டார்கள். "அறம்
கொல்லும் நஞ்சுத்தான் நன்மை புறம் சொல்லும் புன்மையார்
காணப்படும்" என்றார் திருவள்ளுவர். அறத்தைச் சொல்லுகிற
போது, சொல்லுகிற இடத்தில், சொல்கிற வகையில், சொல்லுகிற
முறையில் சொல்ல வேண்டுமென்று திருவள்ளுவர் மிகக் கடுமையாக
வற்புறுத்தினர். அவற்றையெல்லாம் நாம் நினேவில் கொண்டு
யாருக்காவது எங்காவது சந்தேகங்கள் இருக்குமானால் தெளிவு
படுத்தவேண்டும் என்பது ஒரு அரசின் கடமை என்ற அடிப்படையில்,
நம் தமிழக அரசு அதன் மீது ஏற்பட்ட ஐயங்களையெல்லாம் மிகத்
தெளிவாக அச்சிட்டு சமுதாயத்திற்குத் தெளிவுபடுத்துகிற வகையில்
சான்றாண்மையை பெற்றுக்கொண்டிருப்பதற்கு மிகவும் பாராட்டி, இந்த
உயர்ந்த மரபுகளை நாட்டின் அரசியல் முறையில் அதிகமாகப்
பயன்படுத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கோரிக்கையின் மீது சொல்லுகிறபோது, கல்வித் தரத்
தைப்பற்றி நேற்று முன்தினம் பேசியிருக்கிறேன். பல பள்ளிகளில்
மாணவர்களுடைய விகிதாச்சாரத்திற்கு அதிகமாக மாணவர்கள்
இருந்தால், அந்தந்த விகிதாசாரத்திற்கு இவ்வளவுதான் ஆசிரியர்கள்
என்று ஒதுக்கீடு செய்து அதற்குத் தகுந்தாற்போல் ஆசிரியர்கள்
நியமிக்க அனுமதிக்கிறார்களே தவிர, பள்ளி மாணவர்கள்
எண்ணிக்கை கூட இருந்தாலும் ஆசிரியர்களை நியமிப்பதில்லை. பல
ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளை அடைத்துப் போடுகிற அவல
நிலைமை இருந்தால், தரமான கல்வி உண்டாக்க முடியாது. அன்பு
கூர்ந்து மாநில அரசு ஆரம்பப் பாடசாலை அளவிலாவது மாணவர்
ஆசிரியர் விகிதாச்சாரத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.
அந்த வகையில் எவ்வளவு நிதி செலவானாலும் கூட பரவாயில்லை.
இளமைக் காலம் சிந்தனைப் பயிற்சி தொடங்குகிற காலம். மேலே
உயர்நிலைப் பள்ளி, கல்லூரிக்குப் போகிறவர்கள் புத்தகத்தைப்
பார்த்துப் படித்துக் கொள்ளுவார்கள் அல்லது எழுதிக்கொள்ளு
வார்கள். ஆனால் ஆரம்பப் பாடசாலையில்தான் சிந்திக்கப் பயிற்சி
பெறுகிறார்கள். அங்கே மாணவர்கள் கடமையை ஏற்றுவார்களே
யானால், ஆரம்பப் பாடசாலையின் அடித்தளம் பலவீனமாக வகையில்
போகும். அந்த வகையில் நமது அரசு தக்க கவனம் செலுத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 டிசம்பர் 16] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

அண்மையில் மழை, புயல் வெள்ளம் காரணமாக நிறைய நமக்கு
இழப்பு ஏற்பட்டிருப்பதை நம்முடைய அமைச்சரவையின் அறிக்கை
மூலம், பிற செய்திகளின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. இதற்
காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போர்க்கால உணர்ச்சி
யோடு விரைவாக இந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று குறிப்
பிட்டார்கள். பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்
கணக்கான ஏக்கர் வெள்ளப் பாழில் இரண்டாவது போக சாகுபடி
பாழாகி இருக்கிறது. அவற்றிற்கு வெள்ள நிவாரண உதவியுடன்
உடனடியாக விதை போன்றவற்றைக் கிட்டேயிருந்து விவசாய
அதிகாரிகளை அனுப்பி, நம்முடைய வேளாண்மை அமைச்சர்
அவர்கள் உதவி, மிக விரைவாக மறுபடியும் சாகுபடி செய்தால்தான்
நம்முடைய உணவுத் தேவைகளை நிறைவு செய்ய முடியும். அந்த
வகையில் அதிகமான கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

முன்பு துணை மதிப்பீட்டுக் கோரிக்கையின் மீது பேசும்போது,
கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஊராட்சி மன்றங்கள் ஆயிரம்
ரூபாய்க்கு உட்பட்ட அல்லது ஐநூறு ரூபாய்க்கு உட்பட்ட
வருமானம் உள்ளவை கூட இருக்கின்றன. அவற்றிற்கு இந்தக் குறிப்
பிட்ட விழுக்காடு பங்கு கொடுத்தால்தான் அவை முன்னேற முடியும்.
அதல்லாமல், ஐந்தாண்டுத் திட்டம் அல்லது அபிவிருத்தித் திட்டங்கள்
என்று சொன்னால், நிச்சயமாக ஊராட்சி மன்றங்கள் எந்தக்
காலத்திலும் முன்னேற முடியாது. ஆகையினால் ரூ. 1,000-க்கு
உட்பட்ட வருமானம் வருகிற ஊராட்சி மன்றங்களின் தனிப்பட்டியல்
எடுத்து, அவைகளுக்கு இந்த நிதிப் பங்கீட்டிலிருந்து விதிவிலக்குக்
கொடுத்தால், சிறப்பாக ஊராட்சி மன்றங்கள் முன்னேற முடியும்
என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய
தனிப்பட்ட வேண்டுகோள். பல இடங்களில் பின் தங்கிய சமூகத்
தைச் சேர்ந்தவர்கள், சில குறிப்பிட்ட சமூகங்கள் தலைமை அல்லது
வழி காட்டுபவர்கள் இல்லாமல் மலிந்திருக்கிறார்கள். "லீடர்ஷிப்"
இல்லாத சமுதாயம். பின்தங்கியிருந்தாலும் கூட "லீடர்ஷிப்"
கிடைக்குமானால், அரசிடம் கோரிக்கையைச் சொல்ல, கிளர்ச்சி
செய்ய அல்லது வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க ஊழியர்கள்
கிடைப்பார்கள், தொண்டர்கள் கிடைப்பார்கள். இப்படிப்பட்ட
சமுதாயம் நாட்டிலே பல்வேறு இடங்களிலே திட்டு திட்டாக இருக்
கின்றது. எனவே "லீடர்ஷிப்" உருவாகாத, தலைமை உருவாகாத

10-10 மு.ப. அல்லது வழிகாட்டுவோர் உருவாகாத சமுதாயத்திற்கு அதிக தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்கெனத் தனிப்பட்டியலொன்றினை உருவாக்கி அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைத்து............

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்</u>: தலைவரவர்களே, அப்படி கவனிக்கப்படாத பிற்பட்ட சமுதாயத்திற்கெல்லாம் நமது மாண்புமிகு தலைமை அமைச்சர் அவர்களே தலைவராக இருந்து எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு வருகின்றார் என்பதனைச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்</u>: மிக்க நன்றி. மகிழ்ச்சி. நாட்டிலே பழமொழியொன்று சொல்லுவார்கள், "எரியும் விளக்கினைத்தான் தூண்டுவார்கள்" என்று. ஒரு விளக்கினைத் தூண்டி விட வேண்டும் என்று சொன்னால், எரிந்து கொண்டு இருக்கும் விளக்கைத்தான் தூண்டிவிடுவார்களேயல்லாது எரியாத விளக்கினை யாரும் தூண்டுவதில்லை. ஒன்றைச் சொல்லும் போது, அது நிகழவில்லை, செய்யப்படவில்லை என்று பொருள் இல்லை. அது நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. அது மேலும் சிறப்பாகச் செய்யப்பட வேண்டும் என்பது. எரியும் விளக்கினைத் தூண்டி விடுவதுதான், எரியாத விளக்கினைத் தூண்டிவிடுவது பழக்கமில்லை.

இந்தப் பிரச்சினையினைக் குறிப்பிடும்போது, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வலையர் சமுதாயத்தைப்பற்றிச் சொல்லாமல் இருக்க முடியாது. "வலையன்" என்று சொல்லும் அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களில் இன்றும் இராமநாதபுரம் மாவட்டம் முழுவதையும் எடுத்துக்கொண்டால்கூட இரண்டுபேர்கூட ஊராட்சி மன்றத் தலைவர்களாக வந்திருக்கமாட்டார்கள். அந்த அளவிற்குப் பின்தங்கிய சமுதாயத்தினைச் சார்ந்த அவர்களுக்கு "லீடர்ஷிப்" இல்லை என்பதை நினைவூட்டி இப்படிப்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களை நாம் இன்னும் அதிகமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்த நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவையாக உள்ளன, அவற்றை வரவேற்று முடிக்க ஆசைப்படுகிறேன். நன்றி.



<u>மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர்களில் பதினைந்து பேர் பேச வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே உரையினை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உறுப்பினர்கள் பேசி பத்து நிமிடங்களானால் மணியடிக்கப்படும்.

<u>திரு. எம். ராஜா அய்யர்</u>: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் ஆசிரியர்களுக்குச் செய்துள்ள நன்மைகளுக்காக அரசை மனமாரப் பாராட்டினார்கள். அதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதில் எந்தவிதமான கருத்துவேற்றுமையும் இருக்க முடியாது. ஆனால் ஒன்று, அரசு பிறப்பித்துள்ள பல ஆணைகள் அமுலாக்கப்படுவதில் காலதாமதம் விரும்பத்தகாத அளவில் இருக்கின்றது. நேற்று கேள்வி நேரத்தில் வெளியாயிற்று: மருத்துவ விடுப்பில் ஆசிரியர் ஒருவர் இருக்கும் போது, அவர் இறந்துபோவாரானால், அவர் இறந்த தேதி வரையிலும் அவருக்கு ஊதியம் உண்டு என்று திட்டவட்டமாக அரசு ஆணை இருக்கின்றது. ஆனால் நமது மாநகராட்சியில், "அவர் திரும்ப வந்து சேரவில்லை" என்ற காரணத்திற்காக அவருக்கு ஊதியம் கிடையாது என்று நான்கு ஆண்டுகளாகச் சாதித்துக் கொண்டு வந்ததைப் பார்த்தோம். "திரும்ப வந்து சேர முடியாது என்பதற்காகத்தானே இறந்த தேதி வரையிலும் அவருக்கு ஊதியம் உண்டு என்று இருக்கின்றது. அவர் வந்து சேர முடியாது என்பதால் தானே அவருடைய வாரிசுக்கு உண்டு என்று ஆணையிருக்கின்றது" என்று எடுத்துச் சொல்லியும் அந்தக் குடும்பத்திற்கு எந்தவிதமான நலன்களும் கொடுக்கப்படாமல் சட்டமன்றத்தில் ஒரு கேள்வி எழுப்பப்பட்ட பிறகுதான் நியாயம் வழங்கப்படுவது என்றால், இந்த அதிகாரிகளுடைய மனப்போக்கு இன்னமும் மாறவில்லை என்பதைத் தான் எடுத்துக்காட்டுகின்றது. எனவே அரசு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டவுடனே அவற்றைச் செயல்படுத்துவதற்கு எல்லா அதிகாரிகளும் முழு ஊக்கத்துடன், சேவை மனப்பான்மையுடன், ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கிராஜுவிடி கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1—6—1970க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கும் 2—10—1970க்குப் பின்னால் ஓய்வு பெற்றவர்களுக்கும் இவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால்

[திரு. எம். ராஜா அய்யர்] [1972 டிசம்பர் 16

1—6—1970 முதல் 2—10—1970 வரையில் ஓய்வு பெற்றவர்களைப் பற்றியும் திட்டவட்டமாக அரசு ஆணைகள் இருந்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை, கொடுப்பதில் பெரும் கால தாமதம் ஏற்படு கிறது. அது இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓய்வு ஊதியம்பற்றி ஒரே ஒரு வேண்டுகோளினை மறுபடியும் விடுக்க ஆசைப்படுகின்றேன். இது ஒரு சிக்கலான பிரச்சினை. அதற்கு என ஒரு திட்டமிடுவது மிகவும் சிக்கலான ஒன்றாகும். எனக்கு நினைவிற்கு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கல்விப் பொறுப்பினை ஏற்றிருந்த நாளில் அவர்கள் மருத்துவ மனையில் இருந்த காலத்தில் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இது சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதாக இருந்தது. இந்த ஓய்வு ஊதியம் பற்றி மூலக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, உடனே எழுந்து, "தயவு செய்து துணைக் கேள்விகள் கேட்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்கள். "இது என்னவென்றே புரியவில்லை, படித்தால் தலை சுற்றுகிறது. எனவே துணைக் கேள்விகள் கேட்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண் டார்கள். இவ்வளவு சிக்கலான பிரச்சினையை இந்த அரசு தீர்த்து வைத்திருக்கின்றது. எல்லோருக்கும் ஓய்வு ஊதியம் உண்டு என்ற நிலை இருக்கின்றது. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு அடிப் படையில் 1—6—1970-க்கு முன்பு ஓய்வு பெற்றிருந்தால் ஒன்று, அதற்குப் பின்னால் ஓய்வு பெற்றிருந்தால் ஒன்று என்றுதான் இருக் கின்றது. ஒரே அடிப்படையில், கல்லூரி ஆசிரியர்களாக இருந்தா லும் சரி, துவக்கப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, ஓய்வுகால ஊதியம் கடைசியில் பெற்ற ஊதியத்தில் எட்டில் மூன்று பங்கு இருக்கும் என்று போட்டுவிட்டால், முறையாக இருக்கும் என்றே கருதுகின்றேன். கல்லூரி ஆசிரியர்கள் 250-க்கு மேல் பெறவில்லை. பி.டி. ஆசிரியர்கள் ஸீலிங் லிமிட்டில் மாட்டிக்கொண்டிருந்தார்கள். எனவே இதில் எட்டில் மூன்று என்று போடுவதில் கஷ்டமில்லை என்று நினைக்கின்றேன். எல்லோருக்கும் ஒரே சீராக இருக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று. ஒரு குறையை நான் இன்று அரசின் கவனத்திற் குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆசிரியர்களுக் கெல்லாம் ஓய்வு ஊதியத்துடன் கிராஜுவிடியும் கிடைக்கப்பெற



1972 டிசம்பர் 16] [திரு. எம். ராஜா அய்யர்]

வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. அதற்காக
ஆசிரியர்கள் எல்லோரும் அரசினைப் பாராட்டுகின்றனர் என்பது
உண்மை. ஆனால் ஒரு சாராருக்கு மாத்திரம் ஒரு நியாயமற்ற முறை
நீடிக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரி
யர்களுக்கு அவர்கள் பெறும் கிராசுயிடியிலிருந்து அவர்களுடைய
பிராவிடெண்டு ஃபண்டு நிதியில் மேனேஜ்மெண்டு காண்ட்ரிப்யூஷன்
ஏதாவது இருந்தால், அதைக் கழித்துக்கொண்டு மீதத்தினைக் கொடுப்
பதாக, அதற்கு ஏற்ற உத்திரவு இருக்கின்றதாக நான் கருதுகின்றேன்.
இது சரியில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
ஏனென்றால், இந்த மேனேஜ்மெண்ட் காண்ட்ரிப்யூஷன் 100க்கு
மூன்று ரூபாயாக ஏப்ரல் 1964 வரையில்தான் கிடைத்தது. அன்றைக்கு
சாதாரண தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைத்த ஊதிய
மானது மிகக் குறைவானதாகும். 40 ஆண்டுகளுக்கு முன்பு பி.டி.
பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குத் தனியார் பள்ளியில் நாற்பது
ரூபாய்தான் ஊதியம். போர்டு ஹைஸ்கூலுக்குச் சென்றால், 60
ரூபாய் கிடைக்கும். அரசுப் பள்ளிக்குச் சென்றால். ரூ. 75 கிடைக்கும்.
இந்த வேறுபாடுகள் பல ஆண்டுகளாக இருந்துவந்தன. தனியார்
பள்ளி ஆசிரியர்கள் பெறும் ஊதியம் நமது அரசுப் பள்ளிகளில்
கொடுக்கப்படும் ஊதியத்திற்குச் சமமாக இருக்க வேண்டுமென்ற
நிலை வருவதற்குப் பல ஆண்டுகள் ஆயிற்று. ஆகவே 3 சத வீதம்
என்று சேர்க்கப்படுவதால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக்
கிடைக்கும் ஊதியமானது அரசாங்க ஆசிரியர்களுக்குக் கிடைக்கும்
ஊதியத்தைவிட அதிகமாக ஆக வேண்டுமென்ற நிலையில்லை என்பதை
அரசு உணர வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.
மற்றொரு சிக்கல் இதில். இதை உண்மையான நோக்கத்துடன்
பார்த்தால்தான் தெரியும். ஆனால் உள்ள விதிகளின்படி பார்த்தால்
இது தெரியாது. தனியார் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய
நிலையே வேறு. அவர்கள் தனியார் துவக்கப் பள்ளியில் நுழையும்
போது, நிர்வாகத்தினருக்கு ஒரு மூன்று அம்சத் திட்டத்தின்கீழ் தான்
அவர்கள் நுழைகின்றார்கள் என்று சொல்லுவது வழக்கம்.
"ட்ரைபிள் பெனிஃபிட் ஸ்கீம்" என்று சொல்லப்படும் இது ஆசிரி
யர்களுக்கு இல்லை. நிர்வாகஸ்தர்களுக்குத்தான் அது பொருந்தும்.
சேரும்போதே மூன்று மாதச் சம்பளத்திற்குக் குறையாது நிர்வாகத்
திற்குக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக, சாதாரண ஒரு
வெள்ளைத்தாளில் ஒன்றும் எழுதாத காகிதத்தில் தங்கள் கையெழுத்
தைப் போட்டுத் தர வேண்டும். வேண்டும்போது இவர்களை
மிரட்டுவதற்கு இதை நிர்வாகத்தினர் ஒரு ராஜினாமா கடிதமாகப்

[திரு. எம். ராஜா அய்யர்] [1972 டிசம்பர் 16

1—6—1970 முதல் 2—10—1970 வரையில் ஓய்வு பெற்றவர்களைப் பற்றியும் திட்டவட்டமாக அரசு ஆணைகள் இருந்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை, கொடுப்பதில் பெரும் கால தாமதம் ஏற்படு கிறது. அது இல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓய்வு ஊதியம்பற்றி ஒரே ஒரு வேண்டுகோளினை மறுபடியும் விடுக்க ஆசைப்படுகின்றேன். இது ஒரு சிக்கலான பிரச்சினை. அதற்கு என ஒரு திட்டமிடுவது மிகவும் சிக்கலான ஒன்றாகும். எனக்கு நினைவிற்கு வருகின்றது, மாண்புமிகு உறுப்பினர்கள் பலருக்கும் நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கல்விப் பொறுப்பினை ஏற்றிருந்த நாளில் அவர்கள் மருத்துவ மனையில் இருந்த காலத்தில் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இது சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியதாக இருந்தது. இந்த ஓய்வு ஊதியம் பற்றி மூலக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, உடனே எழுந்து, "தயவு செய்து துணைக் கேள்விகள் கேட்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்கள். "இது என்னவென்றே புரியவில்லை, படிக்கத் தலை சுற்றுகிறது, எனவே துணைக் கேள்விகள் கேட்க வேண்டாம்" என்று கேட்டுக்கொண் டார்கள். இவ்வளவு சிக்கலான பிரச்சினையை இந்த அரசு தீர்த்து வைத்திருக்கின்றது. எல்லோருக்கும் ஓய்வு ஊதியம் உண்டு என்ற நிலை இருக்கின்றது. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு அடிப் படையில் 1—6—1970-க்கு முன்பு ஓய்வு பெற்றிருந்தால் ஒன்று, அதற்குப் பின்னால் ஓய்வு பெற்றிருந்தால் ஒன்று என்றுதான் இருக் கின்றது. ஒரே அடிப்படையில், கல்லூரி ஆசிரியர்களாக இருந்தா லும் சரி, துவக்கப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, ஓய்வுகால ஊதியம் கடைசியில் பெற்ற ஊதியத்தில் எட்டில் மூன்று பங்கு இருக்கும் என்று போட்டுவிட்டால், முறையாக இருக்கும் என்றே கருதுகின்றேன். கல்லூரி ஆசிரியர்கள் 250-க்கு மேல் பெறவில்லை. பி.டி. ஆசிரியர்கள் ஸீலிங் லிமிட்டில் மாட்டிக்கொண்டிருந்தார்கள். எனவே இதில் எட்டில் மூன்று என்று போடுவதில் கஷ்டமில்லை என்று நினைக்கின்றேன். எல்லோருக்கும் ஒரே சீராக இருக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று. ஒரு குறையை நான் இன்று அரசின் கவனத்திற் குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆசிரியர்களுக் கெல்லாம் ஓய்வு ஊதியத்துடன் கிராஜுவிடியும் கிடைக்கப்பெற



1972 டிசம்பர் 16] [திரு. எம். ராஜா அய்யர்]

வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. அதற்காக ஆசிரியர்கள் எல்லோரும் அரசினைப் பாராட்டுகின்றனர் என்பது உண்மை. ஆனால் ஒரு சாராருக்கு மாத்திரம் ஒரு நியாயமற்ற முறை நீடிக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரி யர்களுக்கு அவர்கள் பெறும் கிராசுயிடியிலிருந்து அவர்களுடைய பிராவிடெண்டு ஃபண்டு நிதியில் மேனேஜ்மெண்டு காண்ட்ரிப்யூஷன் ஏதாவது இருந்தால், அதைக் கழித்துக்கொண்டு மீதத்தினைக் கொடுப் பதாக, அதற்கு ஏற்ற உத்திரவு இருக்கின்றதாக நான் கருதுகின்றேன். அது சரியில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இந்த மேனேஜ்மெண்ட் காண்ட்ரிப்யூஷன் 100க்கு மூன்று ரூபாயாக ஏப்ரல் 1964 வரையில்தான் கிடைத்தது. அன்றைக்கு சாதாரண தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைத்த ஊதிய மானது மிகக் குறைவானதாகும். 40 ஆண்டுகளுக்கு முன்பு பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குத் தனியார் பள்ளியில் நாற்பது ரூபாய்தான் ஊதியம். போர்டு ஹைஸ்கூலுக்குச் சென்றால், 60 ரூபாய் கிடைக்கும். அரசுப் பள்ளிக்குச் சென்றால், ரூ. 75 கிடைக்கும். இந்த வேறுபாடுகள் பல ஆண்டுகளாக இருந்துவந்தன. தனியார் பள்ளி ஆசிரியர்கள் பெறும் ஊதியம் நமது அரசுப் பள்ளிகளில் கொடுக்கப்படும் ஊதியத்திற்குச் சமமாக இருக்க வேண்டுமென்ற நிலை வருவதற்குப் பல ஆண்டுகள் ஆயிற்று. ஆகவே 3 சத வீதம் என்று சேர்க்கப்படுவதால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் ஊதியமானது அரசாங்க ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைவிட அதிகமாக ஆக வேண்டுமென்ற நிலையில்லை என்பதை அரசு உணர வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றொரு சிக்கல் இதில். இதை உண்மையான நோக்கத்துடன் பார்த்தால்தான் தெரியும். ஆனால் உள்ள விதிகளின்படி பார்த்தால் இது தெரியாது. தனியார் துவக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய நிலையே வேறு. அவர்கள் தனியார் துவக்கப் பள்ளியில் நுழையும் போது, நிர்வாகத்தினருக்கு ஒரு மூன்று அம்சத் திட்டத்தின்கீழ் தான் அவர்கள் நுழைகின்றார்கள் என்று சொல்லுவது வழக்கம். "ட்ரைபிள் பெனிஃபிட் ஸ்கிம்" என்று சொல்லப்படும் இது ஆசிரி யர்களுக்கு இல்லை. நிர்வாகஸ்தர்களுக்குத்தான் அது பொருந்தும். சேரும்போதே மூன்று மாதச் சம்பளத்திற்குக் குறையாது நிர்வாகத் திற்குக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக, சாதாரண ஒரு வெள்ளைத்தாளில் ஒன்றும் எழுதாத காகிதத்தில் தங்கள் கையெழுத் தினைப் போட்டுத் தர வேண்டும். வேண்டும்போது இவர்களை மிரட்டுவதற்கு இதை நிர்வாகத்தினர் ஒரு ராஜினாமா கடிதமாகப்

பயன்படுத்திக்கொள்ளுவார்கள். மூன்றாவதாக, இதுதான் மிக முக்கியமானது, தனியார் துவக்கப் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் எல்லாம் மேனேஜ்மெண்டு கொடுக்கக்கூடியதாக உள்ள கான்டிரிபூஷனை அவர்களே கொடுக்க வேண்டிய நிலை வைத்தியமாக இருந்தது. பல பள்ளிகளில் மேனேஜ்மெண்டு கான்டிரிபியூஷனை ஆசிரியர்கள்தான் கொடுத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்போது அதை அவர்களுடைய கிராசுவிட்டியிலிருந்து பிடித்துக் கொள்ளுவது என்ற நிலை இருக்கின்றது. இது நியாயம் என்று தோன்றவில்லை. இதை மறுபரிசிலனை செய்து இவர்களுக்கு உரிய கிராசுயிடியைக் கொடுத்துவிட வேண்டும். அவர்கள் பிராவிடெண்டு பண்டு நிதியிலுள்ள பணம் முழுதும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதற்கான முறையில் அரசு உத்திரவிட வேண்டுமென்று விரும்புகின்றேன். போடும் உத்திரவுகள் காலதாமதமின்றி எல்லா மட்டங்களுக்கும் போய்ச் சேர வேண்டியது அவசியம். நல்ல பயனுள்ள உத்தரவுகள்கூட ஆசிரியர்களைப் போய்ச் சேருவதற்குப் பல வாரங்கள் ஆகிவிடுகின்றன. மதுரையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. "தமிழ்நாடு குழு"வுடைய ஒரு பரிந்துரையின்படி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகையொன்றினை ஒரு மாத காலத்திற்குள் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா அல்லது பழைய முறையிலேயே இருக்க விரும்புகின்றார்களா என்பதுபற்றிய "ஆப்ஷன்" உத்தரவின் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆணை அவர்களிடம் போய்ச் சேரவே பல வாரங்கள் ஆகியிருக்கின்றன. எனவே பரிந்துரையின் பலன் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. அப்படிக் கிடைக்காமல் போய்விட்டவர்களுக்கு அதன் பலன் கிடைக்கும்படி அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மு.ப.
19–20

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, இந்த மாமன்றத்தில் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்தின் சார்பாக நடைபெற்றிருக்கின்ற பருத்தான பணிகளைப் பாராட்டியிருக்கிறார்கள். அதே சமயத்தில் எதிர்க் கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னமும் இந்த அரசாங்கம் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நேற்றைய முன்தினம் பேசுகிறபோது, எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் நி. ந. ஆர். கே. அவர்கள் உணர்ச்சி பூர்வமாக சில கருத்துக்களை விவசாயப் பிரச்சினை





பற்றிச் சொன்னார்கள். அவைகளிலே பெரும்பாலும் முக்கிய ஈடுபாடும், விவசாயப் பெருங்குடி மக்கள் மீது நம்பிக்கையும், அவர்கள் எதிர்காலம் வளமாக இருக்க வேண்டுமென்ற எண்ணமும் கொண்ட இந்த அரசாங்கம் சில கருத்துக்களை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என் விருப்பத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள், உழவன் உள்ளத்திலே புயல் இருக்குமானால், வயலில் வளம் காண முடியாதென்று சொன்னார்கள். நாம் போடுகிற மிகப் பெரிய சட்டங்கள், உருவாக்குகிற திட்டங்கள், நாட்டினுடைய சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற நோக்குடன் போடுகிற திட்டங்கள் தஞ்சாவூர் நிலச்சுவாந்தார்களை எண்ணி, திருச்சியில் வேறு பல மாவட்டங்களில் உள்ள மிகப் பெரிய நிலச்சுவாந்தார்களை மனதில் வைத்துப் போடுகிற திட்டங்கள். இவற்றால் சாதாரண நாட்டு மக்களை, விவசாயிகளைப் பாதிக்கிற அளவிற்குக் கூட நிலைமை உருவாகிவிடுகிறது. நாம் போடுகிற சட்டத்தின் உண்மைத் தத்துவத்தை அங்கேயிருக்கிற அதிகாரிகள் பயன்படுத்துகிறபோது, எல்லா விவசாயிகளையும் ஏக கண்ணோட்டத்தோடு பார்த்து நிறைவேற்றுகிற போது, பாதிப்பு நிலைமை வந்து விடும். அதைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுடைய அருமையைத் பெருக்கத்தக்க அளவிற்கு, விவசாயிகளுடைய உரிமைகளைப் பாதுகாக்கத்தக்க அளவிற்கு அவர்களுடைய உழைப்பை நம்பியிருக்கின்ற குடும்பத்திற்கு உத்தரவாதம் தரத் தக்க அளவிற்கு அரசாங்க நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்ற பொது நோக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அதே சமயத்தில், கடந்த சில திங்களாக தமிழ் நாட்டில் நடைபெற்ற பலாத்கார கிளர்ச்சி, பலாத்கார வெறிச் செயல், ஒரு சாருடைய அரசியல் கட்சிக்காரர்கள் ஏனோ அந்தக் குற்றம் தங்களுக்குச் சம்பந்தமில்லையென்ற நோக்கத்தோடு விமரிசனம் செய்தது, உங்களுக்குத் தெரியும். நாட்டில் எந்தப் பக்கம் பலாத்காரம் தலை தூக்கினாலும், அங்கே போலீஸ் வரவழைக்கப்படுகிறது. அவர்கள் அப்படிக் கடமையாற்றுகிறபோது அவர்களுடைய கடமையில் அதிக பட்சம் போலீஸ் அத்து மீறல் என்று கருதப்படுகிறது. எந்தப் போலீஸ்காரர் தன் விருப்பத்திற்காக வேண்டி, பொழுதுபோக்கிற்காக வேண்டி இந்தக் காரியங்களைச் செய்கிறார்கள்? அப்படிப்பட்ட

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1972 டிசம்பர் 16

நிலைமையை அவர்களுக்கு உருவாக்குகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறையமைச்சர் அவர்கள் தாக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் நன்றாக இருக்கிறார்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மன்னிக்கவும், உணவு அமைச்சரவர்கள் தாக்கப்பட்டார்கள். அப்போது எதிர்க் கட்சி சார்பிலிருந்து இதற்காக எந்த ஒரு கண்டனமும் வரவில்லை. முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் இப்போது உணவு அமைச்சராக இருக்கிற திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் இராமநாதபுரத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகிறபோது தாக்கப்பட்டார்கள். மாற்றுக் கட்சிக்காரர்கள் இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கவில்லை. விருதுநகரில் மாணவர்கள் என்ற பெயரால் இரண்டாயிரம் பேருக்கு மேல் ஊர்வலம் நடத்தி, தனியார் ஷெட்டிலிருந்த அரசாங்கப் பேருந்தை எடுத்து நடு ரோட்டில் வைத்து தீயிட்டுக் கொளுத்தினார்கள். இதை மாண்புமிகு மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆர்.கே. போன்றவர்கள் கண்டித்திருந்தால், அந்த மாவட்டத்தின் பண்பாட்டைக் காப்பாற்றியிருக்க முடியும். இப்படிப் பல பிரச்சினைகள். திருச்சியில் நடந்த சம்பவம், நெல்லையில் நடந்த சம்பவம் இவைகளுக்கெல்லாம் நீதி விசாரணை கேட்கிறோம். நீதி விசாரணை என்பது இப்போது இந்தக் கருணை மிக்க அரசாங்கத்தில் தினமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் இப்படிப்பட்டவைகளுக்கு நீதி விசாரணை இல்லை. கையில் "ஓட்டர் லிஸ்டு" வைத்திருந்தவர்கள் மீது பொய் வழக்கு போட்டபோது, நியாயம் வழங்கப்படவில்லை. அந்த நிலைமைகள் மாறி, இன்று சௌஜன்யமான நிலைமையில் எல்லாத் தரப்பிலும் தமிழ் நாட்டின் பண்பாட்டிற்கு ஊனம் ஏற்படுகிறபோது, அபகீர்த்தி ஏற்படுகிறபோது, அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி லாபம் பாராமல் பொது நோக்குடன் இருந்தால், இத்தகைய தன்மைகளைத் தடுத்து நிறுத்த முடியும்.

மு.ப
10-2

சமீபத்தில் நடைபெற்ற புயலால், வெள்ளத்தால், தமிழ் நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ரூ. 20 கோடிக்கு மேல் நஷ்டம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் மெத்தப் பணிவன்போடு முதலமைச்சரவர்களிடம் ஒன்றை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன். பல மாநிலங்கள் வெள்ளத்தால், புயலால் சேதப்பட்ட போதெல்லாம் தலைமையமைச்சரவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு பல கோடி ரூபாய்களை அந்த மாநிலங்களுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே வறட்சியின் காரணமாகப் பெற்ற தொகையைப் போல நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த முறையும் ஏராளமான தொகையை மத்திய அரசாங்கத்திலிருந்து பெற்று, நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற இழப்பினை, பொருளாதாரச் சீர்கேட்டை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசாங்கத்தின் முயற்சி இருக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1972 டிசம்பர் 16] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

ஒரு சிறிய பிரச்சினை, இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பரந்த மாவட்டம். அதனுடைய போலீஸ் நிர்வாகம் ஒரே சூப்பிரண்டு கையில் இருக்கிறது. மண்டபத்தில் கிளர்ச்சி என்றாலும், அங்கே பேற்கே சேத்தூரிலே கிளர்ச்சி என்றாலும், ஒரே தலைமை இருக்கிற காரணத்தினால், அவரே கவனிக்கவேண்டிய நிலைமையிலே இருக்கிறது. அது இன்றையதினம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருப்பது போல, போலீஸ் நிர்வாகத்திலும், கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தை ஒரு தனி மாவட்டமாக ஆக்கி, அங்கு ஒரு தனி மாவட்டப் போலீஸ் அதிகாரி, மேற்கு இராமநாதபுரத்தை ஒரு மாவட்டமாக ஆக்கி அங்கு ஒரு தனி மாவட்டப் போலீஸ் அதிகாரி இருந்தால் அங்கு சட்ட, ஒழுங்குப் பிரச்சினைகளை நேரடியாகக் கவனிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். இதை அருள் கூர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் வளர்ச்சி சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். நாம் பெருமைப்பட்டுச் சொல்லிக்கொள்ள முடியும். கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சார இணைப்பைக் கொடுத்து விட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை போடுகிறோம். உத்தரவாதம் கொடுத்து வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் காரியங்களையெல்லாம் ஊராட்சி மன்றங்கள் செய்கின்றன. மக்களோடு, அன்றாடப் பிரச்சினைகளில் நேராகச் சந்தித்து அவர்களுடைய ஆக்கப் பணிகளில் பங்குகொள்கிற ஒரேயொரு இன்ஸ்டிட்யூஷன் இந்த உள்ளாட்சி மன்றங்கள்தான். இந்த உள்ளாட்சி மன்றங்கள் தனித்து இயங்குவதற்கும், நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்து நிதியை வளர்ப்பதற்குப் பல காரியங்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. இவைகளை

நிர்வாகம் செய்கிற பி.டி.ஓ.க்களுக்கு முழு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருக்குக் கீழே பணியாற்றுகிற பல பேர்களுக்கு "கேடர்" அந்தஸ்து கொடுக்கப் பட்டிருக்கிறது. அவருக்குக் கீழே பணியாற்றுகிற விவசாய விஸ்தரிப்பு அதிகாரிக்கு "கேடர்" அந்தஸ்து. அவருக்குக் கீழே பணியாற்றுகிற கால்நடை மருத்துவருக்கு "கேடர்" அந்தஸ்து. 1967க்குப் பின்னால் கொடுத்திருக்கிறோம். அதைப் போலவே இள நிலைப் பொறியாளருக்கு "கேடர்" அந்தஸ்து கொடுத்திருக்கிறோம். இப்படி பி.டி.ஓ.க்களுக்குக் கீழே பணியாற்றுகிற பல துறையினரைக் கைதூக்கி விட்டிருக்கிறோம். அவர்கள், நாங்களெல்லாம் "கேடர்" அந்தஸ்து பெற்றுவிட்டோம், எங்களுக்கு மேலேயிருக்கின்ற கமிஷனர், ஆணையாளர் "கேடர்" அந்தஸ்தில் இல்லை. அவருக்குக் கீழே ஏன் நாங்கள் பணியாற்றுவது என்று சொல்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. "கோ-ஆர்டினேஷன்" ஏற்படுத்துவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அவர்கள் அன்று பேர்களையும் கீழே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நாம் மிகப் பெரிய காரியங்களைச் செய்கிறோம். சாதாரணமாக ஹையர் கிரேடு மாஸ்டராக இருந்து அப்படிச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். அந்தப் பதவியில் இருக்கிற ஹையர் கிரேடு மாஸ்டராக இருந்து பேசியிருக்கிற ஒரு மாஸ்டர் வரையில் செகண்டரி கிரேடு கொடுத்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் நம்முடைய அவையில் இந்த நாட்டுத் திட்டங்களைக் குறித்துப் பார்த்திருக்கிறார்கள். அவைகளைப் படித்துப் பார்த்தால், இவ்வளவு பெரிய காரியங்களை இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் செய்திருக்கிறோமே என்று பெருமைப்படக்கூடிய அளவிற்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம். இன்னொரு நல்ல காரியத்தைச் செய்து மக்கள் மத்தியில் சென்று நிலைத்து நின்று இந்த அரசாங்கம் ஏழை மக்கள் மத்தியில் இடம் பெற்றுவிடுமேயென்று மற்றும் கட்சிக்காரர்கள் இதை திருப்பிவிடுகிறார்கள் என்றாலும், அதை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. மக்கள் தாம் மகேசன் தொழும் சமயம் என்று அவர்கள் திருப்பிச் சொல்லக் காத்திருக்கிறார்கள். நாம் நன்மை செய்தாக வேண்டும். இந்த உள்ளாட்சி மன்றங்கள் தனித்து இயங்குவதற்கு முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இந்த ஒன்றிய ஆணையாளரின் அந்தஸ்தை உயர்த்தினால், அவர் தன்னிச்சையாக, சுதந்திரமாக இயங்க முடியும். ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். பல பள்ளிகள் அவர் நிர்வாகத்தின் கீழ் செயல்படுகின்றன. அப்படிச் செயல்படுகிற பள்ளிகளை அந்த ஆணையாளர் முறைப்படுத்தி, பயன்படுத்திக்



கொள்ளவும் அதே சமயத்தில் ஆசிரியர்களை மாறுதல் செய்வதற்கும் அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் மாறுதலில் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெறக் கூடாது என்று சொல்லப்பட்டதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். உண்மையில் மக்கள் பிரதிநிதிகள் தலையிடாமல் அவர்கள் நிர்வாகம் நடைபெற வேண்டும். அந்த உரிமை அந்த ஆணையாளர் பொறுப்பில் நம்பிக்கை வைத்து கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத் திற்கும் கல்வி அதிகாரிகள் போட்டு 2,000 ஆசிரியர்களை மாறுதல் செய்கிற அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 200 பள்ளிகளின் மேற்பார்வைப் பொறுப்பை இந்த ஆணையாளரிடம் கொடுத்து, அவர் இந்த மாறுதல் சம்பந்தமாக உத்தரவு டி.இ.ஓ.விடம் பெற வேண்டுமென்று போட்டிருக்கிறோம். இதனால் ஒரு அதிகாரத்தை இரண்டு அதிகாரிகளுக்குக் கொடுத்து அவர்களை மோதவிட்டு, நான் பெரியவனா, நீ பெரியவனா என்று மோத இந்தப் பிரச்னையில் ஒரு குழப்பத்தை நாமே உருவாக்கி விடுகிறோம். பி.டி.ஓ.க்களுக்கு மேலே ஆர்.டி.ஓ. இருக்கிறார். கலெக்டர் இருக்கிறார். பி.டி.ஓ. தவறு செய்தால் அவரைக் கண்காணிக்க முடியும். ஒரு ஆசிரியர் தவறாக நடந்து விட்டார் என்று அந்த ஊர் மக்கள் அவரை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இரண்டு ஆசிரியர்களிடம் மனமொத்த மாறுதலை வாங்கி நாங்களே உத்தரவு போட்டு அனுப்பினோம். இப்போது டி.இ.ஓ. தன்னிடம் "கன்கரன்ஸ்" வாங்காமல் எப்படிப் போட்டீர்கள் என்று கேட்கிறார். அந்த ஆசிரியர் இரவில் தவறு செய்து அவரைக் கையும் களவுமாகப் பிடித்திருக்கிறார்கள். அவர் அந்த ஊரில் இருந்தால் ஆபத்து என்று அவரை மாற்றினால், இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதனால், டி.இ.ஓ. கன்கரன்ஸ் வாங்கிப் போடுகின்ற நிலைமை இருக்கக் கூடாது. மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்த பி.டி.ஓ.க்களை நம்பி, அவர்களுக்கு அதிகாரம் முழுவதையும் அளித்து அவர்கள் பணியாற்றுவதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரேயொரு வார்த்தை. நாம் ஏராளமான கல்விச் சாலைகளைத் தோற்றுவித்திருக்கிறோம். இராமநாதபுரம் மாவட்டத்தில் 1967க்குப் பின்னால் புதிய கல்லூரிகளைத் தோற்றுவித்திருக்கிறோம். இளையாங்குடி, கமுதி, அருப்புக்கோட்டை போன்ற ஊர்களில் கல்லூரிகள் வந்திருக்கின்றன. கல்விக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகமாக ஆக்குவதை விட "குவாண்டிடியை" அதிகமாக ஆக்குவதை விட, "குவாலிடி"யில் கவனம் செலுத்தியாக வேண்டும். ஆசிரியர்,

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1972 டிசம்பர் 16

மாணவர் விகிதாசாரத்தைக் குறைத்தால் வேலையில்லாத ஆசிரியர்களை, ஏற்கெனவேயுள்ள பள்ளிகளில் போட்டு தரத்தை உயர்த்த முடியும். இன்றையதினம் பல தனியார் பள்ளிகள் அரசாங்கத்திலிருந்து உத்தரவுகளை வாங்கி விட்டு, தங்களுடைய சொந்த வளர்ச்சிக்கு அந்தப் பள்ளிகளையெல்லாம் பயன்படுத்துகின்றனர். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உரையை முடிக்கின்றேன்.

மு.ப. 10-30 திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று தமிழ் நாட்டிலே நீண்ட நாள் வறட்சிக்குப் பின்னர்—1969-லிருந்தே எங்கள் மாவட்டத்தில் வறட்சி என்று கருதுகிறேன். அதற்குப் பின்னர்—பெரும் புயல் இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை அரசியலிலும், இன்றைக்கு ஆளும் பொறுப்பில் இருக்கக் கூடிய அங்கத்தினர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இன்றைக்கு அவர்கள் கட்சிப் பூசலில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு அனுப்பிய பதிலை இந்த அவைக்கு வைத்தார்கள். அவர்கள் உட்பூசல் எந்த அளவுக்கு ஒரு புயலாக வெடித்தது என்பதைப் பார்க்கும்பொழுது மிக மிக வருத்தமாகவும் வேதனையாகவும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் சாட்டிய குற்றங்கள் அனைத்தும் அரசாங்கத்தில் நடந்த ஊழல்களா அல்லது தனி வாழ்க்கையில் நடந்த ஊழல்களா என்று பார்த்தால், அவர்கள் தனி வாழ்க்கையில் இருக்கக் கூடிய பரிதாப நிலைமை தான் இன்று அரசியலில் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, மிக மிக வருத்தப்படும் நிலையிலிருக்கிறோம். திரு. காமராஜர் அவர்கள் ஏழைகள் வாழ வேண்டும், படிக்க வேண்டும், சமுதாயமும் நாடும் செழிப்புடன் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஆரம்பித்த இலவசக் கல்வி, அழிபடும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. 5 மைலுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியென்றும், 300 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பப் பள்ளியென்றும் ஆங்காங்கே கல்லூரிகள் என்றும் ஏற்படுத்தினர். கல்வியின் பயன் இன்று மறுக்கப்படும் நிலையில், மாணவர்கள் அடிபடும் நிலையில், கல்லூரிகளுக்கும் ஆரம்பப் பள்ளிகளுக்கும் இன்று மாணவர்கள் செல்லவில்லை என்ற ஒரு நிலை தமிழ் நாட்டில் பரவலாக ஏற்பட்டிருக்கிறது என்பதைப்

மு.ப. 10-2

பார்க்கும்பொழுது, இந்தக் கட்சிப் பூசல் நாட்டுப் பிரச்னையாக வேண்டுமா என்ற சூழ்நிலையில் இருக்கிறோம். இதையெல்லாம் வளர்ப்பது அவசியமா என்று பொது மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக ஊழல் என்று கூறினார்கள். மக்களிடை பே



1972 டிசம்பர் 16] [திரு. எல். பலராமன்]

இது ஊழல் மிக்க அரசாங்கமாக இருக்கிறது என்று பரவலாகப் பேசப்பட்டாலும், அதற்குப் பொறுப்பானவர்கள் அந்த ஊழல் எங்களிடம் இல்லை என்று, கடைசி காலத்தில் இராமாயணத்தில் சீதை பேரில் கூறிய களங்கத்தைப் போக்க சீதா பிராட்டி தீக்குளித்தது போன்று, களங்கத்தைப் போக்க ஏதாவது ஒன்று செய்ய வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பொறுப்புள்ள அங்கத்தினராக இருக்கும் நான் ஒப்புக்கொள்ளலாம். எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களா என்று பார்த்தால், ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்த அவைக்குச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சபையிலுள்ள பொறுப்புள்ள அங்கத்தினர் ஒப்புக்கொள்கிறார், பொது மக்கள் ஏற்க மாட்டார்கள் என்றால், பொது மக்கள் பொறுப்பற்றவர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா ?

திரு. எல். பலராமன் : மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், பொது மக்களை நான் ஏதோ பொறுப்பற்றவர்கள் என்று கூறுவது போன்ற கற்பனையைச் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், அதை நான் மனமாறக் கூற முடியாது. பொது மக்கள் பொறுப்பானவர்கள். பொறுப்பிலுள்ளவர்கள், இந்த நாட்டை நல்ல முறையில் நடத்திச் செல்ல வேண்டுமென்று ஆர்வமுடையவர்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : ஒருவர் யோக்கியன் என்றால், மீதி அயோக்கியர்கள்.

திரு. எல். பலராமன் : கூறிய குற்றச்சாட்டுகளைப் பொது மக்கள் நம்ப முடியாத நிலையில், தகுந்த பதில் இல்லையென்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதற்குக் காரணம் கூற வேண்டுமென்றால், ஊழல் என்று கூறும்பொழுது, பொறுப்பிலுள்ளவர்கள் தான் அதை விளக்கமாகக் கூற வேண்டும். அந்தக் குற்றச்சாட்டைக் கூறியவர்கள் நீதி விசாரணை வேண்டுமென்று கோரினார்கள். அந்த நீதி விசாரணை முடியாது என்ற நிலையில்தான் ஆளும் கட்சியினர் இருக்கிறார்கள் என்பது பரவலாக மக்களால் நம்பப்படுகிறது. நீதி விசாரணைக்கு ஆளும் கட்சியினர் என்ன செய்தார்கள் என்ற நிலையை நாம் பார்க்க வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலும் வழி வகுப்பார்களா என்று அறிய இந்த அவை மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[திரு. எல். பலராமன்] [1972 டிசம்பர் 16

அந்த அளவுக்கு நீதி விசாரணை இருக்குமானல், அதை ஆளும் பொறுப்பில் இருப்பவர்கள் தான் கூற வேண்டும். அது தான் ஒரு நல்ல சாங்கோபாங்கமான வழியாக இருக்குமென்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அந்த முறையில் பொது மக்களுக்குத் தெளிவாக விளக்கம் தர முடியும். அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர்கள் பொது மக்களிடம் ஏற்பட்ட களங்கத்தை நிவர்த்தி பண்ண முடியாது. ஆட்சிப் பொறுப்பில் இன்றைக்கு இருக்கும் அமைச்சர் அவை, நிர்வாகத்தில் மிக்க திறமையின்மை காரணத்தால், பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாகக் கூற வேண்டுமென்றல், கூட்டுறவுத் துறையில் பல ஊழல்கள் இருக்கின்றன என்பது நேற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து தெரிய வருகிறது. பல கூட்டுறவுச் சங்கங்கள்...........

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மாசு, ஊழல் இருக்கிறது என்று சொன்னர். Do you agree with that?

திரு. கே. ராஜாராம் : கோவாப்பரேஷன் பற்றிச் சொல்லுகிறேம்.

திரு. எல் பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் இரண்டு மாவட்டங்களில் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று கூறினர்கள். அந்தப் பதிலிலிருந்து தெரிய வருவது நிர்வாக ஊழல் என்று தான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நிர்வாகத்தில் திறமையின்மை காரணமாக அந்த ஊழல் ஏற்பட்டிருக்கிறது.

* மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நேற்று நான் சொன்ன பதிலை உறுப்பினர் கூர்ந்து கவனிக்கவில்லையென்று கருதுகிறேன். தெளிவாகச் சொன்னேன். யாராவது கூட்டுறவுத் துறையில் இருப்பவர்கள், அங்கு இயக்குனராக இருப்பவர்கள் தவறு செய்தால்,

மு.ப. 19–2(

கூட்டுறவுத் துறை யாருக்கும் தயவு தாட்சிண்யம் இல்லாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறது. இன்று ஏறத்தாழ 350 பேர் மீது கிரிமினல் வழக்குகள் பல கட்டங்களில் இருக்கின்றன என்று சொன்னர்கள். சங்கம் வேறு, கூட்டுறவுத் துறை வேறு, கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கலாம். தவறு செய்தால், அதைக் கண்டிக்கும் பொறுப்பு, திருத்தும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறிய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சங்கம் வேறு, துறை வேறு என்று கூறினர்கள். சங்கங்களுக்கு நியமிக்கப்படும்



1972 டிசம்பர் 16] [திரு. எல். பலராமன்]

நிர்வாகிகள் நல்லவர்களாக இருந்தால் தான், அந்தச் சங்கம் நல்ல முறையில் செயல்படுமென்பதை அமைச்சர் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த முறையில், இன்று நிர்வாகத்திலிருப்பவர்கள். வடாற்காடு கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் என்றிருப்பதற்கு செங்கல்பட்டு மாவட்டத்திலிருக்கும் நிர்வாகிகளைப் போடுகிறார்கள். இது என்ன நியாயம் என்று புரியவில்லை. ஆளும் கட்சியில் இருப்பவர்கள் இந்த மாவட்டத்திலிருப்பவர்கள் தகுதியற்றவர்கள் அல்லது செங்கற்பட்டில் இருப்பவர்கள் தான்...........

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வடாற்காடு மாவட்டத்தி லுள்ள மொத்த விற்பனைப் பண்டகசாலை பல வருடங்களாக நஷ்டத் தில் ஓடுகிறது. இன்று ஏறத்தாழ 12 லட்ச ரூபாய் நட்டம். ஆகையினல், அடுத்த மாவட்டத்தில் ஏற்கெனவே லாபத்தில் நடத்திக் கொண்டிருப்பவர்களை இதில் ஒரு வருடம் நியமித்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வரலாமென்ற எண்ணத்தில் நியமிக்கப் பட்டது. அவர்கள் சொன்ன கருத்து இப்பொழுது ஆலோசனையில் உள்ளது. வடாற்காடு மாவட்டத்தில், யாராவது இதைச் சிறப்பாக, நட்டமில்லாமல் நடத்த ஏற்றுக்கொள்ளுகிறார்களா என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேம். நட்டமில்லாமல் ஓட்டக் கூடியவர் கள் யாராவது வந்தால். அவர்கள் கையில் பொறுப்பை ஒப்படைப்ப தாக இருக்கிறேம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : தலைவர் அவர்களே, நண்பர் திரு. பலராமனுக்கு நன்றாகத் தெரியுமென்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வடாற்காடு மாவட்டக் கூட்டுறவுப் பண்டகசாலையில் 12 லட்ச ரூபாய் நட்டம் என்று சொன்னர்கள். அந்த நட்டம் யார் இருக்கும்பொழுது ஏற்பட்டது? யாருடைய நிர்வாகத்தில் என்று உறுப்பினர் அறிந்திருந்தால், அதையும் விளக்குவது நல்லது.

திரு. எல். பலராமன் : நட்டம் என்று ஏற்பட்டால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறேம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினர்கள். நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை. மேலும், அவர்கள் திறமை உள்ளவர்களாக இருக்க வேண்டும். சங்கங்கள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றல், நல்லதொரு நிர்வாகத்தை அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தியிருக்கலாம் என்று வேண்டுகோளாக விடுகிறேன். அந்த மாவட்டம் புறக்கணிக்கப்

படுவதாக பரவலான எண்ணம் இருப்பதால், அதை இங்கே பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதே முறையில், இன்று பஞ்சாயத்து யூனியன் சங்கம் என்பதும், மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் அமைப்பைச் செழுமையாக்க வேண்டுமென்ற காந்திய அடிப்படையில் கிராம ராஜ்யங்கள், ராம ராஜ்ஜியங்களாக வேண்டுமென்று காந்திஜி கண்ட கனவு நனவாகச் செய்ய வேண்டும். பல டிபார்ட்மெண்டுகள், பேரவைகள் ஒன்றிணைந்து செயல்படுவது நல்லது. கிராமப் பற்று, நாட்டுப் பற்று என்று கூறப்பட்டது. இன்று அங்கே நாளைக்கு ஒரு மாநாடு என்று பெரிய வால் போஸ்டர் எதற்கு? எங்கள் டிபார்ட்மெண்டிற்கு உரிமை வேண்டும், நான் தனியாகப் பிரிய வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. முன்னால் பேசிய உறுப்பினர் கூறினார். நிர்வாகத்திலிருப்பவர்கள், அ.ஓ. அக்ரிகல்சுரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் தனி இயக்கமாகவும், கோவாபரேஷன் தனி இயக்கமாகவும் செல்லுவதால், கோ-ஆர்டினேஷன் என்று ஒட்டுமொத்தமான நிலை ஏற்படாத நிலையில், அந்த கிராமத்திற்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும் எந்த நிர்வாக சௌகரியமும் செய்ய முடியாத சூழ்நிலை இன்று பரவலாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு தனிப் பிரிவுக்கும் ஒருமுகத்தன்மை இல்லாமல், பொதுவாக எல்லாம் இணைந்து இயக்கங்கள் ஆரிசிநத்தியாக வேண்டுமென்பதற்காக நல்ல முறையில் இயங்கி இருக்க வேண்டும்.
மு.ப. 10-45 அதை நல்லமுறையில் இயக்குவதற்கு ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு வறட்சிக்காக ரூ. 25 லட்சமும், குடிநீருக்காக ரூ. 25 லட்சமும் ஒதுக்கியுள்ளதாக துணை மானியக் கோரிக்கையிலே பார்க்கும்போது தெரிகிறது. ஆனால் அந்தப் பணம் பொது மக்களுக்கு, பஞ்சாயத்துக்களுக்கு வந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை.
மு.ப. 10-20 வட ஆற்காடு மாவட்டத்திலே இன்றையவரை எந்தக் கிராமத்திற்கும் வரவில்லையென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவும் விரைவாக, மக்களுக்குப் பயன்படும் வகையில் நியாயமான முறையில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்து சமய அறக்கட்டளையைப் பார்க்கும்போது, ஒவ்வொரு கோவிலுக்கும் அறங்காவலர்களை நியமிக்கும்போது, கட்சிக் கண்ணோட்டத்தோடு நியமிக்கிறார்கள். அதனால் அந்தக் கிராமங்களிலே கோவில்களுக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் இல்லாமல் இருக்கிறது. மேலும் அந்தக் கோவில்களில் விழாக்கள் நடக்காமல்,



ஊரிலே சண்டையை உண்டாக்கக் கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது. அதைப் பரிசிலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எந்தக் கோவிலிலே கட்சி சார்புள்ளவர்களைப் போட்டு, சண்டை நடந்திருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, வழக்கு உயர் நீதி மன்றம் வரையில் சென்றிருக்கிறது. அமைச்சரவர்களுக்கு 2 அல்லது 3 வழக்குகளைக் குறிப்பாகக் குறித்துத்தர தயாராக இருக்கிறேன். அதற்கு வேண்டிய ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பல்வேறு கிராமங்களில், பல்வேறு கோவில்களிலே நூற்றுக் கணக்கான வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அறங்காவலர்கள் நியமிக்கப்பட்ட காரணத்தால் எங்கே விழா நடைபெறாமல் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்ல வேண்டும்.

திரு. எல். பலராமன் : வட ஆற்காடு மாவட்டம், வேலூர் தாலுகா, சோழவரம் என்ற கிராமத்திலே கட்சிக் கண்ணோட்டத் தோடு 2, 3 பேர்களை நியமித்தார்கள். அதன் காரணமாக ஊர் அத்தனையும் ஒன்றாக இருந்தாலும், அந்த 3 பேர் தனியாக இருப்பதால், எந்தவிதமான விழாவும் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இடையாஞ்சாத்து என்ற கிராம நிலைமையைப்பற்றி உயர்நீதி மன்றம் வரையில் ஒரு வழக்கு இருக்கிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதுபோன்ற நிகழ்ச்சிகள் பல இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர் வேலைக்கு நிறையப்பேர் படித்திருந்தும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். பலராமன்] [1972 டிசம்பர் 16

இந்த நிவாரணப் பணிகள் நல்ல முறையில் செயல்பட்டு, பொது மக்களுக்கு நல்ல முறையில், ஆக்கபூர்வமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உங்கள் கட்சிப்பூசலை நாட்டுப் பூசலாக்காமல் நாடு நலம்பெற நல்ல முறையில் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. P. JANARDHANAM : Mr. Chairman, when the Tamil Nadu is undergoing the ravages. . . .

MR. CHAIRMAN : Only the President is called ' Mr. President '.

THIRU A. P. JANARDHANAM : In the British Parliament, the Speaker is referred to as ' Mr. Speaker '.

MR. CHAIRMAN : Though we are following the British Parliamentary tradition, we call the Chairman ' Hon. Chairman '.

THIRU A. P. JANARDHANAM : Thank you, Sir. Hereafter I shall correct myself. When Tamil Nadu is undergoing the ravages of cyclone, I am glad to note. . . .

திரு. ம. பொ. சிவஞானம் : தமிழில் பேசியிருந்தால் இந்த சங்கடம் வந்திருக்காது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மொழி பெயர்ப்பு இருந்தாலும் நல்லது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழிலும் பேசலாம்; ஆங்கிலத்திலும் பேசலாம்.

மு.ப. 10-20

THIRU G. VASANTHA PAI : Sir, English is also a language of the Council. How can my learned friend object to the speech being in English?

* THIRU A. P. JANARDHANAM : I am glad to note that the Hon. the Chief Minister has promised that the flood relief operations would be put on a war footing and the Collectors' Conference to be held on the 19th, I am sure, will give substantial relief and the Centre will, this time also, be generous with large grants for the succour of the poor and the hopeless who have been very miserably hit by the cyclone. The Eye Camps, the Family Planning Programme and the Slum Clearance Scheme—these all



1972 டிசம்பர் 16] [Thiru A. P. Janardhanam]

show that the Government have vigorously pursued schemes for the benefit of the depressed, the oppressed and the have nots. As builders of a new era, as the usherers of a new order, it is quite natural that we put great store by these works. The Kalaignar's taking of an Adi-dravida bride into his home is a great piece of social revolution which will go down in the history of Tamil Nadu as a significant landmark in the history of the renaissance movement. My friend, the hon. Member Thiru Thangapandian referred to the prevalence of violence. There are parties that thrive by violence. From Timbuctoo to Triplicane, that is the same sorry state. As perpetrators of violence and as those fishing in troubled waters, they have got new allies. I am very sorry that Thiru M.G.R. has become the spoiled darling of the Communist Party. For any party, discipline is the life breath. I don't think it will happen—but supposing in the next elections, they get 185 members and if nine of them walk out and form the ' Mathialagan Dravida Munnetra Kazhagam ' what will Thiru M.G.R.'s reaction be? For any party the machine is superior to the man and that is what has been vindicated for the past two months.

MR. CHAIRMAN : That is because men may lie but machines may not lie.

THIRU A. P. JANARDHANAM : But I don't put him squarely on the dock, because those who have briefed him did not brief him sufficiently on the history of this movement. This movement has been cradled in adversities and has waded through rivers of blood. We all have fought inch by inch, step by step to come to the Fort St. George. We were in chill penury. We were all despised all the time. We did not meet with warm reception in the beginning. But, astute leaders and dynamic leaders like Sir Theagaraya, Periyar and Anna slowly built up this organisation and brought it to such a great pinnacle. Thiru M.G.R. . . .

MR. CHAIRMAN : Fortunately, there is no member belonging to that party here. The hon. Member may please desist from going deep into it.

THIRU A. P. JANARDHANAM : Sir, I do not go deep. But the whole world is watching us. It was a traumatic experience for us for the last two months. So, in the interest of the populace, I have to divulge certain things. I would not go deep and I

[Thiru A. P. Janardhanam] [1972 டிசம்பர் 16

respect the Hon. Chairman's wish. We have our own platforms outside and as the Hon. Chairman has pointed out, here I need not go deep and my minutes are going faster.

After that, I have to pay my tributes to Kalaignar. The Dravida Munnetra Kazhagam and its political allies, the Muslim League, the Forward Bloc and the Tamil Arasu Kazhagam are solidly backing him and we are proud to follow him. He is unruffled by abuse, calumny, vituperation or slander. He is at his best when the accusations are the worst. The memoranda have been suitably replied to by the Cabinet and each will take care of himself. The allegations have been dismissed as baseless and fantastic. He is an expert in party management. I need not reiterate it because it will be like carrying lignite to Neyveli. We are proud of Kalaignar. With these few words, I finish my speech.

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, I heard a spirited speech from my hon. Friend Thiru Janardhanam and I am glad that he spoke in English. I congratulate him on his very laudable effort and the very succinct way in which he put forth his ideas. Sir, I would like to say that in the present tangle which has affected Tamil Nadu ruling party for the last two months and about which Thiru Janardhanam referred, though there exist some dark clouds, there is also some silver-lining. The Members, the Chief Minister, the Speaker as well as the Governor went to the Court and upheld the principle of the rule of law. They accepted the decision of the Court upholding the prorogation of the Assembly. In this context, I am happy that all parties, despite their differences, were prompted by democratic motive of acceptance of the rule of law, and they abided by the decision of the Court. The Courts are there to uphold the laws and the Constitution in this country and also the democratic traditions. I am glad in this matter every party was unanimous, whether this belongs to the one side or the other. I am not going into the merits of the controversy. The Court has upheld the prorogation of the legislature and all parties have accepted it in principle.

மு.ப. 10-20

Sir, I really asked for leave to speak on this occasion to draw the attention of the Hon. the Minister for Industries to a particular matter, but I find the Hon. Minister is not here. This is a matter in which he has taken a great deal of interest. Sir, there was



1972 டிசம்பர் 16] [Thiru G. Vasantha Pai]

an effort by this State to use a letter of intent which was given to one of the two manufacturers of private passenger cars by the State in the joint sector. Sir, this was conceived in April 1971. This entrepreneur who had put in all his efforts into the manu- facture of small cars in this State was asked by the Minister for Industries as well as the Secretaries in the Industries Department to come in and lend his services for the starting of a small car project in the joint sector. Sir, I am very happy to say that this gentleman whom I met very casually the other day when I went to St. Joseph's Industrial School acknowledged the interest that the Hon. the Minister for Industries took in his venture. But, Sir, I want to place before this House something which led this whole venture into a debacle. The whole effort of this gentle- man is now enveloped with rust. He was asked to shake himself off of all the private financial assistance which he had been getting till 25th April 1972, and he was asked to join the Government in a joint sector venture for starting a project in the Chingleput district. But, unfortunately, Sir, the Executive Officer of the TIDCO—unfortunately, our bureaucracy, the I.A.S. officers who think that they know everything about—put a spoke in the wheel, while the person in charge of the administration, namely, the Minister wanted the matter to be pushed through. Unfortunately, after a certain stage when the matter was thrashed out at a meeting of the Minister and officers and the entrepreneur and an agreement concluded, I am told—I want the Minister for Industries to confirm or deny that statement—that a technical committee was asked by the TIDCO to go into a project which this man had built up over the years and got a letter of intent from the Govern- ment of India and the other person who has got it is Mr. Sanjay Gandhi. This man was asked to come into the joint sector after he had spent heavily Rs. 3.5 lakhs into this venture and the Government promised him assistance. After doing all that, this technical committee to whom it was referred and consisting of four or five persons belonging to a rival institution thwarted the whole venture. I would like to say that if the technical com- mittee should consist of persons who are interested in manufac- ture of other cars and who had any financial interest like shares in other factories which are manufacturing cars in this State, this man's main objective, main ambition in life of making a passenger car at a cost of Rs. 8,000 or Rs. 9,000 should not have been referred to them for just being commented upon and rejected.

Sir, I want to give a few relevant dates. The Technical Committee was appointed on 30th June 1972. The first sitting of this Committee was on 3rd July 1972. A draft agreement was given to him on 10th August 1972. The man gave 600 designs of his to the Committee, photostats were taken of those designs and drawings by the personnel of this Committee who were interested in a rival venture, the originals were returned to him within three days and this technical committee came out with a report on 22nd August 1972, hardly within a month. Can an ambitious programme like this be rejected within the course of a month? Can the scheme of a man who had spent quite a time in his life, who had gone to Detroit, who had gone to Japan and who had consulted so many entrepreneurs elsewhere be thrown to the winds merely because a technical committee consisting of persons who are employed in rival private institutions in a private sector thought it expedient and in their interest to reject it? I would request the Hon. the Minister for Industries to go into this and see that this scheme is not avoided by the unilateral decision of some representative of the I.A.S. bureaucrats, who, I understand, had served with the Chairman of the TIDCO in the Industries Department in Delhi. How can such a person sit in judgement over an entrepreneur's work who had made it his life's work and that too, after asking him to forgo the private financial assistance he had been getting all these years till 25th April 1972? I would request the Hon. the Minister for Industries and the Hon. the Chief Minister to go to St. Joseph's Industrial School, next door of which is his assembly shop and see for themselves how the whole thing is lying in rust there and the man is now in doldrums after having spent Rs. 3.5 lakhs for his venture, relying on the Government's assurance and hoping to start a joint sector undertaking. Why not give him encouragement? Even for the Speakers' Conference, we have spent Rs. 1.5 lakhs. Why not the Government throw away some money, if need be and see that this individual is rehabilitated and does not suffer due to action of the Government? Sir, I am making this pleading because I felt touched, when I went to St. Joseph's Industrial School to order some furniture and by mistake I went next door, and found for myself the situation in which this young man had been placed. He has got a letter of intent from the Government of India and the date is fast expiring, and he finds himself in doldrums. He has lost his private initiative of getting finance,

மு.ப. 19-20



because the Government have asked him to give it up, and the Government have now put him virtually in the streets. I would request the Hon. the Minister for Industries, with his initiative, to look into this matter personally and not to leave it to officers of a bureaucracy, be they I.A.S. officers or any person experienced in I.A.S. work now holding position in private sector. I do not say that they are not persons who are accustomed to do their work properly in their respective spheres. But, let them not go into something and try to usurp powers or functions for which they are not suited or competent. A 'Committee', Sir, is after all a noun; it may mean 'many', but it does not mean always 'much'.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இந்த "அப்ரோப் பிரியேஷன் பில்" லிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏறக்குறைய இரண்டு மாதங்களாகவே நாட்டிலே பெரும் புயல் ஏற்பட்டிருக் கிறது. புயல் மட்டுமல்ல, புயல் அருகாமையிலேயே நமக்குச் சாதக மாக இருக்கவேண்டிய இயற்கைகூட சற்று மாறுதலாக, சற்று அதிக மாக நம்மைத் தாக்கியிருக்கிறது.

ஏழை, எளிய மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய அடிப்படைக் கொள்கை. எனவே இந்த இயக்கத்தினுடைய கர்தாவாக இருந்து, இந்த ஆட்சியை ஸ்தாபிதப்படுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலிருந்து, நாம் இந்த 4½ கோடி மக்க ளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்கிறோம், செய்ய முயற்சிக் கிறோம், செய்துகொண்டே இருக்கிறோம். அடிப்படையாக வைத்துக் கொண்டிருக்கிற என்னுடைய எண்ணம், நடுத்தரக் குடும்பங்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும், ஹரிஜன மக்க ளுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்பதே. கீழே விழுந்து கிடக் கின்ற மக்களைத் தட்டி எழுப்பி அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். விளக்கு இல்லாமல் இருட்டிலே இருக்கின்ற மக்களுக்கு வெளிச்சம் போட்டுத் தருவது ஒரு திட்டம். கல்வியே இல்லாத மக்களுக்கு, கிராமங்களில் இருக்கிற குழந்தைகளுக்குக் கல்வி அறிவு புகட்டுவது போன்ற பற்பல நூற்றுக்கணக்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இதைப்பற்றி இந்த அவையிலே ஏராளமாகப் பேசப்பட் டிருக்கிறது. தொடர்ந்து பேசுவது அவ்வளவு சாலச்சிறந்ததில்லை யென்று கூறிக்கொள்கிறேன்.

விலைவாசிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்ற விஷயம் திரு. தீக்ஷிதர் அவர்களால் ஒருமுறை பேசப்பட்டது. உண்மையிலேயே பொருள்கள் கிடைக்கவில்லையென்று அவர் சொல்லவில்லை. மிளகாய் கிடைக்கவில்லையென்று சொல்லவில்லை. மிளகாய் விலை ஏறியிருக்கிறது என்று சொன்னார். எண்ணெய்பற்றிக் கூறுகிறபோது மட்டும், எண்ணெய் கிடைப்பதில்லை என்று சொன்னார். அதை எப்போதோ தீபாவளிக்குத் தீபாவளி தான் பார்க்கிறோம் என்று சொன்னார். இப்படியெல்லாம் கூறினாரே ஒழிய, உணவுப் பண்டங்கள் நாட்டிலே கிடைக்கவில்லையென்று கூறவில்லை. ஆனால் விலைகள் உயர்ந்திருக்கின்றன என்றார். விலைகள் உயர்ந்திருக்கின்றனவாவென்று பார்க்கிற அதே நேரத்திலே, 24 கோடி ரூபாய், 25 கோடி ரூபாய் அளவுக்கு நமது மாநிலத்திலே வேலையில் இருப்பவர்களுக்கு சம்பளங்கள் வாயிலாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்க வேண்டும். இப்படி விலைகள் உயர்ந்துவிட்டன என்று சொல்பவர்கள் எல்லாம் ஒரு நிமிடம் பொருளாதாரத்தைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். பொருளாதாரம் என்பது ஏதோ தமிழ் நாட்டிற்குள்ள, இந்தச் சுற்றளவுக்குள்ள ஒன்று என்று யாரும் எண்ணக் கூடாது. அதற்குப் பொருளாதாரம் என்று பொருளல்ல. பொருளாதாரத்தை நல்ல முறையில் உருவாக்க வேண்டியது மத்திய சர்க்கார்தான். மத்திய சர்க்காரால் அச்சடித்து அனுப்பப்படுகிற நோட்டுகளின் மதிப்பு அவ்வளவாக இருப்பதாகத் தெரியவில்லை. நோட்டுகளின் மதிப்பு குறையும்போது, பண்டங்களுக்கு மதிப்பு வந்திருக்கிறபோது, நியாயமாக பண்டங்களின் விலை கொஞ்சம் ஏறித்தான் இருக்கும். அதன் அடிப்படையைத் தகர்க்க வேண்டுமென்பதற்காக, எந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தாலும், எந்த இடத்திலாவது மூலக்காரணங்கள் இருக்குமா என்று பார்த்தாலும், இல்லை என்ற பதில் தான் கிடைக்கிறது. உதாரணத்திற்கு விவசாயத்தை எடுத்துக்கொள்வோம்.

மு.ப. 10-20 பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டுமென்று பரவலாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது ஒரு மூட்டை நெல் விலை ரூ. 50 என்று இருக்கிறது. அதை நிச்சயமாகக் குறைக்க வேண்டுமென்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்கிறார்கள் என்ற காரணத்திற்காக, அமைச்சரவர்கள் நாளைக்கு மார்க்கெட்டில் ஒரு மூட்டை நெல் ரூ. 30-க்குத்தான் வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டால், விவசாயி சும்மா விடமாட்டான். ஏனென்றால் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. உற்பத்திச் செலவு மிகச் சாதாரணமாக இல்லை. உங்களுக்கே தெரியும். திரு. தீக்ஷிதர் அவர்கள் பெரிய மிராசுதார் என்று நினைக்கிறேன். அவர் எண்ணெய் கிடைக்கவில்லை,





தீபாவளிக்குத் தீபாவளி தான் பார்க்க முடிகிறது என்று சொன்னார். வேண்டுமானால் இவரைப் போன்றவர்கள் எண்ணெயை செக்கில் ஆட்டி, உள்ளே வைத்துவிட்டால், மற்றவர்களுக்குக் கிடைக்காமல் போகலாமேயொழிய, இப்பொழுது கிடைக்கிறது. எல்லோரும் எண்ணெய் தேய்த்துக்கொள்கிறார்கள். நானே எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு எண்ணெய் தேய்ப்பவன் ஒருவன் என்னோடு இருந்தான். அவனிடம் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவது வழக்கம். இதை அவையிலே சொல்லுவதில் வெட்கம் ஒன்றுமில்லை. அந்த எண்ணெய் தேய்ப்பவன்கூட சில சமயங்களில் எனக்கு எதிரில், பெஞ்சில் உட்கார்ந்துகொண்டு காபி சாப்பிடக்கூடிய அளவுக்கு வசதிகள். வாய்ப்புகள் ஏழைக் குடி மக்களுக்கு உயர்ந்திருக்கின்றன. அவனுக்கு அந்த அளவுக்கு சக்தி இருக்கிறது. ஆகவே 4, 5 ஆண்டுகளாகப் போடப்பட்டிருக்கிற திட்டங்களால் நாட்டிலே வசதிகள் ஓரளவு பரவலாக்கப்பட்டிருக்கின்றனவென்பதை மூலை முடுக்குகளிலெல்லாம் போகிறபோது பார்த்துக்கொண்டே இருக்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இருந்தால் ஏன் அவர் குடுமி வைத்திருக்கிறார் ?

திரு. சி. வி. ராஜகோபால் : என்னிடத்திலே பல பணக்காரர்கள் பேசுகிறபோது கூறுகிறார்கள். இந்த ஆட்சியில் பணக்காரர்களாக இருப்பது தவறு ; ஆனால் ஏழையாக இருந்தால், குடிசைகூட இல்லா மல் இருந்தால், காலம் தள்ளிவிடலாம் என்று கூறுகிறார்கள். ஏனென்று கேட்டால், பணக்காரர்களாக இருந்தால் தானே, தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த ஆட்சியில், ஒன்றுமே இல்லை யென்றால், இங்கே ஓரிடத்தில் 5 அடி 6 அடி குடிசைகள் போட்டிருந் தால்கூட, அவர்களைக் கேட்போர் யாருமே இல்லை. வேண்டிய வசதிகளை இந்த சர்க்காரே பார்த்துச் செய்கிறார்கள் என்று பணக் காரர்கள் எல்லாம் கூட மிக வருத்தப்படக்கூடிய அளவுக்குக் கூறு கிறார்கள். அரசு மிக வேகமாகப் போவதாகச் சொல்லுகிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வளவு வேக மாகப் போகாதீர்கள். வேகமாகப் போகிற ரயில் வண்டிகள்கூட சில நேரத்திலே விழுந்துவிடுவதைப் பார்க்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகத் தான் மேலே உயரத்திலே இருக்கிறவர்களைப் பத்து படி இறக்கியும், கீழே இருப்பவர்களை 10 படி மேலே உயர்த்தியும்

[திரு. சி. வி. ராஜகோபால்] [1972 டிசம்பர் 16

இரண்டு தரத்தினரும் கலந்துகொள்கின்ற மாதிரி சட்டங்களை நாம் இயற்ற வேண்டுமேயொழிய உடனடியாக ஒரு சட்டத்தை இயற்றி விடுவது அவ்வளவு நல்லதல்ல.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : என்ன சட்டம் ?

திரு. சி. வி. ராஜகோபால் : நிலச் சீர்திருத்தச் சட்டம். இப்படிப் பட்ட குறைகள் இருக்கின்றன என்று மிகப் பணிவன்போடு தெரிவித் துக்கொள்கிறேன். திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும் போது வருத்தத்தோடு கூட்டுறவு நிலைமை பற்றியெல்லாம் கூறி ணர்கள். கூட்டுறவு அமைச்சர் எதிரே இருந்தால் கடித்துவிடுவார் போல மிக ஆவேசத்தோடு சொன்ணர்கள். அவர் சொன்னதில் குறை ஒன்றும் இல்லை. நானே ஒத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : கூட்டுறவு அமைச்சரும் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் ரொம்ப "பிரண்ட்ஸ்".

திரு. சி. வி. ராஜகோபால் : இவர்கள் இருக்கிற வரையில் தலை யெடுத்து வாழ முடியாது போல் இருக்கிறது, என்னையே தொலைத்து விடுவார் போல் இருக்கிறது என்று சொன்ணர்கள். ஒன்று அவ ரோடு போய்விடும் அந்தக் கூட்டுறவு என்று கடைசியில் முடிக்கிற போது கூறிஞர்கள். அது அவருடைய வேகம். சொன்னதற்குக் காரணம் என்ன ? கூட்டுறவு இயக்கம் இதற்கு முன்ஞலே காங்கிரஸ் ஆட்சியிலே பலபேரிடத்திலே இருந்த காரணத்தால் கோபம்— இப்போது உண்மையாகவே அவர் சொல்லுவது மாதிரி, அமைச்சர் திரு. ஆதித்தஞர் கையிலே கொடுத்திருக்கிற காரணத்தால், அவர் கட்சிக்காரர்களையே போடுகிருர் என்று. நான் ஒத்துக்கொள் கிறேன். வேண்டுமென்ரு அவர் கட்சிக்காரர்களை நியமனம் செய் கிருர்கள். பலரைத் தள்ளிவிட்டார்கள். எங்களைப் போன்றவர்

மு.ப. 10–20 களுக்கு ஆதரவில்லை. ஆகவே உங்கள் கூட்டுறவு இயக்கம் கொள்ளை யாகத்தான் இருக்கிறது என்றுகூட குற்றம் சாட்டலாம். ஆஞல் எங்களைப் போன்றவர்களுக்கும் ஆதரவளித்து இடம் தர வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்த நாட்டிற்குப் பொதுவாக இருக்கிற கூட்டுறவுத் தன்மையை விளக்கிக்காட்டி, கூட்டுறவால் மக்கள் பயன் அடைவதற்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களை நீங்களும் நானும் சேர்ந்து செய்யலாம் என்று கேட்டுக்கொண்டால்கூட அது மிக நன்மையாகக்கூட இருக்கும். அதிலேகூட முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கருணை காட்டுவார். எது எதற்கோ கருணை காட்டு



1972 டிசம்பர் 16] [திரு. சி. வி. ராஜகோபால்]

கிருரே. ஏன் இப்போது ஏறக்குறைய 1½ அல்லது 2 மாதத்திற்கு முன்ஞல் மிக்க கடினமான நிலை இருந்தது என்று எனக்கு முன்ஞலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜஞர்த்தனம் கூறிஞர். இரண்டு மாதத்திற்கு முன் மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள் கூட நம்மோடு தான் இருந்தார். ஆஞல் ஏதோ ஒரு சிறிய காரணத்திற்காக ஒரு பெரிய "மெமொராண்டம்" தயார் செய்துகொண்டு டெல்லிக்குச் சென்று அதை ராஷ்ட்ரபதியிடம் கொடுத்தார். இதஞல் தமிழ் நாடு பூராவும் என்னவோ பெரிய ஆபத்தான நிலைமைதான் என்று என்னைப் போன்றவர்கள் கூட நினைக்கவேண்டியிருந்தது. அதை ஒரு பெரிய பொக்கிஷமாக, பையிலே போட்டுக்கொண்டு—அதை இங்கே இருப்பவர்களிடம் காட்டியிருக்கலாம், அதுதான் முறையே கூட டெல்லிக்கே நேராகக் கொண்டு போஞர்கள். மாநிலத்திற்கென்று ஒரு சில நிலைமைகள், விதிகள் இருக்கின்றன. நீதி வேண்டுமென்று கேட்கிருேம். நீதி இங்கே கிடைக்கவில்லை என்ருல் நீதிமன்றம் என்று ஒன்று இருக்கிறது. அங்கே போய்க் கேட்கலாம். அந்த மாதிரித்தான் ஒரு சில ஒழுங்கு முறைகள் இருக்கின்றன. அந்த ஒழுங்கு முறைகள் எப்படி வருகின்றன ? அனுபவத்தால் வருபவை. 20 ஆண்டுக் காலம் 30 ஆண்டுக் காலம் அரசியலைப் பயின்ற பிறகுதான் அது வாடிக்கையாகவும் வழக்கமாகவும் வருகிறது. திடீரென்று ஒரு நாள் அரசியலிலே இறங்கிவிட்டு, அரசியல் தெரியுமா தெரியாதா என்ருல், அதை அரசியல் என்று அரசியல் கட்சிக்காரர்கள் சொல்லமாட்டார்கள்; மற்றவர்கள் வேண்டுமாஞல் ஒத்துக்கொள்ளு வார்கள். 5 வருடம், 6 வருடம் இங்கே இருந்துவிட்டு, ஒரு 20 நாளைக்கு முன்பு அல்லது 2 வருடத்திற்கு முன்ஞல் அரசியல் அறிவு அனைத்தும், அகில உலகத்தின் அரசியல் அறிவும் தங்களிடம் தான் ஒருங்கே பொதிந்திருக்கிறது என்று கூறுவார்களாஞல், அது கூத் தாகத்தான் இருக்கும். "டிபெக்ஷன் அண்டு கரப்ஷன்" நெடுங்கால மாக இருக்கிற ஒன்று. நான் இல்லை என்று மறுத்துக்கூறவில்லை. அதை அவர்கள்தான் செய்தார்கள், இவர்கள்தான் செய்தார்கள் என்று கூறவும் என்ஞலே இப்போது முடியாது. நம் இந்தியா பூரா வும் எடுத்துக் கொண்டால், மிக்க பயங்கரமான நிலைமையெல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. நாம் பார்த்திருக்கிருேம். ஹரியா ஞவின் முதலமைச்சர் அவர்களைப்பற்றி அப்பப்பா.........

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : அதுபற்றிப் பேசக்கூடாது இங்கே.........

திரு. சி. வி. ராஜகோபால் : இப்படிப்பட்ட நிலைமைகளை இங்கே விவாதித்திருக்கலாம் என்பதற்காகத்தான் கூறினேனே தவிர, அதை அங்கே எடுத்துக்கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லே.

The Memorandum does not contain any allegation. It is only a statement and anybody can make a statement at any time he likes. An individual has got that right. But that is not the method of accusing others. They can accuse and take me to the Court, if they want. They should not go to the Prime Minister of India and Rashtrapathi and anybody they like. It is not according to the principles we follow. One should follow the principles, and the rules and regulations in that connection. Such a thing as has happened is not delightful to me or to anybody else. With these words, I conclude my speech. Thank you.

*THIRU S. NARAYANASWAMY : Sir, I rise to say that the Appropriation Bill has come at a most crucial time. It is inevitable
11-00 மு.ப. that there should be an Appropriation Bill, but it is an irony that we should get an Appropriation Bill at a time when we need a lot more funds to deal with the present situation caused by excessive rain everywhere. There are two points I would like to highlight on this occasion, Mr. Chairman, and they are these.

I am greatly concerned and distressed over the state of civic administration of Madras. I had hoped that some Member would raise this point about the civic administration of Madras, but nobody has done so. I wish to say that it is necessary that the City of Madras Administration should set an example to other municipalities and local bodies. Far from doing so, the civic administration today is in an extremely unsatisfactory plight. I
மு.ப. 11-20 say this because quite a number of bodies which have been constituted—local voters' bodies, which have been constituted—for the sake of giving protection to citizens in respect of their civic rights have come to me and asked me, "Do you think there is any remedy, any way of getting redress in regard to civic grievances except by a civic no-tax campaign?" Well, when they come and ask me this, I am obliged to draw the attention of the Hon. the Chief Minister and this House to the fact that people are bound to judge what is happening in the Corporation of Madras by results.



I refer principally to the state of sanitation of our streets. I am not referring in particular to what happened after the cyclone or the recent rains. I am stating with reference to what has been happening over the years before. There has been a complete neglect of street cleaning of many roads. I can testify to what is happening. I have lived in Madras for 51 years. I have never seen so much neglect of street cleaning as I have seen in the last few years in my own street. I am referring again to street lighting. The newspapers are full of complaints. At any rate, they (the writers) are not politicians. They have no grievance against this Government or any Government. But, they have been complaining bitterly about the absence of street lighting. Today, the civic authorities in Madras seem to have completely insulated themselves from public opinion and have total disregard for what people write in the newspapers or say at meetings. Where do we seek a remedy for a situation like this ? I would like to draw your attention to the fact that our civic affairs need to be toned up. Property tax has gone up. It was left to the Chief Minister to make a very, very thoughtful pronouncement which I think was in the context of somebody asking for an increase in wages for the Government servants. He said, "We cannot farm away all our resources in salaries and wages." I do not think he made a more thoughtful statement ever before than when he made this. I wish to say that I do not know of any civic body other than the Corporation of Madras where so large a percentage of its aggregate revenue as such is absorbed by salaries and wages with so little to spend on civic services. I would like to see more money spent on civic services because roads in Madras are in bad shape. At any rate, most roads are being maintained by the Highways Department. I do not know what responsibility the Corporation of Madras takes in dealing with this matter. The proceedings of the Corporation have been commented upon. So, it is not my job to talk about them, but, I would like our City Fathers taking far more interest in the health, in the welfare, in the beauty, in the elegance, in the cleanliness of the City than they are taking today instead of quarreling and wasting their time on other matters. I am solely to be guided by what is going on in the City by way of neglect of civic affairs, and I would like to see that something is done by the Government to bring pressure on civic bodies like the Corporation of Madras. Every body must set this

[Thiru S. Narayanaswamy] [1972 டிசம்பர் 16

as an example to see that something is done to put our civic administration on a better keel, so that people get some return for the heavy taxes they are paying.

The second point I wish to raise is this. I wish to bring this point without reference to recent happenings. The tendency on the part of the Government to order closure of schools and colleges on very slender provocation has considerably demoralised both the teaching and the student communities, at any rate, the responsible section of the community. I would like Government being firm in refusing to close schools and colleges because the very closure of schools and colleges is itself the starting point for more indiscipline, because it keeps even those who are willing to work in schools and colleges away from schools and colleges; and their energies are being channelled into mischief. This should be avoided. I think the Vice-Chancellor and the Director of Higher Education and the Director of School Education must be instructed that under no circumstances should they order closure of schools and colleges, as is being done and far frequently done so far. In the past, this has led to a degree of demoralisation. It has brought melancholy satisfaction to a large number of people. I know others have come and told me. It is not the School Masters that tell me this . Of course, other people tell me. Thiru Rajah Iyer and others were discussing the other day that it was the responsibility of parents. Everybody is responsible, not only the parent. The parent today feels that he has been bound over and done with. Once he has paid school and college fees, he hopes and trusts that his son will shape into something. But, I am not on that. I am on the total question of community owing something to the students, both boys and girls—particularly now that there are a large number of girls going to schools and colleges which was not the case 25 years ago. I think we owe it to the community that we prevent the closure of schools and colleges. This has had a very demoralising effect. I have been travelling frequently. I have been asked this question. I know. the moment I say this the Hon. the Chief Minister will say, "Was this not happening before when some other party was in power?" I am not concerned under which party's aegis this happened. If you say that something happened when the previous party was in power, obviously, you came to power in order to rectify these

மு.ப.
10-20



1972 டிசம்பர் 16] [Thiru S. Narayanaswamy]

things. I do not think it is an appropriate or valid reply to say "Under somebody else's time this happened." I think it is a very wrong and fallacious type of disposing of inconvenient questions. I hope he will not resort to this frequently. I am speaking purely as a citizen of Madras City, as a person interested in higher education and not because I want to import politics into this subject.

I hope and trust that it will be possible for Government to take a firm stand about seeing to it that schools and colleges are not closed except under very, very grave provocations.

Sir, one more point and I have done. My friend Mr. Vasantha Pai was good enough to draw attention to what happened to one entrepreneur. I have been saying far too frequently at my Chamber and other meetings that for the purpose of inviting entrepreneurs, to encourage entrepreneurs, to give facilities, we have created 2 or 3 institutions under the auspices of the Tamil Nadu Government which are operating quite satisfactorily for the promotion of industries. I am not saying they have done far too much. But I know they are trying to do their little bit consistent with the fact that the persons in charge are themselves new to industry.

I do not blame them. They operate under certain limitations—even as I would have done under certain limitations if I were a bureaucrat. I do not wish to say everybody should know everything, but. I am saying these have been functioning well. What is more important is not to drag a man and say, "You come to joint sector and operate with me." It is far more important to say, "Stand on your two legs. Do something on your own. Depend on yourself." "He, who is thrown on his own resources is thrown on the very lap of good fortune"—That is what John Stuart Mill said 160 years ago. It is very important to realise that it is government's duty, to make people self-reliant. We go on blaming the Central Government for this and that. By all means go on doing it. I know this has its influence on the Central Government and they do part with this or that. But, I do think that entrepreneur should be encouraged to do something on his own. and in this instance particularly, motor car manufacture. By and large, the purpose should be to encourage the entrepreneur to stand on his own. Thank you.

[1972 டிசம்பர் 16

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The hon. Member Thiru S. Narayanaswamy made certain reference about the lighting and road works in the City of Madras. I do not dispute that the responsibility for the maintenance of roads and the provision of
11-00 மு.ப. lighting is with the Corporation of Madras. But, so far as the Highways Department is concerned, the Mount Road comes under the management of the Highways Department. My hon. Friend would be aware that we have made vast improvements in the lighting of Mount Road and it is the best in the entire Tamil Nadu. So far as the bridge works in the City of Madras are concerned, the Government are spending crores of rupees for improvement and widening of several bridges. I can give the instances of Wellington Bridge, the Adayar Bridge, the Gemini Fly over and several other works, costing about 1 to 2 crores of rupees. For the information of my hon. Friend, I would say that the beautification of the Marina has also been taken up. We have got a programme of 16 lakhs of rupees for beautification of the Marina, and as the first phase, we have taken up the work of beautification for a sum of 2.5 lakhs, for which tenders have been called for; and the work is to be started immediately. So far as lighting in the City of Madras is concerned, my hon. Friend will not dispute that within the last two or three years, beautiful lights have been put in the Beach Road and also in the Mount Road at Madras. This is for the information of my hon. Friend, and my Friend could at least have given a word of praise to the Highways Department and the Corporation which have done certainly good work.

THIRU S. NARAYANASWAMY: The Hon. Minister has exactly proved the very point I was rubbing in, namely, that the
மு.ப. 10-20 lighting by the Highways Department is being done at the expense of the State Government, while the Corporation seems to take a very little responsibility. I go through the Beach Road four times a day and I am fully aware of the tremendous beautification that the Beach Road has undergone and the Mount Road has undergone. That only goes to the honour of the Government and that is all with regard to beautification. But that does not make unlighted streets more lighted. I am only saying that unlighted streets are numerous in Madras. I go at 4.45. a.m. daily for my early morning walk and I know the streets through which I walk and I can testify that they are not lighted. I can even take my Friend the Hon.



1972 டிசம்பர் 16] [Thiru S. Narayanaswamy]

Minister through those very streets to prove that lights are not burning. Sometimes I narrowly escape hitting against an unlighted bicycle and this fact cannot be disproved. This does not mean that I am insensible to what been done by the Government of Tamil Nadu, for which I give them one hundred per cent mark.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of information. With regard to lighting, I have said time and again that the lights similar to those in Anna Salai should be provided in the Beach Road. I hope the Hon. Minister will accept my suggestion.

MR. CHAIRMAN: The hon. Member Thiru S. Narayanaswamy should not walk in darkness.

திரு. ம. பொ. சிவஞானம் : மாண்புமிகு மேலவைத் தலைவர்
அவர்களே, இன்று அவையின் முன்புள்ள நிதி ஒதுக்கீடு சட்ட முன்
வடிவின் மீது பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்ததற்காக மகிழ்ச்சி
யடைகிறேன். வாய்ப்பினைத் தந்த சட்ட மன்றத் தலைவரவர்களுக்கு
என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இந்த மேலவை
யின் முன்பு தமிழகத்தின் முதலமைச்சரவர்கள் தம் சார்பிலும், தம்
முடைய அமைச்சரவையின் சார்பிலும், தம்மீது மத்திய அரசுக்கு
அனுப்பப்பட்ட புகார்களுக்குப் பதிலளிக்கும் வகையில் வைத்த மிகப்
பெரிய புத்தகத்தை ரொம்ப சிரமப்பட்டுப் படிக்க வேண்டியிருந்தது.
படித்தேன். அவர்களுடைய பதில்கள் மன நிறைவைத் தருகின்றவை
களாக இருக்கின்றன. புகார் கூறும்பொழுது, எவ்வளவு பொறுப்
பற்ற முறையில் புகார் கூறுகிறவர்கள், நம் நாட்டில் இருக்கிறார்கள்
என்பதையும் அவர்களுடைய பதிலிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.
மாண்புமிகு அங்கத்தினர் திரு. பலராமன் அவர்கள் எனக்கு முன்பு
பேசுகிறபோது, சீதை தீக்குளித்துதான் தன் கற்பை ராமனுக்குக்
காட்டியதைப் போல் இந்த அரசும் செய்ய வேண்டுமென்பது போல
அழைத்தார். ஆனால் இப்போது கதை அப்படியில்லை. ராமனை சீதை
தீக்குளித்து நிரூபிக்கச் சொன்னது மாதிரி நடக்கிறது என்பதுதான்
என்னுடைய அபிப்பிராயம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
அரசை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை தீக்குளிக்கச்
சொல்லி தனி நபர் கேட்பது என்பது சீதைக்கு ராமன் கட்டளையிடு
வதற்கு ஒப்பானது. இந்தக்காலத்தில் சீதை கூட இப்போது அதற்கு
ஒப்புக்கொள்ளமாட்டாள். இப்போது மறுவிவாகம் செய்ய உரிமை

இருக்கிற காலம். ராமனோடு விவாக ரத்து செய்து கொள்ள சட்டப்படி உரிமையிருக்கிற காலம். ஆகவே அந்த உவமை பொருந்தாது. இருந்தாலும் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த உவமைக்கு ஏற்ப இந்த அரசு அவ்வளவு பெரிய தண்டனைக்கு, சோதனைக்கு உட்படுத்திக்கொள்வது "தடி எடுத்தவர்கள் எல்லாம் தண்டல் காரர்கள்" என்று ஆகிவிடுவதற்கு ஒரு முன் மாதிரியாக உதவி புரிவதாக ஆகிவிடும் என்பது என்னுடைய கருத்து. மத்திய அரசு இதற்குக் கமிஷன் அமைப்பதற்கு உரிமை இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்திலே குறிப்பிட்டிருப்பதை நான் உறுதியாக ஆதரிக்கிறேன். ஒரு தனி நபர் தவிர, செயற்குழு கிடையாது, பொதுக்குழு கிடையாது, கட்சிக்குக் கொள்கை என்ன என்று கிடையாது—வாரத்திற்கு ஒரு போராட்டத்தை, கட்சி என்ற பெயரால் பிரகடனம் செய்து, கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த அரசு செலவழிக்க இந்த நாட்டிலே வன் முறைகளைப் பெருக்கி அமைதியற்ற நிலைமையை உருவாக்கி, ஒரு ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக மத்திய ஆட்சியைத் தலையிட வைத்து மந்திரி சபையை "சஸ்பென்ட்" செய்து வைக்கும் யுக்தியாக, தந்திரமாக இந்தப் புகாரைத் தயாரித்துக் கொடுத்து அதற்கு இந்த ஆட்சி பணிந்து போய் நிற்க வேண்டுமானால் அதை விட இந்த ஆட்சி தன்னைத் தானே கலைத்துக் கொள்வதைக் கூட தன்மானமான வாழ்வு என்று நான் எண்ணிக்கொள்வேன். இந்த மாதிரியான தவறான முன்மாதிரிக்குப் பணிய மறுத்த ஆட்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். மத்திய ஆட்சி இதற்காகக் கமிஷன் அமைப்பதற்கு உரிமையில்லை என்று முதல்வரவர்கள் சொல்லியதில் உறுதியாக இந்த ஆட்சி இருக்க வேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

நாம் மாநில சுய ஆட்சி கேட்கிறோம் என்பதற்காக மட்டுமல்ல.
மு.ப. 10-20 இது ஒரு தவறான முன் மாதிரி. நாளைக்கு மத்திய ஆட்சியின் மீது இந்த மாதிரிப் புகார் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். மத்தியப் பிரதமர், அவர் அமைச்சரவையின் மீது இந்த மாதிரி ஒரு புகார் வந்திருக்கிறது, வரும். அவர்கள் தங்களைப்பற்றி விசாரிக்க தாங்களே கமிஷன் போட மறுத்துவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு மேல் அவர்கள் மேலே யார் கமிஷன் போடுவது, விசாரணை நடத்துவது? அங்கு இருப்பவர்கள் மட்டும் என்ன அரிச்சந்திரனிலிருந்து அவதாரம் செய்திருப்பவர்கள் என்று நினைக்கிறார்களா? எத்தனையோ புகார்கள், எத்தனையோ மந்திரிகள் மீது புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று நமக்குத் தெரியுமே.





அந்தமாதிரி மேல் அதிகாரம் அவர்களுக்கு இருக்கிறதென்ற பத்ம உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டு ஒரு மாநில ஆட்சி மீது விசாரணை நடத்த,—ஒரு தனி முதல்வர் மீது மட்டுமல்ல, ஒன்றிரண்டு தனி அமைச்சர்கள்மீது மட்டுமல்ல, மொத்த அமைச்சரவையின் மீதே விசாரணைக்குரிய புகாரைக் கிளப்பிவிட்டு—அப்படிக் கமிஷன் நியமிப்பது தவறு. அதுவும் அப்படிப்பட்ட கமிஷன் நியமிப்பது என்றால், புகார் செய்யப்பட்டிருப்பவர்கள் வேறு கட்சியார், நியமிக்கிற ஆட்சி இன்னொரு கட்சி. இரண்டு கட்சிகளுக்குமிடையே வேறுபாடு இருக்கிறது. இரண்டு கட்சிகளுக்கும் இடையே போட்டி, போராட்டம் இருக்கிறது. இந்த நிலையில் மத்திய ஆட்சி தன் சார்பில் இன்னொரு கட்சி ஆளுகின்ற ஆட்சிக்கு ஒரு கமிஷனை நியமிக்குமானால், அது மிகமிகத் தவறானது.

இன்று காலை, மாலை பத்திரிகைகளிலேயும், எதிர்க் கட்சிகள், நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகள், எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து கண்டிக்கவேண்டிய ஒரு முறை அது என்கிற, இந்த முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்களை ஆதரிக்கின்றன என்பதைப் படித்துப் பார்த்து நான் ஆறுதல் அடைகிறேன். அதிலே இந்த ஆட்சி உறுதியாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

இன்னொன்று நாட்டில் வன்முறைகள் பெருகி வருகின்றன. திரும்பவும் அதையே சொல்லுகிறேன். ஜனநாயகத்துக்காக இந்த ஆட்சி விட்டுக் கொடுப்பதையோ, வளைந்து கொடுப்பதையோ நான் வரவேற்கிறேன். வன்முறையை ஆட்சி சமாளித்துவிட வேண்டு 11-20 மு.ப.
மென்பதில் நம்பிக்கையில்லாதவனா? அதற்கு நான் தூபமிட விரும்பவில்லை. ஆனால் இரண்டொரு தனி மனிதர்கள் தாங்கள் மக்களிடையே தவறாகப் பெற்றுவிட்ட கவர்ச்சியைப் பயன்படுத்தி, அந்தக் கவர்ச்சி தான் அரசியல் என்ற தவறான முத்திரை போட்டு ஒரு ஆட்சியின் மீது, ஆளும் கட்சியின் மீது சரியாகவோ தவறாகவோ மக்களுடைய வெறுப்பை, அதிருப்தியைப் பயன்படுத்தி, நாட்டில் வன்முறையை வளர்த்து, அதிலும் படிக்கிற மாணவர்களுடைய படிப்பைக் கெடுப்பது என்பதற்கு ஏகபோக லைசென்சு இந்த ஆட்சி கொடுத்திருப்பது போல ஒரு ஐயப்பாடு நாட்டிலுள்ள பெரியவர்களுக்குத் தோன்றியிருக்கிறது. அதில் இந்த ஆட்சி உறுதியாக நடவடிக்கை எடுத்து, மற்றக் கட்சிகளினுடைய ஆதரவைப் பெறுவதற்கு, தமிழக முதலமைச்சர் குறிப்பாக காந்தியத்தில் அழுத்தமான நம்பிக்கை

யுடைய தலைவர் திரு. காமராஜர் போன்றவர்களை சந்தித்துப் பேசி— ராஜாஜி அவர்கள் உடல்நலம் இல்லாததால் அவர்களுக்கு அந்தத் தொந்தரவைக் கொடுக்க நான் விரும்பவில்லை; ஏற்கனவே ஆசி வேறு கூறிவிட்டார்; ஆதலால் பெரும் தலைவர் திரு. காமராஜர் போன்றவர்களை அணுகி சந்தித்துப் பேசி—இதற்கு ஒரு முடிவு காணவேண்டும். தொழிலாளர் உலகம் அமைதியாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் அது தலையிடவில்லை. உழவர் உலகம் அமைதியாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படவில்லை. வயது வந்த வாக்குரிமை படைத்த தொழிலாளர் உலகம், உழவர் உலகம சம்பந்தப்படாத, கவர்ச்சியடையாத ஒரு பிரச்சினை. இன்று பத்திரிகையில் பார்க்கிறேன். கோவையில் கல்லூரிகள் நடைபெறுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளை மூடும்படி உத்தரவு. வாக்குரிமையில்லாத இளம் பிள்ளைகள், நமது செல்வங்கள், நம் நாட்டு வருங்காலத் தலைவர்கள் இந்த நாட்டை ஆள்பவர்கள் அவர்கள் கல்வியைக் கெடுப்பதற்கு கட்சி என்று பெயர் சொல்லிவிட்ட அளவிலே, ஒரு கட்சிக்குத் தலைவர் என்பதற்காக அந்தக் கட்சிக்காக அனுமதி என்பது சரியான முறை அல்ல. இது ஆளும் கட்சிக்கு மட்டும் ஏற்பட்ட அவமதிப்பு அல்ல. பொதுவாக வளர்ந்து வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தகுதியுடைய தலைமையைப் பெற்று சாதனைகளை சாதித்து சரித்திரம் பெற்ற கட்சிகளும் கூட தங்கள் நிலை என்ன என்று சிந்தித்தாக வேண்டிய விஞக்குறி எழுந்திருக்கிறது. இந்த மாதிரி கலைத் துறையில் ஏற்பட்ட கவர்ச்சியை வைத்து ஒரு தனி நபர் இந்த நாட்டை அமர்க்களமாகக் கொண்டுபோய்விடலாம் என்று நினைப்பது என்றால், மற்ற எதிர்க் கட்சிகள் இருக்க வேண்டிய அ[illegible] இ[illegible]. இந்த ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே உள்ள பிரச்சினை என்று விட்டுவிடலாம். ஒரு கட்சியிலிருந்து அதிருப்தியடைந்து வெளியேறி இந்த நாட்டில் ஆட்சியைக் கைப்பற்ற அடுத்த எதிர்க் கட்சியென்றால், நிலையான எதிர்க் கட்சி என்பதே நாட்டில் இருக்க முடியாமல் போய்விடும். ஆகவே ஆளும் கட்சி சரிகிறது, கரைகிறது என்றால், அந்த இடத்தில் உறுதியான எதிர்க்கட்சி தான் வர வேண்டுமே ஒழிய, வருவது தான் ஆரோக்கியமான அரசியலே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. அந்த முறையில் தமிழரசுக் கழகம் நடத்திய விழாவிலே முதலமைச்சர் அவர்கள், "நான் இறங்குவதானால், அந்த இடத்தில் பெருந்தலைவர் காமராஜர் தான் வர முடியும், வேறு யாரும் வர முடியாது", என்று சொன்னது இனத் துவேஷத்தால் அல்ல, ராஜதந்திர சாகசத்தால் அல்ல, அவர் தான் தரமான எதிர்க் கட்சித் தலைவராக இருப்பதால், சரித்திரப்

மு.ப. 19-20





பின்னணி படைத்த கட்சியின் தகுதி படைத்த தலைவராக இருப்பதால், அந்தக் கட்சி தான் ஆள வருமே யொழிய திடீர்த் தலைவர் வர முடியாது என்று சொன்ன பொறுப்பு மிக்க முதலமைச்சரைப் பெற்ற தமிழகம் பெருமையுடையது என்பதைச் சொல்லுகிறேன். வேறு எந்த முதலமைச்சரும் எதிர்க் கட்சித் தலைமையைக் குறிப்பிட்டு இவ்வளவு பெருமைப் படுத்திச் சொல்ல முடியாது. நீ என்ன கொடுப்பது, நான் என்ன எடுப்பது என்று மதிப்புக்குரிய நண்பர் திரு. காமராஜர் சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அவர்கள் தவறாக உணர்ந்து அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். பெருந்தன்மையோடு எதிர்க் கட்சிக்கு ஆளும் கட்சியிலிருந்து வந்த வார்த்தையை அவர்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது இந்த ஆட்சியைக் காப்பாற்றுவதற்கு அவரை அழைக்கவில்லை. இந்த ஆட்சியை எதிர்ப்பவர்களைச் சமாளிப்பதற் கல்ல. நம்முடைய வருங்காலப் பள்ளிப் பிள்ளைகளைக் காப்பாற்று வதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும். இந்த மன்றத்தின் சார்பாக, நான் இளைஞன் அல்ல. இங்கே இருப்பவர்களில் வயது முதிர்ந்த திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களைச் சந்தித்து இன்னும் சில நாட்களுக்குள்ளே இதற்கு ஒரு முடிவுக்கு வந்து, கல்லூரிகளும் பள்ளிகளும் இந்த மாநிலத்தில் ஒருமையாக நடைபெறுமானால், மற்ற மாநிலங்கள் நம்மைப் பார்த்து, பொறாமைப்பட்டு, நம்மைப் பின்பற்றும். இந்த மாநிலத்திலுள்ள ஆளும் கட்சியின் முதலமைச்சர் எதிர்க் கட்சி என்ற முறையில் தான் முன் அழைப்பு கொடுக்கிறார்; அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். குறை கூறித் தப்பித்துக் கொள்வதில் பயன் இல்லை. பள்ளித் தலைமை ஆசிரியர்களும் கல்லூரி முதல்வர்களும் கூடி ஊர்வலம் செல்லுவதைப் பத்திரிகையில் படித்து நான் வியப்பு அடைகிறேன். அதுவும் குழப்பம் செய்வதற்காக ஒரே கொள்கையுடைய அரசியல் கட்சித் தலைவர்களோடு கலந்து ஊர்வலம் போவதைப் பத்திரிகையில் பார்த்தேன். ஒன்று அவர்கள் பொறுப்புணர்ச்சியை ஒப்புக் கொள்ளுகிறேன். அடக்குமுறையைக் கண்டிக்க அல்லது போலீஸ் அடக்குமுறையைக் கண்டிக்க தலைமை ஆசிரியர்கள் சங்கமும் கல்லூரி முதல்வர்களும் உணர்ச்சி பெற்றால், அந்த உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்கிறேன். அதற்கு அவர்கள் செய்ய வேண்டிய முதல் காரியம், பிள்ளைகளைப் பார்த்து, "பிள்ளைகளே, ஒழுங்காகப் பள்ளிக்குப் போங்கள். அந்தச் சம்பவங்களுக்கு கமிஷன் நியமிக்கும், நீதி விசாரணை ஏற்படுத்தும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

நீங்கள் கல்லூரிக்குப் போங்கள்" என்று தங்களுக்கு செல்வாக்கு இருக்கிறது என்று நம்புவார்களானால் பிள்ளைகள் தங்கள் சொல்லுக்கு அடங்குகிற ஆற்றல் தங்களுக்கு உண்டு என்று நம்புவார்களானால், அதைச் செய்து காட்டிவிட்டு, கல்லூரி முதல்வர்களும் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் முதலமைச்சரை, கல்வியமைச்சரைச் சந்தித்துப் பேசி ஆரோக்கியசாமி இறந்ததற்குக் காரணம் என்ன, திருச்சிச் சம்பவங்களுக்கு நீதி விசாரணை நடத்த வழிமுறைகளை அவர்களே சொன்னால், சந்திப்பவர்கள் எண்ணிக்கை எத்தனை என்பது அல்ல, சந்திப்பவர்கள் எத்தகைய தகுதி படைத்தவர்கள் என்பதைப் பொறுத்துத் தான் இந்த ஆட்சியில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள், உதவி புரிவார்கள் என்பதில் ஐயப்பாடே கிடையாது.

திரு. எஸ். டி. ஆதித்தன் : கடிதம் எழுதினால் போதும்.

திரு. ம. பொ. சிவஞானம் : வேறு எதையும் இன்று அதிகமாகப் பேச வேண்டியதில்லை. என் மனதையும் உறுத்திக்கொண்டிருக்கிறது. நேற்று திரு. ஏ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னார்கள் இரவெல்லாம் தூக்கம் வரவில்லையென்று. அதே நிலையில் நான் நானும் இருக்கிறேன். பொதுவாதால் என்ற கோளாறு அல்ல. நிச்சய

11-30 மு.ப.

மாக மாநிலத்தில் அமைதியாக சட்டமன்றம் நடக்கிறது. உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி எழுதுகிறார். ஒரு ஆட்சி பொறுப்பேற்று ஒரு பொதுத் தேர்தலுக்கும் இன்னொரு பொதுத் தேர்தலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சிக்கு, ஆளும் கட்சிக்குப் பலம் இருக்கிறதா என்று பரீட்சை பார்க்க சட்டமன்றம் தான் சரியான இடமே யொழிய சந்து முனையல்ல என்ற பொருளில் தலைமை நீதிபதி தீர்ப்புக் கொடுத்துவிட்ட பிறகு, மற்றப் பேர்வழிகள் அந்தத் தீர்ப்புக்கு என்ன மதிப்புக் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்தத்

மு.ப. 11–20

தீர்ப்புக்கு அப்புறம் கூட "நீ வெளியேறு, நீ வெளியேறு" என்று சொல்கிறார்கள். கல்லூரி மாணவர்கள் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அமைதியாகச் செல்லட்டும், அவர்கள் அமைதி பெறவேண்டுமென்றால், "நீ வெளியேறு" என்று சொல்கிறார்கள். இது ஒரு தத்துவம். நான் கேட்கிறேன். உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தான் ஒரு ஆட்சியை வெளியேற்றக்கூடிய சக்தி படைத்தவர்கள் என்றால், அப்படிச் சொல்லுபவர்கள் முதலில் தங்கள் கட்சியைக் கலைத்துவிட்டு அப்புறம் சொல்லட்டும். அதற்கு ஆளும் கட்சி மதிப்பு கொடுக்கும். தாங்களும் ஒரு கட்சி என்று



சொல்லிக்கொண்டு தங்களுக்கு ஆளுவதற்கு ஆசை, உரிமை இருக்கிறது என்று வலியுறுத்திக்கொண்டு, அதே நேரத்தில் நீ வெளியேறினால், நாட்டில் அமைதி நிலவும் என்று அமைதியின்மையைக் கிளப்புகின்றனர். சரியான நடவடிக்கை ஆட்சி எடுக்குமானால், இந்த அமைதி மீண்டும் வரும். என் பேரப்பிள்ளை, என் பிள்ளை தலைமுறை குற்றவாளிகள் அல்ல. தவறானவர்கள் தவறான உணர்ச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். அந்தப் பிள்ளைகளைக் கல்லூரிக்கு அழைத்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆட்சி பொறுப்பேற்க வேண்டும். பிரதான எதிர்க் கட்சி என்ற முறையில் இங்கு இருக்கிற ஸ்தாபன காங்கிரஸ் தலைவர்களையும் அதனுடைய பெரும் தலைவரையும் கேட்டுக்கொள்கிறேன். சில நாட்களிலே நமக்கு ஒரு முடிவு வேண்டும். சென்னைத் துணை வேந்தர் அவர்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். துணை வேந்தரையும் கல்லூரி முதல்வர்களையும் அடங்கிய ஒரு கூட்டம் உடனே கூட்டி. கல்லூரியில் எந்த அடக்குமுறையோ, போலீஸ் மீது அடக்குமுறையோ நடந்தாலோ அல்லது விடுதியில் போலீஸ் புகுந்தாலோ. அது மாதிரி சந்தர்ப்பங்களில் அந்தப் பிரச்னைக்கு முடிவு காணுவதற்கு கல்வித் துறையே பொறுப்பேற்க வேண்டுமென்று முடிவு கட்டி. இதுமாதிரிப் பிரச்சினையில் மாணவர்கள் தலையிட வேண்டாம் என்ற ஒரு முடிவுக்கு கல்லூரி முதல்வர்களும் துணை வேந்தரும் வர வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு நமது முதலமைச்சரும் கல்வி அமைச்சரும் முன்னிருந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்கள் இப்போது கூறிய கருத்தை மனமாறப் பாராட்டுகின்றேன். ஏனென்றால் எனக்கும் சில நாட்களாக நாட்டில் நடைபெறும் காரியங்களைப் பார்க்கும்போது, மிகவும் மனவேதனை ஏற்படுகிறது. சுமார் ரூ. 110 கோடி ஆண்டு தோறும் கல்விக்கு என்று செலவழித்துக்கொண்டிருக்கின்றோம். இவ்வளவு பெருந்தொகை வீணாகப்போய்க் கொண்டிருக்கின்றதே, இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாடு என்னவாகும், பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகும் என்று எண்ணிப்பார்க்கும்போது, இரத்தக்கொதிப்பே ஏற்பட்டு விடுகிறது. நேற்றுகூட நமது திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதரிடம், இதற்கு ஒரு பரிகாரம் காணவில்லையென்றால், நாம் எல்லோரும் எங்கே போவது என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த முறையில் அவர்கள் சொன்னமாதிரி பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களோடோ அல்லது மற்றவர்

களோடோ நமது முதலமைச்சர் அவர்கள் பேசி இதற்கு ஒரு வழி காணவேண்டும், பிள்ளைகள் நல்ல முறையில் படிக்கவேண்டும். நமது மதிப்பிற்குரிய திரு. தங்கபாண்டியன் அவர்கள் விருதுநகரில் ஒரு பஸ்ஸைக் கொளுத்திவிட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். காரணமில்லாமல் இதைச் செய்தார்கள். அதைப் போய்ப் பார்த்தபோது, மனம் மிகவும் வேதனைப்பட்டது. என்ன செய்வது என்றே தெரியவில்லை. இந்தமாதிரி நிலையில் அவர்கள் இழுக்கப்பட்டுவிட்டார்கள். இதற்கு முடிவு கட்டுவதற்கு என்ன செய்வது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, வெள்ள நிவாரண வேலைகள்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் யுத்தகால அவசரத்தில் காரியங்கள் நடைபெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். அவர்கள் ரூ. 25 கோடி சேதமாகியிருக்கின்றது என்று சொன்னார்கள். மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் ரூ. 40 கோடிக்குச் சேதமாகியிருக்கலாம், அதற்கு மேலும் ஆகலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மத்திய அரசு தாராளமாக நமக்கு நிதி உதவியளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த நேரத்தில் எச்சரிக்கையுடன் ஒரு வேண்டுகோளையும் நமது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகள் நடந்த காலத்தில் அப்போது கவர்னராக இருந்த சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் என் சொந்த ஊருக்கு அருகில் ஒரு மேல்நிலைத் தொட்டியொன்றினைத் திறப்பதற்காக விஜயம் செய்திருந்தார்கள். அப்போது "வறட்சி நிவாரணப்பணி எப்படி நடைபெறுகிறது" என்று கேட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும்
மு.ப. 10–20 இருந்தார்கள். நான் சொன்னேன், கட்டிட வேலைகளில் தவறுகள் ஏற்படுவதில்லை, ஆனால் மண் வேலைகளில்தான் அதிகத் தவறுகள், கோளாறுகள் நடப்பதாகச் சொன்னேன். அவர் இதைக் கலெக்டரிடம் கேட்ட நேரத்தில், அவர் சொன்னார், "மண் வேலையில் பணத்தைக் குறைவாகத்தான் கொடுத்திருக்கிறோம்" என்று. இப்போது வெள்ள நிவாரணப் பணி என்று சொல்லும்போது, பெரும்பாலும் மண் வேலையாகத்தான் இருக்கப்போகிறது. எனவே இதில் போதிய எச்சரிக்கையும் கண்காணிப்பும் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** துணைத் தலைவரவர்களே, வெள்ள நிவாரணப் பணிக்கென உடனடித் தேவைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் ரூ. 25 லட்சத்தைத் தர உத்தரவிட்டார்கள். அப்போது இந்த வேலைகளை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதை நான் தலைமைப் பொறியாளரிடமும் அதிகாரிகளிடமும் அறிவுறுத்தியிருக்கின்றேன். எனவே குறைபாடுகள் ஏற்படாது. அப்படி ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிகூறுகின்றேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கும், உத்தரவாதத்திற்கும் நன்றி.

அடுத்து, உர வினியோகம்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய திரு. ஆர். கே. அவர்கள் கூட வேண்டிய அளவிற்கு முறையான விலையில் உரவகைகள் கிடைப்பதில்லையென்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு மார்க்கெடிங் சொஸைடியுடைய தலைவனாக இருக்கின்றேன். ஐந்தாறு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அந்த சொஸைடியிலிருந்து உர வினியோகம் செய்கிறோம். ஆனால் அது கிராமங்களுக்கு முறையாகப் போவதில்லை. 48 ரூபாய்க்கு எங்களிடம் வாங்கிக்கொண்டு போய் ஓப்பன் மார்கெட்டில் 85 ரூபாய் வரையில் விற்கப்படுகிறது. எனக்குத் தெரிய 75 ரூபாய்க்கு விற்கிறார்கள். வாங்கிக்கொண்டு போகின்றவர்கள் வெளியே கொண்டுபோய் விற்று விடுகின்றார்கள். இதைத் தவிர்க்க வேண்டும் என்று ஒரு வகையான கட்டுப்பாட்டைப் போட்டு, "ஸர்டிபிகேட்" கொண்டுவந்தால்தான் கொடுக்கப்படும் என்றால், அதில்கூட உள்ளே நுழைந்து எப்படியோ வாங்கிவிடுகின்றார்கள். இதேமாதிரித்தான் சர்க்கரை விநியோகமும் எங்கள் ஊருக்கு சர்க்கரை மூட்டை வரவே யில்லை. தீபாவளியின்போதுகூட தீபாவளிக்கு முன்தான் சர்க்கரை வந்தது. இதற்குக் காரணம், அந்த சர்க்கரை மூட்டையை வெளியே விற்றால் 150 ரூபாய் கூடுதலாக ஓப்பன் மார்க்கெட்டில் கிடைக்கிறது என்று சொல்லுகின்றார்கள். எனவே இந்த விஷயங்களிலே நமது அரசு இன்னும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், அப்போதுதான் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளின் பலன்கள் உண்மையிலேயே கிராம மக்களுக்குக் கிடைக்கும். இது போன்றே மண்ணெண்ணெய் வினியோகம் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது எண்ணெய் விலை மிக அதிகமாகப் போய் விட்டது. இப்போது இந்த எண்ணெயைக்கூடக் கொள்முதல்

செய்து அரசு விநியோகம் செய்ய இருப்பதாக அறிகிறேன். அப்படி விநியோகம் செய்யும்போது, எந்தெந்த முறையில் செய்தால், அதன் பலன் கிராம மக்களுக்குக் கிடைக்கும் என்று யோசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் சென்னைக்கு வரும்போது காரில் வருகிறேன். வழியில் பல இடங்களிலே அரசுப் போக்குவரத்து பஸ்கள் விபத்துக்குள்ளாகியிருப்பதைப் பார்த்தேன். இதுபற்றிப் போக்குவரத்து அமைச்சரிடம் கூடக் குறிப்பிட்டேன். இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க வேண்டும். வண்டிகளை ஓட்டும்போது அவர்கள் எந்த நிலையில் இருக்கின்றார்கள் என்று "டெஸ்டு" பண்ணுவது நல்லது என்று கூடக் குறிப்பிட்டேன். இது மாத்திரம் இல்லை. எதிரே லாரிகள் வரும்போது, எங்கே நம் பேரிலே மோதிவிடுமோ என்ற பயத்துடன் தான் காரில் வந்தேன். அவ்வளவு வேகமாக வருகின்றன. அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த ஏதாவது செய்ய வேண்டும். இங்கேயிருந்து விருதுநகருக்குப் போனால், சராசரி 15 விபத்துக்களையாவது பார்க்காமலிருக்க முடியவில்லை.

அடுத்து, எங்கள் மாவட்ட மார்க்கெட்டிங் கமிட்டி தலைவனாக இருக்கின்றேன் நான். ஆனால் வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலுள்ளதுபோல அங்கே உள்ளவர்கள் விவசாயப் பொருள்களை மார்க்கெட்டிங் கமிட்டிக்கு கொண்டுவந்து கொடுப்பதில்லை. அந்த அளவிற்கு தனி வியாபாரிகளுடைய பிடிப்பில் பிணைக்கப்
11-40 பட்டிருக்கின்றார்கள் அவர்கள். சுமார் ஏழெட்டு லட்சம்
மு.ப. ரூபாயில் கட்டிடம்தான் இருக்கின்றது. ஆனால் விவசாயப் பொருள்கள் வருவதில்லை. குறைந்தது வற்றல், பருத்தி போன்றவற்றையாவது
மு.ப. 10-20 கொண்டுவந்து கொடுத்தால், பரவாயில்லை. இவற்றைக் கண்டிப்பாக மார்க்கெட்டிங் கமிட்டியிடம்தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில்தான் விவசாயப் பொருள்களைக் கட்டாயமாக ஒப்படைக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் வேண்டுகோள் பேரிலே முதலமைச்சர் அவர்கள் தற்காலிகமாக அதை நிறுத்திவைத்திருக்கின்றார்கள். அவர்கள் விரும்பினால், நிச்சயமாக உடனடியாக அதை அமுலுக்குக் கொண்டு வருகின்றேன் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.



திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நிச்சயமாக அதைக் கொண்டுவந்தால்தான் முடியும். இல்லையென்றால், இவ்வளவு பெரிய கட்டிடம் சும்மா கிடக்கின்றதே என்று பலர் சொல்லக்கூடிய நிலையில்தான் இன்று இருக்கிறோம்.

திரு. கே. எஸ். மணி: தலைவரவர்களே, ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பொருள்களைக் கட்டாயம் கொண்டுவந்து விற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் தாங்கள், தஞ்சையில் பெருமளவில் பருத்தி தேங்கியிருக்கின்றது. வாங்குவோர் இல்லை என்று பத்திரிகையில்கூட விளம்பரம் போட்டார்கள்; அப்போது ஏன் தாங்கள் அங்கே போய் வாங்குவதற்கு முன்வரவில்லை. அதற்கு என்ன காரணம்?

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, மார்க்கெட்டில் உள்ள நிலைமைகளைப் பார்த்து வாங்க வேண்டியுள்ளது. போன வருஷம் பருத்தி விலை ஜாஸ்தியாக இருந்தது. ஒரு குவிண்டால் 325 ரூபாய்க்கு விற்றது. இந்த வருஷம் 100 ரூபாய்க்கு குவிண்டால் உள்ள நிலையால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வாங்க முடியாமல் இருக்கிறது. இப்போது கொஞ்சம் விலையேறி இருக்கிறது. இது டிமாண்டு, சப்ளையைப் பொறுத்திருக்கிறது. இதற்கு இந்த மார்க்கெட்டிங் கமிட்டி காரணமாக இருக்க முடியாது.

திரு. கே. எஸ். மணி: ஒழுங்கு முறை மார்க்கெட் கமிட்டி சரக்கு தேங்கிக் கிடக்கிறபோது வாங்க முயற்சி எடுத்து வாங்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, அரசு போதிய நிதி மற்ற வசதிகளை அளிக்குமானால் தஞ்சை ஜில்லாவிலுள்ள அத்தனை பருத்தியையும் மார்க்கெட் நிலவரப்படி கொள்முதல் செய்து வியாபாரம் நடத்துவதற்கு எங்களுடைய மார்க்கெட்டிங் சொசைட்டி சித்தமாக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எல்லா ஒழுங்கு முறை மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கும் அப்படிப்பட்ட வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் சொன்னது போல, விலை குறைவு ஏற்படுகிற நேரத்தில் வாங்கி வைப்பதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். கூட்டுறவுத் துறையமைச்சரவர்கள்

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் நல்ல விலை வருகிற வரையில் பொருள்களை இருப்பு வைத்து விற்கின்ற வசதி அளிப்பதற்கு இசைவு அளித்திருக்கிறார்கள். அது செய்யப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொல்கிற மாதிரி, மார்க்கெட்டிங் சொசைட்டியில் ஏஜன்ஸி மாதிரி வைத்து பொருள்களுக்கு "அட்வான்ஸ்" கொடுத்தால் ஊக்கமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: 80 சதவீதம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: நண்பர் திரு. தர்மலிங்கம் அவர்கள் தாக்கீது கொடுத்திருக்கிறார்கள். தேவையானவைகளையெல்லாம் மார்க்கெட்டிங் கமிட்டியிலிருந்து வாங்க வேண்டுமென்று தாக்கீது கொடுத்து உதவி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் அதற்கு ஒரு நல்ல எதிர்காலம் இருக்கிறது. எங்கள் ஜில்லாவில் அப்படிச் செய்து காட்டவேண்டுமென்ற ஆர்வம் இருப்பதனால், சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

திரு. டி. கே. பொன்னுவேலு: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1972 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சட்டத்தின் முன் வடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அப்படி வரவேற்கிற இந்த சந்தர்ப்பத்தில், என்னுடைய மாவட்டத்தை அடுத்த வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த என்னுடைய அருமை நண்பர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றிச் சில வார்த்தைகள் பேசுவதற்கு, துணைத் தலைவரவர்களே, தாங்கள் அருள்கூர்ந்து அனுமதிக்கக் கோருகிறேன். இந்த
மு.ப. 10-20
மன்றத்தின் உறுப்பினன் என்ற முறையில் மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவன் என்ற நிலையிலே, நான் இதை இங்கே பேசுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர் திரு. பலராமன் அவர்கள் 66 நாட்களுக்கு முன்னால் தமிழ் நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டு, முன்னேற்றக் கழகத்தில் ஏற்பட்ட சில நிலைமைகளையொட்டி நாட்டில் ஏற்பட்ட விவகாரங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்.



தோழர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு வெளியேற்றப்பட்ட நேரத்தில், அப்படி ஏற்பட்ட நிலைமையில் இரண்டு விவகாரங்கள் அதில் உள்ளடங்கியிருப்பதாக நான் கருதுகிறேன். முதலாவதாக, வெளியேற்றப்பட்ட தோழர் திரு. ராமச்சந்திரனுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு தொடர்புடைய தோழமைக் கழகங்களைத் தவிர்த்து, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் பகிரங்கமாகப் பேசுவதற்கு முதல் நாள் வரையில் ஸ்தாபன காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் நடந்துகொண்ட முறை ஒரு விவகாரம். மற்றொரு விவகாரம், தோழர் திரு. ராமச்சந்திரன் அவர்களைப் பொறுத்தது. இதே போன்ற நிலைமையில், இந்த அளவிலே அல்ல, இதைவிட பெரிய அளவிலே முதன் முதலாக தமிழகத்தில் கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு ஏற்பட்டு, ஒரு கட்சி இரு கூறுகப் பிரிக்கப்பட்ட நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தது. அது அப்போது எப்படி நடந்துகொண்டது என்பதைப்பற்றி நினைவு படுத்துவது என் கடமை என்று நான் கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போதிருந்தார்கள். சிறைச்சாலையில் அவர்கள் அப்போது இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் செய்தியைப் படித்ததும், இப்படி கம்யூனிஸ்டு கட்சி இரண்டாகப் பிளவுபட்டது என் நெஞ்சே பிளவு படுவது போல் உள்ளது, இரண்டு கட்சியும் ஒன்ருக இருந்தால் சீராக இருக்கும் என்று அவர்கள் அன்றையதினம் சொன்னது என் காதுகளில் இன்றும் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இயற்கை எய்தியதற்குப் பிறகு, எங்களுடைய கட்சியின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமைப் பொறுப்பையேற்று, காங்கிரஸ் இரு கூருக ஆகிய அந்த நேரத்தில், ஆளும் கட்சியில் முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்துகொண்டது என்பதையும் நான் கவனப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்தாபன காங்கிரஸ் பக்கமோ அல்லது ஆளும் கட்சி, இந்திரா காந்தி காங்கிரஸ் பக்கமோ சேராமல் இரண்டு கட்சிகளும் ஒன்று சேர வேண்டுமென்ற எண்ணத்தைக் கூறினேமே தவிர, வேறு ஒன்றும் செய்யவில்லை. சர்க்கார் பொறுப்பில் மட்டும் தான் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு உதவியாக இருந்தது. ஸ்தாபன காங்கிரஸ் வளர வேண்டுமென்ரே அல்லது அது அழிக்கப்பட வேண்டுமென்ரே திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நாளும் நினைத்தது கிடையாது, செயல்

[திரு. டி. கே. பொன்னுவேலு] [1972 டிசம்பர் 16

பட்டது கிடையாது. ஆனால், எதிர்க் கட்சிகள் அனைத்தும் இந்த சந்தர்ப்பத்தில் எப்படி தங்களுடைய பெருந்தன்மையையெல்லாம் காட்டிக் கொண்டார்கள் என்பதைத் தமிழகம் தன்னுடைய சரித்திரத்தில் பொருத்திக்கொண்டிருக்கிறது. இந்த எதிர்க் கட்சிகள் சந்தர்ப்பம் கிடைக்காதா, சதி செய்ய முடியாதா, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சித்திரவதை செய்ய முடியாதாவென்று எவ்வளவோ காலம் திட்டமிட்டு அவர்களால் செயல்படுத்த முடியாமல், சக்தியில்லாமல், திராணி இல்லாமல், நடந்த காலத்தில் இருந்து, எங்கோ பதுங்கிக்கொண்டிருந்த தோழர் வெளியேற்றப்பட்ட நேரத்தில், அவரோடு சேர்ந்துகொண்டு நடத்திய சதித் திட்டங்களையெல்லாம், துணைத் தலைவரவர்களே, நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய பெருந்தன்மையை நிச்சயமாக எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து நாம் எதிர் பார்க்கவில்லை. நாங்கள் எதிர்க் கட்சியாகவும், அவர்கள் ஆளும் கட்சியாகவும் இருந்த நேரத்தில் அவர்களுடைய பண்புகளை உணர்ந்திருக்கிறோம். நாங்கள் அதைச் சுவைத்திருக்கிறோம். அவர்கள் எங்களை நடத்திய விதங்களெல்லாம் எங்கள் உள்ளத்தின் ஒரு "மூலையில் இருந்தாலும்" நாங்கள் அதை மறந்து விடுகிறோம். அவைகளைக் கவனத்தில் வைத்திருப்பதில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : ஏற்கெனவே தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல, அந்தக் கட்சியைச் சார்ந்தவர் யாரும் இல்லாதநிலையில், அந்தக் கட்சியைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டாம்.

11–50 மு.ப.

திரு. டி. கே. பொன்னுவேலு : இந்த நிலையில் எதிர்க் கட்சிகள் அனைத்தும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு திராவிட
மு.ப. 10–20 முன்னேற்றக் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்று நடத்தும் சர்க்காரையும் களங்கப்படுத்த வேண்டும், குலைக்க வேண்டும் என்ற நிலைமையில் எப்படி நடந்துகொண்டன என்பதை நண்பர் திரு. பலராமன் அவர்கள்,—பகிரங்கமாக அல்ல, அவரும் என்னைப் போன்றவர் தான் என்ற அளவில்—தனிமையிலே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்வேன். திரு. ராமச்சந்திரன் அவர்கள் கணக்கு விவகாரங்களை ஆரம்பித்தார். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கைக் குழு உறுப்பினன் என்ற முறையில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்



1972 டிசம்பர் 16] [திரு. டி. கே. பொன்னுவேலு]

பட்டிருக்கிறோம். நாங்கள் முறைப்படி 3½ வருடத்தில் திரு. ராமச்சந்திரன் அவர்கள் இருந்த நேரத்தில் தலைமைக் கழகக் கணக்குகளையும், மாவட்டக் கழகக் கணக்குகளையும் தணிக்கை செய்து, திரு. ராமச்சந்திரன் அவர்கள் முறைப்படி ஒவ்வொரு முறையும் பொதுக் குழுவிலும் செயற்குழுவிலும் படித்ததை ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட நாங்கள் எங்களுடைய தலைவர் எந்த அளவிலே உள்ளவர் என்பதை நெஞ்சார உணர்ந்திருக்கிறோம். துணைத் தலைவரவர்களே, இந்த உணர்ச்சியைக் கொண்டு நான் சொல்வேன், இந்த நீதி ஒதுக்கீடு சட்டம், அல்லது இதற்கு முன்னால் கொண்டு வரப்பட்ட சப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ் கூட இந்த மன்றங்களின் முன்னால் வைக்கப்படாமலே, "பிளாங்க் செக்" முதலமைச்சரவர்களிடம் தரப்பட்டால், நிச்சயம் அதில் நியாயம் இருக்கும், நீதி தான் வழங்கப்படும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வெறும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினன் என்ற உணர்ச்சியில் பேசவில்லை. இந்த நாட்டுக் குடிமகன் என்ற உணர்ச்சியில் நிச்சயமாக இதைக் கூறுவேன். மாண்புமிகு உதவித் தலைவரவர்களுக்கு இருப்பதைப் போல எனக்குக் கோயில்களில் நம்பிக்கையிருந்தால், 1,008 கோயில்களிலும் சத்தியம் செய்வேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : எனக்குக் கோயில்களில் நம்பிக்கை இருக்கிறது என்று ஒத்துக்கொண்டீர்களே, மகிழ்ச்சி.

திரு. டி. கே. பொன்னுவேலு : எனக்குக் கோயில்களில் நம்பிக்கை இருக்குமெனின், நிச்சயம் 1,008 கோயில்களில் சத்தியம் செய்து சொல்ல முடியும்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : அதற்காகவாவது கோயில்களுக்குப் போங்களேன்.

திரு. டி. கே. பொன்னுவேலு : துணைத் தலைவரவர்களே, உங்களுக்கு உள்ள உணர்ச்சியைப் போல அதை ஏற்றுக்கொள்கிற நிலைமையில் நாங்கள் இல்லையென்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு அந்த நம்பிக்கை தப்பித் தவறி ஏற்பட்டு விட்டால், என்னால் சத்தியம் செய்து சொல்ல முடியும். எங்கள் தலைவரிடத்தில் தரப்படுகிற பிளாங்க் செக் நியாயமாக நடைமுறையில் பயன்படுத்தப்படும், நல்ல முறையில் பயன்

படுத்தப்படும் என்பதை நாங்கள் உளமார உணர்ந்திருக்கிறோம், நடைமுறையில் பார்த்திருக்கிறோம். தரப்படும் ஒவ்வொரு தம்படியும், புதுக் காசும் உரிய முறையில், திரு. சத்தியமோகன் கூறிய படி, "ஹேவ் நாட்ஸுக்காக"ப் பயன்படுத்தப்படும். நான் விவசாயி. விவசாயி என்ற முறையில் கூறிக் கொள்வேன். நம் தலைவரவர்களால் இந்தத் துறையில் செலவழிக்கப்பட்ட அனைத்துப் பணமும் அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படுகிறது, சரிய முறையில் பயன்படுகிறது, பலன் தரத் தக்க முறையில் பயன்படுகிறது என்பதை நிச்சயமாக உணருகிறோம். வேண்டுமானால் நம்முடைய பெரியவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் மற்றவர்களும் கொடுக்கக் கூடிய உரத்தைப்பற்றிக் குறை சொல்ல முடியும். ஆனால் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உரத்தை உற்பத்தி செய்து தர வேண்டிய பொறுப்பிலிருப்பவர்கள் இங்கே இல்லை. டில்லியில் இருக்கிறார்கள். அவர்கள் நட் தேவைக்குப் பூராவையும் தருகிறார்களா என்றால், கிடையாது. அதே டில்லியிலிருந்து அரியானாவுக்கும் பஞ்சாபுக்கும் தங்கள் தேவையைத் தருகிறார்களா என்று பார்த்தால், தேவைக்குப் மிகையாகவே தருகிறார்களென்பதை நேரில் அந்த அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு கேட்டபொழுது கூறினார்கள். அந்த முறையில், விவசாயத் திற்கு வடக்கு மாநிலங்களுக்கு ஒரு முறையும் தெற்கேயுள்ள தமிழ் நாட்டிற்கு ஒரு முறையும் தேவைதானா? அது கண்டிக்கப்பட வேண்டியது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இன்றைய தினம் உரம் நமக்கு முறையாகக் கிடைக்க வேண்டு மென்றால், ஒன்று டில்லி முறையாக நமக்கு உரத்தை விநியோகிக்க வேண்டும். நாளுக்கு நாள் உரத் தேவை அதிகமாகிக்கொண்டு வருகிறது. 1965-ல் வேண்டுமென்றால், திரு. பக்தவத்சலம் பெரிய ரகம் தேவை இல்லையென்று தடுத்ததாகத் தெரிகிறது. ஆனால், முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு, பேரறிஞர் அண்ணா
மு.ப. 10–20 ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அதைத் தொடர்ந்து நம் டாக்டர் கலைஞர் அந்தப் பொறுப்பை நிர்வகிக்க வந்த பிறகு, அந்தத் தேவையை நாம் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த நிலைமையை ஒட்டி டெல்லி நமக்குத் தருமா என்று பார்த்தால், தருவதில்லை. டெல்லி தர வேண்டும் அல்லது அங்கே கிடைப்பது போன்று கிடைக்கச் செய்ய மாற்று வகைகளைக் காண வேண்டு மென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நேரம் குறைவாக இருப்ப தால், தொடர்ந்து பேச வேண்டிய சந்தர்ப்பம் மீண்டும் தந்தால், பேசுகிறேன் என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



* திரு. கே. எஸ். கணபதி: மதிப்பிற்குரிய மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு அரசு பல்வேறு துறைகளில் பணி யாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரே நிலை ஏற்படுத்தித் தந்ததற்கு முதற்கண் நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். தனியார் பள்ளிகளை முறைப்படுத்தும் சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவிற்கு விடப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், சில குறிப்பிட்ட பள்ளி நிர்வாகிகள் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பல ஆசிரியர்களைத் துன்புறுத்தி, இந்தச் சட்ட மன்றத்திலும், பொறுக்குக் குழுத் தலைவர் களிடமும் இது எங்களுக்குச் சாதகமில்லை என்று கூறும்படியாக வற்புறுத்துகிறார்கள். இது அரசுக்கும் தெரிந்திருக்குமென்று நம்பு கிறேன். ஆகவே, அந்த முறைகளைக் கண்டிக்கும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவு வெகு விரைவில் சட்டமாக்கப்பட வேண்டி, இந்தப் பொறுக்குக் குழு தனது முடிவை விரைவிலேயே தர வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரசின் இரு மொழிக் கொள்கை காரணமாக, பல மொழியாசிரியர்கள் தாங்கள் இருந்த நிலைமைகளை விட்டு பல பள்ளிகளில் வெவ்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஒரு சில ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்படும்பொழுது பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து அவர்களுக்கு அதிகமாக இடம் ஒதுக்கப்படுகிறது. ஆனால், அவர்களைப் பிடிக்காத நிர்வாகிகள் வேண்டுமென்றே பள்ளிக் கணக்கிலிருந்து மாணவர்கள் எண்ணிக்கை யைக் குறைத்து அந்த ஆசிரியர்களை வெளியில் அனுப்ப முயற்சிக் கிறார்கள். அது தொடர்பாக, அந்த ஆசிரியர்களின் அந்த நிலைமையை எடுத்துச் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளு கிறேன். 1—4—1970-க்குப் பிறகு முன்னுள் கழகப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் ஏதோ காரணத்தால் முறை யான வகையில் தொடர்ந்து பணியாற்றுவதற்கான வழி வகைகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே, குறிப்பாக, 1—4—1970க்குப் பிறகு நியமிக்கப்பட்ட அந்த பி.டி. ஆசிரியர்கள் நிலைப்படுத்தப்பட வேண்டுமென்று அரசை வேண்டிக் கொள்கிறேன். அதற்கு அரசு தயக்கம் காட்டக்கூடாதென்று வேண்டிக் கொள்ளுகிறேன். பட்ட தாரி ஆசிரியர்களுடைய ஊதியம், தேர்வு நிலை ஆசிரியர்களுடைய ஊதியம் ஆகியவை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இங்கே வலியுறுத்தப்பட்டது. அரசு உடன் அதனைச் செயல்படுத்த வேண்டு

[திரு. கே. எஸ். கணபதி] [1972 டிசம்பர் 16

மென வேண்டுகிறேன். தேர்வு நிலை அனைத்து ஆசிரியர்களுக்கும், அவர்களுடைய பணிக்கால அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டு மென்று நான் வேண்டிக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, 1—6—1970-க்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்படுவது போல 3/8 ஓய்வூதியம் 1—6—1970-க்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி விடை பெறுகிறேன். நன்றி.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை.)

* திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தலைவர் அவர்களே,
12·00 மணி பகல் இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப் பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த அரசு இது வரை செய்துள்ள சாதனைகளும் அதனால் மக்கள் அடைந்து வரும் நலன்களும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியது போல பெரிதும் வர வேற்கத் தக்கவையாகும். இந்தத் துணை மதிப்பீட்டுக் கோரிக்கை களை நான் முழு மனதோடு ஆதரித்து வரவேற்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் மிகத் தெளிவாகவும் ஆர்வத்தோடும் நான் சில விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டவன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது குறிப்பிட்டார்கள். அண்மையில், கடந்த இரண்டு மாதங்களாக எழுந்துள்ள பிரச்சினை யில், உழவர்கள் அந்தக் கிளர்ச்சியை ஆதரிக்கவில்லை, தொழிலாளர் கள் அதை ஆதரிக்கவில்லை, வாக்களிக்கத் தகுதி பெற்ற எவரும் ஆதரிக்கவில்லை என்று தெளிவாகச் சொன்னார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்வேன். 15—11—1972 அன்று இந்த அரசைக் கண்டிக்கும் வகையில், இந்த அரசின் மீது குறைகளை
மு.ப. 10–20 எடுத்துச் சொல்லுகிற வகையில், ஒரு அர்த்தால் நடத்த முயற்சித் தார்கள். அன்று அர்த்தால் நடந்தது. இந்த நாட்டிலிருக்கிற விவசாயத் தொழிலாளர் தோழர்களில் பெரும்பாலானவர்கள், கைத்தறி நெசவாளர்கள், அரசுத்துறையில் இருக்கிற ஊழியர்கள், மின் வாரியத் துறையில் இருக்கிற 84,000 ஊழியர்களில் மிகப் பெரும் பாலான ஊழியர்கள், மிருந்த அல்லலுக்கிடையே, தொல்லைகளுக் கிடையே அரசு போக்குவரத்துத் துறையில் இருக்கின்ற பெரும் பாலான ஊழியர்கள், அதே போல—இந்த நாட்டில் பல்வேறு வகை யில் அரசுத் துறையில் இருக்கிற அனைத்து ஊழியர்கள், துறைமுகத் தில் இருக்கின்ற தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள்,



1972 டிசம்பர் 16] [திரு. காட்டூர் கோபால்]

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷனில் இருக்கிற பெரும்பான்மைத் தொழிலாளர்கள், தனியார் துறைகளில், பஞ்சாலைகளில், இன்ஜினீயரிங் தொழிற்சாலைகளில் மற்றும் ஏனைய தொழில்களிலும் வேலை செய்கிறவர்கள், சிம்சன் நிறுவனத் தொழிலாளர்கள், இன்டக்ரல் கோச் பேக்டரி, இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ், கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் வேலை செய்யும் கூட்டுறவுத் துறைத் தோழர்கள், இன்னும் பிற துறைகளில் பணியாற்றுகிற பெரும் பாலான பாட்டாளிகள், இந்த நாட்டில் இருக்கிற மிகப் பெரும் பான்மையான மக்கள் அன்றைய தினம் வழக்கம் போல மாமூல் நிலை யில் பணியாற்றியிருக்கிறார்கள். நான் இவைகளை இங்கே குறிப்பிடக் காரணம், அப்படியெல்லாம் அனைவரும் பணியாற்றியிருந்தும் கூட, சில பத்திரிகைகளில் தொழில்கள் ஸ்தம்பித்து விட்டன, வேலையே நடக்கவில்லை என்று உண்மைக்கு மாறுபட்ட செய்திகள் குறிப்பிடப் பட்டுள்ளன. சில இடங்களில் மட்டும் தனியார் துறைத் தொழில் களில் அந்தக் குறிப்பிட்ட தேதியில், மாற்று விடுமுறை ஏற்பாட்டு நாளாக—லே ஆப் நாளாக—வேலை அல்லாத நாளாக இப்படியெல் லாம் பேசி முடிக்கப்பட்டு காரியம் நடந்தது. பெரும்பான்மையான இடங்களில் உள்ளபடியே வழக்கம் போல அன்றைய தினம் பணிகள் நடந்திருக்கின்றன. நான் இதைச் சொல்லக் காரணம் இந்த நாட்டி லுள்ள தொழிலாளிகள் இந்த அரசின் பக்கம், இந்த அரசின் பணி களின் பக்கம் தங்களை ஒன்றுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்குத் தான். இந்த 15—11—1972 அன்று நடந்த அர்த்தாலில் கல்லெறிக்குப் பயந்து கடைகள் அடைக்கப் பட்டன. கடைகள் அடைத்திருப்பதால் மட்டும் இந்த அரசுக்கு எதிர்ப்பு என்று சொல்லுவது எந்த வாதத்திற்கும் உகந்ததாக ஆகி விடாது. இந்தத் தமிழக அரசியலில் மிகப் பெரிய மாறுதல், நல்ல ஜனநாயக ஆரோக்கியம் 1967-க்குப் பிறகு தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நிதர்சனமாகக் காண முடிகிறது. நீதி விசாரணை, நீதி விசாரணை என்று பல்வேறு காரணங்களுக்காக 1967-க்கு பின்னால் கேட்ட உடனே கொடுத்தது நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருக்கிற இந்தக் காலத்தில் தான். நீதி விசாரணை என்று நான் பேசுகிறபொழுது, அந்த வார்த்தையை உச்சரிக்கிறபொழுது என்னுடைய கவனம் 1965-க்குச் செல்லுகிறது. 1965-ஆம் ஆண்டு திருப்பூரில் ஒரு பெரும் கலவரம் நடந்து, அந்தக் கலவரத்தில் என் மீது கூட பொய் வழக்கு கள் சாட்டி, நான் நீதி மன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு, நீதி மன்றம் விசாரணை செய்து, நான் நிரபராதி என்று அந்த வழக்கி

[திரு. காட்டூர் கோபால்] [1972 டிசம்பர் 16

லிருந்து விடுபட்டவன். நான் அந்தச் சம்பவத்தை இப்பொழுது சொல்லக் காரணம் அப்பொழுது- நாடே கொந்தளித்துக் கிடந்தது. நாட்டிலே நீதி விசாரணை நடக்காதா, என்று நாடு தழுவிய மாணவர்கள் போராட்டத்தின் பொழுது, தமிழ்நாட்டில் இருந்த அவ்வளவு மக்களும் எதிர்பார்த்தார்கள். ஏமாற்றம் கண்டார்கள்.

ஆனால் இப்போது பெரிய நல்லெண்ணம், மிகப் பெருந்தன்மை இவைகளைப் பார்க்கிறோம். கடந்த சில தினங்களுக்கு முன்னாலே
12-05 பி.ப. நமது முதல்வரவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். பாளையங்கோட்டை சம்பவத்திற்கு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்கள். ஒரு பிரச்சினையை அறுதியிட்டு நீதி விசாரணைக்கு அளித்திருந்தாலும்கூட அதற்குப் பின்னாலேயும், எதிர்க் கட்சி நண்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க முந்தைய பிரச்சினையையும்கூட இணைத்து, அதையும் இந்த நீதி விசாரணையில் சேர்த்துக்கொள்ள அவர் உத்தரவிட்டிருப்பது, பெரிதும் மக்களால் வரவேற்கத்தக்கது. எனவே ஜனநாயக ஆரோக்கியம் கட்டிக் காக்கப்படுவதற்கு, நிலைக்கப்படுவதற்கு, நல்ல ஆரோக்கியமான இந்த அரசு நீடித்து, நிலைத்து நிற்பதற்கு இந்தத் தமிழ் நாட்டு மக்கள் எப்போதும் துணை இருப்பார்களென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொன்றைச் சொல்லுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன், சீதையின் தீக்குளிப்பதைப்பற்றிச் சொன்னார்கள். மேலவைத் துணைத் தலைவரவர்களும் வேறு ஒரு ரீதியிலே சீதை தீக்குளித்ததை அழகாக எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய கண்ணோட்டத்தில் சீதை தீக்குளித்ததோடு, ராமாயணம் முடிவடைகிறதா என்றால், இல்லை. லவ-குசா வரை செல்கிற ராமாயணத்தைத் தொடர்ந்து பார்க்கிற போது, தீக்குளித்த சீதை மீது யாராவது பின்பு சந்தேகத்தைச் சொல்லி, இருக்குமோ என்று கருதிய ராமன், மறுபடியும் சீதையை
மு.ப. 10-20 வனத்துக்கு விரட்டுகிற கதையெல்லாம் அந்த ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. இங்கே குற்றச்சாட்டைச் சொல்லியுள்ளவர்கள் இன்னின்ன குற்றங்கள் நடந்திருக்கின்றன. இந்த இடத்தில் இன்ன சம்பவம் நடந்திருக்கிறது என்று அறுதியிட்டுக் குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை. அவர்களுக்கு நேருக்குநேர் குற்றங்களைச் சுமத்தக்கூடிய வாய்ப்பு சட்டமன்றத்திலே இருந்தாலும், நேருக்குநேர் பேசினால் ஆதாரங்கள் வேண்டுமேயென்ற காரணத்தினாலும், மக்களிடத்தில் பேசினால், மக்களிடத்திலே எடுத்துச் சொல்ல ஆதாரங்கள் வேண்டுமே என்றும் கருதி, மறைவாக மர்மப் பேழையிலே



1972 டிசம்பர் 16] [திரு. காட்டூர் கோபால்]

அடைத்து, அதை இந்த நாட்டினுடைய குடியரசுத் தலைவரிடத்திலே தந்திருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய நல்ல ஜனநாயக மரபுகள் யாராலே எப்படி மூடி மறைக்கப்பட்டிருந்தாலும், நம்முடைய முதல்வரவர்கள் அந்தக் குற்றச் சாட்டுக்களை இங்கே நாமெல்லாம் படிக்கிற வகையில், மக்கள் தெரிந்துகொள்கிற வகையில் புத்தக வடிவிலே அளித்திருக்கிறார்கள். நான் இந்த இடத்திலே ஒன்று குறிப்பிடுவேன். அந்தக் குற்றச்சாட்டுக்களைப் படிக்கிறபோது நம்முடைய மேலவைத் தலைவர் சில தினங்களுக்கு முன்னாலே, அழகாக ஒரு பழமொழி சொன்னது நினைவிற்கு வருகிறது. தெலுங்கிலே சொன்னார்கள்.

"வாடினி வீடு கொட்டினாடு, வீடினி வாடு கொட்டினாடு,
மத்திலோ காலி கொட்டிந்தி, கண்லோ மண்ணு படிந்தி,
கண்ணு மூசுகுண்டினி; அப்புடு தொப்பு தொப்புனி சப்தம் விரிந்தி,
எவுரினு எவரு கொட்டினாடுது தெல்லிது தேவரா."

இவன் அவனை அடித்தானா; அவன் இவனை அடித்தானா என்பதற்கு சாட்சி சொல்கிறபோது, இவன் அவனை அடித்தான், அவன் இவனை அடித்தான், என்னுடைய கண்ணிலே தூசி விழுந்து விட்டதால் எவர் மீது குற்றமுள்ளதென்று கூறமுடியாமல் தப்புவிக்கிற வகையில் சாட்சி சொன்ன நிலைமையைப் பற்றி, அவருக்கே உரிய அழகான வகையில் எடுத்துச் சொன்னார்கள். அப்படி சாட்சி சொல்வதே தவறாகும். இங்கே குற்றம் சுமத்தியிருக்கிற அந்தப் பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். இந்தப் பக்கங்களில் எந்த இடத்தில் பார்த்தாலும் "நம்பப்படுகிறது", "பரவலாகப் பேசப்படுகிறது", "சொல்லப்படுகிறது" என்று மழுப்புகின்ற நிலைமைதான் இருக்கிறது. இதுதான் குற்றம், இங்கே குற்றம், இதுதான் ஆதாரம் என்று எந்த இடத்திலுமில்லை. அதற்கு அடுத்த பதிலுரைப் புத்தகத்தைப் பார்க்கிறேன். 286 பக்கங்களில் மிகத் தெளிவாக, அவைகளெல்லாம் யூகிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கள், உண்மையில் குற்றச் சாட்டுகளேயில்லை; இதோ ஆதாரங்கள் என்று மிகத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளை நான் 14-ஆம் தேதிக்குப் பின், இடையிலே உள்ள இந்த இரண்டு நாட்களிலேயும் என்னுடைய அறிவுக்கு எட்டுகிற வரையில் பார்த்துவிட்டேன், கேட்டும் தெரிந்து கொண்டேன். இந்தியாவிலே பல மாநிலங்களில் அமைச்சரவையின் மீது, அமைச்சர்களின் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள்

சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த அமைச்சரவையிலாவது, எந்த அரசிலாவது அதற்குப் பதில்களை இப்படி உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள, மக்கள் தெரிந்துகொள்ள தந்திருக்கிறார்களா என்றால், இல்லை. அப்படித் தந்திருக்கிற ஒரே அரசு இந்த அரசுதான், கழக அரசுதான், கலைஞர் தலைமையிலே இருக்கிற இந்த அரசுதான் என்று சொல்கிற வகையில் இப்படிப்பட்ட வாய்ப்பினை அவர்கள் தந்திருக்கிறார்கள். நான் இந்த வாய்ப்பு தந்திருப்பதை, திரு. பலராமன் அவர்கள் பேச்சோடு ஒப்பிட்டு, தீக்குளிப்பு, சீதையின் தீக்குளிப்பு என்று எடுத்துக் கொண்டால், இதுவே பெரும் தீக்குளிப்புதான் என்று சொல்லிக்கொள்வேன். பலபேர் யூகித்துக் குற்றச்சாட்டுகளைத் தந்திருக்கிறார்கள். அவைகளுக்கு ஆதாரத்தோடு விவரங்களை அள்ளித் தந்திருக்கிறார். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் லவ-குசா போல் இருக்கிற, அந்த வால்மீகி ராமாயணக் கதையிலெல்லாம் குறிப்பிடப்பட்ட "லவ-குசா" வரையிலுள்ள நிலைமைகளெல்லாம் நாட்டிலே இல்லாத அளவுக்கு, பொறுப்புள்ள உறுப்பினர்கள், பொறுப்புள்ள மக்கள் இந்த நாட்டிலே பணியாற்ற வேண்டிய அவசியத்தைக் கோடிட்டுக் காட்டிக்கொள்ளத்தான். சில தினங்களுக்கு முன்னால் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் வேறு ஒரு சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டார்கள். இந்த நாட்டிலே இருக்கிற மாணவர்கள், பல்வேறு இடங்களிலும், பல்வேறு வகையில் போராடுகிற காரியங்களில் உள்ளாக்கப்படுகிறார்கள். தமிழ் நாட்டிலேயும் அப்படித்தான். முன்னாலேயெல்லாம் இப்படிப்பட்ட போராட்டங்களில் மாணவர்களுடைய உள்ளம் அமையவில்லையே,

12–10 பி.ப. இப்போது ஏன் இப்படி என்பதைப் பற்றி நிபுணர்களுடைய கருத்துக்களைச் சேகரித்து, ஆராய வேண்டுமென்பது பற்றிக் கோடிட்டுக் காட்டினார்கள். நான் இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றைத் தெரிவித்துக் கொள்வேன். 15—11—1972 அன்று ஒரு ஹர்த்தால் நடைபெற்றது. புதிதாகத் துவங்கிய கட்சியின் தலைவருக்கு போதுமான அனுபவம் இல்லாத காரணத்தினால், அவர்கள் சில அறிக்கைகளை விட்டார்கள். நாட்டு நலன் கருதி நான் இதைக் கோடிட்டுச் சொல்வதற்கு அவசியம் ஏற்படுகிறது. என்ன அறிக்கை விடப்பட்டதென்றால், குறிப்பிட்ட நாளில் பஸ்கள் ஓடாது; குறிப்பிட்ட நாளில் சினிமா ஓடாது; குறிப்பிட்ட 15-ம் தேதியில் தொழிற்சாலைகள் நடக்காது; ஜனங்கள் வெளியே வரமாட்டார்கள் என்று தெரிவித்துவிட்டு, அவர்கள் இதனைச் செவி மடுக்காமல் போனால் அவர்களது பிள்ளைகளே பார்த்துக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

மு.ப. 10–20



நான் இந்த மாமன்றத்தின் மூலம் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் கட்சிகளை நடத்துகிறவர்கள் பிள்ளைகளையெல்லாம் தூண்டி விடுகிற அளவுக்குப் போராட்டங்களை நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டத்தான் அந்த ஹர்த்தால் பற்றிச் சொன்னேன்.

(மணி அடித்தது)

தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். இப்போது இந்த அரசு, தொழிலாளர்களுக்குப் பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறது. மறக்க முடியாத நன்மைகளைச் செய்திருக்கிறது. இந்த அரசு துணை நின்ற காரணத்தால்தான் இந்தியா முழுவதுமுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் 8-1/3 கிடைத்தது. அதைக் குறிப்பிடக் காரணம் இப்போது டில்லி அரசில் ஒரு சட்டம் பரிசீலனையில் இருக்கிறது. இந்த அரசு வழக்கம்போல் துணை இருக்க வேண்டும். இந்த அரசு முன் மாதிரியாக நின்று துணை இருந்தால்தான், தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும். அப்படி என்ன சட்டம் அது? போனஸ் சட்டம். அந்த போனஸ் சட்டத்தில் எல்லாத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை, ஆதரித்து நேற்றைய தினம்கூட பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி, வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். தபால் தந்தி இலாகாவில் இருக்கிற ஊழியர்கள், அரசுத் துறையில் இருக்கிற ஊழியர்கள், ரெயில்வே தொழிலாளர்கள், கோச் பேக்டரி—வெடி மருந்து தொழிற்சாலை போன்ற பொதுத் தொழில் துறைத் தொழில்களில் இருக்கிற ஊழியர்கள் போனஸ் தேவையென்று கேட்டிருக்கிறார்கள். நான் இதை இங்கே குறிப்பிட காரணம், இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சினைக்கு நம்முடைய அரசு முன்நின்றுதான் நன்மைகளை வாங்கிக் கொடுத்திருக்கிறது. எனவே இந்த அரசு இவ்வளவு ஆண்டுக்காலம் தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்ததுபோல, இதிலேயும் பக்கத் துணையாக நின்று, பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மிக முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது, மின்சார இலாகாவிலே இருக்கிற 34 ஆயிரம் தற்காலிகப் பாட்டாளிகளுக்கு வாழ்வளித்தது போல, சாலை பராமரிப்புத் துறையிலே, பொதுப் பணித் துறையிலே இருக்கிற 17,000 தற்காலிக தினக்கூலிகளுக்கு இந்த அரசுதான் வாழ்வளிக்க வேண்டும். இந்த அரசு தொழிலாளர்களுடைய அரசு. அவர்கள் நிரந்தரமாவதற்கு, நிரந்தரமான

[திரு. காட்டூர்கோபால்] [1972 டிசம்பர் 16

தன்மையைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதேபோல் ஓட்டல் தொழிலாளர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலியை இவ்வளவு என்று நிர்ணயம் செய்ய குழுக்கள் அமைப்பது என்று அண்மையிலே இந்த அரசு முடிவு செய்தது பெரிதும் வரவேற்கத் தக்கதாகும் என்று பாராட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, in view of the limited time at my disposal and as many of the points that I would like to raise have already been covered by other hon. Members, I would just like to refer to a matter of great importance to which the Hon. the Chief Minister referred. Unfortunately, in our State, instead of dealing with the problems which have affected our people to very great extent and with a view to using diversionary tactics, a great deal of damage has been done to the reputation of Tamil Nadu by the happenings that have taken place during the past three months. I do not wish to go into the merits or demerits of the question, excepting to state that it is a matter of tragic agony that the Tamil Nadu State, its legislature, the Cabinet and the Ministry should habe veen brought into such disrepute by scandalous charges the reply to which has been given by the Hon. the Chief Minister. As I said, I have not had the time to go through it in detail but I feel we must pay our tribute to his Government, because, as has been pointed out by an hon. Member, no State Government has come forward so readily to publish a well-documented, authenticated reply—to the charges that have been made by my hon. Friends belonging to some opposition parties in the Lower House. I am indeed sorry with the Communist Party of India for its role in this regard but its reputation is well-known. Sir. In 1966 when the Dravida Munnetra Kazhagam decided to give its support to the C.P. (M), I said that it was a tragic mistake. Of course, mine was the lonely voice. Within six months, the treachery of that party was proved when it turned against the D.M.K. The Communist Parties only desire to use the popular parties to come to power so that the entire democratic system may be crushed and completely destroyed. What happened in 1967, Sir, happened in 1971, when the D.M.K. chose an ally which it thought would be more democratically inclined. But, unfortunately, they did not realise that my hon. Friend Thiru Kalyanasundaram had

மு.ப.
10-20



1972 டிசம்பர் 16] [Thiru A. R. Damodaran]

already displayed his wits in 1967 when he was defeated in Tiruchirappalli and when he lost his deposit, getting only 9,000 votes. If this friend demands the resignation of the D.M.K. Ministry (acclamation) on the ground that they have lost the support of the people, the first duty my hon. Friend should render is that the people who are elected with the massive support of the D.M.K. should first resign and set an example (Hear, Hear) for all of us to follow. I do not wish to take political sides, Sir. I have never taken political sides.

MR. CHAIRMAN : The hon. Member may also take political sides.

THIRU A. R. DAMODARAN : But, I think, Sir, it is necessary for some people to make an independent approach, because nobody can accuse me of being either Congress (O) or D.M.K. supporter. I am an independent. I believe in healthy political atmosphere in our State. I think democracy in our State may not survive the happenings that have taken place by abrupt adjournment of the Assembly without any reason whatsoever, which even the High Court of Madras has condemned. Whatever may be the differences of opinion between the hon. Members who have left the D.M.K. and those who remain in the D.M.K., it is absolutely essential for us to preserve the democratic fabric of our State and it is for this reason that I stated that a great deal of damage has been done to the reputation of Tamil Nadu. I have received letters from other parts of the country asking me if it is true that the entire Tamil Nadu Legislators are corrupt, the Ministry is corrupt, the Government officials are corrupt and, in fact, nothing else happens in Tamil Nadu except corruption. Is this the service that we have done to our State, Sir? Or, is it a disservice that we have done to our State? Sir, this is the only Legislature where the Members place their assets and liabilities statements before the House. Any Member is entitled to go through the statement of assets and liabilities and if he finds any omission, he is entitled to bring a motion before the House, have a discussion and show that any hidden wealth or ill-gotton wealth has been omitted to be mentioned. When this has been the practice that has been adopted in Tamil Nadu, what right has anybody to say that the Central Government should institute an enquiry into the charges against the State Government by appointing a Commission of Enquiry? Sir, I am

not a Constitutional Pandit. But, on the point that has been stressed by the Hon. the Chief Minister, I may say that he has my full support, in the sense that a Commission of Enquiry to be constituted under the Commissions of Enquiry Act was not contemplated as a Commission of Enquiry to go into the charges against a State Cabinet. The State Cabinet must be responsible only to the State Legislative Assembly and the Ministry can be thrown out by a No-confidence Motion in the Legislative Assembly. If we are going to have supra-Legislative Assembly authorities located outside Tamil Nadu State, I would only say, Sir, that in my opinion, it would be clearly unconstitutional. I do not have to recount what happened when Pandit Jawaharlal Nehru was alive, when charges were made against Thiru Pratap Singh Kairon, against my friend, the Chief Minister of Orissa Mr. Patnaik and four or five other Chief Ministers, whose doings created a great deal of scandal in those days. The lid was kept over the kettle, Sir, and nobody knew what happened. At least we have the courage and the Ministry has been able to publish a book of 263 pages, but my only regret is that I could not cover it in the two nights that were available to me. But I was just recounting that if this book could be translated into Tamil and sold, some publisher would make crores of rupees, because people are interested in knowing to what extent corruption has really pervaded, and to what extent our Ministers and Legislators are responsible for this.

Sir, having said this, may I refer to one or two unfortunate happenings in our State for which I hold not the Government responsible but for which our entire social fabric is responsible, namely, the closure of our educational institutions and the deliberate fishing in troubled waters of political parties in students' acti-
மு.ப. 10–20 12–20 vities? Sir, what we condemn as students' activity is really not
பி.ப. students' activity. I have known, Sir, in many cases, there are only half a dozen students, but about 15 or 20 anti-social elements join together and they throw stones on public property, they set fire to lorries, they destroy and damage public property; but refuge is taken that it is all students' activity. I would request the Hon. the Chief Minister to take courage in his hands and see that our educational institutions are re-opened and throw the entire responsibility for keeping these institutions open on the Principals and Headmasters of these institutions. The Government have



come in as an easy target; and generally speaking, public opinion is not in favour of keeping our educational institutions closed. If ten per cent of the students do not want to attend colleges and schools but want to keep out in support of some political parties, they are welcome to go away from our colleges and schools, they can join the political parties of their choice, stand for election in 1976 and get elected to our legislatures. But, we will not allow the 90 per cent of our student community to be held at ransom and be blackmailed by 10 per cent of the student population which is not interested in studies, in the prosecution of their studies. I would suggest, that we should seek the co-operation of Thiru Kamaraj, the Leader of the Congress (O) because that is the only other party besides the ruling Dravida Munnetra Kazhagam, which has some responsibility in our State : and I hope that they—the Hon. the Chief Minister and Thiru Kamaraj—will come together and see that some formula is evolved by which educational institutions are left undisturbed. If anybody tells me that the boys who came out on September 15 and who wrote such ugly and barbarous slogans on my car are people with political wisdom. I am afraid I cannot accept it. School boys will be school boys and I do not wish to suggest that we should take a harsh view on what has happened. But, at the same time, we will have to deal with it with firmness and restraint. This has happened not only in our State but throughout India. This is happening in the very citadel of power, Delhi, where the Delhi University has been closed till 31st December. We need not be nervous about this agitation ; we have got to face the trouble. I would only request the general public not to get themselves involved in such political attitudes but to send their daughters and sons to educational institutions, and they should accept the personal responsibility of taking their children to institutions and seeing that the schools and colleges are reopened.

Having referred to this, may I do my duty as a citizen of South Arcot district by pointing out to the Hon. the Chief Minister that enormous damage has been done during the recent cyclone? I was here in Madras attending the legislature session and I returned only on the 10th ; but I had to make a big de-tour and instead of going to Cuddalore *via* Pondicherry, as I usually do, I had to go to Villupuram, Tirukoilur, Vridhachalam and then go to Cuddalore, because the entire roads in South Arcot district had been badly

eroded and badly damaged and a great deal of damage had been done to the electrical poles, to the Post and Telegraph and Railway services, I must congratulate the Revenue authorities on the speedy action they took to provide some relief. But, I feel that massive effort should be made by the Highways Department. I do not know if there is a Special Flood Control Division in the Highways Department. Compared to the efforts that have been made by the Revenue authorities. I think, the Highways Department also can do a little more work, a little more quickly and speedily and a little more expeditiously. Because the entire Highway traffic has been held up, the essential commodities are not able to reach the towns in time. I would, therefore, request the Hon. Thiru S. J. Sadiq Pasha who had gone to Coimbatore district to kindly come to South Arcot district with the Chief Engineer, Highways and to render immediate assistance, because unless the roads are repaired essential commodities may not reach our towns. I am grateful to the Hon. the Chief Minister for having promised Rs. 2,000 as assistance to the families of those who have lost their lives and Rs. 80 for every hut that has been destroyed. But the people are just waiting and the cash doles have not been given. The people are still waiting, because if they start rebuilding their huts they are afraid they will not get the cash doles. I would, therefore, request that one of the Ministers, probably Thiru S. Ramachandran of our district, may be deputed and urgent measures may be taken to provide flood relief to all those who have suffered.

Only one thing more, Sir. In affording these cash doles for construction of huts and for the damage that might have been caused to crops in fields, I would request that as far as possible, at the district level at least, a committee composed of leaders of various
மு.ப. 10-20 political parties may be constituted, because, every time we go to the Centre and ask for help and we get help, the charge is made that the money has been ill-spent or that it has been spent for the benefit of the party people or that it has not been spent at all. Therefore, we should be on guard at this time and I hope all political parties will give their co-operation and see that at least in the provision of flood relief, politics does not play its part. Thank you.



திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, நிதி ஒதுக்கீடு
மசோதாவை வரவேற்றுப் பேசுகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி,
பெருமைக்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டு
கோள்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளும்
கட்சியைச் சார்ந்த தொண்டன் என்ற முறையில் கடந்த இரண்டு
மாத காலமாக நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்
என்பதை முதலிலே முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு
வர விரும்புகிறேன். அவர்களுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய
போலீஸ் இலாக்காவைப்பற்றி வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள்
எந்தக் கோணத்திலே விமரிசனம் செய்தாலும், நான் அவர்
அதனுடைய தலைவர் என்ற முறையில் அவர்கள் போலீஸ் இலாக்கா
விலே குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தடையாக
இருக்க வேண்டாமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள்
எங்களுடைய மாவட்டத்திலே நடைபெற்ற சில அசம்பாவிதங்
களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உணவுத் துறை அமைச்சர்
மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி அவர்கள், ராமநாதபுரத்
திலே பேசிக்கொண்டிருந்தபோது கல்லால் அடிக்கப்பட்டது
பத்திரிகைகளிலெல்லாம் வெளி வந்தது. அதை எல்லாப் பத்திரிகை
களும் தெளிவாகப் போட்டிருந்தன. எதிர்க் கட்சியிலே இருக்கக் 12-20 பி.ப.
கூடிய ரா. கி. (கிருஷ்ணசாமி நாயுடு) அவர்கள், திரு. ஜெயராம
ரெட்டியார் அவர்கள், திரு. சா. கணேசன் அவர்கள், ஆசிரியர்
தொகுதியிலேயிருந்து வந்த நம்முடைய திரு. ராஜா அய்யர் அவர்கள்,
பார்வார்ட் பிளாக் கட்சியிலே வந்திருக்கக்கூடிய திரு. சக்தி மோகன்
அவர்கள் அனைவருமே முகவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.
இவ்வளவு பெரிய தலைவர்கள் எல்லாம் இந்தச் சபையிலே இருந்தும்,
ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்
கொண்டிருக்கும்போது, கல்லால் தாக்கப்பட்டதுபற்றி எந்த இடத்
திலும், கட்சிப் பொதுக்கூட்டங்களிலும், ஏன் சபையிலேயும் இது
வரையிலும் வருத்தம் தெரிவித்துச் செய்திகள் இல்லை? இதே நேரத்
திலே நம்முடைய முதலமைச்சரவர்கள் புதிதாக முதலமைச்சர்
பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே பயந்தவர்களே காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். டாக்டர் கருணாநிதி மிக்க
பொல்லாதவர், பழி வாங்கிவிடுவார். 10 ஆண்டுக் காலம் சிறைத்
தண்டனை அளித்துவிடுவார் என்று பயந்தார்கள். பல காங்கிரஸ்
ஊழியர்கள் காங்கிரஸைவிட்டு வெளியேறியதையும் அவர்கள் மறந்

[திரு. எஸ். எஸ். தென்னரசு] [1972 டிசம்பர் 16

திருக்கமாட்டார்கள். அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்கள்
காந்தியையே தோற்கடிக்கிற அளவிற்குப் பொறுமையாக இருந்து
தன்னுடைய தொண்டர்கள் தாக்கப்பட்ட நேரத்திலேகூட
நடவடிக்கை எடுப்பதற்கு, ஜாடையாக கவனிக்காமல் இருப்பது,
எங்களுக்கெல்லாம் வருத்தமாகத்தான் இருக்கிறது. அவர் ஒரு
காலத்திலே மதுரைக்கு போலீஸ் லாரியில் சென்னையிலிருந்து
கொண்டுவரப்பட்டார். நான் அப்போது மதுரைச் சிறைச்சாலை
யிலே இருந்தேன். இரவு 9 மணிக்கு அவர் மதுரைச் சிறைச்சாலை
யிலே உள்ளடைக்கப்படுகிறபோது மூட்டைப்பூச்சிகள் நிறைந்த ஒரு
கூடத்திலே அவரை அடைத்து வைத்தபோது "எனக்கு தூக்கம்
வரவில்லை" என்று அவர் சிறைச்சாலையிலே சொன்னதை நான்
மறக்கவில்லை. உடனே போலீஸ் எஸ்.பி., இன்றைக்கு டி.ஐ.ஜி.ஆக
இருக்கக்கூடிய அன்றைய போலீஸ் எஸ்.பி. "உங்களுக்குத் தூக்க
மாத்திரை கொடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி அன்றைக்குத்
தூக்க மாத்திரையைக் கொடுத்துவைத்தார்கள். காலை நான்கு
மணிக்கு அங்கிருந்து பாளையங்கோட்டை சிறைச்சாலைக்குக் கொண்டு
போனார்கள். முதலமைச்சர், முதலமைச்சராக வந்தவுடனே அந்தப்
போலீஸ் அதிகாரிகளிலே பல பேர் டாக்டர் கருணாநிதி நம்மைப்
பழி வாங்கிவிடுவார், டிபுரமோட் பண்ணிவிடுவார் என்றெல்லாம்
பயந்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலைமைகள் மாறி ஆளும்
கட்சியைச் சேர்ந்த பொறுப்புள்ள அமைச்சர்கள் தாக்கப்படுகிறார்கள்.
தொழில் அமைச்சர் அவர்களுடைய கார் இரண்டு இடங்களிலே
காரைக்குடியிலே, சிவகங்கையிலே தாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்
பட்ட நேரத்திலேகூட குற்றவாளிகள் மீது என்ன செக்ஷன்
கீழ் கேஸ் போட வேண்டுமோ அதை இதுவரைக்கும் போடவில்லை
என்று தெரிகிற நேரத்திலே, முதலமைச்சரவர்களுடைய ஜாடை
கிடைக்கவில்லை என்று எங்களுக்கு சூசகமாகத் தெரிகிறது. இந்த
மு.ப. 10-20 நேரத்திலே நான் அதைக் குறிப்பிட வேண்டுமென்று விரும்புகிறேன்.
ஒரு காலத்திலே திரு. காமராஜரைக் கண்டித்துப் பேச வேண்டு
மென்று விளம்பரம் செய்தால், போலீஸ் அதிகாரிகள் என்னுடைய
வீட்டிற்கு வந்து திரு. காமராஜரைத் தாக்கிப் பேசக் கூடாது என்று
எழுதி வாங்கிக்கொண்டுதான் அங்கே மேடையிலே ஏற்றிய சரித்தி
ரத்தை நான் மறந்துவிடவில்லை. ஆனால் இன்றைக்கு அப்படிப்பட்ட
நிலைமை கிடையாது. எந்தக் கட்சிக்காரர்கள் மேடையிலே ஏறின
லும், குடும்பங்களைப்பற்றிப் பேசக்கூடிய சூழ்நிலை தி.மு.க. இல்லாத
அரசியல் மேடைகளிலே இருப்பதை நான் முதலமைச்சர் அவர்



1972 டிசம்பர் 16] [எஸ். எஸ். தென்னரசு]

களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலமைச்சர்
அவர்கள் பொறுமைசாலியாக இருக்கலாம். காந்தியாக இருக்கலாம்,
எதையும் தாங்கிக்கொள்ளக்கூடியவராக இருக்கலாம். ஆனால்
சாதாரணத் தொண்டர்களின் ஏழைக்குடும்பத்தைப் பற்றி, தங்களைச்
சார்ந்த குடும்பப் பெண்களைப்பற்றிப் பேசுகிறபோது, ஏழை உணர்ச்சி
வசப்பட்டும் கட்சிச் சார்பிலே கட்டுப்பாட்டோடு இருப்பதை நான்
முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒரு
காலத்திலே சட்டத்தை நாங்கள் எரித்த நேரத்திலே, சட்டத்தை 12-30
எரிப்பதற்காக கட்சியின் அலுவலகத்திலேயிருந்து புறப்பட்டு ஒரு பி.ப.
பர்லாங் தூரத்திற்கு வந்தபிறகு இன்றைய முதலமைச்சர் அவர்களும்
இன்றைய உணவுத் துறையமைச்சர் அவர்களும் வழியிலே வந்தார்
கள். சட்டத்தை எரிப்பதற்காகச் சென்றவர்கள், கட்சியின் பொரு
ளாளர் வருகிறார் என்பதற்காக அவருக்கு மாலை போட்டார்கள்.
அதிலிருந்து எஸ்.பி. அவர்கள் திருச்சியிலேயிருந்து கலைஞர் அவர்கள்
தூண்டிவிடுவதற்காகத்தான் மதுரைக்கு வருகிறார்கள் என்று அவரை
யும், இன்றைய உணவுத் துறை அமைச்சரவர்கள் மீதும் சதி வழக்குப்
போட்டதை நான் மறந்துவிடவில்லை. ஆகையினாலே இந்த நேரத்
திலே மாணவர்களைத் தூண்டிவிடக் கூடியவர்கள் யாராக இருந்தா
லும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, இதைப் பரிசீலிப்பதற்கு
சி.ஐ.டி.க்களைப் போட வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்
களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சட்ட ஒழுங்கு கெட்டு
விட்டது என்று ஒரு சிலர் பேசுவதிலே உண்மையிருக்கிறது. என்ன
உண்மை என்று சொன்னால், தூண்டிவிடக்கூடிய தலைவர்களையும்,
கலவரம் செய்யக்கூடிய காலிகளையும் முதலமைச்சர் அவர்கள்
கண்டிக்காமல் இருக்கிறார்களே என்பதனால் மறைமுகமாகச் சொல்லு
கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட காலிகள் மீது நடவடிக்கை
எடுப்பதற்கும், காலிகளைத் தூண்டிவிடக்கூடிய கட்சியின் மீதும்
கட்சித் தலைவர்களின் மீதும் வழக்குப் போடுவதற்கும் முதலமைச்சர்
அவர்கள் தயவுசெய்து முன்வரவேண்டுமென்று நான் மிகப்பணிவன்
போடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு காலத்திலே இன்றைக்கு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருக்கின்ற பேராசிரியர் அன்பழகன்,
முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், கல்வித் துறை அமைச்சர்
டாக்டர் நாவலர் அவர்கள் இந்த மூன்று பேருக்கும் காங்கிரஸ்
அரசாங்கம் சி.ஐ.டி.க்களைப் போட்டு குறிப்பெழுத்தாளர்களை
அனுப்பியிருந்தது. ராமேஸ்வரத்திலே முதலமைச்சரவர்கள் பேசி
விட்டு மறுநாள் காலை தர்மபுரி வந்தபோது, அதே குறிப்பெழுத்
தாளர்கள் உடனடியாகக் கூடவே வந்து அந்தக் குறிப்பை எடுத்து

அன்றைக்கிருந்த அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அந்தக் குறிப்பு எழுதப்படுகிற முறை இன்றைக்கு ரத்து செய்யப்பட்டு விட்டதா இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். மிகக் கீழ்த்தரமாகப் பேசக்கூடிய பெரிய தலைவர்களாக இருந்தாலும், கலவரத்தை உண்டு பண்ணக்கூடிய, கிளர்ச்சியை உண்டாக்கக்கூடிய பேச்சுக்களைப் பேசுகிறவர்களுடைய உரையைக் குறிப்பு எழுதுவது மூலமாக சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் அறிய வேண்டும். ஒரு கட்சியின் தொண்டன் என்ற முறையிலே, கட்சியின் தலைவராகவும் ஆட்சியின் தலைவராகவும் இருக்கக்கூடிய கலைஞர் கருணாநிதி அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் அரசாங்கத்திலே, காங்கிரஸ் கட்சிக்காகப் பாடு பட்ட தொண்டர்களுக்கு இந்த அரசாங்கம் நன்மை செய்திருக்கிறது. தி.மு.க. அரசாங்கம் நன்மை செய்திருக்கிறது. ஆனால் தி.மு.க. அரசாங்கத்தினுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட, இந்தி ஒழிப்புக்காக பாடுபட்ட, சட்டத்தை எரித்துச் சிறை சென்ற, மறியல் செய்து தீக் குளித்து மறைந்த குடும்பங்களுக்கு தமிழ் ஆதரவு அளித்த ஆயிரக் கணக்கான தொண்டர்கள் ஒரு சிறு அளவு நிலம்கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியில் என்ன லாபம் என்றால், மாநில அரசும் நிலம் கொடுக்கிறது, இந்திரா காந்தி அரசும் பணம் கொடுக்கிறது. ஆனால் இங்கிருக்கக்கூடிய தி.மு.க. தொண்டர்களுக்கு அவர்களாலே உருவாக்கப்பட்ட தலைவர் களுக்கே இன்னும் நிலம் கொடுக்கவில்லை என்ற அதிருப்தியை மனதிலே கொண்டிருக்கிறோம். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இந்தி எதிர்ப்பிலே சிறை சென்றவர்கள், 3 மாதம், 6 மாதம், ஒரு ஆண்டுக் காலத்திற்கு மேலே சிறை சென்ற ஏழைக் குடும்பங்களைச் சார்ந்திருக்கக்கூடிய நிலம் இல்லாத தமிழ் நண்பர்களுக்கு நிலம் கொடுக்கும் திட்டத்தினை மிக விரைவாக உருவகப்படுத்தி அதற்கு

மு.ப. 19–20

ஒரு உத்தரவைப் போட வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்களுக்கு என்னுடைய மேலான வேண்டு கோள், நேஷனல் ஹைவேஸ் என்று நிறைய ரோடுகள் மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் சேர்த்து அமைக்கிறார்கள். ஆனால் திருச்சியிலிருந்து அந்த நேஷனல் ஹைவேஸ் ரோடு போடவேண்டிய இடத்திற்கு நேஷனல் ஹைவேஸ் ரோடு கொடுக்கப்படவில்லை. திருச்சியிலிருந்து திண்டுக்கல், மணப்பாறை வழியாக மதுரைக்குப் போட்டிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து மதுரை போகிறவர்கள் "வயா" மேலூர், திருச்சியிலிருந்து ராமேஸ்வரத்துக்குப் போவதற்கு



"வயா" மானாமதுரை, "வயா" தேவக்கோட்டை, தேவிப்பட்டணம், வழியாகப் போகிறார்கள். இந்த இரண்டு முறை ரோடுகளை நேஷனல் ஹைவேஸ் ஆக மாற்றுவதற்கு பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணி வன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். பல முறை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். திருச்சியிலிருந்து மதுரைக்குச் சரியான ரோடு இல்லை. பலமுறை முதலமைச்சர் கார் முன்பாக கல்வைத்து மறித்திருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அகலமான பாதையாக இருந்தால்தான், விபத்துக்களைத் தடுக்க முடியும் என்று அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தென் பிராந்தியம் செழிப்புப் பெற்றிருக்கிறது, வளம் பெற்றிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கு வருவாய்த் துறை அமைச்சர் இல்லாத காரணத்தினால், முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், இராம நாதபுரம் மாவட்டத்தில் இரண்டு தாலூக்காக்களுக்கு ஒரு டிவிஷன் என்று இருக்கிறது. இராமநாதபுரமும், முதுகுளத்தூரும் ஒரு டிவிஷன். பரமக்குடியும் சிவகங்கையும் ஒரு டிவிஷன். தேவகோட் டையும், திருப்பத்தூரும் ஒரு டிவிஷன். ஆனால் மேற்கு இராமநாத புரத்தில் ஒரே டிவிஷன்தான் இருக்கிறது. சிவகாசி டிவிஷன் ராஜ பாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, சாத்தூர் போன்ற தாலூக்காக்களைச் சேர்ந்தது. ஆகையினால் முதலமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து திருச்சுழியைத் தனித் தாலூக்காவாக்கி அருப்புக் கோட்டையையும் திருச்சுழியையும் சேர்த்து ஒரு தனி டிவிஷனாக உருவாக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். உறுப்பினர் திரு. ராமாயணத்தைப் பற்றி பல சர்ச்சைகள் வந்தன. பலராமன் ஒரு கருத்தும், சட்டமன்றத் துணைத் தலைவர் ஒரு கருத்தும், திரு. காட்டூர் கோபால் ஒரு கருத்தும் சொன்னார்கள். சீதை தீக் குளித்த பிறகுதான் இரட்டைக் குழந்தை பிறந்தது என்று கவனப் படுத்தி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம். எம். பக்கர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீட்டிற்கான மசோதாவின்மீது எனக்குப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமீப காலத்திலே தமிழகத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியது போல, ஏற்பட்ட ஈடும் இணையுமற்ற வெள்ளக் கொடுமையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை

முதலில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இந்த வெள்ளச் சேதத்தைப்பற்றி இந்த மன்றத்தில் அறிவித்தபோது, போர்க்கால வேகத்தோடு இந்த அரசு செயல்படப் போகிறது, அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டார்கள். நிச்சயமாக தமிழ் மக்கள் அனைவருமே ஒத்துழைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே சமயத்தில் இவ்வளவு பெரிய சேதத்தை தமிழக அரசு மட்டும் தன்னிடமுள்ள நிதி நிலைமையைக் கொண்டு சமாளிக்க முடியுமா என்பது ஒரு கேள்வி. மத்திய அரசு இந்தத் துறையிலே தாராளமாக உதவியளிக்க முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். மத்திய அரசு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு மட்டுமில்லை. இதுமாதிரி சந்தர்ப்பங்களில் கை கொடுக்கத்தான் மத்திய அரசு இருக்கிறது என்று நம்புகிறேன். முதலமைச்சர் அவர்களிடத்தில் மற்றொரு வேண்டுகோள் இப்போது செய்து கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் தங்களுடைய 65 ஆண்டு ஆயுள் காலத்தில் இப்படிப்பட்ட வெள்ளச் சேதத்தைக் கண்டதே இல்லையென்று மனமுருகிச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பெரிய சேதத்தை தங்களுடைய கண்ணால் நேரில் கண்டு இது இவ்வளவு பெரிய சேதம், எவ்வளவு உதவி அரசு அளித்தாலும் தேவலாம் என்று தீர்மானிப்பதற்கு பிரதம மந்திரியை இந்த வெள்ளச் சேதத்தைப் பார்வையிடுவதற்கு அழைக்குமாறு முதலமைச்சருக்கு வேண்டுகோள் விடுகிறேன்.

அடுத்து, நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைப் பற்றிச் சில வார்த்தைகள் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சமீப காலத்தில், ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் சொல்லுகிறேன், நம்முடைய போலீஸ் இலாகா தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது போல், எந்த இலாகாவும் இது வரையில் உள்ளாகவில்லையென்று எனக்குத் தோன்றுகிறது. காரணம், அவர்களுடைய கடமையைச் செய்வதற்கு போலீசார் இந்த அளவிலே ஏன் தாக்கப்பட வேண்டும் என்பது

மு.ப. 10-20

எனக்குப் புதிராக இருக்கிறது. இந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகளும், சில அரசியல்வாதிகளும் போலீஸ் இலாகாவின் மீது அவதூறு செய்வதைத் தொழிலாக வைத்துக்கொண்டு விட்டார்களோ என்று எண்ணுகிற அளவுக்கு அவர்களுடைய அவதூறு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. என்ன செய்தாலும் குறை. ஒரு இடத்தில் கலவரம் நடக்கிறது. அதை அடக்க போலீஸ்காரர்கள் செல்லுகிறார்கள். போலீஸ் தலையிட்டு குழப்பிவிட்டார்கள் என்று குற்றம்



சாட்டுகிறார்கள். என்ன செய்வது? ஒரு சிறு கலவரம் நடக்கிறது. அந்தக் கலவரம் அமைதியாக அடங்கிவிடும் என்று போலீஸ் பொறுமையாக இருந்தால், போலீஸ் கைகட்டி வேடிக்கை பார்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு. இது மாதிரிக் குற்றம் சாட்டினால், போலீஸ் இலாகா எப்படி வேலை செய்ய முடியும் என்பது தான் எனக்குத் தெரியவில்லை. மற்றொன்றைச் சொல்லிக்கொள்ளுவேன். இந்த சர்க்காரைப் போல் விசாரணைக் கமிஷன் நியமிக்கிற சர்க்கார் இந்தியாவில் எந்த மாநிலத்திலுமே இல்லையென்று நினைக்கிறேன். விசாரணைக் கமிஷன் போட வேண்டியது தான். ஏனென்றால் உண்மையான ஒரு அரசு நீதி தவறவில்லை என்று நிரூபிப்பதற்கு விசாரணை போடுகிறார்கள். தேவை தான். ஆனால் எல்லையைத் தாண்டி விசாரணைக் கமிஷன் கேட்பவர்களுக்கெல்லாம் விசாரணைக் கமிஷன் போட்டால், எந்த இலாகாவும் சரியான முறையில் வேலை செய்ய முடியாது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவதூறு செய்வது இருக்கிறதே, அதைப் பற்றித் திருக்குறளில் வாசகம் உண்டு. காரணமில்லாமல் தேவையற்ற அவதூறு செய்வது கொலை செய்வதைவிடக் கொடுமையான செயல் என்று திருக்குறள் சொல்லுகிறது. இப்போது தேவையில்லாத குற்றச்சாட்டுகளை அள்ளி வீசி அமைச்சர்களிலிருந்து சாதாரண மனிதர் வரை இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பெரிய விளம்பரம் கொடுத்து, அதை ஜனாதிபதிக்குக் கொண்டு சென்று, இப்படியெல்லாம் மக்களை மயக்கி "கேரக்டர் அசாசினேஷன்" என்ற ஆத்மாத்தக் கலையில் இறங்கியிருக்கிறார்களே சிலர், அவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : குற்றவாளியை 20 தரம் மன்னிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

திரு. எம். எம். பக்கர் : ஆனால் அதற்கு இந்த அரசு சரியான பதில் எழுத்து பூர்வமாகக் கொடுத்திருக்கிறது. அதையெல்லாம் எங்கே திருத்திக்கொள்ள வேண்டுமோ அங்கே திருத்திக் கொள்ளலாம். ஆனால் நான் ஒன்று சொல்லுகிறேன். நாட்டில் வன்முறை அதிகமாகத் தலையெடுத்துவிட்டது என்று சொல்லமாட்டேன், தூண்டிவிடப்படுகிறது என்பது தான் உண்மை, இரண்டு நாட்களுக்கு முன் இங்கு பேசிய மதிப்பிற்குரிய திரு. ராஜா அய்யர் "மாஸ் சைகாலஜி" பொதுஜன மனப்பான்மைபற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். "மாஸ்" சைகாலஜி பற்றித்தான்

சொன்னார்களே தவிர, "மாப்" சைக்காலஜியைப் பற்றிச் சொல்ல மறந்துபோய்விட்டார்கள் என்று எண்ணுகிறேன். எதற்கெடுத்தாலும் ஒரு கூட்டமாகச் சேர்ந்துகொண்டு எதையும் செய்துவிடலாம் என்ற மனப்பான்மை இருக்கிறது. தனிமனிதன் செய்யும் ஒரு காரியத்தைக் கூட்டமாகச் சேர்ந்து செய்து விட்டால், அது தவறில்லை என்ற மனப்பான்மை வளர்ந்து வருகிறது நாட்டில். சென்ற மாதம் காரில் ஊரிலிருந்து வந்துகொண்டிருக்கின்றேன். யாரோ ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பொருளாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுவிட்ட நேரம் அன்று. தெம்பாக்கிற்கும் கடலூருக்கும் இடையிலே ஐந்து முறை என் கார் நிறுத்தப்பட்டு விட்டது. 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் நிறுத்துகின்றார்கள். அவர்களை வழி நடத்திச் செல்வதற்கு நாம் தவறி விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஒவ்வொருவர் கையிலும் சிறு கல். காரை நிறுத்தவில்லையென்றாலும், கார் கண்ணாடி உடைந்துவிடும். ஏதோ எழுத வேண்டும் என்று சொன்னார்கள். கண்ணால் பார்க்கக்கூடாதவற்றை,
10-40 பி.ப. நாவினால் சொல்லக்கூடாதவற்றை எழுதினார்கள் சிறுவர்கள். கடைசியில் தடித்த ஆள் ஒருவர், காரில் ஆணியினால் எழுத வேண்டுமென்று சொன்னார். அது என் கார் இல்லை. எனது நண்பருடைய கார். நான் சொன்னேன், "இது இரவல் கார் ஐயா" என்று, அவர் கேட்கவில்லை. சரி எப்படியாவது ஒழிந்து போகட்டும் என்று விட்டுவிட்டேன். எழுதினார்கள். என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். எனக்குக் குமட்டல் வந்தது. நெஞ்சு பற்றியெரிந்தது. முதலமைச்சர் அவர்கள் பற்றியும் கல்வி அமைச்சர் அவர்கள் பற்றியும் பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பற்றியும் நினைக்க முடியாத வார்த்தைகளை எழுதியிருந்தார்கள். "தமிழுக்கு அமுதென்று பேர்" என்று பாவேந்தன் பாரதிதாசன் சொன்னார். ஆனால் தமிழை நஞ்சாகக் கூட மாற்ற முடியும்
மு.ப. 10-20 என்று அதைப் பார்த்து என் நெஞ்சு பற்றி எரிந்தது. எனக்கே நெஞ்சம் இந்தப் பாடு பட்டது என்றால், தமிழ்ப் பண்பிலே ஊறி வளர்ந்துள்ள நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னைவிட அறிவிலும் பண்பிலும் வயதிலும் மூத்தவர், அது போன்ற மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்கள் போன்ற தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் என்ன பாடு பட்டிருக்கும் என்று என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், ஒரு கட்சியிலிருந்து யாரோ ஒருவர் விலக்கப்பட்டு விட்டதற்காக தமிழ் நாட்டின் குடிமகனை நான் ஏன் வழி மறிக்கப்பட வேண்டும்? ஒரு கட்சியில் ஒருவர் அடங்காப்பிடாரியாக இருந்ததற்காக, அவர் தூக்கியெறியப்



பட்டதற்காக, ஏன் மற்றவர்கள் வழி மறிக்கப்பட வேண்டும்? கட்சியிலிருந்து ஒருவர் தூக்கியெறியப்படுவது என்பது தமிழ் நாட்டில் ஒன்றும் முதல் தடவையில்லை. அப்படியிருக்க இவர் தூக்கியெறியப்பட்டதற்காக இங்கே என் கார் ஏன் வழி மறிக்கப்பட வேண்டும், இதைப் போலீஸாரிடம் சொல்லாமல் யாரிடம் சொல்வது? ஆனால் போலீஸாரிடம் சொன்னால், அவர்கள் தலையிட மாட்டார்கள். அப்படி ஒரு நிலை. அவர்கள் தலையிட்டால், நிலைமை மோசமாகப் போகும். வட ஆற்காடு மாவட்டத்திலே கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு நிகழ்ச்சி பற்றி சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தேன். சில நண்பர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, பெரிய அளவில் அங்கே வன்முறைகள் நிகழ்ந்ததால், அவர்கள் பாதுகாப்பிற்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு போயிருக்கிறார்கள். போனவுடன் அந்தப் போலீஸ் ஸ்டேஷனும் சேர்த்து மிகப் பெரிய அளவில் தாக்கப்பட்டது. இதைப்பற்றிப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் "இவர்கள் அங்கே ஏன் போக வேண்டும்? இவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதால் தான், போலீஸ் ஸ்டேஷனைத் தாக்கியிருக்கின்றார்கள்" என்று அதுபற்றி வர்ணித்தார். பாதிக்கப்பட்டவர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகாமல், வேறு வழி என்ன? அங்கே போகாமல், ஆண்டவனுடைய சந்நிதானத்திற்குப் போக வேண்டும் என்றால், "இங்கே ஏன் வந்தாய், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதுதானே" என்று அங்கேயும் தாக்கியிருப்பார்கள். அப்போது "இவர்கள் ஏன் ஆண்டவன் சந்நிதானத்திற்குச் செல்ல வேண்டும்? போலீஸ் ஸ்டேஷனுக்கல்லவா போக வேண்டும்" என்று சொல்லியிருப்பார். ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், குழந்தைகள் உள்ளங்களை இப்படியெல்லாம் எழுதும்படி, அந்த அளவிற்குப் பாழ்படுத்தி விட்டார்களே என்ற வருத்தத்தினால்தான்.

நமது முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது டெல்லியிலேயே இருபது ஆண்டுக் காலம் இருந்து வந்திருக்கும் என் நண்பர் ஒருவருடன் அவரது உரையின் நடையையும் தெளிவையும் அழகையும் ரசித்துக்கொண்டிருந்தேன். நமது முதலமைச்சர் அவர்களுடைய பேச்சைக் கேட்டுவிட்டு அந்த நண்பர், "தமிழில் இப்படியெல்லாம் பேச முடியுமா? இருபது ஆண்டுக் காலம் ஆயிற்று டெல்லிக்குப் போய். தமிழில் இப்படியெல்லாம் பேசக்கூடிய அளவிற்கு தமிழ் பெரும் வளர்ச்சி அடைந்திருக்கின்றது என்றால், நான்

[திரு. எம். எம். பக்கர்] [1972 டிசம்பர் 16

தமிழகத்திற்கே வந்துவிடுகிறேன். தமிழ் மொழியின் அழகு இந்த அளவிற்கு வளர்ந்துவிட்ட பிறகு, இதைக் கேட்காமல் நான் ஏன் அங்கே வாழ வேண்டும்?" என்று அவர் சொன்னார்.

நான் கடைசியாகத் [illegible] வரும்போது காரில் எழுதப்பட்டிருந்த [illegible] வார்த்தைகளைக் கண்டிருந்ததனால், அந்த நண்பர் தமிழகத்தில் தனக்குள்ள சொத்துக்களையெல்லாம் விற்று விட்டு "ஒருவழியாக [illegible] சென்றுவிடுகிறேன். [illegible] மாட்டேன்" என்று சொல்லக்கூடிய அளவிற்கு [illegible] அவருக்கு வந்திருக்கிறது. ஏன் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட வன்முறைகள் [illegible] மட்டும் செய்யப்படுவதில்லை. அவர்கள் தூண்டிவிடப்படுகின்றார்கள். இப்படித் தூண்டிவிடும் வன்முறை யாளர்களுடைய முகத்திரை கிழிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நேரமில்லாத காரணத்தினால், மற்றொன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். [illegible] ஒரு சின்னத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. [illegible] என்று சொல்லும்போது, முஸ்லிம் சமுதாயத்திலே [illegible] முஸ்லிம் கள் பிற்பட்டோர் [illegible] சேர்க்கப்படாமல் "முற்போக்கானவர் கள்" என்று வைக்கப்பட்டிருக்கின்றார்கள். உங்களில் பலருக்கும் தெரியும், தமிழ் பேசும் முஸ்லிம்களில் [illegible] முஸ்லிம்கள் தமிழகத்தில் மிகமிகப் பிற்பட்ட நிலையில் இருக்கின்றார்கள் என்பது. தமிழ் நாட்டிலுள்ள [illegible] பேசும் முஸ்லிம்கள் பத்து சதவிகிதத்தினர்தான் இருக்கின்றார்கள். இந்தப் பத்து சதவிகிதத்தினரையும் பிற்பட்டோர்கள் [illegible] சேர்க்க வேண்டும் [illegible] கின்றார்கள். [illegible] அரசாங்கம் கவனம் செலுத்தாமல் [illegible]. நான் [illegible] அவர்களைக் கேட்டுக்கொள்வேன். [illegible] முஸ்லிம் மக்கள் [illegible] பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுடைய [illegible] நான் இந்த அரசை வேண்டிக்கொண்டு விடை பெறுகின்றேன். நன்றி.

மு.ப. 19-20

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து அனைத்துக் கட்சிகள் சார்பாகவும் பேசப்பட்ட முக்கியமான சம்பவங்கள், முதலில் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளக்கொடுமை, புயலால் ஏற்பட்ட சேதம் இவைகளைப் பற்றியும்



1972 டிசம்பர் 16] [திரு. கே. ராஜாராம்]

அடுத்தபடியாக சமீபத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பண்புக் குறைவான காரியங்கள் பற்றியும் என்று சொல்லலாம். மதிப்பிற்குரிய அன்பர் திரு. ம. பொ. சி. அவர்களும் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் எப்படிப்பட்ட ஒரு பண்பாட்டில் வளர்ந்தார்களோ அப்படிப்பட்ட பண்பாட்டின் வழியில் வந்தவன் நான். மறந்தும் ஒழுக்கத்திற்கு விரோதமாக நடக்கக்கூடாது, அரசியலில் ஒழுக்கத் திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் வளர்க்கப் பட்டவர்கள். ஆகவே தான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நல்ல காரியம் செய்யும்போது அவர்களைப் பாராட்டு கிறோம். அதிலே கூட புதிதாக அரசியலில் ஈடுபடுகிறவர்கள் எதிர்க் கட்சிக்காரர்களைப் பாராட்டி விட்டீர்களே என்று எங்களைப் பார்த்துக் கூறப்படும் வகையை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நாங்கள் அண்ணல் காந்தி அடிகளின் நிழலில் வளர்ந்தவர்கள். எதிரியாக இருந்தாலும், நல்லதைச் சொன்னால் ஏற்றுக்கொள், பாராட்டு என்ற அடிப்படையில் வளர்ந்ததினால் பாராட்டுகிறோம். ஒரு கெட்ட காரியத்தை சொந்தக் கட்சிக்காரர் கள் செய்தாலும் கண்டிக்கிறோம். அதே மாதிரி எல்லாக் கட்சிக் காரர்களும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், அப்படித்தான் நடப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதனால்தான் கோபமாகப் பேசிவிடுகிறோம், தவறு ஏற்படுகிறபோது. அண்மையில் இரண்டொரு மாதங்களாகப் பொதுக் கூட்டங்களில் கலவரம் ஏற்படுகிறது என்பது மட்டுமல்ல, தொடர்ந்து நடந்து வருகிறது. அப்போதே இந்த வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை எல்லோரும் கண்டித் திருக்க வேண்டும். அதுவும் அண்மையில் இராமநாதபுரம் கூட்டத் தில் அமைச்சரவர்கள் பேரில் கல்லால் அடித்தது என்பது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயம். அமைச்சர் என்பதற்காக நான் சொல்ல வில்லை. யாராக இருந்தாலும்கூட, பொதுக் கூட்டத்தில் கல்லெறி வது என்பது நல்லதல்ல. பண்பிற்கு விரோதமான காரியம், இது மிகவும் தவறான காரியம்தான்.

தேசத்தின் சொத்து, அரசுடைமை என்பது ஜனநாயக நாட்டில் எந்த ஒரு தனி மனிதனுக்கும் சொந்தமல்ல. எல்லோருக்கும் பொதுவான சொத்து. அரசியல் காரணங்களினால், அபிப்பிராய பேதங்களினால், அரசாங்கம் நடத்துவதை ஆட்சியைப் பிடிக்கவில்லை யென்றால், உடனே அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்தை அழிக்க ஆரம்பிப்பது, கல்லால் அடிப்பது, நெருப்பு வைத்துக் கொளுத்துவது என்பது கனவிலும் சகிக்க முடியாத ஒன்றாகும். இது

மிகவும் கண்டிக்கத்தக்க காரியங்களில் முதல்தரமான காரியமாகும். ஜனநாயக நாட்டில் 5 வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்க பொது மக்களுக்கு ஒட்டளித்திருக்கிறோம். ஆளும் கட்சிகள் மாறுவதை, அரசு மாறுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். 20 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த நாங்கள் எதிர்க் கட்சி வரிசையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம். இன்று ஆட்சியில் இருப்பவர்கள் அடுத்து வரும் தேர்தலில் எதிர்க்கட்சியாக வருவது என்பது சகஜம். எங்கள் தலைவர் அவர்களும், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும், 4 ஆண்டுகளாக இன்று ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஆட்சி நடத்துபவர்களையும் விமரிசனம் செய்து பல குற்றச்சாட்டுகளைச் சொல்லி வருகிறோம். மறைத்து விடவில்லை. குற்றச்சாட்டு என்ற வார்த்தையை ஊழல் என்று கற்பனை செய்து பார்க்கவேண்டிய அவசியமில்லை. எங்கள் தலைவர் விடாமல் சொல்லிக்கொண்டு வருகிறார். 4 வருடமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார். எங்கும் மனுக் கொடுத்து விசாரி என்று சொன்னது கிடையாது. ஏனென்றால் நடந்து வருகிறது. இன்று ஆளும் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சரையும், ஆட்சியையும் பல முறை அவர் வெண்டிக்கொண்டிருக்கிறார். இத்தனை ஊழல்கள் இருக்கின்றன, திருத்திக்கொள்ளுங்கள், நான் சொல்வது திருத்திக் கொள்ளுங்கள் என்பதற்காகச் சொல்கிறேனே தவிர உங்களை அழிக்க வேண்டுமென்று சொல்லவில்லை. நீங்கள் 5 ஆண்டுகள் அரசு பீடத்தில் இருந்து ஆட்சி நடத்துங்கள், உங்களைப் போக வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் இந்தக் குற்றங்களைத் திருத்திக்கொள்ளுங்கள் என்று எங்கள் தலைவர் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் வற்புறுத்திக் கூறி வந்தார். நீங்கள் திருந்தவில்லையென்றால், மக்களே இதை கவனிப்பார்கள். இடைக்காலத்தில் உங்கள் ஆட்சிக்கு கேடு வர வேண்டுமென்றால், உங்களால்தான் ஏற்பட வேண்டும்.
மு.ப. 19–20 ஏனென்றால் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பை எப்போது தெரிவிக்க வேண்டுமோ அப்போது தெரிவிப்பார்கள். அது தான் ஜனநாயகப் பண்பு என்று சொன்னார்கள். இப்படி நடந்து கொண்டிருப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுக்கும் என்றும் சம்பந்தம் கிடையாது. We [illegible] eye to eye. என்றும் நாங்கள் ஒன்றாகப் போகவில்லை. எங்களுக்குப் பிடிக்காததை என்றும் கண்டித்துப் பேசி வந்திருக்கிறோம். உடனே நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு ஒன்றாகப் போய்விட்டோம் என்று பிரச்சாரம் செய்யும்போது, மனம் வேதனையடைகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் நல்லது



செய்தால் பாராட்டுவோம், தவறு செய்தால் கண்டிக்கத் தான் செய்வோம், என்றும் எங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்வோம். அவர்கள் குற்றச்சாட்டுகளை மனு எழுதி, இங்கேகூட கொடுக்காமல் பிரசிடென்டிடம் கொடுத்துவிட்டதனால், நாங்கள் சொல்லும் குற்றச் சாட்டுகளை நாங்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. இன்றும் குற்றச் சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். முதலமைச்சரையும், அரசாங்கத்தையும் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிக்கிறோம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முதலமைச்சரவர்கள் பதில் சொல்கிற வரையிலும் நேரத்தை நீட்டுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : இந்த இரண்டு மாதங்களாக, அக்டோபர்
8-ம் தேதிக்கு மேல் பல நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் ஏற்பட்டு
விட்டன. ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஒருவரை விலக்கியதால்
ஏற்பட்ட நிகழ்ச்சி இது. நாங்கள் எத்தனையோ பேர்களை கட்சியில்
நடவடிக்கை எடுத்து விலக்கியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக்
கழகத்திலும் அப்படி கட்சியில் நடவடிக்கை எடுத்து விலக்கியிருக்
கிறார்கள். ஆனால் இதனாலே கொந்தளிப்பு ஏற்பட்டது. என்ன
நடக்கிறதென்றால், புதிதாக ஆரம்பித்த கட்சிக்காரர்கள் இயக்கம் 12–50
ஆரம்பிக்கிறார்கள். வன்முறை நடக்கிறது. துப்பாக்கிப் பிரயோகம் பி.ப
நடக்கிறது. கண்ணமங்கலத்திலும், விருத்தாசலத்திலும் துப்பாக்கிப்
பிரயோகங்கள் நடந்தன. என்னாயிற்று ? விருத்தாசலத்தில்,
துப்பாக்கிக்குப் பலியானது காங்கிரஸ்காரர். தற்செயலாக
வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கோபால் பிள்ளை என்பவர், அவர்
தன் கடையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். நம் கிட்டே யார்
வரப்போகிறார்கள் என்று அவர் இருக்க, எங்கோ சுட்ட துப்பாக்கிக்
குண்டு அவர் மேலே விழுந்தது. இவர்கள் கட்சி பிளந்து சண்டை
போட்டுக் கொள்ள, பலியாகிறது காங்கிரஸ்காரன். அங்கு மட்டு
மல்ல, கண்ணமங்கலத்திலும் அதே தான். ஒரு தியாகி, காங்கிரஸ்
காரனின் மகன், 1/2 பர்லாங்கு தூரத்தில் நடந்து போய்க்கொண்
டிருக்கிறான், எதிரேயிருந்து கல்லெறிந்தவர்களுக்கு ஒன்றுமில்லை.
எங்கோ மற்றவர்கள் அஜாக்கிரதையாக நிற்கிறார்கள், அவர்கள் மீது
பாய்கிறது. கல்லெறிபவன், கெட்ட காரியத்தில் ஈடுபடுபவன் உஷா
ராக இருக்கிறான், தப்பித்து விடுகிறான். எங்கோ இருப்பவர்கள்பேரில்
துப்பாக்கி குண்டு பாய்கிறது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்,
வெகு தூரத்தில் இருந்தவர்கள் பேரில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து
கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதிலிருந்தெல்லாம்

விடுபட வேண்டுமென்றால், இதற்கு ஏதேனும் ஒரு வழி பிறக்க வேண்டும். என்ன வழி பிறக்க வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்பதை அனைவரும் கூடித்தான் சரி முடிவு செய்ய வேண்டும். அமைச்சரவையின் பேரில் சொல்லி பூர்வமாகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி டில்லியில் கொண்டு போய் பிரசிடெண்டிடம் கொடுக்கப்பட்ட மகஜருக்கு முதலமைச்சரவர்கள் பதில் தயார் செய்து அதை வெளியிடாமல், என்னென்னவோ வந்திருந்தாலும், அசெம்பிளியில் கேள்வி கேட்டும் கூட, பன்முறை குறைக்காது, பிரதமர் அனுமதி பெற்றுத் தான் வெளியிட முடியும் என்று சொல்லியிருந்தார்கள். நான் முதலமைச்சரவர்களிடம் அன்றே கேட்டேன். பலர் உங்கள் ஒருவருக்கு மட்டுமல்ல. எல்லோருக்கும் உண்டான நான் பலர். உங்கள் பேரில் உள்ள குற்றச்சாட்டுகள், என் கையில் இதோ இருக்கின்றன. பாருங்கள், வெளியே வந்த பிற்பாடு நானே கேட்க வேண்டுமென்றிருக்கிறேன். பதில் சொல்லியாக வேண்டும். அதற்கு என்ன சொல்வீர்கள். அதற்கும் பிரதமர் அனுமதி பெற்றுத் தான் பதில் சொல்வீர்களாவென்று கேட்டேன். நீங்கள் சொன்ன மாதிரி தயார் செய்து விட்டேன். இன்னும் சில தினங்கள் பார்ப்போம். இல்லையென்றால் சபையில் வைத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். வைத்தும் விட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில், எங்களுடைய குற்றச்சாட்டுகள், நாங்கள் சொல்லும் காரியங்கள் இவைதான். இதிலே இருப்பவைகளுக்கும் சம்பந்தம் கிடையாது. அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு பதில்களைச் சொல்லி விட்டார்கள். இப்படி பதில் வைத்தால் நாங்கள் இதோடு குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் இருந்து விடுவோம் என்பதல்ல. எங்களுடைய குற்றச்சாட்டுகள் பொதுவாகவும், ஸ்பெசிபிக்காகவும் இருக்கும், சொல்வோம். இந்த பதிலை வைத்து விட்டதனால் எங்களுடைய குற்றச்சாட்டுகளைச் சொல்லமாட்டோம் என்பதல்ல. நாங்கள் குற்றச்சாட்டுகளை அரசாங்கத்தின் பேரில், கட்சியின் பேரில் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மு.ப. 19-20

இது பற்றி நீதி விசாரணை போட வேண்டுமென்று கேட்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர் அவர்கள், நீதி விசாரணை செய்வதற்கு சட்டத்தில் இடமில்லையென்றும், கான்ஸ்டிட்யூஷனில் இடமில்லை என்றும், சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் கான்ஸ்டிட்யூஷன்படி அமையவில்லை. ஆகவே, நாம் அதற்கு உட்படுத்தப்படுவது சட்டப்படி சரியில்லை என்பதை அறிவுறுத்தியிருக்கிறார்கள். அது சட்டப் பிரச்சினை. மத்திய சர்க்காரும் மாநில





சர்க்காரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டியது. எங்கள் தலைவர் முதலிலேயே தீர்மானித்து விட்டார்கள். நாம் நம் பலத்தைக் கொண்டு, அரசியல் கட்சிகள் இங்கேயே முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்பதை அழகாகத் தெளிவு செய்து விட்டார்கள். அந்த நிலைமையில் தான் நாங்கள் இருக்கிறோம். நாம் மத்திய சர்க்கார் உதவியை நாடவில்லை. அல்லது வேறொரு சர்க்கார் உதவியையும் நாடவில்லை. நாம் ஒரு பண்பாடு மிக்க, காந்தி வழி வந்த ஒரு காங்கிரஸ் ஸ்தாபனத்தை நடத்திக்கொண்டிருக்கக் கூடியவர்கள். எங்களுக்கு எதிர்க் கட்சியை எப்படி எதிர்க்க வேண்டும் என்று தெரியும். அந்த முறையில் எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். திடீரென்று நீங்கள் எங்களோடு சேரவில்லையென்றால், நாங்கள் சேரிடம் அறிந்து சேருவோம். அதைத் தான் நான் சொல்லுவேன். சேரிடம் அறிந்துதான் சேர வேண்டும். நீங்கள் சேரவில்லையென்று புகார் சொல்லுவது சரியில்லை. எங்களுக்குத் தெரியும் யாரோடு சேர வேண்டுமென்று. அவர்களோடு சேருவோம். அதற்கு மேல், துணைத் தலைவர் அவர்கள் முதலில் எச்சரித்தபடி, சபையில் இல்லாதவர்கள் பற்றி நாம் அதிகமாக விமர்சிக்கும் அவசியமில்லை. பொதுவாக, எங்களைப் பொறுத்த வரையில், கட்டுப்பாட்டுடன் இருக்கிறோம். நாங்கள் எங்கள் கொள்கையைப் பரப்ப, எங்கள் கொள்கைக்கு எதிராக எந்தக் கட்சி இருந்தாலும் அதை எதிர்த்து நாங்கள் செயல்படுவோம். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ஆளும்கட்சி அல்லாத கட்சியாக இருந்தாலும் சரி, இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று, சென்னையில் ஒன்று, பாண்டிச்சேரியில் ஒன்று என்ற கொள்கையை நாங்கள் வகுக்க மாட்டோம். கிளியனூருக்குக் கிழக்கே திராவிடக் கழகம் நல்லது, கிளியனூருக்கு மேற்கே திராவிடக் கழகம் கெட்டது. வெகு நாளாகவே திராவிடர் கழகம் என்று பழக்கப்பட்டு விட்டதால் திராவிட முன்னேற்றக் கழகம் என்று வரவில்லை. திராவிடர் கழகமென்று வெகு காலமாகப் பேசியதால் அப்படி வந்து விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் எனத் திருத்திக் கொள்கிறேன். அந்த மாதிரி ஒரு கொள்கை எங்களிடம் கிடையாது. பொதுவாக, முதலில் சொன்ன மாதிரி, காந்தி வழியில் வந்தவர்கள், நேர்மையாக நடக்க வேண்டியது நம் கடமை. அரசியலில் ஒழுக்கக் குறைவு ரொம்பவும் ஏற்பட்டு விட்டது. இதைத் தெரிவித்ததற்கு நமது துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் சொன்னதை முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். தலைவர்கள் எல்லாம் கூடி தமிழர் பண்பாடு குறையாமல் அரசியல் நடத்த வேண்டும். ஆட்சிப் பொறுப்புப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆட்சியை

இன்றே பிடிக்க வேண்டுமென்று நினைத்து வழி வகுக்க எங்களுக்குத் தெரியாது. ஜனநாயகத்தை நாங்கள் நம்புகிறோம். அந்த ஜனநாயகம் எங்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்று பெருமையோடு இருக்கிறோம். அடிப்பட்டு, உதை பட்டு, துப்பாக்கிச் சூடு பட்டு, பல்லாயிரக் கணக்கில் சிறையில் கிடந்தோம். நாங்கள் யாரையும் மோசம் செய்யவில்லை. எதற்காக 5½ ஆண்டுகள் நான் சிறையில் இருந்தேன்? அப்படிக் கஷ்டப்பட்டுப் பெற்ற சுதந்திரத்தை நல்ல நிலையில் வைத்து, ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டோமென்று பெருமையோடு இருக்கிறோம். தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து விட்டதால், நாங்கள் கவலைப்படவில்லை. ஜனநாயகம் நன்றாக வேலை செய்கிறது என்றும், ஒரே கட்சி ஆட்சியில் இல்லை, எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வரலாம் என்பதை நிலைநாட்டி விட்டோமென்று பெருமையோடிருக்கிறோம். மாநில அரசை எப்படியாவது கவிழ்க்க வேண்டுமென்பதற்காக ஆளுக்கொரு கொள்கையைக் கூறும் யாருடனாவது கூட்டு சேரவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஜனநாயகம் எந்த வழியிலும் குலைந்துவிடாமல் பாதுகாத்து ஜனநாயக ரீதியிலேயே இந்த அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டி அவசியமானால் ஆட்சியை மாற்றியமைப்போம். அதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது, வழியும் இருக்கிறது. குறுக்கு வழி போக எங்கள் யாருக்கும் தெரியாது. நேர் பாதை எங்கள் பாதை. அந்தப் பாதையில் செல்வோம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் பேசுகிறபொழுது, ஒரு இடத்தில் அறங்காவலர் நியமிக்கப்பட்ட சம்பவம் காரணமாக திருவிழா நடைபெறவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அவர்களைக் குறிப்பாகச் சொல்லும்படி கேட்டபொழுது, வேலூரை அடுத்த சோழவரம் இடையஞ்சாத்து கிராமத்திலுள்ள கோவில்பற்றிச் சொன்னார்கள். அந்தக் கோவிலுக்கு 20—7—1971 அன்று அறங்காவலர் நியமிக்க வேண்டுமென்று வேலூர் துணை ஆணையருக்கு விண்ணப்பம் செய்தார்கள். அந்த விண்ணப்பம் செய்தவர்கள் வி. எஸ். சொக்கநாதன், இராமசாமி கவுண்டர், சாம்பசிவம், இன்னும் இருவர். இந்த ஐந்து பேரையும் உதவி ஆணையாளர் அவர்கள் நியமனம் செய்தார்கள். பிறகு, அதே கிராமத்தில், இடையஞ்சாத்தில், சிதம்பர கவுண்டர், அண்ணாமலை கவுண்டர் இருவரும் தங்களுக்குத் தான் கோவில் சொந்தம், தாங்கள் தான் பரம்பரை அறங்காவலர்கள்





தங்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று ஆணையாளரிடம் தடை உத்தரவை வாங்கி வழக்குத் தொடுத்தார்கள். அது விசாரிக்கப்பட்டு ஆணையாளரால் நியாயமான வழக்கு அல்லவென்று சொல்லி தீர்ப் பளிக்கப்பட்டு, அற நிலைய உதவி ஆணையர் நியமனத்தை ஊர்ஜிதம் செய்து உத்தரவிட்டார்கள். பிறகு இரண்டு பேரும் தாங்கள் தான் பரம்பரை அறங்காவலர்கள் என்று சொல்லி, சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடை உத்தரவு வாங்கியிருக் கிறார்கள். இருந்தாலும் கூட, அங்கே நடைபெறுகிற திருவிழா முறையாக நடைபெற வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே நியமிக்கப் பட்ட அறங்காவலர்கள் ஊரிலுள்ள மக்களுடன் சேர்ந்து முயற்சி செய்து திருவிழாவைச் சென்ற தைத் திங்கள் நடத்தியிருக்கிறார்கள். அதே மாதிரி, இந்த ஆண்டு நடைபெற வேண்டிய திருவிழா வருகிற தையில் நடைபெற இருக்கிறது. ஆகவே, கட்சி சார்பில் நியமிக்கப் படவில்லை. யார் நியமிக்கப்பட்டிருந்தாலும் தகுதி உள்ளவர்களையே நியமிக்கிறோம். திருவிழா முறையாக நடந்திருக்கிறது என்பதை ஹைகோர்ட் சென்று, தடை உத்தரவை வாங்கியிருப்பவர்கள் முன்னால் குறிப்பிட்டு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்குப் பதிலாகத் தந்தமைக்கு நன்றி கூறி, அந்த இடையஞ்சாத்து கிராமத்தில் கட்சிக் கண்ணோட்டத் தோடு இரண்டு திருவிழாக்கள் தான் நடந்தன என்று ஞாபகமூட்ட ஆசைப்படுகிறேன். அது பொது மக்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தும் சூழ்நிலை இருக்கிறதென்பதை ஞாபகமூட்ட ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திருவிழா இரண்டாக நடந்த வரை மகிழ்ச்சி, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே. நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு என்ற பெயரில் பல்வேறு பிரச்னைகளை இந்த மாமன்றத்தில் நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களும் எடுத்துக்கூறியிருக் கிறார்கள். இந்த மன்றமானாலும் அல்லது பேரவை நடைபெறுகிற மன்றமானாலும், ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவதைத் தங்களுடைய கடமையாகக் கொண்டு செயல்படுகிற உறுப்பினர்களைக் கொண்டு இணைகிற, இயங்க வேண்டிய மன்றங்களாகும். இந்த மன்றங்களில் உட்பட்டு, அரசாங்கத்தின் கடமைகளை எடுத்துச்

சொல்லுவதற்கும் அரசாங்கம் இவர்கள் கூறுகிற காரியங்களுக்குக் கருத்து அளிப்பதற்கும், மேலும் நல்ல காரியங்கள் பல நடைபெற வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, இடித்துக் காட்டவும், ஆளுங் கட்சித் தரப்பிலிருந்தும் எதிர்க் தரப்பிலிருந்தும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துரைகளை வழங்கவும், இந்த மன்றங்களில் நிறைந்த உரிமைகளை உறுப்பினர்கள் பெற்றிருக்கின்றனர். குறிப்பாக, மக்களுடைய வரிப் பணம் இந்த மன்றங்களில் எந்த அளவுக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதை நாம் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ளுவோமானால், நம் கடமைகள் எந்த அளவுக்குச் சீராகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் நடைபெற வேண்டுமென்பதற்கான விடையை நாம் கண்டுவிட முடியும். குறிப்பாக, இந்த மேலவைக் கூட்டத்தை ஒரு நாள் மாத்திரம் கூட்டுவது என்று ஒரு நாள் கூட்டி, மறு நாள் கலைத்து விடுவோமானால், ஒரு நாளைக்கு மாத்திரம் ஆகிற செலவு ரூ. 11,211. டி.ஏ. என்ற வகையில் ரூ. 6,571 D.A. for 3 days ரூ. 3,220. D.A. for one day ரூ. 1,220 ஒரு நாள் இந்த மன்றம் கூடி கலைந்து விட்டது உடனடியாக என்றால் மொத்தம் ரூ. 11,211 ஆகிறது. இந்த மன்றம் 10 நாளைக்குத் தொடர்ந்து நடைபெறுகிறது என்றால், இரண்டு டி.எ. ரூ. 13,542. வகையில் ஒரு டி.எ. ரூ. 6,771. D.A. for 13 days 10 நாள் நடந்தாலும் 13 நாட்களுக்கு டி.எ. ரூ. 15,340. ஆக மொத்தம் ரூ. 35,653. 10 நாள் இந்த மேலவைக் கூட்டம் நடைபெற்றால் மக்கள் வரிப் பணத்திலிருந்து நம் ஜனநாயகக் கடமைகளை அந்த மக்களுக்கு ஆற்றுவதற்காக நாம் செலவழிக்கிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. இதைப் போலவே, பேரவையிலும் ஒரு நாள் சட்டமன்றத்தைக் கூட்டி அன்றைக்கே அதை ஒத்தி வைத்து விட்டால், அங்கு வந்த உறுப்பினர்கள் கலைந்து சென்றார்கள் என்ற நிலையில் கூட ஒரு நாளைக்கு ஆகும்

மு.ப. 10-20 செலவு D.A. ரூ. 17,600. T.A. ரூ. 26,500. ஆக மொத்தம் ரூ. 44,100 சட்டப் பேரவையை ஒரு நாளைக்குக் கூட்டி அன்றைக்கே அதைக் கலைத்து விடுவோமானால் மறுபடியும் கூடுமென்று தேதியில் வரையறை செய்யப்படாமல் அறிவித்து விடுவோமானால், ஒரு நாளைக்கு சட்டப் பேரவைக்கு ஆகிற செலவு, மக்கள் வரிப்பணம் தான், ரூ. 44,100. அதே சட்ட மன்றம் 10 நாள் தொடர்ந்து நடைபெற்றால் D.A.

1-00 பி.ப. ரூ. 57,220. இரண்டு T.A. ரூ. 53,000. ஆக மொத்தம் ரூ. 1,10,200 ஆகிறது. 10 நாட்களுக்குத் தொடர்ந்து சட்டப் பேரவையும் மன்றமும் நடைபெற்றால் ரூ. 1,10,200 செலவாகிறது. ஆனால், ஒரு நாள் கூடி அது கலைக்கப் படுகிறதென்றால், ஒத்தி வைக்கப் படுகிற தென்றால், ரூ. 44,100 சட்டப் பேரவைக்கு மக்களுடைய வரிப் பணம் செலவாகிறது. குறிப்பாக, சென்ற மாதம் 13 ஆம் தேதியன்று, சட்டப் பேரவை கூடி, உடனடியாக ஒத்திவைக்கப்பட்ட காரணத் தால், மக்களுடைய வரிப்பணம் வீணான வகையில் ரூ. 44,100 போயிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதே மக்களுடைய வரிப் பணத்தில் இன்றைக்கு அமைச்சர்களெல்லாம் உல்லாசம் அனுபவிக்கிறார்கள், வரிப்பணம் வீணாகப் போகிறது என்றெல்லாம் சிலபேர் வெளியே கூக்குரலிடுகிறார்கள். இந்த 44,100 ரூபாயும் மக்கள் வரிப்பணம்தான். அது வீணாகப் பாழாகிப் போனதை, யாரிடத்திலே வசூலிப்பது என்பது தெரியவில்லை. யார் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்போகிறார்கள் என்பதும் நமக்குப் புரியவில்லை. ஆகவே ஜனநாயகக் கடமைகளை நாம் இந்த மன்றத்திலே நிறைவேற்றுகிற நேரத்திலே, மக்களுடைய பணம், அவர்கள் கஷ்டப்பட்டு வரியாகச் செலுத்திய பணம், இந்த அரசாங்கக் கடமைகளுக்காக அவர்கள் நம்முடைய கருவூலத்திலே சேர்த்துவைக்கிற பணம், அவர்களுக்கு நல்ல கடமைகள் ஆற்றப்படு மென்பதற்காக அவர்கள் வழங்குகிற பணம், நாம் அந்தக் கடமை களை ஒழுங்காக நிறைவேற்றினால்தான், மக்கள் நம்முடைய தலையிலே சுமத்தியிருக்கிற பொறுப்புக்களை நிறைவேற்றியவர்களாக, நமக்கு அளித்திருக்கிற வாய்ப்பினை நாம் ஒழுங்காகப் பயன்படுத்தியவர்களாக ஆவோம். அந்த வகையிலே இந்த மாமன்றத்திலே கடந்த சில நாட்களிலே பல்வேறு பொருள்களிலே நல்லுரைகளை, இந்த அரசு மேலும் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணியாற்றுதற்கு, ஏற்ற வகையிலே எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன், அதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.



நம்முடைய நண்பர் திரு. பலராமன் அவர்கள் இன்றைய விவாதத்திலே பேசுகிற நேரத்திலே அரசியலில் ஒரு புயல் அடித்துக் கொண்டிருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். எப்படி பெரு மழையும், பெரும் காற்றும் தமிழ் நாட்டிலே வீசியதோ அது போலவே அரசியலில் ஆளும் கட்சிக்கு அந்தப் புயல் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதென்றும் நம்முடைய நண்பர் திரு. பலராமன் அவர்கள் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்களும், நம்முடைய மன்றத்தின் துணைத் தலைவர் சிலம்புச் செல்வரவர்களும், முஸ்லீம் லீக் கட்சியின் தலைவரவர்களும், நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும், மற்றவர்களும் இங்கே பேசுகின்ற நேரத் திலே எடுத்துச்சொன்னார்கள். அனைவரும் ஒன்றுபட்டு, நாட்டிலே, நல்ல பாரம்பரியத்திற்குரிய கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம்

ஒன்றுபட்டு, தமிழ் நாட்டிலே, வேறு எந்த மாநிலத்திற்கும் வழி காட்டியாக இருக்கும் வகையில் அமைதியைத் தொடர்ந்து கடைப் பிடித்து வருகிற நாம், அந்த அமைதி குலையாவண்ணம் காப்பாற்று கிற பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். புயலால், மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளித்து சீர் செய்ய, செம்மையுறச் செய்ய எப்படி எல்லாக் கட்சிக் காரர்களுக்கும் பொறுப்பு இருக்கிறதோ அதைப் போலவேதான், அமைதியின்மையால், வன்முறையால் நாட்டிலே ஏற்படுகிற பாதிப்புக் களைக் களைவதற்கும் எல்லாக் கட்சிகளிலேயும் இருக்கிற நல்லவர்கள் முனைப்போடு பணியாற்ற வேண்டும். நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏன் முதலமைச்சரவர்கள் இந்த விஷயத்திற்காக திரு. காமராஜர் போன்றவர்களைச் சந்தித்து, நல்ல அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதற்கு முனையக்கூடாதென்று கேட்டார்கள். சந்திப்பது என்பதை ஏதோ கௌரவப் பிரச்னையாக நான் என்றைக்கும் கருதுபவன் அல்ல என்பதைச் சிலம்புச் செல்வர் அவர்கள் நன்றாக உணர்வார்கள். ஆனால் மகன் திருமணத்தின் மண விழா பத்திரிகை வைப்பதற்கு ராஜாஜி அவர்களைச் சந்திக்கச் சென் றேன். அவரோடு 5 நிமிடங்கள் கூடப் பேச முடியவில்லை. சாட்சிக்கு என்னோடு நாவலர் அவர்கள் வந்தார்கள். அவர் உடல் நலமற்று, படுக்கையில் இருந்தார். நான் அவர் உடல்நலம் விசாரித்துவிட்டு, திருமண விஷயத்தைக் கூறிவிட்டு வந்துவிட்டேன். அதே போல, மதிப்பிற்குரிய திரு. காமராஜர் அவர்களிடத்திலும் நான் சென்று மண விழா மடலை வைத்துவிட்டு, திருமணத்திற்கு வர வேண்டு மென்று சொல்லிவிட்டு வந்தேன். ஆனால் பத்திரிகையிலே பார்த் தால், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஒரு மணி நேரம் திரு. காமராஜரிடம் போய் டாக்டர் கருணாநிதி பேசினார், ½ மணி நேரம்
மு.ப. 10-20 ராஜாஜியிடம் பேசினார், பேசினார் என்று போடவில்லை, சரணாகதி அடைந்துவிட்டார் என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் நல்ல காரியம் நடைபெறுவதற்காக எந்தக் கொள்கையுடைய, எந்த எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும், நாட்டிலே ஒரு அமைதியை உருவாக்குவதற்கு ஒருவரை ஒருவர் சந்திப்பதென்பது சரணாகதி அல்ல. யார் யாரிடத்திலே சரணாகதி அடைந்திருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. அதைத்தான் நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிற நேரத்திலே சூசகமாக எடுத்துச் சொன்னார்கள். ஏன், கொஞ்சம் விளக்கமாகக்கூடச் சொன்னார்கள். யாரும் யாரிடத்திலேயும் தங்கள் கௌரவத்தை அடகுவைத்துவிட்டு, சரணாகதி அடைந்து, காரியங்களைச் சாதித்துக்



கொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் அல்ல. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, ஏதோ இந்த அரசாங்கத்தை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும், நானோ அல்லது அமைச்சரவையில் இருக்கிற அமைச்சர்களோ, அமைச்சர்களாக தொடர்ந்து இருக்கவேண்டும், அதற்கு யாரைப் பிடித்தால் காரியம் நடக்கும் என்ற அளவுக்கு உள்ளவர்களல்ல நாங்கள். எங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும், அந்தஸ்தை என்றென்றும் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதற் காக எங்களுடைய தனிப்பட்ட கௌரவம் பாழ்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக. எப்படி எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தங்களுடைய கட்சியைக் காப்பாற்றிக்கொள்ள தங்களுக்கு தன்மான உணர்வு இருக்கிறதென்று சொன்னார்களோ, அதைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற எங்களுக்கும், எங்களுடைய கட்சியைக் காப்பாற்றிக்கொள்கின்ற அந்த உணர்வு இருக்கின்றது. யாரோடு நாங்கள் உறவு கொள்கிற நேரத்திலும் அந்தக் கட்சியினுடைய கொள்கைகளை நீங்கள் உதறி எறிந்துவிட வேண்டுமென்று கூறி, உறவு கொண்டிடவில்லை. தேர்தல் உடன் பாட்டிலேகூட தமிழரசுக் கழகத்தோடு நாங்கள் உடன்பாடு கொள் கிற நேரத்திலும், முஸ்லிம் லீக் கட்சியுடன் உடன்பாடு கொள்கிற நேரத்திலும், பார்வேர்டு பிளாக் கட்சியுடன் உடன்பாடு கொள்கிற நேரத்திலும் அல்லது வேறு கட்சிகளோடு நாங்கள் உடன்பாடு கொள்கிற நேரத்திலும் அவரவர்களுடைய கொள்கைகள் அவரவ ருடைய கட்சிக்கு உரியவை, அவரவர்களுடைய கொடிகள் அவரவர் கள் கட்சி மண்டபங்களிலே, அவரவருடைய கட்சி சார்பிலே பறக்க விடப்பட வேண்டியவை. ஆகவே யாருடைய கொள்கையையும் நாம் ஸ்வீகரித்துக்கொள்வது, கவர்ந்துவிடுவது அல்லது பரித்துக்கொள் வது, அதைப் போலவே எங்களுடையதை விட்டுக் கொடுத்துவிடுவது என்கின்ற நிலையில்லாமலே தேர்தல் உடன்பாடு செய்துகொண்டிருக் 1-20 பி.ப.
கிறோம். இன்றைக்கு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களும் அவருடைய கட்சி அதே நிலையில்தான் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் தலைவர் திரு. காமராஜர் அவர்களும் அதைத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். நான் சட்டப் பேரவையில்கூட எடுத்துச் சொன்னேன். 1976 ஆம் ஆண்டு வரக் கூடிய பொதுத் தேர்தலில்கூட தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மூன்று அணிகள் இருந்திடக்கூடும். ஒன்று ஆளும் காங்கிரஸ் தலைமையிலே இருக்கிற அணி; மற்றொன்று ஸ்தாபனக் காங்கிரஸ்

தலைமையிலே இருக்கிற அணி; மற்றொன்று திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய தோழமைக் கட்சிகளும் இணைந்த அணி. ஆக மூன்று அணிகள் தமிழ் நாட்டிலே 1976 தேர்தலில் சந்திக்கக்கூடும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அந்த நிலைமையைத்தான் இந்தக் கணிப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் எடுத்துக் காட்டி வருகிறது. அதற்கு மேலும், அந்தக் கருத்துக்கு வலு அளிக்கும் வகையில் திரு. காமராஜர் அவர்கள் இந்த மூன்று அணிகளும் இருக்குமென்று சூசகமாகச் சொல்லிவிட்டாலும், தங்கள் கட்சியைப் பொறுத்தவரை, வேறு யாரோடும் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த அரசை எதிர்ப்பதற்கு தாங்கள் பலவீனமானவர்களல்ல, தாங்கள் வலிமையானவர்கள் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதே கருத்தைத்தான் நான் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் ஒரு விழாவில் பேசும்போது குறிப்பிட்டேன். நான் ஆளாவிட்டால், திரு. காமராஜர் வந்து ஆளவேண்டுமென்று நான் அழைத்ததாகச் சில பேர் கருதிக்கொண்டார்கள். நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகளின் நிலைமையை எடுத்துச் சொன்னேன். ஆளும் கட்சி, மாற்றுக் கட்சி, ஆளும் கட்சியினுடைய தோழமைக் கட்சிகள், மாற்றுக் கட்சியினுடைய தோழமைக் கட்சிகள் என்ற நிலைமைகளை வைத்துப் பார்த்தால், அதற்குத் தலைமை வகிக்கக்கூடிய கட்சிகளும் அவைகளின் தலைவர்களும்தான் நம்முடைய கண்ணில் படுவார்கள். அந்த வகையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை விட்டு இறங்குகிற நிலைமை ஏற்படுமேயானால், திரு. காமராஜரைப் போன்றவர்கள்தான் ஆட்சிப் பொறுப்பிலே இருக்க முடியுமென்று சொன்னது, நாட்டிலே இருக்கக் கூடிய கட்சிகளுடைய பலத்தைப்பற்றி எடுத்துக் குறிப்பிட்டதாகும். திரு. காமராஜரை நான் முதலமைச்சராக ஆக்குகிறேன் அல்லது எங்கள் கழகம் முதலமைச்சராக ஆக்குமென்று சொன்ன வார்த்தையல்ல. அதை திரு. காமராஜர் அவர்களோ, தலைவர்களோ புரிந்துகொண்டார்களோ அல்லது அரசியல் மேடைகளில் அப்படித்தான் பேசவேண்டுமென்ற கருத்திலே பேசுகிறார்களோ தெரியாது. "இவர் யார் எனக்கு முதலமைச்சர் பதவி கொடுக்க, நான் பெற்றுக்கொள்ள" என்றுகூட அவர் சொன்னார். அவருடைய கட்சியைச் சேர்ந்த இன்னொரு நண்பர் கூட "வா ராஜா வா, அப்படி வழிக்கு வா" என்று கூட என்னை அழைத்தார். ஆக மந்திரி பதவியிலிருந்து ராஜா பதவிக்கு உயர்த்தியிருக்கிறார் என்று கருதிக்கொண்டேனேயல்லாமல், என்னைக் கேலி செய்வதாகக் கருதிக்கொள்ளவில்லை. ஆகவே நான் எடுத்துச்

மு.ப.
10-20



சொன்னதற்குக் காரணம், இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையில் இருக்கிற தோழமைக் கட்சிகள், அதைப் போலவே திரு. காமராஜர் தலைமையில் இருக்கிற காங்கிரஸ் கட்சி, அதனுடைய தோழமைக் கட்சிகள் என்பதற்காகத்தான் கூறினேனேயல்லாமல் வேறு அல்ல.

நம்முடைய அங்கத்தினர் திரு. பலராமன், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், துணைத் தலைவர் சிலம்புச் செல்வர், நம்முடைய திரு. வசந்த பாய், திரு. நாராயணசாமி, திரு. தாமோதரன் அவர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் இன்றைக்குக் கல்விக் கூடங்கள் பல மூடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையை எடுத்துச்சொன்னார்கள். திரு. பலராமன் அவர்கள், காமராஜர் காலத்தில் இலவசக் கல்வி கொண்டுவந்து மாணவர்களையெல்லாம் படிக்கவைத்தோம், இப்போது கல்விக்கூடங்களையெல்லாம் மூடிவிட்டீர்களே என்று சொன்னார்கள். அங்கேதான் நாம் கொஞ்சம் வேறுபடுகிறோம். ஏதோ அத்தோடு நிறுத்தப்பட்டுவிடவில்லை, இலவசக் கல்வி. நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபிறகு திரு. காமராஜர் கொண்டு வந்த இலவசக் கல்விக்கும் பாராட்டுத் தெரிவித்து, அதற்கும் மேலே பி.யு.சி. வரையிலே, புகுமுக வகுப்பு வரையிலே இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியும் அமுல்படுத்தியும் வருகின்ற ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி என்பதை மறந்துவிடக் கூடாது. திரு. பலராமன் தாக்குகிற தோரணத்திலேகூடப் பேசியிருக்கலாம்.

"திரு. காமராஜர் இலவசக் கல்வி கொண்டுவந்தார். நீங்கள் பி.யு.சி. வரை இலவசக் கல்வி கொண்டுவந்து என்ன பயன்? கல்விக் கூடங்களை மூடிவிட்டீர்களே" என்று சொல்லியிருப்பார்களானால், கொஞ்சம் மறைமுகமாகவாவது எங்களைப்பற்றிய நினைப்பு அவர்கள் கவனத்தில் இருந்தது என்று நான் மகிழ்ந்திருக்க முடியும். ஆனால் ரொம்பக் கட்டுப்பாடாக எதையும் ஆளும் கட்சி செய்வதைப் பாராட்டவே கூடாது என்று திரு. பலராமனைப் போன்றவர்கள் சபதம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல. கொஞ்சம் சபதத்தைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு இருக்கிறார்கள் என்று சொன்னால்கூட, அவருக்கு அங்கே ஆபத்து ஏற்பட்டாலும்கூட, ஏற்படக்கூடும். ஆனாலும் அவர்கள் பாரம்பரியத்தைப்பற்றிச் சொன்னார்கள். எப்படிப்பட்ட பாரம்பரியத்தில் வந்தவர்கள் தானும், சிலம்புச் செல்வர் அவர்களும், ரா. கி.யும்

(கிருஷ்ணசாமியும்) மற்றவர்களும் என்று சொன்னார்கள். அதைப் போலவே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பாரம்பரியமும் எங்களையெல்லாம் ஆளாக்கி எங்களை அரவணைத்து தம்பிகளே, தம்பிகளே என நா தழுதழுக்கக்கூறி எங்களை இன்றைக்கு இந்த நிலைமைக்கு ஆளாக்கியிருக்கின்ற அண்ணன் பேரறிஞர், எப்படிப் பட்ட பாரம்பரியத்தை, அரசியல் பண்பாட்டை, அரசியல் பெருந் தன்மையோடு தமிழகத்திலே விதைத்துவிட்டுப் போயிருக்கிறாரென் பதை மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. திரு. காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இதைப்போன்ற ஒரு புயல், வெள்ளம் ஏற்பட்டபோது அறிஞர் அண்ணா அவர்கள், திரு. காமராஜர் அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளை வானளாவப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், திரு. காமராஜரை அழைத்துச் சென்று தண்டலம் என்கின்ற கிராமத் திலே அண்ணா அவர்களுடைய தொகுதியிலே கிராம விவசாயிகளை, வாக்காளர்களுடைய மகாநாடு ஒன்றைக்கூட்டி, அண்ணா வரவேற் பாளராக இருந்து கொண்டு, திரு. காமராஜரைப் புகழ்ந்து பேசி, மனுக்களைத் தந்து ஆணைகள் பேரில் எல்லாம், அந்த மக்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்ற வகையிலே திரு. காமராஜர் கையில் ஒப்படைத்திருக்கிறார்கள். குன்றாளா, குணக்குன்றே என்றெல்லாம் அண்ணா அவர்களால் திரு. காமராஜர் அவர்கள் புகழப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அதே நிலையிலிருந்துதான், நானும் அமைச்சர் பெருமக்களும் இன்றைக்கு திரு. காமராஜரை விமர்சிக் கின்ற நேரத்தில் தரக்குறைவான வார்த்தைகள் ஏதும் எங்கள் நாவிலிருந்து, எங்கள் நெஞ்சிலிருந்து கிளம்பாத அளவுக்கு மிகுந்த ஜாக்கிரதையாகத்தான் எதிர்க் கட்சியினரை, தலைவர்களை, எந்த மேடையிலும் விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். எங்காவது ஒரு சிறு தவறு நேரிட்டுவிடுமானாலும், அதைக் கண்டிக்கத் தவறுவதில்லை. அந்தப் பாரம்பரியத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அவ்வளவு பெரிய பாரம்பரியத்தை எல்லோரும் சேர்த்து வளர்த்தாலும், நம்முடைய அருமை நண்பர் திரு. தாமோதரன் எடுத்துக் காட்டியதைப் போல, பொது வாழ்விலே இருப்பவர்களைப் பார்த்து, பொது மக்கள் சந்தேகத்தோடு நோக்குகின்ற ஒரு சூழ் நிலையை நம்மையறியாமல் நாம் இன்றைக்கு நாட்டிலே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். எதைச் செய்தாலும், அதிலுள்ள தவறு சுட்டிக் காட்டப்பட்டு, அந்தத் தவறினைக் களைய வேண்டும் என்று சொல்வதற் கும், எல்லாமே ஊழல், எல்லாமே ஊழல் என்று சொல்வதற்கும் இருக்கின்ற முரண்பாட்டை, மாறுபாட்டை நாம் புரிந்து கொள்ள

மு.ப.
19-20



வேண்டும். எதற்கெடுத்தாலும் லஞ்சம், ஊழல்கள், என்ற குற்றச் சாட்டுக்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை ஒரு விசாரணைக் குழு அமைத்து உங்களைப் புனிதவான்களென்று காட்டிக்கொள்ளுங் கள் என்று திரு. பலராமன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சீதைக் கதை எல்லாம் சொன்னார்கள். திரு. பலராமன், ராமன் கதை எல்லாம் சொன்னார்கள். அவர்களோ பலராமன், சீதைக்கும் பலராமனுக்கும் சம்பந்தமில்லை புராணப்படி. பலமுடைய ராமனுக்கு வேண்டுமானால், சீதை சம்பந்தமாக இருக்கலாம். பலராமனுக்கும் பரசுராமனுக்கும் சீதை சம்பந்தமில்லை. ஆனால் அவர் ராமன் கதையைச் சொன்னார்கள். இதிலே யார் ராமன், யார் சீதை என்று முதலில் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் ராமன் என்றால் அரசாங்கம் சீதையாக இருக்க வேண்டும், அல்லது நான் ராமன் என்றால் அமைச்சரவை சீதையாக இருக்க வேண்டும். தீ குளிக்கவேண்டும், தீக்குளித்து உங்கள் புனிதத்தைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அருமை நண்பர் திரு. கோபால் அவர்கள் சொன்னது போல், சட்டமன்ற அவையை விட, சட்டப் பேரவையை விட வேறு ஒரு தீக்குண்டம் இருப்பதாக நான் கருதவில்லை. அந்தத் தீக்குண்டத்திலே இந்த அமைச்சரவை இன்று தீ குளித்திருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் எங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை—மன்னிக்க வேண்டும்— காட்டப்பட்டவை குற்றச்சாட்டுக்கள் அல்ல, ஏனென்றால் இன்ன குற்றவாளி இன்ன குற்றம் செய்திருக்கிறார்கள் என்று சாட்டப்பட வில்லை. நண்பர் திரு. கோபால் எடுத்துக் காட்டியதைப் போல "சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது, பரவலாகப் பேசப்படுகிறது, மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்" இப்படி சொத்துக்கள் வந்திருக் கின்றன என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற புகார்கள். இந்தப் புகார்கள் பட்டியலை இங்கே வைத்து இந்தப் புகார்களுக்கு நாங்கள் பிரதமருக்கு எழுதியிருக்கிற பதிலையும், பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தையும், ஏறத்தாழ 280-க்கு மேற்பட்ட பக்கங்களை அச்சடித்து இங்கே தந்திருக்கிறோம். நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் சொன்னபடி, இந்தியாவிலேயே இந்த மாநிலத்திலேதான் மேலவை யிலும் பேரவையிலும் அமைச்சர் பெருமக்களும் மற்ற உறுப்பினர் 1-30
களும் தங்களுடைய சொத்துக் கணக்கைப் பகிரங்கமாக வைப்பது மி...
என்று 1969 ஆம் ஆண்டு தீர்மானத்தைக் கொண்டு வந்து, நிறை வேற்றி, அதன் தொடர்பாக சொத்துக் கணக்குகளை வைத்து வரு கின்றோம். எங்களுடைய சொத்துக் கணக்கிருக்கிறது. இந்தப்

1972 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

புகார் பட்டியலுக்கு அளிக்கப்பட்ட பதிலிலேகூட நாம் அதை இணைத்திருக்கிறோம். பிரதமருக்கு எழுதிய பதில் கடிதத்திலே நாங்கள் எப்படிப்பட்டவர்கள், எங்களைக் குற்றம் சாட்டியவர்கள் எப்படிப்பட்ட சொத்துக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதிலே ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். என்னுடைய பாங்க் அக்கவுண்ட் கேட்டிருக்கிறார்கள். அதிலே ரூ. 1,305 என்று என்னுடைய சொத்துக் கணக்கிலே இருக்கிறது. பாங்க் அக்கவுண்ட் கேட்டால் எவ்வளவு பணம் இருக்கிறது என்றுதான் கணக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பணக்கணக்கை நான் கொடுத்திருக்கிறேன். ஆனால் குற்றம் சாட்டியவர் கொடுத்திருக்கிறார் பாங்க அக்கவுண்ட். அவருடைய பதிலில் இந்தியன் பாங்க், ராயப்பேட்டை, மதராஸ்-14 என்று அட்ரஸ் சொல்லுகிறார். நாவலர் வேடிக்கையாகக் கூட்டங்களில் குறிப்பிடுவார், இந்தியன் பாங்க், ஓவர்ஸீஸ் பாங்க், மைலாப்பூர், மதராஸ்-4, சிண்டிகேட் பாங்க், பிராட்வே, மதராஸ்-1 என்று, பாங்க் அக்கவுண்ட் கேட்டால், இந்த மூன்று பாங்குகளின் விலாசம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1,395 ரூபாயோ, 4.000 ரூபாயோ இவ்வளவு ரூபாய் பாங்கில் இருக்கிறது என்று நானும் மற்றவர்களும் கணக்குக் காட்டியிருக்கிறோம். அது மாத்திரம் அல்ல. இப்படிக் கொடுக்கப்படுகிற கணக்குக்கூட இரண்டு மூன்று ஆண்டுகளாக வரவில்லை. சட்டத் துறைச் செயலாளரிடமிருந்து 13 நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டும் இன்னும் சொத்துக்கணக்கு வைக்காதவர் எங்கள் மீது புகார்ப் பட்டியலை எடுத்துச் சொல்வதற்கு என்ன தகுதிபெற்றவர்கள், என்ன நாணயத்தைப் பெற்றவர்கள், என்ன நேர்மையைப் பெற்றவர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே குற்றம் சாட்டப் பட்டவர்கள் நாங்கள், ஆனால் குற்றம் செய்யாதவர்கள். ஆனால் குற்றம் சாட்டியவர் ஏதோ புத்தரைப்போல, ஏசுவைப்போல, மகமது நபியைப்போல, மகாத்மா காந்தியைப் போல எந்தக் களங்கமும் இல்லாதவரென்று நாட்டு மக்களிடத்திலே நடித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே நீதி விசாரணைக் குழு அமைப்பதற்கு என்ன இருக்கிறது. நான் பேரவையில்கூட சொன்னேன். நான் தந்திருக்கின்ற இந்த பதிலில் உங்களுக்குச் சந்தேகமிருந்தால், மேலும் ஆதாரங்களைக் காட்டுங்கள், நாங்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். படித்துப்பார்த்தால் தெரியவில்லையா? இதிலே ஒன்றுமில்லாத விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதென்று. எப்படி விசாரணைக் குழு அமைப்பது? திடீரென்று நண்பர் திரு. பலராமனைப் பார்த்து, அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது,

மு.ப.
10-20



1972 டிசம்பர் 16] [டாக்டர் மு. கருணாநிதி]

உங்களுக்கு இப்படிப்பட்ட நோய் இருக்கிறதென்று சொல்வேன். அவர் மறுத்ததும் இல்லையில்லை, இதற்கு ஒரு விசாரணைக் குழுவை வைக்க வேண்டுமென்று சொன்னால், நோயே இல்லாதவர் ஏன் அந்த விசாரணைக் குழுவிற்கு ஆட்பட வேண்டும்? தவறே செய்யாதவர்கள் ஏன் அந்த விசாரணைக் குழுவிற்கு ஆட்பட வேண்டும்? திருவாரூரில் நான் 20 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய தாயார் பேரால் ரூ. 3,500-க்கு வீடு வாங்கியிருந்தேன். அந்த வீடு பிறகு அப்படியே தான் இருக்கிறது. இந்தப் புத்தகத்தில்கூட படம் வந்திருக்கிறது. அப்படியேயிருக்கிற வீட்டு எண்ணையும் போட்டு, வீடு இருக்கிற தெருவையும் போட்டு பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அந்த வீடு அங்கே கட்டப்பட்டிருக்கிறது என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு ஒரு விசாரணைக் குழு தேவைதானா? சட்ட சபையைக் கூட்டி உடனே கலைப்பதற்கு 44 ஆயிரம் ரூபாய் போனால் பரவாயில்லை என்று எண்ணுவது போல, விசாரணைக் குழுவை அமைப்பதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமா? இல்லாததற்கு எதற்காக? சென்னை மாநகரத்தில் அண்ணா தியேட்டர் கருணாநிதியினுடைய சொந்தக்காரர் பேரில் இருக்கிறதாம். யாரோ ஜக்கிரிய சேட் என்று ஒருவர், அவர் எனக்குச் சொந்தக்காரர். பெயரைப் பார்த்தாவது ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அண்ணா தியேட்டர்! இல்லாதவைகளைப்பற்றி நீதி விசாரணைக் குழுக்களை அமைக்க முடியுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட பொத்தல்கள், ஓட்டை உடைசல்கள், இப்படிப்பட்ட இல்லாதவைகள், இப்படிப்பட்ட அடிப்படையே அற்றவைகள் குற்றச்சாட்டுகளாகக் கருதப்பட்டு, அவருக்கே விவரம் தெரியாமல், யாரோ எழுதிக்கொடுத்ததைத் திடீரென்று ஏற்பட்ட கூட்டின் காரணமாக, கொண்டுபோய் ஜனாதிபதியிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். அவரால் அது அப்படியே கிடப்பிலே போடப்படும். இப்போது ஹரியானாவிலே என்ன ஆயிற்று? குற்றப்பட்டியல் இரண்டாண்டு காலமாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. இதுவும் போடப்படும். அப்படிப் போடப்படுமானால், அந்த இடைக்காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு குற்றப்பட்டியல் டெல்லியில், கருணாநிதி இங்கே, நெடுஞ்செழியன் இங்கே, அன்பழகன் இங்கே, சத்தியவாணி முத்து இங்கே இவர்கள் எல்லாம் குற்றவாளிகள், இந்த அமைச்சரவை குற்றவாளிக்கூண்டில் இருக்கிறதென்று இரண்டாண்டுக்காலம் தங்களுடைய கட்சியை ஓட்டலாம் என்று கருதுகிறார்கள். அதற்கு வழியில்லாத வகையில் குற்றம் சுமத்தினாயா நீ, சுமத்திய குற்றம் இதோ இருக்கிறது, அதற்கு பதிலும் இதோ இருக்

கிறது என்று நாம் இங்கு பதிலை வைத்துவிட்டோம். இப்போது விழிக்கிறார்கள். என்ன சொல்லுகிறார்கள்? இன்னும் எங்களிடத்தில் ஆதாரம் இருக்கிறது. என்ன ஆதாரம் என்று கேட்டால், இருப்ப
பி.ப. தாகச் சொல்லுகிறார்கள். இருப்பதாக நம்பப்படுகிறது என்ற வகை
